

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள்

(13.08.2021 முதல் 13.09.2021 வரை)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள் (13.08.2021 முதல் 13.09.2021 வரை)

சிறப்பு வெளியீடு எண் 48

தமிழரசு

இலவச வெளியீடு

டிசம்பர் 2021

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள் (13.08.2021 முதல் 13.09.2021 வரை)

வ. எண்.	மானியக் கோரிக்கை எண்	துறையின் பெயர்	பக்க எண்
		உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை	
1.	3	நீதி நிருவாகம்	1
2.	24	சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்	6
3.	40	**நீர்வளத்துறை**	9
		தொழில்துறை	
4.	27	சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்	14
5.	34	**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**	19
		கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை	
6.	12	கூட்டுறவு	34
7.	20	**உயர்கல்வித்துறை**	48
8.	39	**பொதுப்பணித்துறை**	60
9.	21	**நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை**	65
10.	5	**வேளாண்மை – உழவர் நலத்துறை**	74
		வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை	
11.	41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை	90
12.	51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	90
		தொழில்துறை	
13.	27	பெருந்தொழில்	100
14.	33	**சட்டத்துறை**	119
		வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	
15.	26	வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	123

வ. எண்.	மானியக் கோரிக்கை எண்	துறையின் பெயர்	பக்க எண்
16.	26	குடிசைப் பகுதி மாற்று வாரியம்	133
17.	42	**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை**	139
18.	44	**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை**	155
		தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை	
19.	28	செய்தி மற்றும் விளம்பரம்	167
20.	30	எழுதுபொருள் மற்றும் அச்சு	180
21.	45	**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை**	181
		கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை	
22.	6	கால்நடை பராமரிப்பு	188
23.	7	மீன்வளம் மற்றும் மீனவர் நலன்	197
		போக்குவரத்துத் துறை	
24.	48	போக்குவரத்துத் துறை	214
25.	25	இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்	214
		சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை	
26.	54	வனம்	219
		கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை	
27.	13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு	227
28.	14	**எரிசக்தித்துறை**	232
		கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த்துறை	
29.	17	கைத்தறி மற்றும் துணிநூல்	255
30.	18	கதர் மற்றும் கிராமத் தொழில்கள்	269

வ. எண்.	மானியக் கோரிக்கை எண்	துறையின் பெயர்	பக்க எண்
31.	18	பட்டு வளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்	274
32.	19	**மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை**	280
	10	**வணிகவரி மற்றும் பதிவுத்துறை**	
33.	11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு	339
		பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை	
34.	9	பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்	351
		சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை	
35.	47	இந்து சமய அறநிலையத்துறை	364
36.	35	**மனித வள மேலாண்மைத்துறை**	385
		கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை	
37.	8	பால்வளம்	391
		பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை	
38.	9	சிறுபான்மையினர் நலன்	403
39.	43	**பள்ளிக் கல்வித்துறை**	410
		சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை	
40.	15	சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்	423
41.	49	**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை**	431
42.	32	**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை**	435

வ. எண்.	மானியக் கோரிக்கை எண்	துறையின் பெயர்	பக்க எண்
43.	31	**தகவல் தொழில்நுட்பவியல் துறை**	454
		சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை	
44.	29	சுற்றுலா	461
45.	29	கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியகங்கள், தொல்லியல்	476
46.	4	**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**	491

❖ ❖ ❖

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

நீதி நிருவாகம்

மானியக் கோரிக்கை எண். 3

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

மானியக் கோரிக்கை எண். 24

நீதி நிருவாகம்

1. காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில் தற்போது இயங்கி வரும் மாவட்ட நீதிமன்றம் எண்.II–ஐ முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைத்தல். (Conversion of the existing District Court No.II, Kancheepuram as a Principle District and Sessions Court at Kancheepuram in Kancheepuram District)

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில் தற்போது இயங்கி வரும் மாவட்ட நீதிமன்றம் எண்.II–ஐ, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைக்கப்படும்.

2. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் தற்போது இயங்கி வரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தை, மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைத்தல். (Conversion of the existing Additional District Court, Mayiladuthurai as a District and Sessions

Court at Mayiladuthurai in Mayiladuthurai District.)

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் தற்போது இயங்கிவரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தை, மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைக்கப்படும்.

3. **திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் தற்போது இயங்கி வரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைத்தல். (Conversion of the existing Additional District Court, Tirupattur as a District and Sessions Court at Tirupattur in Tirupattur District.)**

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் தற்போது இயங்கி வரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தை, மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைக்கப்படும்.

4. **விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைத்தல். (Constitution of an Additional District Court at Aruppukkottai in Virudhunagar District.)**

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

5. **கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.**

(Constitution of a Chief Judicial Magistrate Court at Kallakurichi in Kallakurichi District.)

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

6. தென்காசி மாவட்டம், தென்காசியில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல். (Constitution of a Chief Judicial Magistrate Court at Tenkasi in Tenkasi District.)

தென்காசி மாவட்டம், தென்காசியில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

7. இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டையில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல். (Constitution of a Chief Judicial Magistrate Court at Ranipet in Ranipet District.)

இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டையில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

8. காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.

(Constitution of a Chief Judicial Magistrate Court at Kancheepuram in Kancheepuram District.)

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

9. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல். (Constitution of a Chief Judicial Magistrate Court at Mayiladuthurai in Mayiladuthurai District.)

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

10. திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல். (Constitution of a Chief Judicial Magistrate Court at Tirupattur in Tirupattur District.)

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

11. புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல். (Constitution of a Sub Court at Tirumayam in Pudukottai District.)

புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் அனைத்து

உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

12. திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல். (Constitution of a Sub Court at Thiruthuraipoondi in Tiruvarur District.)

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

13. திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல் (Constitution of a Sub Court at Polur in Tiruvannamalai District.)

திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

14. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வழக்குரைஞர்களுக்கான கூடுதல் வளாகக் கட்டடம் ரூ.4.28 கோடி செலவில் கட்டுதல். (Construction of Additional Law Officers' Block in the Madurai Bench of Madras High Court, Madurai at a cost of Rs.4.28 crore.)

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் வழக்குரைஞர்களுக்கான கூடுதல் வளாகக் கட்டடம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.4.28 கோடி செலவில் கட்டப்படும்.

1. சென்னையிலுள்ள சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலகத்திற்கு, 40 கணினிகள் மற்றும் 10 நகலெடுக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல். (Purchase of 40 computers and 10 xerox machines for the office of the Department of Prisons and Correctional Services, Head Quarters, Chennai.)

சென்னையிலுள்ள சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலகத்திற்கு, 40 கணினிகள் மற்றும் 10 நகலெடுக்கும் இயந்திரங்கள் ரூ.44 இலட்சம் தொடரா செலவினத்தில் கொள்முதல் செய்யப்படும்.

2. அனைத்து மத்தியச் சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் (புழல், வேலூர், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை) மற்றும் மாவட்டச் சிறை (ம) இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றிற்கு 15 கனரக சலவை இயந்திரங்கள் கொள்முதல் செய்தல். (Purchase of 15 Industrial Laundry Machines for all Central Prisons, Special Prisons for Women (Puzhal, Vellore, Trichy, Coimbatore, Madurai) and District Jail & Borstal School, Pudukkottai.)

அனைத்து மத்தியச் சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் (புழல், வேலூர், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை) மற்றும்

மாவட்டச் சிறை (ம) இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றிற்கு 15 கனரக சலவை இயந்திரங்கள், ரூ.60 இலட்சம் தொடரா செலவினத்தில் கொள்முதல் செய்யப்படும்.

3. அனைத்து மத்தியச் சிறைகளுக்கும், 9 ஊடுகதிர் அலகிடல் கருவிகள் பழைய இயந்திரங்களுக்கு மாற்றீடாக கொள்முதல் செய்தல். (Purchase of 9 X-Ray Baggage Scanner Machines at all Central Prisons in replacement of old machines.)

அனைத்து மத்தியச் சிறைகளுக்கும் 9 ஊடுகதிர் அலகிடல் கருவிகள், பழைய இயந்திரங்களுக்கு மாற்றீடாக, ரூ.180 இலட்சம் தொடரா செலவினத்தில் கொள்முதல் செய்யப்படும்.

4. அனைத்து மத்தியச் சிறைகளில் உள்ள பணியாளர் குடியிருப்புகளில் 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சவ்வூடு பரவல் முறை குடிநீர் சுத்திகரிப்புச் சாதனம் நிறுவுதல். (Installation of 500 liters capacity Reverse Osmosis Plant in all Central Prisons staff Quarters.)

அனைத்து மத்தியச் சிறைகளில் உள்ள பணியாளர் குடியிருப்புகளில், 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சவ்வூடு பரவல் முறை குடிநீர் சுத்திகரிப்புச் சாதனம் ரூ.18.90 இலட்சம் தொடரா செலவினத்தில் நிறுவப்படும்.

5. சிறைகளைச் சீர்திருத்த மையங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (Action to be taken to change the Prisons into Reform Centers.)

சிறைகளைச் சீர்திருத்த மையங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சிறைவாசிகளின் சிறைத் தண்டனை முடிந்ததும், அவர்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

❖ ❖ ❖

நீர்வளத்துறை

மானியக் கோரிக்கை எண். 40

1. இந்த அரசு மாநிலத்தின் குறைந்த நீர் ஆதாரங்களை முறைப்படி பயன்படுத்தி, அவற்றைப் பாதுகாப்பதற்கு அதிகமான முக்கியத்துவத்தை அளிக்கும் விதமாக, அடுத்த 10 ஆண்டுகளில், 1,000 தடுப்பணைகளும், கதவணைகளும் கட்டப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் நடப்பாண்டில்

    - 190 தடுப்பணைகள்,
    - 4 தரைகீழ் தடுப்பணைகள்,
    - 6 கதவணைகள்,
    - 2 கடைமடை நீரொழுங்கிகள்,
    - 12 அணைக்கட்டுகள்

    போன்ற புதிய பாசன கட்டுமானங்கள் அமைக்கப்படும்.

2. நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், மேட்டூர், அமராவதி, வைகை, பேச்சிப்பாறை, குண்டாறு, இராமநதி, வெலிங்டன் அணைகள் மற்றும் காவேரிபாக்கம் ஏரி ஆகியவற்றின் கொள்ளளவினை மீட்டெடுக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3. நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், பிரதமரின் வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ், 23 மாவட்டங்களில் 200 குளங்கள் புனரமைக்கப்படும்.

4. தமிழக அரசின் "தலைநிமிரும் தொலைநோக்கு திட்ட அறிக்கை"யில் தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்களின் அடிப்படையில்,

   i) 31 மாவட்டங்களில், 17 வடிநிலங்களைச் சார்ந்த 207 ஏரிகள், கண்மாய்கள், வழங்கு வாய்க்கால்கள், வரத்துக் கால்வாய்கள், குளங்கள் மற்றும் அவற்றின் கட்டுமானங்கள் நபார்டு நிதியுதவியுடன் படிப்படியாகப் புனரமைக்கப்படும்.

   ii) புதிய, பெரிய நீர் ஆதார திட்டங்களுக்குச் சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து, விரிவான மதிப்பீடு தயாரிக்க 7 புதிய திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

5. நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், இந்த ஆண்டு சிவகங்கை, இராமநாதபுரம், தஞ்சாவூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 50 குறு நீர்ப்பாசன குளங்கள் தரம் உயர்த்தப்படும்.

6. பருவ காலங்களில் மிகக் குறைந்த நாட்களே கிடைக்கும் மழை நீரினை திறம்படச் சேமிக்க ஏதுவாக,

   - வேலூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 3 புதிய குளங்கள் அமைக்கவும்,

- திருவண்ணாமலை, விழுப்புரம், திருவள்ளூர், தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 5 புதிய கால்வாய்கள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், நீர்வளத்துறையின் பணிகளை நவீனமயமாக்குவதற்காக,

- நீர்வள ஆதார பராமரிப்பு கோட்டங்களுக்கு 69 நவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆளில்லா விமானங்கள்,
- திட்ட உருவாக்கப் பிரிவிற்கு 9 DGPS உபகரணங்கள்,
- 214 மடிக்கணினிகள் (Laptop),
- 214 GPS கருவிகள்,
- 500 பாதுகாப்பு உபகரண தொகுப்புகள்,
- 5 புவிசார் தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் மற்றும் உயர் தொழில்நுட்ப கணினிகள்,
- 50 மடிக்கணினிகள்,
- 50 அதிநவீன கணினிகள் மற்றும் மென்பொருள், நவீனத் தொழில்நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ள பரிசோதனை கருவிகள் வழங்கப்படும்.

8. புயல் மற்றும் பெருமழை காலங்களில் மீனவர் மற்றும் மீனவ கிராமங்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களையும்

பொருட்டு, திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் சென்னை மாவட்டங்களில் 16 தூண்டில் வளைவு மற்றும் கடலரிப்பு தடுப்புச் சுவர்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

9. கோட்டங்கள் மற்றும் உப கோட்டங்களுக்குத் தேவையான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் அலுவலர்களுக்கு தேவையான குடியிருப்பு கட்டடங்கள், பூண்டி நீரியல், நீர்நிலையியல் ஆய்வுக் கழகக் கட்டடம், தரக்கட்டுப்பாடு கோட்டம், உபகோட்ட அலுவலகங்கள் மற்றும் ஆய்வகங்கள் 5 ஆண்டுகளில் படிப்படியாகக் கட்டி முடிக்கப்படும்.

10. நீர்வள ஆதாரத் துறையில் பணிபுரிந்து வரும் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களின் திறன் மேம்பாட்டிற்காக, தற்போது திருச்சியில் செயல்பட்டுவரும் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தைத் தரம் உயர்த்துதல் மற்றும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மண்டலங்களுக்கு புதிய பாசன மேலாண்மை பயிற்சி நிலையங்கள் அமைக்கும் பணிகள் PMKSY-HKKP திட்டத்தின்கீழ் 90% ஒன்றிய அரசின் நிதி பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும்.

11. சிறு உப வடிநிலங்கள் நீர்த் தேவையில் தன்னிறைவு அடையும் விதமாக, அனைத்து விதமான நீர் செறிவு கட்டுமானங்களை ஒருங்கே அமைக்கும் பணிக்கு, முதற்கட்டமாக 8 உப வடிநிலங்கள் தெரிவு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

12. இத்துறையில் பயன்பாட்டிலிருந்துவரும் பழைய வாகனங்களுக்கு மாற்றாக புதிய வாகனங்கள் 3 ஆண்டுகளில் படிப்படியாக வழங்கப்படும்.

13. தற்காலிகமாக பணிபுரிந்து வரும் பணியாளர்களில் 10 வருடங்களாகத் தினக்கூலி பட்டியலில் இடம்பெற்று, தற்போதுவரை பணிபுரிந்து வரும் 1,458 பணியாளர்களின் பணியினை அவர்களின் கல்வித்தகுதியின் அடிப்படையில் இந்த சட்டமன்ற கூட்டத் தொடர் முடிவதற்குள் பணிவரன்முறை செய்திடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ ❖ ❖

தொழில் துறை

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

மானியக் கோரிக்கை எண். 27

1. பயனற்ற பழைய சுரங்கம் மற்றும் குவாரிகளை பொதுமக்களுக்குப் பயனுள்ள அமைப்புகளாக மாற்றுதல்.

குத்தகைக் காலம் முடிவுற்று பயனற்ற நிலையில் உள்ள 436 சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் கண்டறியப்பட்டு ஆக்கப்பூர்வமான பயன்பாட்டிற்குக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சிக்கராயபுரம் மற்றும் திருச்சி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கோ.அபிசேகபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள பயனற்ற கல்குவாரிகளை நீர் சேகரிப்பு மையங்களாக மாற்றிப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே தற்போது கண்டறியப்பட்டுள்ள 436 பயனற்ற குவாரிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிடமோ ஒப்படைத்து அதனை நீர் சேகரிப்பு அமைப்புகளாக மாற்றி கோடைக்காலங்களில் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் உபயோகப்படுத்தப்படும்.

2. விதிமுறைகளுக்குப் புறம்பாகக் கனிமங்கள் எடுப்பதைத் தடுக்க ஆளில்லா சிறிய ரக விமானத்தை பயன்படுத்துதல்.

சுரங்கம் மற்றும் குவாரிப்பகுதிகளில் அனுமதிக்கப்பட்ட

அளவினைவிட கூடுதலாகக் கனிமங்கள் எடுக்கப்படு வதால் ஏற்படும் வருவாய் இழப்பினைத் தடுக்க ஆளில்லா விமான தொழில்நுட்பம் (Drone Technology) மூலம் சுரங்கங்களைக் கண்காணிக்கப் பரிசோதனை முறையில் தொடங்கப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக இந்த ஆண்டு அனைத்து குவாரிகளையும் வருடத்தின் முதல் ஆறு மாத முடிவிலும் வருட இறுதியிலும் ஆளில்லா விமானம் (Drone) மூலம் எடுக்கப்பட்ட கனிமங்களின் அளவினை துல்லியமாக அளவீடு செய்து அனுமதிக்கப்பட்ட கனிமத்தின் அளவுடன் ஒப்பீடு செய்த பின்பே நடைச்சீட்டு வழங்கப்படும். இத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

3. குவாரிப்பணிகளில் இருந்து வரலாற்றுச் சின்னங்கள், பழந்தமிழர் கல்வெட்டுகள், சமணப்படுகை மற்றும் தொல்பொருள் தளங்கள் பாதுகாக்கப்படும்.

மலைகள், குன்றுகள் மற்றும் குகைகளில் உள்ள தொன்மையான கல்வெட்டுகள் மற்றும் ஓவியங்கள் போன்ற வரலாற்றுச் சின்னங்கள் தான் தமிழர்களின் தொன்மையான நாகரீக வரலாற்றினைப் பறைசாற்றும் ஆவணங்களாகத் திகழ்கின்றன. கரூர் மாவட்டம், புகளூரில் உள்ள பிராமி கல்வெட்டுகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், சித்தன்னவாசலில் உள்ள குடைவரை கோவில்கள் மற்றும் ஓவியங்கள், மதுரை மாவட்டத்தில் உள்ள சமணர் படுகைகள் இதற்கு உதாரணமாக விளங்குகின்றன. இவற்றைப் பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்.

இத்தகைய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதன் மூலம் அவற்றின் தொன்மையினை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளவும், வரலாற்று ஆராய்ச்சிக்காகவும், அவற்றைச் சிதைவுகளிலிருந்து பாதுகாக்கவும், இச்சின்னங்கள் அமைந்துள்ள பகுதியிலிருந்து 500 மீட்டர் சுற்றளவிற்குள் சுரங்கப் பணிகள் நடைபெறுவதைத் தடை செய்யும் வகையில் கனிம விதிகளில் திருத்தம் செய்யப்படும்.

4. எம்.சேண்ட் (M.Sand) தயாரிப்புத் தொழிலினை முறைப்படுத்த ஒரு புதிய கொள்கை உருவாக்கப்படும்.

கட்டுமானப் பணிகளில் ஆற்று மணலுக்கு மாற்றாகச் சமீப காலமாக எம்.சேண்ட் உபயோகம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் தரமற்ற எம்.சேண்டினை சந்தைகளில் விற்பனை செய்வதைத் தடுக்கவும், கண்காணித்திடவும், எம்.சேண்ட் தயாரிப்பு, தரம், விலை மற்றும் அவற்றைக் கொண்டு செல்லுதல் ஆகியவற்றை வரைமுறைப்படுத்த மாநில அளவில் கொள்கை ஒன்று உருவாக்கப்படும்.

5. பல ஆண்டுகளாக அப்புறப்படுத்தப்படாமல் குவாரி பகுதியிலேயே மலை போல் குவிந்து கிடக்கும் கிரானைட் கழிவு கற்களை அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையில் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும்.

தமிழ்நாட்டில் கருப்பு மற்றும் பலவண்ண கிரானைட் குவாரிகள் அரசு புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்களில் இயங்கி வருகின்றன. இக்குவாரிகளிலிருந்து கற்துண்டங்கள் வெட்டி எடுக்கப்பட்டு உள்நாட்டு உபயோகம் மற்றும்

வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அரசுக்குக் கனிம வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது. மீதமுள்ள கிரானைட் கழிவுகள் குவாரிப் பகுதியிலேயே மலை போல் உபயோகமின்றி குவித்து வைக்கப்பட்டுள்ளது. இக்கழிவு கற்களை எடை அடிப்படையில் உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்து விற்பனை செய்ய அனுமதிப்பதன் மூலம் அரசுக்குக் கூடுதல் வருவாய் கிடைப்பதுடன், மேற்கண்ட கழிவுகள் இதர பயன்பாட்டிற்கு உபயோகிக்க வழிவகை செய்யப்படும். இதனால் சுற்றுச்சூழல் மேம்படும்.

6. அதிக செறிவூட்டப்பட்ட கிராபைட் (High Grade Graphite Flakes) தயாரிக்கத் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு சிவகங்கை மாவட்டத்தில் கிராபைட் சுரங்கமும், கிராபைட் சுத்திகரிப்பு ஆலை ஒன்றும் உள்ளது. அதன் செயல்பாடுகளை மேம்படுத்தவும் சந்தையில் புதியதாகத் தேவை உருவாகியுள்ள லித்தியம் அயர்ன் பாட்டரீகளுக்காக அதிக செறிவூட்டப்பட்ட கிராபைட் (High Grade Graphite Flakes) தயாரிக்க தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்படும்.

7. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கிராபைட் சுரங்கம் மற்றும் ஆலையின் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள கிராமப் பகுதிகளில் சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கிராபைட் சுரங்கம் மற்றும் ஆலையின் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள கிராமங்களுக்குச்

சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம், சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தின்படி, மரம் நட்டுப் பராமரித்தல், நீர்வள ஆதாரங்களைப் பராமரித்தல், காற்று மாசு குறைக்கும் நடவடிக்கை எடுத்தல் போன்ற பணிகள் ரூ.63 இலட்சத்தில் மேற்கொள்ளப்படும்.

8. ஜிப்சம் கனிம இருப்பு பகுதிகளைக் கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்படும்.

சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் ஜிப்சம் கனிம இருப்பு பகுதிகளைக் கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்படும்.

9. நவீன நில அளவை கருவி கொள்முதல் செய்யப்படும்.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சுரங்கங்கள் மற்றும் குவாரிகளின் குத்தகை உரிம எல்லைகளை நில அளவை செய்திட ரூ.20 இலட்சத்தில் Differential Global Positioning System (DGPS) என்ற நவீன நில அளவை கருவியினை கொள்முதல் செய்து சுரங்கப் பகுதிகள் மற்றும் சுரங்க செயல்பாடுகள் கண்காணிக்கப்படும்.

❖ ❖ ❖

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மானியக் கோரிக்கை எண். 34

1) இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவண்ணம் அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகளில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் சமுதாயக் கூடங்கள், சந்தைகள், நவீன நூலகங்கள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடன் “கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்” என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

2) சென்னை பெருநகர மாநகராட்சி உட்பட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் நீர் நிலைகள் புனரமைத்தல், பூங்காக்கள் அமைத்தல், பொழுது போக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல், மரம் நடுதல், பள்ளிக் கூடங்கள் மேம்படுத்துதல், பொதுச் சுகாதார மையம், கற்றல் மையங்கள், சாலைகள், தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் கொண்ட “நமக்கு நாமே திட்டம்” செயல்படுத்தப்படும்.

3) நகர்ப்புர ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் “நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டம்” என்ற திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியில் இரண்டு மண்டலங்களிலும், ஏனைய மாநகராட்சிகளில் தலா ஒரு மண்டலமும், 7 நகராட்சி நிருவாக மண்டலங்களில் தலா ஒரு நகராட்சி என

7 நகராட்சிகள், 37 மாவட்டங்களில் தலா ஒரு பேரூராட்சி வீதம் 37 பேரூராட்சிகளிலும் இத்திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்படும்.

4) சென்னை நீங்கலாக, அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மொத்தமுள்ள 74 இலட்சம் வீடுகளில் இதுவரை 39 இலட்சம் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள வீடுகளுக்கும் படிப்படியாகக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

5) அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்குச் சொந்தமான குளங்களில் இவ்வாண்டு 600 குளங்கள் ரூ.460 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி மேம்படுத்தப்படும்.

6) மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் ரூ.75 கோடி மதிப்பீட்டில் 300 புதிய கழிப்பறைகள் கட்டுவதுடன் 450 பழைய கழிப்பறைகள் ரூ.23 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

7) நடப்பாண்டில், மதுரை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகள், குன்னூர், சீர்காழி, திருத்துறைப்பூண்டி, மணப்பாறை, தேவக்கோட்டை, சின்னமனூர், புளியங்குடி, விருதுநகர் ஆகிய நகராட்சிகள் மற்றும் 25 பேரூராட்சிகளில் ரூ.104 கோடி மதிப்பீட்டில் பழைய தேக்கத் திடக் கழிவுகள் அகற்றப்படும்.

8) பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களின் பணிச் சுமையைக் குறைப்பதற்காகத் திடக்கழிவு மேலாண்மைப்

பணிகளில் தள்ளுவண்டிகளுக்கு மாற்றாக அடுத்து வரும் 2 ஆண்டுகளில் 2,220 மின்கல வாகனங்கள் ரூ.71 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படும். இவ்வாண்டு 1,494 மின்கல வாகனங்கள் மற்றும் 29 இலகுரக வாகனங்கள் ரூ.35 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படும்.

9) மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் பொதுமக்களின் நலனுக்காகவும், குறிப்பாகச் சிறுவர்களுக்காகவும் 3,096 விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளன. நடப்பாண்டில் 552 பூங்காக்கள் ரூ.122 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

10) மாநகராட்சி, நகராட்சிகளில் 400 கி.மீ. மண்சாலைகள் ரூ.300 கோடி மதிப்பீட்டிலும், பேரூராட்சிகளில் 500 கி.மீ. மண்சாலைகள் ரூ.325 கோடி மதிப்பீட்டிலும் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவண்ணம் மண்சாலைகளை, தார்ச்சாலை, சிமெண்ட் சாலை, பேவர் பிளாக் சாலைகளாகத் தரம் உயர்த்தப்படும்.

11) இயற்கை இடர்பாடுகள் மற்றும் ஏனைய காரணங்களால் பழுதடைந்த தார்ச் சாலைகள் மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் 500 கி.மீ. சாலைகள் ரூ.250 கோடி மதிப்பீட்டில் மற்றும் 157 பேரூராட்சிகளில் 292 கிலோ மீட்டர் நீளமுள்ள 194 சாலைகள் மற்றும் 11 பாலங்கள் ரூ.201 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

12) ஆவடி, நாகர்கோவில், ஒசூர், திண்டுக்கல் ஆகிய மாநகராட்சிகள், 86 நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில்

உள்ள 5.14 இலட்சம் தெரு விளக்குகள் எல்இடி போன்ற ஆற்றல்மிகு தெரு விளக்குகளாக ரூ.477 கோடி மதிப்பீட்டில் மாற்றப்படும் மற்றும் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில், தேவையான இடங்களில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் 1.50 இலட்சம் புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படும்.

13) அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரு நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட வேண்டுமென்ற இவ்வரசின் கொள்கைக்கேற்ப தற்போதுள்ளவற்றுடன் முதற்கட்டமாக நடப்பாண்டில் 75 தகன மேடைகள் ரூ.112.50 கோடி மதிப்பீட்டில் நவீன தகன மேடைகளாக மாற்றப்படும்.

14) உள்ளாட்சி அமைப்புகளில் புதியதாக 20 மார்க்கெட்டுகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் உருவாக்குவதுடன் ஏற்கெனவே திண்டுக்கல், ஓசூர் மாநகராட்சிகள், வாணியம்பாடி, குமாரபாளையம், இராசிபுரம், கரூர், காஞ்சிபுரம், தாம்பரம், சிதம்பரம், மேலூர், கொடைக்கானல், வெள்ளக்கோவில், சத்தியமங்கலம், புஞ்சைபுளியம்பட்டி, உதகமண்டலம், செங்கோட்டை, பத்மநாபபுரம், குழித்துறை, நாகப்பட்டினம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய நகராட்சிகளில் செயல்பட்டு வரும் 20 மார்க்கெட்டுகள், ரூ.65 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

15) போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 50 நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும்.

16) பேரூராட்சிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன மயமாக்கப்பட்ட 10 பேருந்து நிலையங்கள் ரூ.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

திருமங்கலம், நாமக்கல், தருமபுரி, திருத்தணி, திருவண்ணாமலை, திண்டிவனம், மயிலாடுதுறை, கரூர், காஞ்சிபுரம் ஆகிய நகராட்சிகளில் அரசு மானியம், பொதுமக்கள் பங்களிப்பு மூலமாக பல்வேறு பேருந்து நிலையங்கள் செயல்படுத்த ஏற்கெனவே உத்தேசிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படாமல் உள்ளது. தற்போது மேற்கூறிய நகராட்சிகளில் பல்வேறு நிதிகளை ஒருங்கிணைத்து புதிய நவீன பேருந்து நிலையங்கள் கட்டப்படும். மேலும், கடலூர், மன்னார்குடி, இராணிப்பேட்டை, சங்கரன்கோவில் நகராட்சிகளிலும் மற்றும் ஈரோடு மாநகராட்சியிலும் புதிய பேருந்து நிலையங்கள் கட்டப்படும்.

17) திருவாரூர், கரூர் நகராட்சிகளில் ரூ.151 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

18) பாதாளச் சாக்கடை இல்லாத ஒசூர் மாநகராட்சியில் ரூ.454 கோடி மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ரூ.510 கோடி மதிப்பீட்டிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும். அருப்புக்கோட்டை, மன்னார்குடி நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

19) பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் சரியான முன்னேற்றம் இல்லாததால், இக்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் சென்னை மாநகர கட்டமைப்பைச் சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் சிங்காரச் சென்னை 2.0 என்னும் புதிய திட்டம் இவ்வரசால் தீட்டப்பட்டு, இவ்வாண்டு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன், வேறு பலதிட்டங்களை இணைத்து இப்பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு உட்கட்டமைப்புப் பணிகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

20) பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலைகள் மற்றும் நடைபாதைகள் ரூ.300 கோடியில் புதுப்பிக்கவும் மற்றும் மறு சீரமைக்கப்படவும் உள்ளன. மேலும் மறு வடிவமைக்கப்பட்ட நடைபாதைகள் மற்றும் இதர வசதிகளுடன் கூடிய சாலைகள் முதற்கட்டமாக 6 இடங்களில் ரூ.300 கோடி உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளன.

21) மீனவர்களும் பொதுமக்களும் பயன்பெறும் வகையில் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் சென்னை பட்டினப்பாக்கம் கடற்கரை லூப் சாலையில் நவீன மீன் அங்காடி அமைக்கப்படும்.

22) சென்னையில் உலகவங்கி நிதி உதவியுடன் ரூ.120 கோடி மதிப்பீட்டில், 144 சாலைகளில் பழுதடைந்த மழைநீர் வடிகால்களுக்குப் பதிலாக புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கப்படும்.

23) சர்வதேச சுற்றுச்சூழல் வசதி நிதியுதவியுடன் ரூ.55 கோடி மதிப்பீட்டில் வடசென்னை – கடப்பாக்கம் ஏரி புனரமைக்கப்படும். இதன் மூலம் ஏரியின் கொள்ளளவு 78 மில்லியன் கன அடி அளவிற்கு அதிகரிப்பதுடன், பொதுமக்கள் பயனடையும் வகையில் பூங்கா நடைபாதை மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களும் அமையும்.

24) சென்னை மாநகரில் உள்ள 25 நீர்நிலைகள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும். இதனால் நீர்நிலைகளின் சேமிப்புத் திறனும், நிலத்தடி நீர்மட்டமும் அதிகரிக்கும்.

25) பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 807 பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளில் அடுத்த 3 வருடங்களில் பழுதடைந்த கழிப்பறைகள் மறுசீரமைக்கவும் புதிய பொதுக் கழிப்பிடங்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அரசு – தனியார் பங்களிப்பில் 50 புதிய நவீன கழிப்பறைகள் அமைக்கப்படும். மேலும் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 246 கழிப்பறைகள் புனரமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

26) பெருநகர சென்னை மாநகராட்சியின் பள்ளிகளின் கல்வித் தரம் மேம்படுத்தப்படும். சிட்டீஸ் திட்டத்தில் 28 பள்ளிகளில் நவீன வகுப்பறைகள் அமைக்கப்படுவதுடன் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் 17 பள்ளிகளில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் புதிய நவீன வகுப்பறைகள் அமைக்கப்பட உள்ளன. மாணவர்கள் உயர்கல்வி பெற வங்கிக் கடனுதவி முகாம்களும் நடத்தப்படும்.

27) இராயபுரத்திலுள்ள மாடிப்பூங்கா உள்பட 50 பூங்காக்கள், ரூ.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். ரூ.25 கோடி மதிப்பீட்டில் பாலங்கள், பாலங்களின் கீழ்ப் பகுதிகள், சாலை மையத்தடுப்புகள், சாலையோரப் பூங்காக்கள் மற்றும் போக்குவரத்து தீவுத் திட்டுகள் போன்ற இடங்களில் செயற்கை நீரூற்று, வண்ண மின் விளக்குகள் அமைக்கப்படுவதுடன் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் ரிப்பன் கட்டடமும் வண்ண முகப்பு விளக்குகளால் அலங்கரிக்கப்படும்.

28) மேலும், விக்டோரியா பொதுக்கூடம் அதன் தொன்மை மாறாமல், பராமரிக்கப்பட்டு, வண்ண முகப்பு விளக்குகளால் அலங்கரிக்கப்படும்.

29) பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் மயானங்களில் 10 மயானங்கள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

30) சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், மாநகரைப் பசுமையாக்கி அழகுபடுத்தக் குடியிருப்பு நகர் சங்கங்களுடன் இணைந்து வருடத்திற்கு 2.5 இலட்சம் மரக்கன்றுகள் நட நடவடிக்கை எடுக்கப்படும்.

31) சென்னை மாநகரிலுள்ள 10.94 இலட்சம் குடியிருப்புகளில் 8.24 இலட்சம் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் இப்பணிகள் ஜுன் 2022இல் முடிக்கப்படும். நீலாங்கரை மற்றும் செம்மஞ்சேரியில் குடிநீர் திட்டப்பணிகள் ரூ.89 கோடி

மதிப்பீட்டில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படும். இப்பணிகள் முடிக்கப்பட்டு அடுத்த 5 ஆண்டுகளில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் முழுமையாக வழங்கப்படும்.

32) சென்னை மாநகரில் இதுவரை 8.2 இலட்சம் கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது புதியதாக இணைக்கப்பட்ட 8 பகுதிகளில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நவம்பர் 2022ல் முடிக்கப்படும். நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஒக்கியம் – துரைப்பாக்கம், ஜல்லடம்பேட்டை, நந்தம்பாக்கம், மடிப்பாக்கம், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி, இடையான்சாவடி, சடையான்குப்பம் மற்றும் கடப்பாக்கம் ஆகிய 17 பகுதிகளில் புதிய பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.2,056 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

33) சென்னைப் பெருநகரில் மையப்பகுதிகளில் தற்போதுள்ள கழிவுநீர் கட்டமைப்பு பழமையானதால் அதனை மேம்படுத்த விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

34) திருவாரூர் மாவட்டம், நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, கோட்டூர், திருவாரூர், கொரடாச்சேரி ஆகிய 6 ஒன்றியங்களில் உள்ள 665 ஊரக குடியிருப்புகளுக்கு கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.880 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர்

திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 4 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

35) திருவண்ணாமலை மாவட்டத்தின் 4 நகராட்சிகள், 10 பேரூராட்சிகள் மற்றும் 3,973 ஊரக குடியிருப்புகள் மற்றும் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய இத்திட்டம் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ரூ.5,800 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 50 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

36) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் திண்டுக்கல், திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த 492 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கு ஆழியார் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.600 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 5.25 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

37) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, வாடிப்பட்டி, அலங்காநல்லூர், செல்லம்பட்டி, திருமங்கலம் மற்றும் கள்ளிக்குடி ஒன்றியங்களில் உள்ள 795 ஊரகக் குடியிருப்புகளுக்கு வைகை அணையினை நீராதாரமாகக் கொண்டு ரூ.660 கோடி திட்ட மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 6 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

38) இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியத்திலுள்ள செம்பேடு மற்றும் 88 ஊரக

குடியிருப்புகளுக்குப் பாலாறு ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ரூ.39 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 54,000 மக்கள் பயன்பெறுவார்கள்.

39) மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 32 ஊரக குடியிருப்புகளுக்குக் கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.31 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் சுமார் 15,000 மக்கள் பயன்பெறுவார்கள்.

40) கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சி மற்றும் அண்ணாமலை நகர் பேரூராட்சிக்குக் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ரூ.127 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 86,000 மக்கள் பயன்பெறுவர்.

41) திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியத்திலுள்ள 146 ஊரக குடியிருப்புகள், முசிறி, மண்ணச்சநல்லூர் ஒன்றியங்களிலுள்ள கூடப்பள்ளி மற்றும் 129 ஊரக குடியிருப்புகள், தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர், திருவையாறு மற்றும் தஞ்சாவூர் ஒன்றியங்களிலுள்ள 164 ஊரக குடியிருப்புகளிலுள்ள 3.21 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்தில் உள்ள 434 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 1.45 இலட்சம்

மக்கள் பயன்பெறும் வகையிலும், தென்காசி மாவட்டம், தென்காசி நகராட்சி, தென்காசி, செங்கோட்டை மற்றும் கடையநல்லூர் ஒன்றியங்களில் உள்ள 78 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 2.67 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும், கூட்டுக்குடிநீர் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்திலுள்ள சுமார் 1.10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருமருகல், கீழையூர், தலைஞாயிறு, கீழ்வேளூர் மற்றும் நாகப்பட்டினம் ஒன்றியங்களில் உள்ள 749 ஊரக குடியிருப்புகள், நாகப்பட்டினம் நகராட்சி, கீழ்வேளூர் மற்றும் வேளாங்கண்ணி பேரூராட்சிகளைச் சார்ந்த 5.14 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம், நரிப்பையூரில், கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைத்து கமுதி மற்றும் கடலாடி ஒன்றியங்களில் உள்ள 138 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 64,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக்குடிநீர் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

42) இவ்வாறு மகத்தான பணிகளை ஆற்றி வரும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில், பணியாளர்களின்

பற்றாக்குறையைச் சரிசெய்யக் காலிப்பணியிடங்கள் தேவைக்கேற்ப, நிரப்பப்படும்.

43) 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில், நகர்ப்புர மக்கள் தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதெனக் கருதப்படுகிறது. எனவே, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புரத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புரங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாக கருதப்படுகிறது.

தற்போது நகராட்சியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாகவும், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளை நகராட்சியாகவும் அதுபோன்றே மாநகராட்சிகள், நகராட்சிகளில் சிலவற்றை விரிவாக்கம் செய்திடவும், தொடர்ந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன.

தற்போதுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும், நகர்ப்புரமாக மாறி வருகின்ற இந்தப் பகுதிகளிலும், நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும், பின்வருமாறு உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படுகிறது.

புதிய மாநகராட்சிகள்

1. தாம்பரம், பல்லாவரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு மாநகராட்சியாக அமைக்கப்படும். மேலும், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர் மற்றும் சிவகாசி ஆகிய நகராட்சிகள் அதனைச் சுற்றி வளர்ச்சி அடைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒன்றிணைத்து மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்படும்.

விரிவாக்கம்

2. திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில், தஞ்சாவூர், ஒசூர் ஆகிய மாநகராட்சிகளும், செங்கல்பட்டு, பூவிருந்தவல்லி, மன்னார்குடி ஆகிய நகராட்சிகளும் அவற்றைச் சுற்றியுள்ள வளர்ச்சியடைந்துள்ள பேரூராட்சிகளையும், ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து விரிவாக்கம் செய்யப்படும்.

புதிய நகராட்சிகள்

3. பள்ளப்பட்டி, திட்டக்குடி, மாங்காடு, குன்றத்தூர், நந்திவரம்–கூடுவாஞ்சேரி, பொன்னேரி, திருநின்றவூர், சோழிங்கர், இடங்கனசாலை, தாராமங்கலம், திருமுருகன்பூண்டி, கூடலூர், காரமடை, கருமத்தம்பட்டி, மதுக்கரை, வடலூர், கோட்டக்குப்பம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, அதிராம்பட்டினம், மானாமதுரை, சுரண்டை, களக்காடு, திருச்செந்தூர், கொல்லன்கோடு, முசிறி, லால்குடி ஆகிய

பேரூராட்சிகள், அதன் அருகே வளர்ச்சியடைந்துள்ள ஊராட்சிகளை ஒன்றிணைத்து நகராட்சிகளாக மாற்றப்படும். மேலும், புஞ்சை புகளூர் மற்றும் TNPL புகளூர் ஆகிய 2 பேரூராட்சிகளையும் இணைத்து புகளூர் நகராட்சியாக அமைக்கப்படும்.

அவ்வாறு தரம் உயர்த்தப்படும் அல்லது விரிவாக்கம் செய்யப்படும் போது மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுடன் இணைக்கப்படுகின்ற ஊராட்சிகளில் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் தொடர்ந்து அவர்களது பதவிக்காலம் முடியும் வரை அப்பதவிகளிலேயே தொடர்வார்கள். சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் பதவிக் காலம் முடிவடைகின்ற போது இணைக்கப்படும் பகுதிகள் புதியதாக உருவாக்கப்படும் அல்லது விரிவாக்கம் செய்யப்படும் நகராட்சி அல்லது மாநகராட்சியின் முழுமையான ஆளுமைக்கு உட்படுத்தப்படும்.

❖ ❖ ❖

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

கூட்டுறவுத்துறை

மானியக் கோரிக்கை எண். 12

1. கூட்டுறவு தொழிற் பயிற்சி மாணவர்களின் கல்விக் கட்டணம் அரசு ஏற்றல்.

கூட்டுறவுத் துறையின் மூலம் பட்டுக்கோட்டை மற்றும் பர்கூரில் தொழிற் பயிற்சி கல்லூரிகளைத் தமிழக அரசு நடத்தி வருகிறது. இவற்றில் பயிலும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்கும். இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.22,80,000/– செலவாகும். இதனால் ஏழை, எளிய பிரிவைச் சார்ந்த 312 மாணவர்கள் பயன் பெறுவர்.

2. கொடைக்கானலில் கூட்டுறவு மேலாண்மை படிப்பு மற்றும் பயிற்சி நிலையத்தினை அமைத்தல்.

தமிழக அரசால் திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் தாலுகா, மன்னவனூர் வருவாய் கிராமத்தில் தேசிய அளவிலான கூட்டுறவு மேலாண்மை படிப்பு மற்றும் பயிற்சி நிறுவனம், 20 ஏக்கர் நிலத்தில் 26,000 ச.மீ. பரப்பில் ரூ.85 கோடி உத்தேச திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும். தேவைப்படும் தொகையினை நபார்டு வங்கியிடமிருந்து மானியமாகவோ அல்லது தமிழ்நாடு மாநிலத் தலைமைக்

கூட்டுறவு வங்கி நிதி அல்லது தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு கல்வி நிதியில் (CEF) இருந்தோ பெற்று நிறைவேற்றப்படும். இதனால், அரசுக்கு எந்த நிதி சுமையும் இல்லை.

3. நியாய விலைக் கடைகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படும் நியாய விலைக்கடைகளில், 01.07.2021அன்று உள்ளவாறு, விற்பனையாளர்கள் 3,331 காலிப்பணியிடங்களுக்கும், கட்டுநர் 666 காலிப்பணியிடங்களுக்கும், ஏற்கெனவே வெளியிடப்பட்ட அறிவிப்பினை ரத்து செய்து, 1988ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளை பின்பற்றியும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெற்றும், நாளிதழ்களில் புதியதாக அறிவிப்பு வெளியிட்டும், அரசு வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றியும், பணி நியமனம் மேற்கொள்ளப்படும்.

4. கூட்டுறவுத்துறை மூலம் நேரடி கொள்முதல் நிலையங்கள் ஆரம்பித்தல்.

தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை மூலம் நேரடி கொள்முதல் விற்பனை நிலையங்களை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, டெல்டா மாவட்டங்களைத் தவிர்த்துப் பிற மாவட்டங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களை அமைக்க மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை 19 மாவட்டங்களில், 68 நேரடி கொள்முதல் நிலையங்களை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட உள்ளன. இது மேலும் விரிவுபடுத்தப்படும்.

5. மகளிர் சுயஉதவிக்குழு கடன்களுக்கு வட்டி விகிதத்தைக் குறைத்தல், கடன் அளவை உயர்த்துதல் மற்றும் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்தல்.

தமிழகத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் செயல்பாடுகளை வலுப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் கூட்டுறவுத்துறையால் மேற்கொள்ளப்படும்.

- ✶ ரூ.3 இலட்சம் வரையிலான கடன்களுக்கு வட்டி வீதத்தை 12 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைப்பதற்கு இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தமிழ்நாட்டிலுள்ள 3,63,881 குழுக்களைச் சேர்ந்த 43,39,780 உறுப்பினர்கள் பயன் பெறுவர்.

- ✶ தற்போது வழங்கப்படும் கடன் அளவு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சமாக உயர்த்தப்படும்.

- ✶ தமிழகம் முழுவதிலும் உள்ள 3,63,881 மகளிர் சுயஉதவிக்குழுக்களையும் கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6. கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்குதல்.

கூட்டுறவுத்துறை மூலம் தமிழ்நாட்டில் உள்ள கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு 5 சதவீத வட்டியில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி தமிழ்நாட்டில் உள்ள 7,40,173 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் பயன் பெறுவர்.

7. கேசிசி திட்டத்தின்கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்பான இதர பணிகளுக்குக் கடன் வழங்குதல்.

தற்போது, கேசிசி திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ரூ.3 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கடனை உரியக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டித்தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது. இது விவசாயக் கடன்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வரும் நிலையில், இனி கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்புடைய கடன்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

8. தமிழ்நாட்டிலுள்ள வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு முழுவதும் 6,970 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் வாடகையாக ரூ.18.62 கோடி தொடரும் செலவினம் ஏற்படுகிறது.

எனவே, படிப்படியாக ஆண்டொன்றுக்கு 500 கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கென 500 குடும்ப அட்டைகளுக்கு குறைவாக உள்ள கடைகளுக்கு 440 சதுர அடி பரப்பில் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டிலும், 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள கடைகளுக்கு 540 சதுர அடி பரப்பில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

9. இலாபத்தில் இயங்கும் 500 தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றுதல்.

தமிழ்நாட்டில் முதற்கட்டமாக லாபத்தில் இயங்கும் 500 தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும். இதற்கென நபார்டு வங்கி மூலம் 1 சதவீதம் வட்டியில் கடன் பெற்று இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

10. கூட்டுறவுச் சங்க தயாரிப்பான மங்களம் மஞ்சள் தூள் மற்றும் பென்னாகரம் புளியை அதிக அளவில் சந்தைப்படுத்துதல்.

ஈரோடு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தின் ஆலை மூலமாகத் தயாரிக்கப்படும் தரமான கலப்படமற்ற மங்களம் மசாலா என்ற பெயரில் மஞ்சள் தூள் ரூ.5 கோடிக்கு 400 மெ.டன் விற்பனையாகிறது.

இந்த மஞ்சள் தூளை அமுல் நிறுவனத்தைப் போல பிரபலப்படுத்துவதற்கும், நெடுஞ்சாலைகளில், ஆவின் பாலகங்கள் இருப்பதைப்போல, தோற்றப் பொலிவுடன் விற்பனையகங்களை ஏற்படுத்துவதற்கும், FM ரேடியோ மற்றும் விளம்பரங்கள் மூலம் பிரபலப்படுத்துவதற்கும், சந்தையின் தேவைக்கேற்ப உற்பத்தித்திறனைப் பெருக்குவதற்கும், ஆலைக்கு ISO தரச்சான்றிதழ் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதே போன்று தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் உள்ள புளி மிகவும் தரம் வாய்ந்தது என்பதால், இதனையும் ஈரோடு மஞ்சள் தூளைப் போலப் பிரபலப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. பொது விநியோகக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

தமிழ்நாடு முழுவதிலும் கூட்டுறவுத் துறையின் மூலம் **33,068** நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் **20,364** பணியாளர்களுக்கும் **23** கூட்டுறவு பயிற்சி நிலையங்களிலும், **394** அணிகளாக, பல்வேறு கட்டங்களாக, **1** நாள் பயிற்சி முகாமை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென ஏற்படும் செலவினத்தை (ரூ.**2.04** கோடி) கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி அல்லது கூட்டுறவு கல்வி நிதி மூலம் கூட்டுறவுத் துறையே ஏற்கும்.

12. கூட்டுறவு மருந்தகங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை மூலம் 303 மருந்தகங்களில் விற்கப்படும் மருந்துகளுக்கு 20 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. இந்த மருந்தகங்கள் நியாயவிலைக் கடைகள் போல வெளி சந்தைகளில் மருந்து பொருட்களின் விலைகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் மிகவும் முக்கியமான சமூகப் பங்காற்றுகின்றன. இந்த எண்ணிக்கையை அடுத்த 5 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 60 கடைகள் வீதம் 600ஆக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. நியாயவிலைக் கடைகளை மறுசீரமைப்பு குறித்து ஆராய்வதற்காகக் குழு அமைத்தல்.

காலத்திற்கேற்றவாறு நியாயவிலைக் கடைகளை மறுசீரமைப்பது குறித்து ஆராய மாநில அளவில் உணவு பொருள் வழங்கல் துறை ஆணையர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், நுகர்வோர் பாதுகாப்பு சங்கத்தின் செயல்பாட்டாளர் மற்றும் உயர் அலுவலர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

14. 33 கூட்டுறவு அமைப்புகளின் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துதல்.

தமிழ்நாட்டிலுள்ள 33 கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துவதற்கும் அதன் மூலம்

வாடிக்கையாளர்களின் விலை மதிப்பற்ற நகைகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரிப்பதற்கும் ரூ.416 இலட்சத்தில் பாதுகாப்பு பெட்டகப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கான செலவினம் கூட்டுறவுச் சங்கங்களின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

15. மாநிலம் முழுவதும் 60 புதிய தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரம் அமைத்தல்.

தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறை வங்கிகளில் ஏற்கனவே 96 தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் உள்ளன. மேலும் புதியதாக இந்த ஆண்டு 60 தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் கீழ்க்கண்டவாறு பொருத்தப்படும்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கியின் கிளைகள்	– 6
சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகள்	– 10
மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகள்	– 44
மொத்தம்	– 60

இதற்காக ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1.98 கோடி ஆகும். இதற்காக நிகழும் செலவினம் முழுவதையும் அந்தந்த வங்கிகளே ஏற்கும்.

16. ஏலகிரி பெரும்பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு கிடங்கு கட்டுதல்.

திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி மலையில் வாழும் பழங்குடி மக்கள் தங்களது விவசாய உற்பத்தி மூலம் கிடைக்கும் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கும், மதிப்புக் கூட்டும் பொருட்களாக மாற்றுவதற்கும் அங்கு 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். இதற்கான நிலமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின்கீழ் 100 சதவீதம் மானியத்தில் கட்டப்படும்.

17. புதூர்நாடு பெரும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு கிடங்கு கட்டுதல்.

திருப்பத்தூர் மாவட்டம் புதூர்நாடு மலையில் வாழும் பழங்குடி மக்கள் தங்களது விவசாய உற்பத்தி மூலம் கிடைக்கும் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கும், மதிப்புக் கூட்டும் பொருட்களாக மாற்றுவதற்கும் அங்கு 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். இதற்கான நிலமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின்கீழ் 100 சதவீதம் மானியத்தில் கட்டப்படும்.

18. ஒரத்தநாடு விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கத்திற்குக் கிடங்கு கட்டுதல்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு, அங்குள்ள விவசாயிகளால்

உற்பத்தி செய்யப்படும் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கும், மதிப்புக் கூட்டும் பொருட்களாக மாற்றுவதற்கும் அங்கு 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். இதற்கான நிலமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின்கீழ் 100 சதவீதம் மானியத்தில் கட்டப்படும்.

19. நாமக்கல் விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு புதிய ஏலக்கூடம் கட்டுதல்.

நாமக்கல் விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு அங்குள்ள விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை ஏலம் விடுவதற்கு வசதியாகவும், பொருட்களைக் கொண்டு வருவதற்கு ஏற்றவாறு ஒரு அணுகு பாலத்தைக் கட்டுவதற்கும் ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டம் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின்கீழ் 100 சதவீதம் மானியத்தில் கட்டப்படும்.

20. ராசிபுரம் விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் உள்ள ஏலக்கூடத்திற்கு கூரை அமைத்தல்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உள்ள ஏலக்கூடத்திற்கு கூரை அமைப்பதற்காக ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால் மழைக்காலங்களில் பருத்தி பொதி மூட்டைகள் நனைந்து வீணாவது தடுக்கப்படும். இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்கள் கட்டுப்படுத்தப்படும். மேலும், வெயில் காலங்களில் விவசாயிகள் இதனைப் பயன்படுத்திக்கொள்ளவும்

இயலும். திட்டம் தேசிய விவசாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 100 சதவீதம் மானியத்தில் கட்டப்படும்.

21. பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையில் அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் ஆண்டொன்றுக்கு ரூ.21.77 கோடியில் வர்த்தகம் ஆகிறது. கடந்த ஆண்டில் நிகர லாபமாக ரூ.27.49 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இந்த மொத்த விற்பனை பண்டக சாலையில் வைப்புத் தொகையாக ரூ.3 கோடி உள்ளது. இந்த வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதற்காக தற்போது கீழ்த்தளத்தில் கடையும் அலுவலகமும் ஒன்றாக இருப்பதைப் பிரித்து, முதல் மாடியில் புதிய அலுவலகம் ரூ.33 இலட்சம் மதிப்பில் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

22. நகரக் கூட்டுறவு வங்கிகளில் முதல் முறையாக 10 தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்களை (ATM) நிறுவுதல்.

தமிழ்நாட்டில் உள்ள 108 நகரக் கூட்டுறவு வங்கிகள் எதிலும் தானியங்கி பணப்பட்டுவாடா செய்யும் இயந்திரம் (ATM) வசதி இல்லை. எனவே நடப்பாண்டில், முதற்கட்டமாக 10 தானியங்கி பணப்பட்டுவாடா செய்யும் இயந்திரங்கள் (ATM) கீழ்க்கண்ட நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளில் நிறுவப்படும்.

1. ஈரோடு மாவட்டம் – கோபிசெட்டிபாளையம்

2. சென்னை மாவட்டம் – ஜார்ஜ்டவுன்

3. காஞ்சிபுரம் மாவட்டம் – பெரிய காஞ்சிபுரம்

4. காஞ்சிபுரம் மாவட்டம் – சின்ன காஞ்சிபுரம்

5. விருதுநகர் மாவட்டம் – பூபதிராஜ்

6. கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர்

7. கிருஷ்ணகிரி மாவட்டம் – கிருஷ்ணகிரி

8. விழுப்புரம் மாவட்டம் – விழுப்புரம்

9. திருப்பூர் மாவட்டம் – திருப்பூர்

10. தஞ்சாவூர் மாவட்டம் – நிக்கல்சன்

இதற்கென ஆகும் செலவு ரூ.50 இலட்சம் அந்தந்த வங்கிகளால் மேற்கொள்ளப்படும்.

23. திண்டுக்கல் மாவட்டத்தில், கூட்டுறவுத்துறை சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பித்தல்.

திண்டுக்கல் மாவட்டத்தில், ஆத்தூர் தொகுதியில், கூட்டுறவுத்துறையின் சார்பில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான நிலம் தெரிவு செய்யும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்த திட்டம் நிறைவேறும்பொழுது இந்தப் பகுதியில் உள்ள 2,000க்கும் மேற்பட்ட ஏழை, எளிய மாணவ, மாணவியர் பயன்பெறுவர். இதற்காக ஆகும் செலவினம் ரூ.20 கோடி முழுவதையும் கூட்டுறவுத்துறையே ஏற்கும்.

24. மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 10 புதிய கிளைகள் ஏற்படுத்துதல்.

தமிழகம் முழுவதும் உள்ள 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 10 எண்ணிக்கையில் புதிய கிளைகளை கீழ்க்கண்ட 7 மாவட்டங்களில் இந்த வருடம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1. மதுரை (தேவாரம் புதிய கிளை)
2. மதுரை (கூடல் நகர் புதிய கிளை)
3. புதுக்கோட்டை (டி.வி.எஸ். நகர் புதிய கிளை)
4. புதுக்கோட்டை (தேனிப்பட்டி புதிய கிளை)
5. தஞ்சாவூர் (சோழபுரம் புதிய கிளை)
6. நாகப்பட்டினம் (ஆயக்காரன்புரம் புதிய கிளை)
7. திருவாரூர் (கச்சனம் புதிய கிளை)
8. தூத்துக்குடி (வாகைக்குளம் புதிய கிளை)
9. வேலூர் (குரிசிலாப்பட்டு புதிய கிளை)
10. வேலூர் (புதுப்பேட்டை புதிய கிளை)

இந்தக் கிளைகளை ஆரம்பிப்பதற்கு ரூ.230 இலட்சம் செலவாகும். இந்த செலவினம் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

25. திண்டுக்கல் கூட்டுறவு பண்டகசாலைக்கான புதிய கட்டடம் கட்டுதல்.

திண்டுக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட கூட்டுறவு பண்டகசாலையில் ஆண்டொன்றுக்கு ரூ.33.70 கோடி வர்த்தகமாகிறது. கடந்த ஆண்டில் நிகர இலாபமாக ரூ.2.75 இலட்சம் ஈட்டப்பட்டுள்ளது. பழமையான இந்த கட்டடத்தில் போதிய இடவசதி இன்றி பண்டகசாலை மற்றும் அலுவலகம் இயங்கி வருகின்றது. இதனுடைய வர்த்தகத்தை அதிகரிப்பதற்காக, இந்த கூட்டுறவு பண்டகசாலைக்குப் புதிய கட்டடம் கட்ட கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான நிலம் 7,050 சதுர அடி உள்ளது. இந்த இடத்தில் புதிய பண்டகசாலை அமைக்கப்படும். இதற்காகும் செலவினம் ரூ.1.75 கோடி செலவினை கூட்டுறவுத்துறையே ஏற்கும்.

❖ ❖ ❖

உயர்கல்வித்துறை

மானியக் கோரிக்கை எண். 20

1. புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குதல் (Opening of New Government Arts and Science Colleges)

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான உயர்கல்வி வழங்குவதற்கும், மாணவர் சேர்க்கை விகிதாச்சாரத்தை அதிகப்படுத்துவதற்கும், 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்காணும் இடங்களில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படும்:

விருதுநகர் மாவட்டம் – திருச்சுழி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோவிலூர், ஈரோடு மாவட்டம் – தாளவாடி, திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம், திருநெல்வேலி மாவட்டம் – மானூர், திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், தருமபுரி மாவட்டம் – ஏரியூர், புதுக்கோட்டை மாவட்டம் – ஆலங்குடி மற்றும் வேலூர் மாவட்டம் – சேர்க்காடு ஆகிய இடங்களில் புதிய இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும்,

திருவாரூர் மாவட்டம் – கூத்தாநல்லூரில் புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் தொடங்கப்படும்.

2. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள 17 மின்னணு நூலகங்களை மேம்படுத்துதல் (Upgradation of Existing 17 Digital Libraries)

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடங்கப்பட்ட 17 மின்னணு நூலகங்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்பாட்டில் உள்ளன.

இந்நூலகங்களை மேம்படுத்தவும், உரிமங்களைப் புதுப்பிக்கவும், ஒரு கல்லூரிக்கு ரூ.5 இலட்சம் வீதம் 17 கல்லூரிகளுக்கு ரூ.85 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

3. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதியதாக 10 மின்னணு நூலகங்களை அமைத்தல் (Setting up of 10 New Digital Libraries)

மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள், தங்களுக்குத் தேவைப்படும் தகவல்களையும், எல்லையற்ற அறிவுசார் வளங்களையும், உடனுக்குடன் எளிதாகப் பெறுவதற்கு, மின்னணு நூலகங்கள் பாலமாக அமைந்துள்ளன. எனவே, சென்னை – வியாசர்பாடி, தருமபுரி, பரமக்குடி, அரியலூர், முசிறி, விழுப்புரம், சிவகங்கை, கும்பகோணம், திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மின்னணு நூலகங்கள் ரூ.1 கோடி செலவில் அமைக்கப்படும்.

4. புதியதாகத் தொடங்கப்பட்ட 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல் (Construction of New Buildings for Newly Opened four Government Arts and Science Colleges)

அண்மையில் தொடங்கப்பட்ட 13 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தற்காலிகக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. முதற்கட்டமாக, சங்கரன்கோவில், ஜம்புகுளம், வானூர் மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஒரு கல்லூரிக்கு ரூ.11.33 கோடி வீதம் மொத்தம் ரூ.45.32 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆராய்ச்சிப் பாடப் பிரிவுகள் தொடங்குதல் (Starting Ph.D Research Programs in Government Arts and Science Colleges)

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் நலன் கருதி, முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்வதற்கு செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், கும்பகோணம், கோவில்பட்டி, சென்னை – நந்தனம் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதியதாக ஆராய்ச்சிப் பாடப் பிரிவுகள் தொடங்கப்படும்.

6. பாடப் புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் (Translation of Text Books in Tamil)

தமிழ் வழியில் பயிலும் மாணாக்கர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் ஒருங்கிணைந்து வெவ்வேறு பாடப்பிரிவுகளில், 100 பாடப் புத்தகங்கள் ரூ.2 கோடி செலவில் தமிழில் மொழிபெயர்க்கப்படும்.

7. பட்டயப் படிப்புகளைத் தமிழ் வழியில் அறிமுகப்படுத்துதல் (Introduction of Diploma Courses in Tamil Medium)

தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு, அரசுப் பணிகளில் 20 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. பட்டயப் படிப்பில் பயிற்று மொழியாக ஆங்கிலம் மட்டுமே இதுவரை இருந்து வருகிறது. முதற்கட்டமாக, அடுத்த கல்வியாண்டில், அமைப்பியல் (Civil Engineering) மற்றும் இயந்திரவியல் (Mechanical Engineering) பட்டயப் படிப்புகள் தமிழ் வழியில் தொடங்கப்படும். படிப்படியாக இதர பட்டயப் படிப்புகளும், தமிழ் வழியில் தொடங்கப்படும்.

8. மகளிருக்கான பட்டயம் மற்றும் குறுகியகால சான்றிதழ் படிப்புகள் அறிமுகப்படுத்துதல் (Introduction of Women-Friendly Diploma and Short Term Certificate Courses)

பலவகை, தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnic Colleges) தற்சமயம் மாணாக்கியர் சேர்க்கை விகிதம்

குறைவாக உள்ளது. மகளிரின் சேர்க்கை மற்றும் வேலைவாய்ப்பை உயர்த்துவதற்காக, அக ‘வனப்பியல் (Interior Decoration)அலுவலக மேலாண்மை மற்றும் கணினிப் பயன்பாடுகள் (Office Management and Computer Applications) இணையவலை வடிவமைப்பு (Web Designing) இயந்திரவிய கணினி கொண்டு வடிவமைத்தல் (CAD) உயிர் மருத்துவ மின்னணுவியல் (Bio-Medical Electronics) மற்றும் இதயத் துடிப்பு பதிவி (ECG) தொழில்நுட்பம் ஆகிய ஆறு பாடப்பிரிவுகள் தொடங்கப்படும்.

9. அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு அயல்நாட்டு மொழிகள் கற்பித்தல் (Teaching Foreign Languages to Final Year Students of Government and Government - Aided Engineering Colleges)

நமது, மாணாக்கர்கள் அயல்நாடுகளில் ஆராய்ச்சி மற்றும் வேலை வாய்ப்பினை அதிகளவில் பெறுவதற்காக, அயல்நாட்டு மொழிகளைக் கற்றல் கூடுதல் நன்மை பயக்கும் எண்பதால், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியுடன். பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு ஜெர்மானிய, ஜப்பானிய, சீன, ரஷ்ய, பிரஞ்சு ஆகிய அயல்நாட்டு மொழிகள் கற்பிக்கப்படும்.

10. ஈரோடு சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரியினை அரசு பொறியியல் கல்லூரியாக மாற்றுதல்

(Conversion of Institute of Road and Transport Technology (IRTT), Erode into Government Engineering College, Erode)

மாநில போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு, அக்கழகத்தால் நிருவகிக்கப்பட்டு வரும் ஈரோடு, சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரி (Institute of Road and Transport Technology, Erode) இக்கல்வியாண்டு முதல் அரசுப் பொறியியல் கல்லூரியாக மாற்றப்பட்டு மாணாக்கர் சேர்க்கையில் 35% இடங்கள் மாநிலப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கென தொடர்ந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

11. பொறியியல் பட்டதாரி மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் மேற்படிப்புக்கான போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி வழங்குதல் (Providing Intensive Coaching for Competitive Examinations to Engineering Graduates)

பொறியியல் பட்டதாரிகள், பட்ட மேற்படிப்பினை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிலவும், வேலை வாய்ப்பினைப் பெறும் எண்ணிக்கையை உயர்த்தவும், போட்டித் தேர்வுகளான IES, GATE, CAT, GMAT, GRE, IELTS, TOEIFL போன்றவைகளுக்குச் சிறப்புப் பயிற்சி வழங்கப்படும்.

12. தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் தொழில் முனைவு மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்

(Memorandum of Understanding (MoU) between Directorate of Technical Education and Entrepreneurship Development and Innovation Institute (EDII))

பலவகை, தொழில்நுட்பக் கல்லூரிகளில், மாணவர்களைத் தொழில்முனைவோர்களாக ஊக்குவிப்பதற்கும், உரியப் பயிற்சிகளைப் பெறுவதற்கும், தொழில்முனைவு மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் உதவியுடன், 5 மண்டலங்களில் பயிற்சி மையம் நிறுவப்படும். இம்மையங்கள் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் மேற்கூறிய பயிற்சிகள் வழங்கப்படும்.

13. தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், கல்லூரிக் கல்வி இயக்ககம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்

(Memorandum of Understanding (MoU) between Directorate of Technical Education, Collegiate Education and Tamil Nadu Skill Development Corporation)

மாணாக்கர்களின் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்துவதற்காகக் கூடுதல் பாடங்கள் (add-on courses) பயிற்றுவிக்கத் தொழில்நுட்பக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககங்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும்.

14. தமிழகத்தில் 5 மண்டலங்களில் “செய்கலைஞர் ஆய்வுக்கூடம்” நிறுவுதல் (Establishment of Fab Lab / Maker Space in 5 Regions)

ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களின் படைப்பாற்றல் மற்றும் தனித் திறன்களை மேம்படுத்த 5 மண்டலங்களில் செய்கலைஞர் ஆய்வுக் கூடம் (Fab Lab/Makers Space) நிறுவப்படும்.

15. பி.காம். பட்டப்படிப்பில் நேரடி இரண்டாம் ஆண்டுச் சேர்க்கை (Lateral Entry to B.Com Courses)

பலவகை தொழில்நுட்பப் பட்டயப் படிப்புகளான வணிகவியல் பயிற்சி பட்டயப் படிப்பு (Diploma in Commercial Practice) வணிகவியல் பயிற்சி மற்றும் கணினிப் பயன்பாடுகள் பட்டயப் படிப்பு (Diploma in Commercial and Computer Practice) பயின்ற மாணாக்கர்கள், தமிழகத்தின் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும். நேரடியாக இரண்டாம் ஆண்டில் பி.காம். படிப்பில் சேர்ந்து பயில வழிவகை செய்யப்படும்.

16. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கும், மும்பை, இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (IIT-Bombay) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் (Memorandum of Understanding between Directorate of Technical Education and IIT - Bombay)

மும்பை, இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (IIT Bombay) இணைந்து தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் நிகழ்நிலைப் பாடங்கள் **51** அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும்.

17. ரூசா (RUSA) நிதி உதவியுடன் "வாராந்திர நிகழ்நிலை பயிலரங்கம்" நடத்துதல் (Conducting Weekly Online Workshops (WOW) through RUSA)

தேசிய உயர்கல்வித் திட்டம் (RUSA) நிதி உதவியுடன், தமிழகத்தில் உள்ள **150** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொழில் முனைவு குறித்து நிகழ்நிலைப் பயிலரங்கங்கள் நடத்தப்படும்.

18. ரூசா (RUSA) நிதி உதவியுடன் தொழில்சார் திறன் பயிற்சியளித்தல் (Vocational Training to the Students of Higher Education through RUSA)

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு தொழில்சார் திறன் பயிற்சி ரூ.**3.30** கோடி செலவில் அளிக்கப்படும்.

19. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கான 4 புதிய மண்டல மையங்கள் நிறுவுதல் (Establishment of 4 New Regional Centres for Tamil Nadu Open University)

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தற்போது 8 மண்டல மையங்கள் வழியாகக் கல்விச் சேவை வழங்கி வருகிறது. மேலும், கூடுதலாக 4 புதிய மண்டல மையங்கள் ரூ.1 கோடி செலவில் சேலம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் அமைக்கப்படும்.

20. மாவட்ட மைய நூலகங்களுக்குப் பாட நூல்களை வழங்குதல் (Supply of Learning materials to District Central Libraries)

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் சார்பில், கற்போர் நலனுக்காகவும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையிலும் 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு தலா 750 பாடநூல்கள், ரூ.1 கோடி செலவில் வழங்கப்படும்.

21. பொறியியல் கல்லூரிகளில் முதுநிலைப் பட்டப் படிப்பு பயிலும் உதவித்தொகை பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை 1,200ஆக உயர்த்துதல் (Increasing the number of students availing Post Graduate Assistantship in Engineering Colleges to 1,200)

தமிழகத்தில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் அண்ணா பல்கலைக்கழகம் நுழைவுத் தேர்வு மூலம் சேர்க்கை பெற்று முதுநிலைப் பட்டப்படிப்பு பயிலும் 600 மாணாக்கர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6,000 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த கல்வியாண்டு முதல் இம்மாணாக்கர்கள் எண்ணிக்கை 1,200 ஆக அதிகரிக்கப்படும்.

22. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்காக புதிய நுண் படச்சுருள் பாதுகாப்புப் பெட்டகம் அமைத்தல் (Construction of Microfilm Repository for Tamil Nadu Archives)

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 300 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ஆவணங்களிலிருந்து உருவாக்கப்பட்ட 31,000 நுண் படச்சுருள்களை நீண்ட காலத்திற்குப் பாதுகாக்கும் பொருட்டு, இயற்கையிலேயே குளிர்ந்த தட்பவெப்ப நிலையுள்ள நீலகிரி மாவட்டத்தில், 5,000 சதுர அடி பரப்பில் நுண் படச்சுருள் பாதுகாப்புப் பெட்டகம் உருவாக்கப்படும்.

23. கோவையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் மாணாக்கியர் விடுதி கட்டடம் கட்டுதல் (Construction of Women’s Hostel Building in Anna University Regional Campus, Coimbatore)

கோவையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் 660 மாணவ, மாணவியர் இளநிலை மற்றும் முதுநிலை பாடப் பிரிவுகளில் பயின்று வருகின்றனர்.

இம்மாணாக்கியர் நலன் கருதி ரூ.14 கோடி செலவில் புதிய மாணாக்கியர் விடுதி கட்டப்படும்.

24. மதுரையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் மாணவர் விடுதிக் கட்டடம் கட்டுதல் (Construction of Men's Hostel Building in Anna University Regional Campus, Madurai)

மதுரையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் 800 மாணாக்கர்கள் இளநிலை முதுநிலை பாடப் பிரிவுகளில் பயின்று வருகின்றனர். இம்மாணவர்களின் நலன் கருதி ரூ.15 கோடி செலவில் புதிய மாணவர் விடுதி கட்டப்படும்.

25. உயர்கல்வித்துறையின் கீழ் இயங்கும் அனைத்து கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டம் சீரமைத்தல் (Revision of Curricula of all Educational Institutions coming under Higher Education Department)

நவீன தேவைகளுக்கேற்ப பாடத்திட்டங்களைச் சீரமைப்பது கல்வி வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது. மாணாக்கர்களின் அறிவுத் திறன், கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை மேம்படுத்தவும், போட்டித் தேர்வுகளுக்குத் தயார்ப்படுத்தவும், தொழிற்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் உயர்கல்வித்துறையின்கீழ் இயங்கும் அனைத்து கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டங்கள் திருத்தியமைக்கப்படும்.

❖ ❖ ❖

பொதுப்பணித்துறை

மானியக் கோரிக்கை எண். 39

1. தரக்கட்டுப்பாடு மேம்படுத்துதல்

கட்டட கட்டுமானங்களில் பிரதானமாகப் பயன்படுத்தப்படும் நொறுக்கப்பட்ட கல் மணல் அல்லது தயாரிக்கப்பட்ட மணல் (எம்.சாண்ட்) தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு தனியாரால் விற்கப்படும் எம்.சாண்டினை பரிசோதனை செய்து தரமற்ற எம்.சாண்டினை கண்டறிந்து, கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. பொதுப்பணித்துறை நிருவாக சீரமைப்பு

- ✶ அனைத்து அலுவலக நடவடிக்கைகளும் கணினி மயமாக்கப்பட்டு கைப்பேசி மூலம் கண்காணிக்க உரிய திட்டம் செயல்படுத்தப்படும்.
- ✶ தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஒப்புதலுக்கான தலைமைப் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்களுக்கு அதிகார வரம்பு உயர்த்தப்படும்.
- ✶ மதிப்பீடுகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் தர விவர தகவல்கள் (Standard Data) புதுப்பித்துத் திருத்தி அமைத்திடத் தகுதியான குழு அமைக்கப்படும்.

3. பொதுப்பணித்துறை மறு சீரமைப்பு

சென்னை மற்றும் திருச்சி மண்டலங்களை மறுசீரமைத்து கோயம்புத்தூரைத் தலைமை இடமாகக் கொண்டு ஒரு கூடுதல் மண்டலம் உருவாக்கப்படும்.

4. ஒப்பந்த முறை சீரமைப்பு

- ✶ ஒப்பந்தக்காரர் பதிவு ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பித்தல் என்பதிலிருந்து மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை என மாற்றப்படும்.
- ✶ புதிய ஒப்பந்தக்காரர் பதிவு மற்றும் புதுப்பித்தல், மண்டல தலைமைப் பொறியாளர்கள் அளவிலேயே இனி மேற்கொள்ளப்படும்.
- ✶ தொகுப்பு முறையிலான ஒப்பந்தப்புள்ளி (Package Tender System) கோரும் நடைமுறை இரத்து செய்யப்படும்.
- ✶ பொதுப்பணித்துறை வாயிலாக மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளில் ரூ.15 கோடி மதிப்பீட்டிற்குள்ளான சிவில் மற்றும் மின் பணிகளுக்கு தனித்தனியாக ஒப்பந்தம் (Seperate Agreement) மேற்கொள்ளப்படும்.
- ✶ முன்தகுதி ஒப்பந்தப்புள்ளிக்கான நிதி உச்சவரம்பு ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்படும்.

5. புதிய சுற்றுலா மாளிகைகள்

- ✶ 6 புதிய மாவட்ட தலைமையகங்களில் (செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், தென்காசி மற்றும் மயிலாடுதுறையில்) தலா ரூ.7.05 கோடி மதிப்பீட்டில் புதிய சுற்றுலா மாளிகைகள் ரூ.42.30 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- ✶ திருச்சி, கடலூர், நாகப்பட்டினம் மதுரை, திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய ஆறு இடங்களில் ரூ.37.98 கோடியில் கூடுதல் சுற்றுலா மாளிகைகள் கட்டப்படும்.

- ✶ விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகரில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டப்படும்.

6. சுற்றுலா மாளிகைகள் மேம்படுத்துதல்

மதுரையில் உள்ள சுற்றுலா மாளிகை பிரதான கட்டடம் மற்றும் கூடுதல் கட்டடங்களை ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

7. தலைமைக் கட்டடக் கலைஞர் மற்றும் பொறியாளர்களுக்கு வாகனங்கள் வழங்குதல்

தலைமைக் கட்டடக் கலைஞர், கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்களுக்குப் பழைய வாகனங்களுக்குப் பதிலாக 8 புதிய மகிழுந்துகள் மற்றும் 22 புதிய ஈப்புகள் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

- கடலூரில் 3 உபகோட்டங்கள், 5 பிரிவு அலுவலகங்கள் உள்ளடக்கிய ஒரு கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டம் ரூ.4.65 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

- கள்ளக்குறிச்சியில் மருத்துவப் பணிகள் மேற்கொள்ளும் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்ட அலுவலகங்கள் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

- மதுரையில் ரூ.75 இலட்சம், திண்டுக்கல்லில் ரூ.45 இலட்சம், காரைக்குடியில் ரூ.100 இலட்சம் மற்றும் தூத்துக்குடியில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் உபகோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

- சென்னை, தரமணி, பொதுப்பணித்துறை வளாகத்தில் மழைநீர் வடிகால் அமைப்புகள், சேதமடைந்த உட்புற சாலைகள், சுற்றுச்சுவர் மற்றும் இதர மேம்பாட்டுப் பணிகள் ரூ.4.68 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

- சென்னை, சேப்பாக்கம், பொதுப்பணித்துறை வளாகத்தில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் உணவுக்கூடம் அமைக்கப்படும்.

9. தலைமைச் செயலக பொதுப்பணித்துறை அலுவலக உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் கணினி மயமாக்குதல்

தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித்துறை அலுவலக இருக்கை இடவசதிகளை மேம்படுத்தும் பணிகள்

ரூ.82 இலட்சம் மதிப்பீட்டிலும், அலுவலகத் தேவைக்கான கூடுதல் கணினி 65 எண்களும், 5 மடிக்கணினி, 10 வலுவான அச்சுப்பொறிகள், 15 அச்சுப் பொறிகள் மற்றும் 10 ஊடுகதிர் படக்கருவிகள் ஆகியவை ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும் மொத்தம் ரூ.132 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

10. புதிய குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் குடியிருப்புகள் புனரமைத்தல்

✶ நீலகிரியில் அரசுப் பணியாளர்களின் பழைய குடியிருப்புகளுக்குப் பதிலாக 160 புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகள் ரூ.56.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

✶ பொதுப்பணித்துறைப் பொறியாளர்களுக்கு திருச்சியில் ரூ.3.05 கோடி, திருவாரூரில் ரூ.1 கோடி, கோயம்புத்தூரில் ரூ.4.25 கோடி, உதகமண்டலத்தில் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் 23 புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.

✶ சென்னை, தண்டையார்பேட்டை, பொதுப்பணித்துறை பண்டகசாலை அரசு ஊழியர் குடியிருப்பில் 9 தொகுப்பில் 54 குடியிருப்புகள் ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

❖ ❖ ❖

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

மானியக் கோரிக்கை எண். 21

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சாலை மேம்பாட்டுத்திட்டம்

மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் தாலுகா தலைமையிடங்களை இணைக்கும் 2,200 கி.மீ நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், போக்குவரத்து செறிவின் அடிப்படையில், அடுத்த 10 ஆண்டுகளில் நான்கு வழித்தட சாலைகளாகவும் 6,700 கி.மீ. சாலைகள் இரண்டு வழித்தட சாலைகளாகவும் “மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சாலை மேம்பாட்டுத்திட்டம்” என்ற புதிய திட்டத்தின்கீழ் அகலப்படுத்தப்படும். இதன் முதற்கட்டமாக நடப்பாண்டில் போக்குவரத்து செறிவு அதிகமுள்ள 250 கி.மீ. சாலைகளை ரூ.2,000 கோடி மதிப்பில் நான்கு வழித்தட சாலைகளாகவும், போக்குவரத்து செறிவு அதிகமுள்ள 600 கி.மீ. சாலைகளை ரூ.1,200 கோடி மதிப்பில் இரு வழிச்சாலைகளாகவும் அகலப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனால், போக்குவரத்து நெரிசல் குறைவதோடு தங்கு தடையற்ற பாதுகாப்பான போக்குவரத்து உறுதிப்படுத்தப்படும்.

2. நகரப்பகுதி மேம்பாடு

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளின் மையப்பகுதிகளில் பேருந்து நிலையம் மற்றும் வணிக

வளாகங்கள் இருப்பதால், அப்பகுதியில் மக்கள் பயன்பாடு அதிகரிக்கிறது. எனவே நகரப் பகுதிகளில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் தேவையான இடமிருப்பின் கடின புருவங்களுடன் கூடிய நான்கு வழித்தடமாக அகலப்படுத்தப்படும் மற்றும் இடவசதி இல்லாத பகுதிகளில், நெடுஞ்சாலை எல்லைக்குட்பட்ட பகுதி வரை சாலைகள் அகலப்படுத்தப்படும். மேலும் மழை நீர் தேங்குவதைத் தடுப்பதற்காக நடைபாதைகளுடன் கூடிய வடிகால்கள் கட்டப்படும். இத்திட்டத்திற்கு ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தில் 10 சதவிகிதம் நிதி, அதாவது சுமார் ரூ.400 கோடி ஒதுக்கப்படும்.

3. தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாகக் கட்டுதல்.

நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் உள்ள 1,281 பழைய தரைப்பாலங்களை ரூ.2,401 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட பாலங்களாகக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 648 தரைப்பாலங்கள் உயர்மட்ட பாலங்களாக ரூ.609.71 கோடி மதிப்பில் கட்டப்படும்.

4. புறவழிச்சாலைகள் அமைத்தல்.

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சாலை பாதுகாப்பினை மேம்படுத்தவும் நடப்பாண்டில் அறந்தாங்கி, திருச்சி (அரைவட்ட சாலை), ஆலங்குடி, மயிலாடுதுறை, முசிறி, வெள்ளக்கோவில், திருப்பூர், காங்கேயம், பென்னாடம், செந்துறை, செங்கம், மேல்கச்சிராப்பட்டு, புதுவயல், தருமபுரி மற்றும் கெங்கவல்லி ஆகிய நகரங்களுக்குப் புறவழிச்சாலை

அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.9.83 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

நிலம் கையகப்படுத்தும் பணி நிறைவடைந்துள்ள சிவகங்கை, பார்த்திபனூர், கமுதி, திருத்துறைப்பூண்டி, அம்பாசமுத்திரம், பவானி, அருப்புக்கோட்டை (மேற்கு) மற்றும் உத்திரமேரூர் ஆகிய புறவழிச்சாலைகளுக்கான கட்டுமானப் பணிகள் ரூ.595.54 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

கரூர் நகரத்தில் தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகப் புறவழிச்சாலை மற்றும் புதிய இணைப்புச் சாலைப் பணிகள் செயல்படுத்தப்படும்.

5. உயர்மட்ட சாலை அமைத்தல்

நகரப்பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு,

- ✶ திருச்சி மாநகரில் தலைமை தபால் நிலையத்திலிருந்து காந்திசிலை, முத்தரையர் சிலை வழியாக நீதிமன்ற ரவுண்டானா வரையில் உயர் மட்ட சாலை அமைக்கப்படும்.
- ✶ ஓடத்துறை காவிரி பாலம் முதல் அண்ணா சிலை மற்றும் கலைஞர் அறிவாலயம் வழியாக மல்லாட்சிபுரம் வரையில் உயர் மட்ட சாலை அமைக்கப்படும்.

மதுரை மாநகரில்

- ✶ விமான நிலையத்திற்குச் செல்லும் பயண நேரத்தை குறைக்கும் பொருட்டு நெல்பேட்டை முதல் அவனியாபுரம் புறவழிச்சாலை சந்திப்பு வரையில் உயர்மட்ட சாலை அமைக்கப்படும்.

- ✶ இப்பணிகள் மதுரை மற்றும் திருச்சி நகரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை ஆய்வுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படும்.

- ✶ உயர்மட்ட சாலை அமைக்க முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை ரூ.5.13 கோடியில் தயாரிக்கப்படும்.

6. சாலை மேம்பாலம் அமைத்தல்

- ✶ மதுரை மாநகரில், விரகனூர் சந்திப்பிலும், அருப்புக்கோட்டை சாலை சந்திப்பிலும், சாலை மேம்பாலம் அமைக்கப்படும். முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை ரூ.72 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

- ✶ திருநெல்வேலி மாநகரில், புதிய பேருந்து நிலையம் அருகில் வீரமாணிக்கபுரம் சந்திப்பில் சாலை மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.56 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

7. சென்னை மாநகரப்பகுதி மேம்பாடு

சென்னை பெருநகர பகுதியில், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக

- ✶ மத்திய கைலாஷ் சந்திப்பில், இராஜீவ் காந்தி சாலை மற்றும் சர்தார் பட்டேல் சாலையை இணைக்கும் வகையில் ரூ.56 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்டப்படும்.
- ✶ மவுண்ட் பூந்தமல்லி, ஆவடி சாலையில், இராமாபுரம் மற்றும் முகலிவாக்கம் சந்திப்புகளில் 3.14 கி.மீ நீளத்திற்கு உயர் மட்ட சாலை அமைக்கப்படும்.
- ✶ மவுண்ட் மேடவாக்கம் சாலை மற்றும் உள்வட்ட சாலை சந்திப்பில் கீழ்ப்பாலம் அமைக்கப்படும்.

மேற்கூறிய இரு பணிகள் ரூ.403 கோடி மதிப்பில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும்.

- ✶ கிழக்குத் தாம்பரத்தையும், மேற்குத் தாம்பரத்தையும், முடிச்சூர் சாலையையும் இணைக்கும் விதமாகப் பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதை மற்றும் சேவைச்சாலை அமைக்கப்படும்.
- ✶ தாம்பரம் சண்முகம் சாலையைச் சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும் சாலை அமைக்கப்படும்.

இந்த இரு பணிகளுக்கு முதற்கட்டமாக ரூ.80 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

8. O.M.R. சாலையில் சுங்க வசூல் நிறுத்தம்

சென்னை மெட்ரோ இரயில் பணிகள் தொடங்கப்படுவதையொட்டி, இராஜீவ்காந்தி சாலையில் (O.M.R) உள்ள பெருங்குடி, துரைப்பாக்கம், கலைஞர் சாலை மற்றும் மேடவாக்கம் சாலைகளில் உள்ள நான்கு சுங்கச்சாவடிகளில் கட்டணம் வசூலிக்கப்படுவது வருகின்ற 30.08.2021 முதல் நிறுத்தப்படுகிறது.

9. சாலை பாதுகாப்புத் திட்டம்

சாலை விபத்துகளைக் குறைப்பதற்காகவும், உயிர் இழப்புகளைத் தவிர்ப்பதற்காகவும் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.200 கோடியும், விபத்து பகுதிகளை மேம்படுத்துவதற்கான சாலை பாதுகாப்பு நிதியில் ரூ.150 கோடியும் ஆக மொத்தம் ரூ.350 கோடி நிதியில் சாலை பாதுகாப்பினை உறுதிசெய்ய பணிகள் மேற்கொள்ளப்படும்.

10. சேவைச் சாலை விரிவாக்கப்பணி, புதிய இணைப்புச் சாலை மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல்.

✶ திருவண்ணாமலை நகரில் அமைய உள்ள புதிய மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள சாலை மேம்பாலத்திற்கான சேவைச்சாலையை அகலப்படுத்த நிலம் கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- ✶ நாகப்பட்டினம் மாவட்டத்தில், அக்கரைப்பேட்டை மற்றும் கருவேலங்கடை கிராமங்களை இணைக்கும் விதமாக புதிய இணைப்புச் சாலை அமைக்கப்படும். முதற்கட்டமாக இப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.35 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

- ✶ திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கோவிலைச் சுற்றித் தேர் ஓடும் மாடவீதியில் சிமெண்ட் கான்கிரிட் தளம் ரூ.15 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

11. இரயில்வே மேம்பாலங்கள் கட்டுதல்

- ✶ தஞ்சாவூர் மாவட்டம், திட்டையில் உள்ள குறுகிய சுரங்கப் பாதைக்கு மாற்றாகவும்,

- ✶ அவலூர்பேட்டை சாலையில் இரயில்வே கடவு எண்.56க்கு மாற்றாகவும்,

மாநில அரசு நிதியின் கீழ் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை ரூ.94 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

12. நபார்டு வங்கி கடனுதவியுடன் ஆற்றுப் பாலங்கள் கட்டுதல்.

16 மாவட்டங்களில் உள்ள 558 கிராமங்களில் வசிக்கும் சுமார் 15 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் ரூ.425 கோடி மதிப்பில் 75 ஆற்றுப்பாலங்கள் நபார்டு வங்கி கடனுதவியுடன் கட்டப்படும்.

13. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளைத் தரம் உயர்த்துதல்.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 10,000 கி.மீ. நீளச் சாலைகள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட இதர சாலைகளாக படிப்படியாகத் தரம் உயர்த்தப்படும். முதற்கட்டமாக 2,000 கி.மீ. நீளச் சாலைகள் தரம் உயர்த்தப்பட்டு பணிகள் தொடங்கப்படும்.

14. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தை உலகத்தரம் வாய்ந்ததாக மேம்பாடு செய்தல்.

1957ஆம் ஆண்டு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. சாலை மற்றும் பாலங்கள் அமைப்பதிலும் ஆராய்ச்சியிலும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் அதிநவீன கட்டமைப்பைக் கொண்டுள்ளன. அதற்கு இணையாக, புதிய விஞ்ஞான உபகரணங்களைக் கொள்முதல் செய்து ஆராய்ச்சிகள் மேற்கொள்வதன் மூலம் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் உலகத்தரம் வாய்ந்ததாக மேம்பாடு செய்யப்படும்.

15. சாலை வகைப்பாடு தரம் உயர்த்துதல்

வாகனப் போக்குவரத்து, மக்கள் தொகை, புதியதாக அமைக்கப்படும் தொழிற்பேட்டைகள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை இணைத்தல் போன்ற காரணிகளின் அடிப்படையில் சாலைகளைத் தெரிவு செய்து மாநில நெடுஞ்சாலைகளாகவும், மாவட்ட முக்கிய சாலைகளாகவும் தரம் உயர்த்தப்படும்.

16. மதுரை சுற்றுச் சாலையில் சுரங்கப் பாதை அமைத்தல்

மதுரை விமான நிலைய ஓடுதள விரிவாக்கத்திற்காக மதுரை சுற்றுச் சாலையில் ஒரு கி.மீ. நீள வாகன சுரங்கப் பாதை ரூ.200 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

17. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தொலைநோக்கு திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் சரக்கு கையாளும் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேம்படுத்தப்பட்ட கடலூர் துறைமுகத்தின் கட்டுமானங்களைப் பயன்படுத்தி, சிறு மற்றும் நடுத்தரக் கப்பல்களின் மூலம் தமிழகத்தின் மத்திய மற்றும் மேற்கு மாவட்டங்களுக்குத் தேவையான சரக்குகள் ஆண்டொன்றுக்கு 25 இலட்சம் மெட்ரிக் டன் அளவில் கையாளப்படும்.

❖ ❖ ❖

வேளாண்மை – உழவர் நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 5

1. **வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி, கரூர் மாவட்டம், நாகப்பட்டினம் (கீழ்வேளூர்) சிவகங்கை (செட்டிநாடு) ஆகிய மூன்று மாவட்டங்களில் ரூ.30 கோடி மதிப்பில் அரசு வேளாண்மைக் கல்லூரிகள் துவங்கப்படும்.**

தற்போது, வேளாண் கல்வி மற்றும் வேளாண் ஆராய்ச்சியின் தேவை அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் நிதிநிலை அறிக்கையில் கிருஷ்ணகிரியில் புதியதாக அரசுத் தோட்டக்கலைக் கல்லூரி துவங்க அறிவிக்கப்பட்டது. வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி, 2021–2022ஆம் ஆண்டில், கரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு ஆகிய இடங்களில் மூன்று புதிய அரசு வேளாண்மைக் கல்லூரிகள் துவங்குவதற்கு மாநில அரசு தலா ரூ.10 கோடி வீதம் மொத்தம் ரூ.30 கோடி நிதியினை ஒதுக்கும்.

2. **ஆதிதிராவிடப் பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறுகள் அமைத்து மின்மோட்டாருடன்**

நுண்ணீர்ப் பாசனவசதி அமைத்துத் தருவதற்காக ரூ.12 கோடி செலவிடப்படும்.

அரியலூர், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய எட்டு மாவட்டங்களில் உள்ள 200 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளின் நலனுக்காக, தமிழக வரலாற்றில் முதன்முறையாக 2021–2022ஆம் ஆண்டில் நிலத்தடிநீர் பாதுகாப்பான குறுவட்டங்களில் ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறுகள் அமைத்து, மின்வசதியுடன், மின்மோட்டார் பொருத்தி, நுண்ணீர்ப் பாசனவசதிகள் 100 சதவீத மானியத்தில் மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.12 கோடி நிதி செலவிடப்படும்.

3. தரமான விதைகள் மற்றும் இதர இடுபொருட்களை இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்கும், வேளாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த சேவைகளை ஒருங்கே விவசாயிகளுக்கு வழங்கிடவும், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், வல்லம், திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர், தருமபுரி மாவட்டத்தில் அரூர் ஆகிய நான்கு வட்டாரங்களில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் கட்டுவதற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்படும்.

தரமான விதைகள் மற்றும் இதர இடுபொருட்களை இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்கும், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல்

தொடர்பான சேவைகளை ஒருங்கே விவசாயிகளுக்கு வழங்கிடுவதிலும், வட்டார அளவில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் மிகவும் தேவை என்பதால், 2021–2022ஆம் ஆண்டில், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், வல்லம், திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர், தருமபுரி மாவட்டத்தில், அரூர் ஆகிய நான்கு வட்டாரங்களில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் கட்டுவதற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்படும்.

4. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருட்களைச் சந்தைப்படுத்த, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.8 கோடி செலவில் 50 சிறப்பு அங்காடிகள் அமைக்கப்படும்.

தற்போது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பல்வேறு வேளாண் பொருட்களையும், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களையும் உற்பத்தி செய்கின்றனர். நல்ல தரத்துடன், உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் நுகர்வோரை ஈர்க்கும் வகையில் சிப்பம் கட்டுதல் (Packing) முறையைக் கடைப்பிடிக்காமலும் தனிமுத்திரை (Branding) செய்யப்படாமலும், தகுந்த தரச்சான்றுகள் பெறப்படாமலும் விற்பனை செய்யப்படுவதால் தனியார் நிறுவன பொருட்களுடன் போட்டிப் போட இயலாத நிலை உள்ளது.

எனவே, 2021–2022ஆம் ஆண்டில் தரமான சிப்பம் கட்டுதல் (Packing) முறையைப் பொருட்களுக்கேற்றவாறு வடிவமைத்து, அனைவரையும் கவரக்கூடிய Packingகளில்

சந்தைப்படுத்தப்படும். பொதுவான தனிமுத்திரையில் (Brand) உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் அனைத்து விளைபொருட்களையும் நேரடியாக நுகர்வோர் தேர்ந்தெடுத்து வாங்கிச் செல்லும் வகையில் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் முதற்கட்டமாக 50 சிறப்பு அங்காடிகள் ரூ.8 கோடி செலவில் சுமார் 5,000 உழவர் உற்பத்தியாளர் நிறுவன விவசாயிகள் பயனடையும் வகையில் அமைக்கப்படும்.

5. நெல் உற்பத்தியை உயர்த்த 25 ஆயிரம் ஏக்கரில் துத்தநாக சல்பேட்டும், ஜிப்சமும் 50 சதவீத மானியத்தில் வழங்கும் திட்டம் ரூ.3 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

நெல் பயிரின் வளர்ச்சிக்கும், தரமான தானிய மகசூலுக்கும் துத்தநாகமும், ஜிப்சமும் இன்றியமையாத சத்துக்களாகும். இத்தகைய சத்துக்களின் குறைபாடு ஏற்பட்டால் நெல் பயிரின் வளர்ச்சி குன்றி, தூர்கள் குறைந்து மகசூல் இழப்பு ஏற்படும். எனவே, நெல் நடவிற்கு முன் அடிஉரமாக ஏக்கருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட்டும் 200 கிலோ ஜிப்சமும் இடுவதன் மூலம் இக்குறைபாட்டினை முழுமையாக நீக்கலாம். எனவே, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் நெல்லில் அதிக மகசூல் எடுக்க வேண்டும் என்பதற்காக, 2021–2022ஆம் ஆண்டில் 25,000 ஏக்கரில் துத்தநாக சல்பேட்டும், 25,000 ஏக்கரில் ஜிப்சமும், 50 சதவீத மானியத்தில் வழங்கும் திட்டத்திற்காக மாநில அரசு ரூ.3 கோடி நிதியினை ஒதுக்கும்.

6. வேளாண் விளைபொருட்களைச் சேமித்து வைக்க விவசாயிகளுக்கு உதவும் வகையில், திருப்பூர் மாவட்டம் பூளவாடி, புதுக்கோட்டை மாவட்டம் சிதம்பரவிடுதி, நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி, ஈரோடு மாவட்டம் பர்கூர் ஆகிய இடங்களில் 250 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்புக் கிடங்குகள் ரூ.2 கோடி செலவில் கட்டப்படும்.

அறுவடைக்குப்பின் சேதமில்லாமல் வேளாண் விளைபொருட்களைச் சேமித்து, நல்ல விலை கிடைக்கும் போது சந்தைப்படுத்துவதில் கிடங்குகள் மிகவும் முக்கிய பங்காற்றுகின்றன. எனவே, 2021–2022ஆம் ஆண்டில், திருப்பூர், புதுக்கோட்டை, நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில், திருப்பூர் மாவட்டம் பூளவாடி, புதுக்கோட்டை மாவட்டம் சிதம்பரவிடுதி, நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி, ஈரோடு மாவட்டம், பர்கூர் ஆகிய இடங்களில் தலா 250 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்புக்கிடங்குகள் ரூ.2 கோடி செலவில் கட்டப்படும்.

7. தோட்டக்கலைப் பணிகளை எளிதாக்கும் கருவிகள், உபகரணங்கள் வாங்குவதற்கென 8,654 விவசாயிகளுக்கு 50 சதவிகித பின்னேற்பு மானியமாக ரூ.2.65 கோடி வழங்கப்படும்.

தினசரி விவசாயப் பணிகளை எளிமையான முறையில் குறைந்த நேரத்தில் மேற்கொள்ளக் கவாத்து கத்திரி, அறுவடை மேற்கொள்ள அலுமினிய ஏணி, விளைபொருளைச் சேதமின்றி அறுவடை செய்ய வலைக்கருவி, அறுவடையான

விளைபொருட்களைச் சேகரித்துப் பாதுகாப்பான முறையில் சந்தைக்கு எடுத்துச் செல்ல நெகிழிக்கூடைகள் மற்றும் மலர்களை அதிகாலை நேரத்தில் பறிக்க முகப்பு விளக்குகள் போன்ற தோட்டக்கலைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக 2021–2022ஆம் ஆண்டில் 8,654 விவசாயிகளுக்கு 50 சதவிகித பின்னேற்பு மானியமாக ரூ.2.65 கோடி வழங்கப்படும்.

8. நாகப்பட்டினம் மாவட்டம், நாகூரில் நெய்தல் பாரம்பரியப் பூங்கா 2021–2022ஆம் ஆண்டில் ரூ.2 கோடி நிதியில் அமைக்கப்படும்.

கடலும், கடல் சார்ந்த இடமுமான, நாகப்பட்டினம் மாவட்ட மக்களின் வாழ்வியல் சூழல், வாழ்க்கைமுறை, தாவரவளம் (மரம், செடி, கொடிகள், மலர்கள்) பழங்கள், உணவு, கலை, பண்பாடு, பறை (இசை), யாழ் ஆகியவற்றைப் பறைசாற்றும் வகையில், 2021–2022 ஆம் ஆண்டில் நாகூரில் நெய்தல் பாரம்பரியப் பூங்கா, 3.06 எக்டரில் ரூ.2 கோடி நிதியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் ஒருங்கிணைப்புடன் அமைக்கப்படும். இது இளம் தலைமுறையினருக்கு பண்டைய தமிழர்களின் பண்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் செயல்படும்.

9. விவசாயிகளைத் தொழில் முனைவோர்களாக மாற்ற 318 உழவர் உற்பத்தியாளர் நிறுவன விவசாயிகளுக்கு ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் வர்த்தகத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்.

விவசாயிகளை வர்த்தகராக்கும் நோக்கத்தில், உழவர் உற்பத்தியாளர் நிறுவன விவசாயிகளை மேம்படுத்துவதற்கு

மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கேற்ப திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

எனவே, 2021–2022ஆம் ஆண்டில் விளைபொருட்களை ஒருங்கிணைத்தல், மதிப்புக் கூட்டுதல், வணிக திட்டமிடல், சந்தைப்படுத்துதல், மின்னணு தளம், வணிகச் செயல்பாடுகள் போன்ற இனங்களில் உழவர் உற்பத்தியாளர் நிறுவன உறுப்பினர்களுக்கு 10 நாட்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், உணவுப் பதப்படுத்துதலுக்கான இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பிற முன்னணி நிறுவனங்கள் மூலம் பயிற்சி மற்றும் பட்டறிவுப் பயிற்சி வழங்கப்படும்.

ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும் 5 நபர்கள் வீதம் வேளாண் விற்பனைத் துறையினால் உருவாக்கப்பட்ட 318 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதனால் சுமார் 1.60 இலட்சம் விவசாயிகள் பயனடைவர். இப்பயிற்சிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் அளிக்கப்படும்.

10. வேளாண் இயந்திரங்களைக் கிராமப் பகுதிகளிலேயே பழுதுபார்க்க ஏதுவாக, திருச்சி மாவட்டம், குமுளூர் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், இரண்டு வருட வேளாண் பொறியியல் பட்டயப்படிப்பு ஒரு கோடி ரூபாய் மதிப்பில் துவங்கப்படும்.

வேளாண் இயந்திரங்கள் தொடர்பான அடிப்படைக் கல்வியினைப் பரவலாக்கும் வகையில், 2021–2022ஆம்

ஆண்டில் திருச்சி மாவட்டம், குமுளூர் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், இரண்டு வருட வேளாண்மைப் பொறியியல் பட்டயப்படிப்பு ஒரு கோடி ரூபாய் நிதியில் துவங்கப்படும். இப்படிப்பில் வருடத்திற்கு 40 மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இதன்மூலம், கிராமப்புற மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு உயரும் என்பதுடன், விவசாயிகளின் வேளாண் இயந்திரங்களை அவரவர் பகுதிகளிலேயே பழுதுபார்க்க இயலும்.

11. பெண் விவசாயிகள் காளான் வளர்ப்பில் ஈடுபட்டு அதிக அளவில் இலாபம் ஈட்டவும், தினசரி வருமானம் பெற்றிடவும் ஏதுவாக, காளான் உற்பத்திக்கூடம் அமைத்திட 100 மகளிருக்கு ஒரு கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

அதிகரித்து வரும் காளான் தேவையைப் பூர்த்தி செய்திடவும், பெண் விவசாயிகள் காளான் வளர்ப்பில் ஈடுபட்டு அதிக அளவில் இலாபம் ஈட்டவும், தினசரி வருமானம் பெற்றிடவும் ஏதுவாக 2021–2022ஆம் ஆண்டில் 100 பெண் விவசாயிகளுக்கு, ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற வீதத்தில், குடிசைத் தொழிலாகக் குறைந்த பரப்பிலான காளான் உற்பத்திக்கூடம் அமைத்திட மானியம் வழங்க மகளிர் திட்டத்துடன் இணைந்து ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும்.

12. நிலமில்லாத 4,077 விவசாயத் தொழிலாளர்களுக்கு, ரூ.3.46 கோடி செலவில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தோட்டக்கலைத் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படும்.

நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களைத் தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையில், 2021–2022ஆம் ஆண்டில் 1,077 நபர்களுக்கு ஆறு மாத கால உறைவிடத் தோட்டத் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி ரூ.1.77 கோடி நிதியிலும், 3,000 நபர்களுக்கு, பூங்கொத்து, பூ அலங்காரம் செய்தல், நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவுதல் மற்றும் பராமரித்தல், தேனீ வளர்ப்பு குறித்த 30 நாள் பயிற்சிகள் ரூ.1.69 கோடி நிதியிலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் வழங்கப்படும். இப்பயிற்சியில் பெண் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

13. இயற்கை வேளாண்மையை நோக்கிய முன்னெடுப்பின் ஒரு பகுதியாக 25 உழவர் சந்தைகளில் விளைபொருட்களில் உள்ள நஞ்சின் அளவைக் கண்டறியும் கருவிகள் ரூ.88 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

இயற்கை விவசாயத்தை முன்னிலைப்படுத்துவதற்கு இயற்கையை நோக்கி நாம் பயணிப்பது காலத்தின் கட்டாயமாகும். “பார்ப்பது நம்புவதற்குச் சமம்” என்ற சொல்லாடலின்படி, விவசாயிகளிடையே தாம் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் வேதிப்பொருட்கள் விளைபொருட்களில் தங்கிவிடுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். 2021–2022ஆம் ஆண்டில் விளைபொருட்களில் உள்ள நஞ்சின் அளவைக் கண்டறியும் கருவிகள் 25 உழவர் சந்தைகளில் ரூ.88 இலட்சம் செலவில் நிறுவப்படும். இத்திட்டத்தின் மூலம் உழவர்

சந்தைக்கு வரும் ஒரு இலட்சம் விவசாயிகளும் நுகர்வோர்களும் பயனடைவர்.

14. தருமபுரி, கடலூர், இராணிப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டங்களில் நான்கு அங்கக வேளாண்மை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ரூ.1.29 கோடி மதிப்பில் உருவாக்கப்படும்.

“நஞ்சில்லா விவசாயமே நாட்டின் தற்போதைய தேவை”. இயற்கை வேளாண்மை முறைகளை மட்டுமே கடைப்பிடித்துச் சாகுபடி செய்ய தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் திட்டத்தின்கீழ் 2021–2022ஆம் ஆண்டில் தருமபுரி, கடலூர், இராணிப்பேட்டை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் நான்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அங்கக உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக உருவாக்கப்படும். இத்திட்டம் ரூ.1.29 கோடி செலவில் செயல்படுத்தப்படும். அங்கக வேளாண்மை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் 2,000 விவசாயிகள் பயன் அடைவர்.

15. தரிசு நில தோட்டக்கலை சாகுபடியில் சிறந்த விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான விருதுகள் வழங்கப்படும்.

தரிசு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2021–2022ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் சிறந்த விவசாயிகளைத் தேர்வு செய்து சான்றிதழுடன் முதலாம்

பரிசாக ரூ.15,000ம், இரண்டாம் பரிசாக ரூ.10,000ம், மூன்றாம் பரிசாக ரூ.5,000ம் வழங்கிட ஆண்டிற்கு ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

16. வெற்றிலை சாகுபடியினை ஊக்குவிக்க எக்டருக்கு ரூ.10,000/– வீதம் 100 எக்டருக்கு ரூ.10 இலட்சம் பின்னேற்பு மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் திருச்சி, நாமக்கல், கரூர், தஞ்சாவூர், மதுரை போன்ற மாவட்டங்களில் அதிகமான பரப்பில் வெற்றிலை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு மருத்துவக் குணங்களை உள்ளடக்கி, உடலின் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கக் கூடிய வெற்றிலையைச் சாகுபடி செய்துவரும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மையை மேற்கொள்ளத் தேவையான இடுபொருட்கள் வாங்க 2021–2022ஆம் ஆண்டில் எக்டருக்கு ரூ.10,000 வீதம் 100 எக்டருக்கு ரூ.10 இலட்சம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

17. பூச்சிக்கொல்லி மருந்து உரிமம் வழங்குதல், பூச்சிக்கொல்லி மருந்து சட்ட மேலாண்மை முறைகளை விரைவுபடுத்துவதற்கு, 2021–2022ஆம் ஆண்டு முதல் இணையதளம் மூலம் செயல்படும் வகையில் "பெமிஸ் (PEMIS)" மென்பொருள் அறிமுகப்படுத்தப்படும்.

பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி மற்றும் விற்பனை உரிமம் பெறுவதை எளிதாக்கிடும் பொருட்டு, பூச்சிக்கொல்லி மருந்து உரிமம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து சட்ட

மேலாண்மை முறைகளை 2021–2022ஆம் ஆண்டு முதல் இணையதளம் மூலம் மேற்கொள்ள “பெமிஸ் (PEMIS)” என்னும் மென்பொருள் உருவாக்கப்படும்.

இதன்மூலம் பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தியாளர், விற்பனையாளர் மற்றும் இருப்பு வைத்திருப்போர்களுக்குத் தேவையான உரிமங்களை இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து எளிதாகப் பெற்றிட வழிவகை செய்யப்படும். இதன்மூலம், தரமான பூச்சிக்கொல்லிகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில் பூச்சிமருந்து ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பூச்சிக்கொல்லி மாதிரிகள் இணையதளம் (ஆன்லைன்) மூலம் கண்காணிக்கப்பட்டு, தரமற்ற மாதிரிகளின் மீது சட்ட விதிகளின் படி நடவடிக்கை துரிதப்படுத்தப்படும்.

இந்த பெமிஸ் (PEMIS) மென்பொருளானது வேளாண்மைத் துறையின் மூலம் உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு தொழில் முனைவோர் வழிகாட்டு மையத்துடன் (TN Guidance Bureau) ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

18. திருப்பூர் மாவட்டத்தில் புதிய விதைப் பரிசோதனை நிலையம் அமைக்கப்படும்.

திருப்பூர் மாவட்டத்தில் விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத்துறை சார்பில், 2021–2022ஆம் ஆண்டில் புதியதாக விதைப் பரிசோதனை நிலையம் அமைக்கப்படும். இதற்கென, நடப்பாண்டில் ரூ.23.50 இலட்சம் நிதி செலவிடப்படும். தொழில்நுட்ப மற்றும் இதர

பணியாளர்கள் பணிப்பெயர்ச்சி அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டு இந்த ஆய்வகம் செயல்படுத்தப்படும்.

19. விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறையின் தலைமையிடம் கோயம்புத்தூரிலிருந்து சென்னைக்கு மாற்றப்படும்.

வேளாண்மை, தோட்டக்கலைத்துறைகளின் தலைமை அலுவலகங்கள் சென்னையில் இயங்குவதாலும், விதைச்சான்று, விதை ஆய்வு, அங்ககச் சான்று உள்ளிட்ட பல்வேறு முக்கியப்பணிகளை மாநில அளவில் இதரத் துறைகளுடன் இணைத்து ஆய்விட வேண்டியுள்ளதாலும், நிருவாக நலன் கருதி, 2021–2022ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் இயங்கி வரும் விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறையின் தலைமை அலுவலகம், மாநிலத்தின் தலைநகரான சென்னைக்கு மாற்றப்படும். இதற்கென ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

20. நானோ தொடர்பான ஆராய்ச்சியைப் பலப்படுத்துவதற்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், நானோ தொழில்நுட்பத் துறையானது, ரூ.2 கோடி நிதியில் நானோ வேளாண்மை தொழில்நுட்ப மையமாக மேம்படுத்தப்படும்.

நானோ தொழில்நுட்பங்களை உருவாக்குவதிலும், விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் நானோ தயாரிப்புகளைச் சந்தைப்படுத்துவதிலும் வழிகாட்டியாக விளங்கி வரும் தமிழ்நாடு வேளாண்மைப்

பல்கலைக்கழகத்தில், நானோ தொழில்நுட்பத்தின் ஆராய்ச்சியைப் பலப்படுத்தவும், நானோ உத்திகளைத் தொழில்நுட்பமாக மாற்றிடவும், 2021–2022ஆம் ஆண்டில் நானோ தொழில்நுட்பத் துறையானது, ரூ.2 கோடி நிதியில் நானோ வேளாண்மை தொழில்நுட்ப மையமாக மேம்படுத்தப்படும்.

21. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை உற்பத்தித் திறனை அதிகரிக்க உட்கட்டமைப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் புதிய இரக விதை உற்பத்தியினை உயர்த்துவதற்காக, 2021–2022ஆம் ஆண்டில் பவானிசாகர் மற்றும் வைகை அணையில் இயங்கிவரும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

22. தொலையுணர்வு தொழில்நுட்பம் மூலம் இயற்கை வளங்களை ஆராய்ந்து பயிர், மண் மற்றும் நீர் குறித்த தகவல்கள் ரூ.2 கோடி மதிப்பில் கணினிமயமாக்கப்படும்.

மாறிவரும் அறிவியல் முன்னேற்றங்களுக்கு ஏற்ப செயற்கை நுண்ணறிவு, தொலையுணர்வு, டிரோன் மற்றும் ரோபோ தொழில்நுட்பங்களை உள்ளடக்கிப் பயிர், மண் மற்றும் நீர் குறித்த தகவல்களைக் கணினிமயமாக்கிட, 2021–2022ஆம் ஆண்டில் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள்

ரூ.2 கோடி செலவில் உருவாக்கப்படும். இதன்மூலம் நீர், மண், பயிர் மேலாண்மை, பூச்சி, நோய் குறித்த துல்லியமான தகவல்கள் விரைவாக விவசாயிகளுக்குச் சென்றடையும்.

23. விவசாயிகளின் நலனுக்காகத் தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் ரூ.1.20 கோடி மதிப்பில் பல்கலைக்கழகப் பயிற்சி மையங்கள் உருவாக்கப்படும்.

வேளாண்மை, தோட்டக்கலையில் நவீனத் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எளிதாகக் கொண்டு செல்லும் வகையில், 2021–2022ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் ரூ.1.20 கோடி செலவில் பல்கலைக்கழக பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

24. வேளாண் தகவல்கள் விரைவில் விவசாயிகளுக்குச் சென்றடைவதற்காகத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் இணையதளம் மேம்படுத்தப்படுவதுடன் வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றிய வீடியோ பாடங்கள் சமூக ஊடகங்கள் மூலம் ரூ.40 இலட்சம் நிதியில் வெளியிடப்படும்.

தமிழ்நாட்டு வேளாண் பெருமக்கள் மற்றும் அலுவலர்களின் வசதிக்காக, 2021–2022ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண்

இணையதளம் (TNAU Agritech Portal) ரூ.15 இலட்சம் நிதியில் மேம்படுத்தப்படுவதுடன், கல்வி ஊடக மையம் (Educational Media Centre) மூலமாக வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றிய வீடியோ பாடங்கள் ரூ.25 இலட்சம் நிதியில் தயாரிக்கப்பட்டு, சமூக ஊடகங்கள் (YouTube) மூலமாக வெளியிடப்படும்.

25. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் விதைகள் உள்ளிட்ட பல்வேறு இடுபொருட்களை விவசாயிகள் எளிதில் பெறும் வகையில் வேளாண்மை அறிவியல் நிலையங்களில் ஒற்றைச் சாளர விற்பனை மையங்கள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலமாக உற்பத்தி செய்யப்படும் விதைகள் உள்ளிட்ட பல்வேறு இடுபொருட்களை விவசாயிகள் எளிதில் பெறும் வகையில், 2021–2022ஆம் ஆண்டில் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் 14 வேளாண்மை அறிவியல் நிலையங்களில் ஒற்றைச் சாளர விற்பனை மையம் (One stop shop) ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும், தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து, அரசு தோட்டக்கலைப் பூங்காக்களிலும் இப்பொருட்கள் விற்பனை செய்யப்படும்.

❖ ❖ ❖

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

மானியக் கோரிக்கை எண். 41

இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மானியக் கோரிக்கை எண். 51

1. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தில் மின்தூக்கி வசதியுடன் பொதுமக்கள் குறைதீர்வு கூட்ட அரங்கம் மற்றும் இதர அலுவலக கட்டடங்கள் ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தில் மக்கள் குறைதீர்வு கூட்டம் நடத்துவதற்கு வசதியாக 13 நபர்கள் பயணிக்கக்கூடிய மின்தூக்கி வசதியுடன், 500 நபர்கள் அமரும் வகையில் பொதுமக்கள் குறைதீர்வு கூட்ட அரங்கம் மற்றும் இதர அலுவலகக் கட்டடங்கள் அடங்கிய மூன்றடுக்கு கட்டடம் ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்படும்.

2. விருதுநகர் மாவட்டத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் ரூ.72 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ரூ.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் புதிய வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வருவாய்க் கோட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடங்கள் ரூ.8.22 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி கோட்டம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் கோட்டம் ஆகிய 2 கோட்டங்களுக்கும் புதிய வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வருவாய்க் கோட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடங்கள் ரூ.8.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

4. ஐந்து புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 8 புதிய வருவாய் வட்டாட்சியர் குடியிருப்புகள் ரூ.26.88 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்.

சேலம் மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட தலைவாசல் வட்டத்திற்கு ரூ.4.60 கோடி மதிப்பீட்டிலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை வட்டத்திற்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு வட்டத்திற்கும் ரூ.9.80 கோடி மதிப்பீட்டிலும் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

மிகவும் பழுதடைந்துள்ள அருப்புக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரண்டு வட்டங்களுக்கும் ரூ.9.20 கோடி மதிப்பீட்டில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

அதேபோன்று, மிகவும் பழுதடைந்துள்ள திருவையாறு, கும்மிடிப்பூண்டி, விக்கிரவாண்டி, வலங்கைமான், அறந்தாங்கி,

குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி ஆகிய ஏழு வட்டங்கள் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தலைவாசல் வருவாய் வட்டத்திற்குப் புதிய வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடங்கள் ரூ.3.28 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

5. விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் பட்டா தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் கிராம அளவில் சிறப்பு முகாம்கள் நடத்துதல்.

அரசின் சேவைகளை, பொதுமக்களின் இருப்பிடங்களுக்கே கொண்டு செல்லும் இவ்வரசின் கொள்கையின் ஒரு அங்கமாக ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும், விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் பட்டா தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில், சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். ஒவ்வொரு வருவாய் வட்டத்திலும், இந்த முகாம்கள் நடத்தப்பட்டு 2022 பொங்கல் திருநாளுக்குள் அனைத்து கிராம மக்களும் பயன்பெற வழிவகைச் செய்யப்படும்.

6. ‘அ’ பதிவேடு, சிட்டா, புலப்படம் ஆகிய நில ஆவணங்களைச் சாகுபடி, நிலப்பயன்பாடு விவரங்களை உள்ளடக்கிய இணைய வழி அடங்கல் ஆவணங்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலமாக நில உரிமைதாரர்களுக்கு ஒருங்கிணைந்த நில ஆவணம் வழங்குதல்.

‘அ’பதிவேடு, சிட்டா மற்றும் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டு இணையவழி சேவைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றை ‘எங்கிருந்தும் எந்நேரத்திலும்’ எனும் மின்சேவை வாயிலாகப் பதிவிறக்கம் செய்துகொள்ள

இயலும். இதுபோன்று பயிர் சாகுபடி, நிலப்பயன்பாடு போன்ற விவரங்களை உள்ளடக்கிய ‘அடங்கல்’ பதிவுகளும் இ–அடங்கல் மென்பொருள் மூலமாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் மேற்குறிப்பிட்ட 4 நில ஆவணங்களையும் உள்ளடக்கி ‘ஒருங்கிணைந்த நில ஆவணம்’ இணையவழி சேவை மூலம் வழங்கப்படும்.

7. புல எல்லையை அளந்து காட்டக் கோரி பொதுமக்கள் எங்கிருந்தும் இணையம் வாயிலாக விண்ணப்பிக்கும் வசதி அறிமுகப்படுத்துதல்.

பொதுமக்கள் இணையம் வாயிலாகவே புல எல்லைகளை அளந்து காட்டக் கோரும் மனுக்களை அளிக்கும் பொருட்டு வட்டாட்சியர் அலுவலகத்திற்கோ அல்லது பொதுச் சேவை மையங்களுக்கோ செல்ல வேண்டியுள்ளதைத் தவிர்க்கும் நோக்கில், இணையம் வழியே எங்கிருந்தும் விண்ணப்பிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்படும்.

8. மத்திய நில அளவை அலுவலகம் மற்றும் நிலவரித் திட்ட அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டு வரும் பழமையான ஆவணங்களை ஒளிபிம்ப நகல் எடுத்துப் பராமரிப்பதற்காகவும் மற்றும் தேவைக்கேற்ப பயன்படுத்தவும் ரூ.8.74 கோடி மதிப்பீட்டில் மென்பொருள் உருவாக்குதல்.

மத்திய நில அளவை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் கையினால் தயாரிக்கப்பட்ட பழமையான ஆவணங்கள்

மறு நில அளவை மற்றும் நகர அளவைப் பணிகளுக்கு அடிப்படை ஆவணங்களாகத் தேவைப்படுகின்றன. மத்திய நில அளவை அலுவலகத்தில் உள்ள சில முக்கிய ஆவணங்களை ஒளிபிம்ப நகல் எடுத்துப் பராமரிக்கவும், அவ்வாறு எடுக்கப்படும் ஒளிபிம்ப நகல்களைத் தேவைக்கேற்ப எளிதாக எடுத்து உபயோகிக்கும் வகையிலும் மென்பொருள் உருவாக்கப்படும். இப்பணிக்கான தோராயச் செலவின மதிப்பீடு ரூ. 8.74 கோடி ஆகும்.

9. முறையற்ற நிலப்பரிவர்த்தனைகளைத் தடுக்கும் வகையில், இணையவழி சேவையில் உள்ள நில ஆவணங்களைப் பிற அரசுத் துறைகள், நீதிமன்றங்கள், பாதுகாப்புத்துறை ஆகியவற்றுடன் ஒருங்கிணைத்தல்.

இணையவழி சேவைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள ஆவணங்கள் யாவும் மாநில அரசின் துறைகள், வங்கிகள், நீதிமன்றங்கள், ஒன்றிய பாதுகாப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, அவை இணையம் வழியே நிகழ் நிலையிலான நிலம் தொடர்பான தரவுகளை பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்படும். மேலும், இந்து சமய அறநிலையத்துறை போன்ற அரசுத்துறைகளின் இணைய தரவுகளுடன் நிகழ்நிலையிலான நில ஆவணத்தரவுகளை ஒருங்கிணைப்பதன் மூலமாகக் கோயில் நிலங்கள் குறித்த அங்கீகாரமற்ற நிலப்பரிவர்த்தனைகளைத் தடுக்க இயலும்.

10. பேரிடர் மேலாண்மைக்கான உட்–கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 14 கடலோர

மாவட்டங்களில் உள்ள 38 வருவாய் அலுவலகங்களுக்கு மின்னாக்கி (Generator) வழங்குதல்.

வருவாய்த்துறையின், 14 கடலோர மாவட்டங்களில், அத்தியாவசியப் பணிகள் தொடர்ச்சியாக நடைபெறும் வகையில் கடலோரப்பகுதிகளை உள்ளடக்கிய 66 வருவாய்த்துறை அலுவலகங்களில், அதாவது 23 வருவாய் கோட்ட அலுவலகங்கள் மற்றும் 43 வட்ட அலுவலகங்களில், 28 வருவாய்த்துறை அலுவலகங்களில் ஏற்கெனவே மின்னாக்கிகள் உள்ள நிலையில், எஞ்சிய 38 வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு 2 கிலோவாட் திறன் கொண்ட 38 மின்னாக்கிகள் வழங்கப்படும்.

11. மாவட்ட பேரிடர் மேலாண்மை நிருவாக அமைப்பை வலுப்படுத்தும் வகையில் 14 வட்டாட்சியர் பணியிடங்களைத் துணை ஆட்சியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்துதல்.

தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் ஏற்படும் பேரிடர்கள் மற்றும் துயரங்கள் குறித்து தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையின் அறிவுரைகளின்படி சிறப்பாகப் பணியாற்றிட, 13 கடலோர மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) மற்றும் நீலகிரி மாவட்டம் ஆகியவற்றில் மட்டும் 14 வட்டாட்சியர் நிலையில் உள்ள பணியிடங்கள் தனித்துணை ஆட்சியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

12. பேரிடர் மேலாண்மையில் மக்களின் ஈடுபாட்டைப் பெருக்கிடும் வகையில் 14 கடலோர மாவட்டங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் முதற்கட்டமாக 65,000 பேரிடர் மீட்பு தன்னார்வலர்களுக்குப் பயிற்சி வழங்குதல்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேரிடர்களின் தாக்கத்தின் போது விபத்துக்குள்ளாகிறவர்களுக்கு உதவியாக ஒவ்வொரு குடியிருப்பு பகுதியிலும் முதல் நிலை மீட்பாளர்களைக் கண்டறிந்து பயிற்சி அளித்துச் சமுதாயப் பேரிடர் மீட்புக்குழு உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள்.

முதற்கட்டமாக, 14 கடலோர மாவட்டங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில், 65,000 பேரிடர் மீட்பு தன்னார்வலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலமாகப் பொதுமக்களிடம் பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், குடியிருப்புகள், கிராமங்கள் தோறும் பேரிடர் மீட்பு அமைப்பை உருவாக்கவும், தகவல் தொடர்பு, தேடல், மீட்பு, நிவாரணம் மற்றும் பேரிடர் மேலாண்மைக்கான பொதுச் சொத்துக்களின் சமூகத்தணிக்கை மேற்கொள்ளவும், கிராம அளவில் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கவும், பேரிடர் இழப்பு மற்றும் சேதங்களைத் தவிர்க்கவும் இயலும்.

13. வெள்ள பாதிப்புத் தணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும், வறட்சி நிலையினை தொடர்ந்து

கண்காணிக்கவும் மழையளவு கண்காணிப்புக் கட்டமைப்பை ஏற்படுத்தக் குறுவட்ட அளவில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் தானியங்கி மழைமானிகள் ஏற்படுத்துதல்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் நிகழ்நேர வெள்ள முன்கணிப்புத் திட்டத்தில் அமைக்கப்பட உள்ள 187 தானியங்கி வானிலை மையங்கள் / தானியங்கி மழைமானிகள் 1,000 குறுவட்டங்களில், ரூ.25 கோடி மதிப்பீட்டில் தானியங்கி மழைமானிகள் அமைக்கப்படும்.

14. நில எடுப்பு நடவடிக்கைகளில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை எளிமைப்படுத்திடவும் நில உரிமையாளர்களுக்குச் சரியான இழப்பீட்டுத் தொகையினை விரைவாக வழங்குவதை உறுதி செய்திடவும் மாநில அளவில் நில எடுப்புக்கான தனி அமைப்பு ஏற்படுத்துதல்.

நில எடுப்பு நடவடிக்கைகளில் உள்ள நடைமுறை சிக்கல்களை எளிமைப்படுத்தி விரைந்து நில எடுப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும், நில உரிமையாளர்களுக்குச் சரியான இழப்பீட்டுத் தொகையினை நிர்ணயித்து விரைவாக இழப்பீட்டுத் தொகையினை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டும் மாநிலத்தில் உள்ள அனைத்து வகையான நில எடுப்புச் சிறப்பு அலகுகளையும் ஒருங்கிணைத்து மாநில அளவில் “நில எடுப்பிற்கான தனி அமைப்பு” ஏற்படுத்தப்படும்.

15. அரசு மற்றும் கல்வி, தொழில் நிறுவனங்கள் இருவரும் பயன்பெறும் வகையில் நிலப்பரிமாற்ற நடைமுறைகளை எளிமைப்படுத்தும் நோக்கில் நிலப்பரிமாற்றக் குழு ஏற்படுத்துதல்.

கல்வி வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு நாட்டின் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் உறுதுணையாக இருக்கும் கல்வி மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களின் தேவைக்காகத் தனியார் நிலங்களை வாங்கிப் பயன்படுத்தும் போது அந்நிலங்களுக்கிடையே சிறு அளவிலான அரசு நிலங்கள் அமையப் பெறுகின்றன. இந்த அரசு நிலங்கள் நாற்புறமும் தனியார் நிலங்களால் சூழ அமையப்பெற்றுள்ளதால் அவை அரசின் நேரடி பயன்பாட்டிற்குக் கொண்டு வர இயலாத நிலை உள்ளது. எனவே, அரசு மற்றும் கல்வி, தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் (அரசு நிலங்கள் அணுகு சாலை வசதி கிடைக்கப்பெறும் வகையில்), நிலப்பரிமாற்றம் செய்யும் தற்போதைய நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டு நிலப்பரிமாற்றக்குழு ஏற்படுத்தப்படும்.

16. நிலம் சார்ந்த பணிகளைக் கணினிமயமாக்குவதற்காக, தொடர்புடைய பணியாளர்களுக்கு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கணினிகள், பிரிண்டர்கள், நகலெடுப்பான்கள் ஆகியவை வழங்குதல்.

நிலம் சார்ந்த பணிகளைக் கணினிமயமாக்குவதற்கான

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில் அவற்றைத் தடையின்றியும் விரைவாகவும் மேற்கொள்ளும் பொருட்டு ஆணையரகத்தின் பல்வேறு பிரிவுகளின் வன்பொருள் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காகப் பணியாளர்களுக்குத் தேவையான கணினிகள், பிரிண்டர்கள், நகலெடுப்பான்கள் ஆகியவை ரூ.40 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

❖ ❖ ❖

தொழில் துறை

பெருந்தொழில்

மானியக் கோரிக்கை எண். 27

1. **தென்மாவட்டங்கள் பொருளாதார வளர்ச்சி அடையும் வகையில், விருதுநகர் மாவட்டம், குமாரலிங்கபுரம் சிப்காட் தொழிற்பூங்காவில், 250 ஏக்கர் பரப்பளவில், ரூ.400 கோடி திட்ட மதிப்பீட்டில், உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த ஆடைப் பூங்கா (Integrated Apparel Park) உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டில் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு, ஆடைப்பிரிவின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டும், தென்மாவட்டங்கள் பொருளாதார வளர்ச்சி அடையும் வகையிலும், விருதுநகர் மாவட்டம் குமாரலிங்கபுரத்தில், 250 ஏக்கர் பரப்பளவில், ரூ.400 கோடி திட்ட மதிப்பீட்டில், உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த ஆடைப்பூங்கா (Integrated Apparel Park) ஒன்று உருவாக்கப்படும்.

இந்த ஆடைப்பூங்கா ஆயத்த தொழிற்கூடங்களுக்கான வசதி, பொருள் தயாரிப்பு காட்சி மையம், திறன் மேம்பாட்டு மையம், சோதனை ஆய்வகம், தளவாட மையம், தொழிலாளர் விடுதி, சுகாதார மையம், வணிக மையம் போன்ற சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமையும். இந்த ஆடைப்பூங்கா

15,000 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் நுட்பங்கள் அதிக முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுவதால், கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி சிப்காட் தொழிற்பூங்காவில், ரூ.300 கோடி திட்ட மதிப்பீட்டில், இந்தியாவிலேயே முதன்மையான வருங்கால நகர்திறன் பூங்கா (Future Mobility Park) உருவாக்கப்படும்.

தற்போது நடைமுறையில் உள்ள பெட்ரோல், டீசல் அடிப்படையிலான வாகனங்கள் படிப்படியாகக் குறைந்து, வருங்காலங்களில் போக்குவரத்து அமைப்புகளில் பெரும் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மின்சார வாகனங்கள், தன்னியக்க வாகனங்கள், ஹைட்ரஜன் வாகனங்கள், அறிவுசார் தொடரமைப்பு மற்றும் போக்குவரத்து மேலாண்மை போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் நுட்பங்கள் அதிக முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில் ரூ.300 கோடி திட்ட மதிப்பீட்டில் வருங்கால நகர்திறன் பூங்கா (Future Mobility Park) உருவாக்கப்படும். சிப்காட் நிறுவனம் எடுக்கும் இந்த புதிய முயற்சி இந்தியாவிலேயே முதன்மையானது என்பது குறிப்பிடத்தக்கது.

3. திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், செங்காத்தாகுளத்தில், 576 ஏக்கர் பரப்பளவில்

ரூ.250 கோடி திட்ட மதிப்பீட்டில், அடிப்படை மற்றும் சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளுடன் புதிய சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், செங்காத்தாகுளத்தில், 576 ஏக்கர் பரப்பளவில் ரூ.250 கோடி திட்ட மதிப்பீட்டில், அடிப்படை மற்றும் சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளுடன் புதிய தொழிற்பூங்கா ஒன்று உருவாக்கப்படும். இத்தொழிற்பூங்கா மூலம் ரூ.2,000 கோடி முதலீடு ஈர்க்கப்படுவதுடன், 3,000 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

4. **இயற்கைச் சூழலைப் பாதுகாத்திடவும் தொழிற்சாலைகளின் செயல்பாடு மேம்படவும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன், ரூ.150 கோடி திட்ட மதிப்பீட்டில், 10 சிப்காட் தொழிற்பூங்காக்கள் மேம்படுத்தப்படும்.**

சாலை, மழைநீர் வடிகால், நீர் விநியோகம், தெருவிளக்கு மற்றும் பசுமை வளையம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதுகாப்பு வசதி ஆகிய அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ரூ.150 கோடி திட்ட மதிப்பீட்டில் 10 சிப்காட் தொழிற்பூங்காக்களில் மேம்படுத்தப்படும். இதன் மூலம் இயற்கைச் சூழல் பாதுகாக்கப்படுவதுடன், தொழிற்சாலைகளின் செயல்பாடும் மேம்படும்.

5. **சிப்காட் தொழிற்பூங்காக்கள் நீர் ஆதாரத்தில் தன்னிறைவு பெறவும், நீர்நிலைகளைச் சுற்றிலும்**

பசுமைச் சூழல் உருவாக்கும் பொருட்டும், சிப்காட் தொழிற்பூங்காக்கள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள நீர் நிலைகள் ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்படும்.

சிப்காட் தொழிற்பூங்காக்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நீர்நிலைகள் ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் மறு சீரமைக்கப்படும். இதன் மூலம், நீர்நிலைகளின் மண் கரைகளை உயர்த்தி உறுதியாக்குதல், சிற்றணைகளையும், மதகுகளையும் பழுதுபார்த்தல், வரத்துக் கால்வாய்களைத் தூர்வாருதல் ஆகிய பணிகள் நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். இதனால் சிப்காட் தொழிற்பூங்காக்கள் நீர் ஆதாரத்தில் தன்னிறைவு பெறுவதுடன், இந்நீர்நிலைகளைச் சுற்றிலும் பசுமைச் சூழல் உருவாக்கப்பட்டு, பொழுதுபோக்கு உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவை கிடைக்கப்பெறும்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, இருங்காட்டுக்கோட்டை. வல்லம்–வடகால், பிள்ளைப்பாக்கம், திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழிற்பூங்காக்களை ஒட்டியுள்ள நீர்நிலைகள் மேம்படுத்தி, மறுசீரமைக்கப்படும்.

6. பணிபுரியும் மகளிரின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, ரூ.70 கோடி திட்ட மதிப்பீட்டில், 2 ஏக்கர் பரப்பளவில் சிறுசேரி மற்றும் பர்கூர் சிப்காட் தொழிற் பூங்காக்களில் சிறப்பு வசதிகளுடன், பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் அமைக்கப்படும்.

பணிபுரியும் மகளிர் தங்கள் பணியிடத்திற்கு அருகில் பாதுகாப்புடன், நியாயமான கட்டணத்தில் தங்குவதற்கு

ஏதுவாக, 2 ஏக்கர் பரப்பளவில் சிறுசேரி மற்றும் பர்கூர் சிப்காட் தொழிற்பூங்காக்களில் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும். குளிர்சாதன வசதியுடன் கூடிய அறைகள், ஓய்வறைகள், குழந்தைகள் பாதுகாப்பு மையம் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) கொண்ட பாதுகாப்பு அமைப்பு (Security) உள்ளிட்ட சிறப்பு வசதிகளைக் கொண்டு, ரூ.70 கோடி திட்ட மதிப்பீட்டில் இவ்விடுதிகள் அமைக்கப்படும். இதன் மூலம் 1,000 மகளிர் பயன்பெறுவர்.

7. தொழில் துவங்கும் காலத்தினையும் முதலீட்டுச் செலவினையும் குறைத்து, உடனடியாக தொழில் துவங்குவதற்கு ஏதுவாக, முதற்கட்டமாக, 5 ஏக்கர் பரப்பளவில், 1,50,000 சதுரஅடி கட்டுமான பரப்பில், காஞ்சிபுரம் மாவட்டம், நெமிலியில் தயார் நிலையிலுள்ள தொழிற்சாலைகள் (Ready Built Factory), ரூ.40 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தொழில் முனைவோர்களின் தேவையினை கருத்தில் கொண்டு, தொழில் துவங்கும் காலத்தினையும் முதலீட்டுச் செலவினையும் குறைத்து, உடனடியாக தொழில் துவங்குவதற்கு ஏதுவாக, காஞ்சிபுரம் மாவட்டம், நெமிலியில் 50 ஏக்கர் பரப்பளவில், தயார் நிலையிலுள்ள தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும். முதற்கட்டமாக, 5 ஏக்கர் பரப்பளவில், 1,50,000 சதுரஅடி கட்டுமான பரப்பில், தேவையான அடிப்படை வசதிகளுடன், சுமையேற்றுதல் மற்றும் இறக்குதலுக்கான வசதி, தானியங்கி சுமையேற்றி (loading lift), வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகளுடன், ரூ.40 கோடி திட்ட மதிப்பீட்டில் இத்தொழிற்பூங்கா அமைக்கப்படும்.

8. சர்வதேச தரத்திலான ஜவுளிப் பூங்கா ஒன்று சிப்காட் மூலம் கரூர் மாவட்டத்தில் 200 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும்.

கரூர் மாவட்டம், ஜவுளி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழிலில் ஒரு முன்னோடி மாவட்டமாகத் திகழ்ந்து வருகின்றது. ஆண்டுக்கு சுமார் பத்தாயிரம் கோடி ரூபாய் அளவில் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை பொருட்கள் கரூர் மாவட்டத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ஏற்றுமதியை ஆண்டுக்கு 25 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் அதிகப்படுத்த தமிழ்நாடு அரசு முனைந்து வருகிறது.இந்த குறிக்கோளை அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் எட்டுவதற்கு ஏதுவாக, சிப்காட் மூலம் சர்வதேச தரத்திலான ஜவுளி பூங்கா ஒன்று கரூர் மாவட்டத்தில் 200 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தப்படும்.

ஜவுளி பதனம் செய்யும் பிரிவு (Textile processing unit), ஆயத்த ஆடை தயாரிக்கும் பிரிவு (Readymade garments unit), வீட்டு ஜவுளி உற்பத்திப் பிரிவு (Home textiles unit), உலகத்தரம் வாய்ந்த பரிசோதனை கூடம் (Testing facility of International standards), கண்காட்சி கூடம் (Exhibition hall), உற்பத்தி மேம்பாட்டு மையம், ஜவுளி வடிவமைப்பு மையம் (Textile design centre), மற்றும் ஜவுளி தொழிலாளர்களுக்கு என பிரத்தியேகமான திறன் மேம்பாட்டு மையம் (Skill development centre) போன்ற சிறப்பு அம்சங்களுடன் இப்பூங்கா அமைக்கப்படும்.

9. பாதுகாப்பு தொழில் பெருவழித் திட்டத்தில் கூடுதல் முதலீட்டை ஈர்க்கும் விதமாக, ரூ.100 கோடி மதிப்பீட்டில் சென்னையில் ரேடியோ அதிர்வலை மற்றும் ஆண்டெனா தொழில்களுக்கான பொது சோதனை வசதி மையம் மற்றும் உளுந்தூர்பேட்டையில் ஆளில்லா விமானத் தொழிலுக்கான பொது சோதனை வசதி மையம் அமைக்கப்படும்.

பாதுகாப்பு தொழில் பெருவழியில் பல்வேறு வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் நிறுவனங்கள் இதுவரை சுமார் ரூ.2,000 கோடி வரை முதலீடுகள் செய்துள்ளன. இப்பெருவழி திட்டத்தில் கூடுதல் முதலீட்டை ஈர்ப்பதற்கு ஏதுவாக, சென்னையில் ரேடியோ அதிர்வலை (Radio Frequency) மற்றும் ஆண்டெனா தொழில்களுக்கான பொது சோதனை வசதி மையமும், உளுந்தூர்பேட்டையில் ஆளில்லா விமானத் தொழிலுக்கான பொது சோதனை வசதி மையமும், ரூ.100 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

10. வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில், பாதுகாப்புத் துறை சார்ந்த உற்பத்தி தொழிலுக்கான பொது சோதனை வசதி மையம் (Common Testing Facility) திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்படும்.

சிறு தொழில் நிறுவனங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும்,

சுமார் 60 சிறு தொழில் நிறுவனங்களால் இணைந்து தொடங்கப்பட்ட, திருச்சிராப்பள்ளி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப குழுமத்தில் (Treat) 43% பங்குகளை டிட்கோ நிறுவனம் பெற்றுள்ளது. திருச்சிராப்பள்ளியில் உள்ள தொழில் நிறுவனங்களுக்குத் தொழில்நுட்ப சேவைகள் வழங்க ஒரு பொது வசதி மையத்தை (Common Facility Centre) இக்குழுமம் ஏற்கெனவே அமைத்துள்ளது.

பாதுகாப்புத் தொழில் பெருவழியில் உள்ள திருச்சிராப்பள்ளியில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், ஒரு பொது சோதனை வசதி மையம் ரூ.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

11. வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறையில் புதிய முதலீடுகளை ஈர்க்கவும் மற்றும் அத்துறையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு ஏற்பவும், திருத்தப்பட்ட தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை வெளியிடப்படும்.

‘தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை’ 2019இல் வெளியிடப்பட்டது. வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறையில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும் கடந்த இரண்டு ஆண்டுகளில் வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு ஏற்பவும், வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த தொழில் நிறுவனங்களைப் பாதுகாப்பு தொழில் பெருவழியில் ஏற்படுத்தவும், தமிழ்நாடு அரசு

‘தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை’ என்ற திருத்தப்பட்ட கொள்கையை வெளியிடும்.

2030ஆம் ஆண்டுக்குள் வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறையில் சுமார் 50,000 கோடி முதலீடுகளை ஈர்த்து, 10 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதே இக்கொள்கையின் குறிக்கோளாகும்.

12. தொழில் நிறுவனங்கள் பொருட்களை நுகர்வோருக்குத் தங்கு தடையின்றி கொண்டு செல்ல ஏதுவாக, ஒருங்கிணைந்த மாநில சரக்கு போக்குவரத்திற்கான திட்டம் (State Integrated Logistics Plan) தயாரிக்கப்படும்.

சரக்குகளைக் கையாளுவதற்கான ஒரு பல்நோக்கு வழித்தட இணைப்பினை (multi modal connectivity) உருவாக்கும் பொருட்டு, “ஒருங்கிணைந்த மாநில சரக்கு போக்குவரத்திற்கான திட்டம்” ஒன்றினை தமிழ்நாடு அரசு தயாரிக்கும். மாநிலங்களுக்குள்ளும் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான சாலை, இரயில், வான் மற்றும் கடல் வழித்தடங்களை இணைத்து, சேமிப்பு கிடங்குகள், குளிர் பதன கிடங்குகள் வாயிலாக, தொழில் நிறுவனங்களின் பொருட்களை நுகர்வோருக்குத் தங்கு தடையின்றி கொண்டு செல்ல இத்திட்டம் உதவும்.

13. ஏற்றுமதி சந்தைகளை ஊக்குவித்திடவும், ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, ஏற்றுமதி தொடர்பான அனுமதிகள் உடனடியாக

பெற்றுத் தந்திடவும், தமிழ்நாட்டில் ஏற்றுமதிக்காக ஒரு சிறப்பு அமைப்பு (Exports Cell) உருவாக்கப்படும்.

இந்தியாவிலேயே, மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலமாக 8.97 சதவிகித ஏற்றுமதி பங்களிப்புடன் தமிழ்நாடு திகழ்கிறது. மோட்டார் வாகனங்கள், தோல் பொருட்கள், ஆயத்த ஆடைகள், காலணிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் ஏற்றுமதியில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. ஏற்றுமதி சந்தைகளை மேலும் ஊக்குவித்திடும் வகையிலும், இது சார்ந்த தொழிலகங்களுக்கு உதவிடும் வகையிலும் மற்றும் அறிவார்ந்த தகவல் சேவைகள் (Intellectual information) பரிவர்த்தனைக்காகவும், ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து ஏற்றுமதி தொடர்பான அனுமதிகள் உடனடியாக பெற்றுத் தந்திடவும், இடர்பாடுகளைக் களையவும், தொழில் வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு சிறப்பு அமைப்பு (Exports Cell) உருவாக்கப்படும்.

14. புத்தாக்க வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்த்து வேலை வாய்ப்பினை பெருமளவில் அதிகரிக்கும் பொருட்டும், தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை வெளியிடப்படும்.

ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகளுக்கான செலவினங்கள் மேற்கொள்வதில், அகில இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கென தமிழ்நாடு

தொழில் கொள்கை–2021இல் ஏற்கெனவே ஊக்கத் தொகை வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு மேலும் கவனம் செலுத்த வேண்டும் என அரசு கருதுகிறது. ஏனெனில், நிலையான தொழில் வளர்ச்சி அடைந்திட, ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்கம் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இதன் மூலம் உயர் மதிப்புள்ள தொழில் வாய்ப்புகளை நமது மாநிலத்தில் ஈர்த்து, உலகச் சந்தையில் நமது மாநிலம் முன்னணி பெற இயலும் என அரசு கருதுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, புத்தாக்க வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்த்து வேலை வாய்ப்பினை பெருமளவில் அதிகரிக்கும் பொருட்டு, ஒரு பிரத்யேக “ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை” விரைவில் வெளியிடப்படும். தொழில்துறை 4.0. உலகளாவிய செயல்திறன் மையங்கள் (GCC) மற்றும் தொழில் கல்வி ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தி, ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்கச் சூழலை மாநிலத்தில் மேம்படுத்தும் வகையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு உட்கட்டமைப்புகளுக்கு ஆதரவு அளித்து, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் துவங்கிட முன்வருவோர்க்கு, ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் வழங்கிட இந்தக் கொள்கை வழிவகை செய்யும்.

15. வணிகம் புரிதலை எளிதாக்கிடவும், முதலீட்டாளர்கள் தொழில் துவங்கத் தேவையான அனைத்து அனுமதிகளையும் உடனுக்குடன் பெற்று, தங்களது

திட்டத்தினை விரைவாகவும், எளிதாகவும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, ஒற்றைச் சாளர இணையதளம் 2.0 கைப்பேசி செயலி உருவாக்கப்படும்.

வணிகம் புரிதலை மிகவும் எளிதாக்கிடவும், அதற்கு உகந்த சூழ்நிலையினை உருவாக்கிடவும், முதலீட்டாளர்கள் தொழில் துவங்கத் தேவையான அனைத்து அனுமதிகளையும் உடனுக்குடன் பெற்று, தங்களது திட்டத்தினை விரைவாகவும், எளிதாகவும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, 100 சேவைகள் கொண்ட ஒரு அதிநவீன ஒற்றைச்சாளர இணையம் 2.0, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

கூடுதலாக 100 சேவைகள் இந்த மேம்படுத்தப்பட்ட இணையதளத்தில் சேர்க்கப்படுவதுடன், இந்த ஒற்றைச் சாளர முறையை மிக எளிதாகப் பயன்படுத்திடும் வகையில், கைப்பேசி செயலி ஒன்று உருவாக்கப்படும்.

16. மின்சார வாகனங்கள் உற்பத்தியிலும் உபயோகத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், தேவைகள் மற்றும் பயன்பாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், மின்னேற்றுக் கட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையிலும், திருத்தப்பட்ட மின் வாகன (E-vehicle) கொள்கை வெளியிடப்படும்.

மின்சார வாகனங்கள் உற்பத்தியிலும் உபயோகத்திலும் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், தேவைகள் மற்றும் பயன்பாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மின் வாகனங்கள் உற்பத்தியைப் பன்மடங்கு அதிகரிக்கும்

வகையில், மின்னேற்றுக் கட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையிலும், பயனாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையிலும், பல சிறப்பு அம்சங்கள் சேர்க்கப்பட்டு, திருத்தப்பட்ட மின் வாகனக் கொள்கை வெளியிடப்படும்.

17. பொறியியல், தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை ஆகிய பிரிவுகளில் முன்னணி கல்வி நிறுவனங்களை அடையாளம் கண்டு, வளர்ந்துவரும் தொழில்களுக்குத் தேவைப்படும் உயரிய தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு, புதிய பாடத்திட்டங்கள் வடிவமைத்திடவும், பயிற்சி வகுப்புகள் நடத்திடவும், அனுபவ ரீதியில் கற்றலை ஊக்குவித்திடவும், வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு சிறப்புப் பணி ஆய்வக பிரிவு (Work Lab Cell) அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் தொழிலகங்களுக்கான உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பினை உருவாக்குதல் மற்றும் வணிகம் புரிதலை எளிதாக்குதல் போன்ற சீரிய முயற்சிகளோடு மட்டுமல்லாமல், Industry 4.0–க்காக திறன் மிகுந்த பணியாளர்கள் தயார் நிலையில் இருக்கும் வகையில் ஒரு சூழலை உருவாக்கத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக, வழிகாட்டி நிறுவனத்தில், சிறப்புப் பணி ஆய்வக பிரிவு ஒன்று அமைக்கப்படும்.

தற்போது வளர்ந்து வரும் தொழில்களுக்குத் தேவைப்படும் உயரிய தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு புதிய பாடத்திட்டங்கள் வடிவமைத்திடவும், மாநிலத்தில் உள்ள பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை ஆகிய பிரிவுகளில் முன்னணி கல்வி நிறுவனங்கள் அடையாளம்

காணப்பட்டு, பயிற்சி வகுப்புகள் நடத்திடவும், அனுபவ ரீதியில் கற்றலை ஊக்குவித்திடவும், இந்த சிறப்புப் பணி ஆய்வக பிரிவு தொழிலகங்களுடனும், கல்வி நிறுவனங்களுடனும் இணைந்து செயலாற்றும்.

18. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்தி மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக, ஆலங்குளத்தில் 10 மெகா வாட் திறன் கொண்ட சூரிய மின்சக்தி ஆலை (Solar Power Plant) ஒன்று 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனமும், சிப்காட் நிறுவனமும் இணைந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்தி தங்களது மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக, ஒரு சிறப்பு நோக்க நிறுவனத்தினை (SPV) உருவாக்கும். முதற்கட்டமாக, 10 மெகா வாட் திறன் கொண்ட சூரிய மின்சக்தி ஆலை ஒன்றை, 45 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்குச் சொந்தமான நிலத்தில் சிறப்பு நோக்க நிறுவனத்தால் நிறுவப்படும்.

19. உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்குத் தேவைப்படும் அதிக அளவு சிமெண்ட், மிகக் குறுகிய காலத்தில் கொண்டு சேர்க்கும் வகையில், 100 டன் ஏற்றுத்திறன் கொண்ட சிமெண்ட் மொத்தமாக ஏற்றும் அமைப்பு (Bulk Loading System) சுமார் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரியலூரில் உள்ள புதிய ஆலையில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்குத் தேவைப்படும் அதிக அளவு சிமெண்ட், மிகக் குறுகிய காலத்தில் கொண்டு சேர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில், அரியலூரில் உள்ள புதிய ஆலையில் சுமார் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணிக்கு 100 டன் சிமெண்ட் ஏற்றுத்திறன் கொண்ட, மொத்தமாக சிமெண்ட் ஏற்றும் அமைப்பு ஒன்று, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தால் ஏற்படுத்தப்படும்.

20. உப்பள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, அவர்தம் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணமாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 5,000 வழங்கப்படும்.

மழைக் காலங்களில் உப்பு உற்பத்தி தொழில் தடைப்படுகின்றது. அப்போது எல்லாம் வருமானம் இல்லாமலும், போதிய மாற்றுப்பணி கிடைக்க வாய்ப்பில்லாமலும், உப்பள தொழிலாளர்கள் வாழ்க்கையை நடத்தப் பெரிதும் சிரமப்படுகின்றனர். அவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியத்தில் பதிவு செய்துள்ள உப்பள தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு, மழைக்கால நிவாரணமாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 5,000 வழங்கப்படும்.

21. முதன்முறையாக, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் 500 ஏக்கர் பரப்பளவில் 5.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உப்பு உற்பத்தி துவக்கப்படும்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், இராமநாதபுரம் வாலிநோக்கத்தை அடுத்து, முதன்முறையாகத் தனது உப்பு உற்பத்தியின் விரிவாக்கத்தை செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூரில் 500 ஏக்கர் பரப்பளவில் இந்த ஆண்டு துவக்கும். ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலமாக, முதற்கட்டமாக இந்நிதியாண்டில் 5,000 மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.

22. வெளிச்சந்தையில் “நெய்தல்” என்ற புதிய வணிக பெயரில் உப்பு வகைகள் அறிமுகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் உற்பத்தி செய்கின்ற அயோடின் மற்றும் இரும்பு ஆகிய நுண்ணூட்டச்சத்துகள் அடங்கிய அயோடின் கலந்த கல் உப்பு (Iodised Crystal Salt), அயோடின் கலந்த சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு (Refined Free Flow Iodised Salt) மற்றும் இருவித இரும்பு மற்றும் அயோடின் செறிவூட்டப்பட்ட உப்பு (Double Iron & Iodine Fortified Salt) ஆகியவை “நெய்தல்” என்ற புதிய வணிக பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டு, பொதுமக்களுக்காக இந்த நிதியாண்டு முதல் வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்படும்.

23. உப்பு உற்பத்தியை அதிகரிக்க, இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்தில் இயந்திரங்கள் மூலம்

உப்பு எடுக்கும் வகையில் உப்புப் பாத்திகள் 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்திலுள்ள உப்பளங்களின் உப்பு உற்பத்தியை அதிகரிக்க, 80 ஏக்கரில் இயந்திரம் மூலம் உப்பினை எடுக்கும் வகையில், 80 இலட்சம் ரூபாய் செலவில் உப்பு பாத்திகள் அமைக்கப்படும். இதன் மூலம் தற்போதைய 1.75 இலட்சம் டன்னில் இருந்து 2 இலட்சம் டன் அளவிற்கு உப்பு உற்பத்தி உயரும்.

24. சர்க்கரை வைத்திருப்பு செலவைக் குறைத்திடவும், ஆலைகளின் பணப்புழக்கத்தை அதிகரித்திடவும், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூ.170 கோடி திட்ட மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 60 கிலோலிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு எத்தனால் ஆலைகள் நிறுவப்படும்.

சர்க்கரை வைத்திருப்பு செலவைக் குறைக்கவும், ஆலைகளின் பணப்புழக்கத்தை அதிகரிக்கவும், மாதாந்திர சர்க்கரை விற்பனை ஒதுக்கீட்டை மட்டுமே சார்ந்திராமல் இருக்கவும், ஒரு மெட்ரிக் டன் கரும்பு அரவையில் ஆலைக்கு கிடைக்கும் வருவாயை அதிகரிக்கும் வகையிலும், நாள் ஒன்றுக்கு 60 கிலோ லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு எத்தனால் ஆலைகள் ரூ.170 கோடி மதிப்பீட்டில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் நிறுவப்படும். இவ்வாலைகள், நவீன எத்தனால் உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் எரியூட்டுக் கொதிகலன் அடிப்படையிலான கழிவுநீர் இல்லா உத்தியுடன் அமைக்கப்படும்.

25. செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு புதிய கோள்கல பல்சக்கர பெட்டிகள் (Planetary Gear Box) ரூ.39.55 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

கோள்கல பல்சக்கர பெட்டிகளில் ஏற்படும் பழுது காரணமாக அரவை நேர இழப்பைத் தவிர்ப்பதற்காகக் கரும்பு கிக்கர் (cane kicker), இடைநிலை கேரியர் (inter carrier) மற்றும் கரும்பு சக்கை உயர்த்தும் சாதனம் (bagasse elevator) ஆகியவற்றின் கோள்கல பல்சக்கர பெட்டிகள் ஒவ்வொன்றிலும் ஒரு எண்ணிக்கையில் பெரம்பலூர் சர்க்கரை ஆலையிலும், கரும்பு கேரியர் (cane kicker) மற்றும் ரேக் கேரியர் (rake carrier) ஆகிய புதிய பாகங்களின் கோள்கல பல்சக்கர பெட்டிகள் செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ.39.55 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

26. அரவை உருளை பழுதால் ஏற்படும் அரவை நேர இழப்பைத் தவிர்ப்பதற்காக, கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் புதிய லோட்டஸ் உருளை (Lotus Roller) ரூ.25.62 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் புதிய அரவை இயந்திரங்கள் 1995–1996 அரவைப் பருவத்தில் நிர்மாணிக்கப்பட்டது. அரவை உருளை பழுதால் ஏற்படும் அரவை நேர இழப்பைத் தவிர்ப்பதற்காக, ஒரு புதிய லோட்டஸ் உருளை (Lotus Roller) கள்ளக்குறிச்சி–1

கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.25.62 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

27. செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வளி அழுத்த முறையில் இயங்கும் Pan valve (திறப்பு தடுக்கிதழ்) ரூ.20 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

Pan valve (திறப்பு தடுக்கிதழ்) இயக்குதலை எளிமைப்படுத்தும் விதமாக வளி அழுத்த முறையில் இயங்கும் Pan valve ஒன்று, செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.20 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

❖ ❖ ❖

சட்டத்துறை

மானியக் கோரிக்கை எண். 33

1. **சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில், புதிய அரசு சட்டக்கல்லூரி துவக்குதல்.**

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் புதிய அரசு சட்டக்கல்லூரியானது ஐந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சட்டப்படிப்பில் முதலாமாண்டில் தலா 80 மாணவர்களுடன் 2022–2023ஆம் கல்வியாண்டில் தொடங்கப்படும்.

2. **அரசு சட்டக்கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மின்மண்டலம் நிறுவுதல்.**

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மின் மண்டலம் (Wi-Fi Zone) ரூ. 30 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

3. **அரசு சட்டக்கல்லூரிகளில் சர்வதேச பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் சட்ட மாநாடுகள் நடத்துதல்.**

தமிழ்நாட்டிலுள்ள 14 அரசு சட்டக்கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்குச் சர்வதேச பயிற்சிப் பட்டறைகள் (Workshops), கருத்தரங்குகள் (Seminars) மற்றும் சட்ட மாநாடுகள் (Conferences) நடத்துவதற்கு ஆண்டுதோறும் ரூ.28 இலட்சம் வழங்கப்படும்.

4. அரசு சட்டக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்.

தமிழ்நாட்டிலுள்ள 14 அரசு சட்டக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் ஆங்கிலத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

5. அரசு சட்டக்கல்லூரி உதவிப் பேராசிரியர்களுக்கு ஆசிரிய மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்.

அரசு சட்டக்கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்கள் சிறந்த முறையில் கல்வி கற்பித்திட ஏதுவாக, ஆசிரிய மேம்பாட்டுத் திட்டம் (Faculty Development Programme) மற்றும் புத்தாக்கப் பயிற்சி (Refereshner Course) காலமுறையில் வழங்கப்படும். இச்செலவுகளுக்காக ரூ.14 இலட்சம் வழங்கப்படும்.

6. அரசு சட்டக்கல்லூரிகளில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் நிறுவுதல்.

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் நிறுவப்படும்.

7. சீர்மிகு சட்டப்பள்ளி வளாகத்தில் 240 கிலோ வாட் (KW) திறனில் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவுதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்

பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 240 கிலோ வாட் (KW) திறன் கொண்ட சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவப்படும்.

8. சீர்மிகு சட்டப்பள்ளி வளாகத்தில் செவியுணர் காணொளி ஊடக மையம் நிறுவுதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் செவியுணர் காணொளி ஊடக மையம் (Audio and Visual Media Centre) நிறுவப்படும்.

9. இளங்கலை சட்டப் படிப்புகளில் தெரிவுப் பாடமாக தேசிய மாணவர் படைத்திட்டம் அறிமுகப்படுத்துதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில், இளங்கலை சட்டப்படிப்புகளில் தெரிவுப் பாடமாக தேசிய மாணவர் படைத்திட்டம் (NCC) அறிமுகப்படுத்தப்படும்.

10. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் புதிய பாடப்பிரிவில் முதுகலை சட்டப் படிப்பு அறிமுகப்படுத்துதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில், இணையவெளி, சட்டம் மற்றும் நீதி (Cyber Space, Law and Justice) என்ற புதிய பாடப்பிரிவில் முதுகலை சட்டப் படிப்பு

(எல்.எல்.எம்) ரூ.1 கோடியே 18 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

11. சட்ட ஆராய்ச்சித் திறனை சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் துவக்குதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வரும் சட்ட ஆராய்ச்சித் துறையின் திறனை சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் ரூ.15 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

12. திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் நிறுவுதல்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், சட்டம் மற்றும் வேளாண்மைக்கான மையம் (Centre for Law & Agriculture) மற்றும் முதலீடுகளுக்கான சட்டங்கள் மையம் (Centre for Investment Laws) ஆகிய இரு புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் (Legal Research Centres) ரூ.20 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

மானியக் கோரிக்கை எண். 26

அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பொதுமக்கள் வாங்கத்தக்க விலையில் வீடுகள் வழங்கிடும் அரசின் முயற்சியை நிறைவேற்றும் பொருட்டு சுயநிதித் திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

1. அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

இடம்	:	பாடிக்குப்பம், சென்னை
எண்ணிக்கை	:	155 அடுக்குமாடிக் குடியிருப்புகள்
மதிப்பீடு	:	ரூ.62.77 கோடி

2. அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

இடம்	:	அயனாவரம், சென்னை
எண்ணிக்கை	:	216 அடுக்குமாடிக் குடியிருப்புகள்
மதிப்பீடு	:	ரூ.86.31 கோடி

3. அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

இடம்	:	சம்பத் நகர் மற்றும் பெரியார் நகர், ஈரோடு மாவட்டம்
எண்ணிக்கை	:	108 அடுக்குமாடிக் குடியிருப்புகள்
மதிப்பீடு	:	ரூ.40.60 கோடி

மனைகள் மேம்படுத்துதல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மனை மேம்பாட்டுத் திட்டம் வாயிலாக மனைகள் மேம்படுத்தப்படும்.

4. மனைகள் மேம்படுத்துதல்

இடம்	:	அம்பத்தூர், சென்னை
எண்ணிக்கை	:	151 மனைகள்
மதிப்பீடு	:	ரூ.8.87 கோடி

5. மனைகள் மேம்படுத்துதல்

இடம்	:	ஆவடி, திருவள்ளூர் மாவட்டம்
எண்ணிக்கை	:	45 மனைகள்
மதிப்பீடு	:	ரூ.1.74 கோடி

6. மனைகள் மேம்படுத்துதல்

இடம்	:	சோழிங்கநல்லூர், சென்னை மாவட்டம்
எண்ணிக்கை	:	117 மனைகள்
மதிப்பீடு	:	ரூ.4.75 கோடி

7. மனைகள் மேம்படுத்துதல்

இடம்	:	குடியாத்தம், வேலூர் மாவட்டம்
எண்ணிக்கை	:	306 மனைகள்
மதிப்பீடு	:	ரூ.8.50 கோடி

8. மனைகள் மேம்படுத்துதல்

இடம் : ஆத்தூர், சேலம் மாவட்டம்

எண்ணிக்கை : 82 மனைகள்

மதிப்பீடு : ரூ.4 கோடி

9. மனைகள் மேம்படுத்துதல்

இடம் : ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்

எண்ணிக்கை : 54 மனைகள்

மதிப்பீடு : ரூ.4 கோடி

10. மனைகள் மேம்படுத்துதல்

இடம் : தத்தநேரி, மதுரை மாவட்டம்

எண்ணிக்கை : 119 மனைகள்

மதிப்பீடு : ரூ.2.40 கோடி

வணிக வளாகம் கட்டுதல்

பொதுமக்களின் தேவைக்கு ஏற்ப, பிரதான இடங்களில் வணிக வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

11. வணிக வளாகம் கட்டுதல்

இடம் : ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்

மதிப்பீடு : ரூ.25 கோடி

12. வணிக வளாகம் கட்டுதல்

இடம்	:	தோப்பூர் கிராமம், மதுரை மாவட்டம்
மதிப்பீடு	:	ரூ.23.20 கோடி

13. சென்னை மாவட்டம், இலாயிட்ஸ் காலனியில் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் ரூ.451 கோடி மதிப்பீட்டில் மறுமேம்பாடு செய்தல்.

சென்னை இலாயிட்ஸ் காலனியில் ரூ.451 கோடி மதிப்பீட்டில் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் மறுமேம்பாடு செய்யப்படும்.

14. குடியிருப்போர் நலச் சங்க நிதி உருவாக்குதல்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய திட்டங்களில் இருந்து உருவாகும் குடியிருப்போர் நலச் சங்கங்களை ஆதரிப்பதற்காக, அவற்றின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் நிதி வழங்கி, ஊக்குவிக்கும். இதற்காக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் திட்ட நிதியிலிருந்து “மூலதன நிதி” (Corpus Fund) உருவாக்கப்படும்.

15. “சமூகப் பொறுப்பு நிதி” ஏற்படுத்துதல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அதன் சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக, நிலையான நகர்ப்புற வளர்ச்சி, சமூக வலுவூட்டல், பொருளாதாரத்தில் நலிவுற்ற

பிரிவினருக்கான திறன் மேம்பாடு, சுகாதாரம், நகர்ப்புற எழில் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு ''சமூகப் பொறுப்பு நிதி'' (Social Responsibility Fund) என்ற தனி நிதி உருவாக்கி ஏற்படுத்தப்படும். இந்நிதிக்கு வாரிய திட்டங்களில் வரும் இலாபத்தில் 2% ஒதுக்கப்படும்.

16. வாரியத்தால் விற்பனைப் பத்திரம் தமிழில் வழங்குதல்.

பொது மக்கள் தொடர்புடைய வாரிய ஒதுக்கீட்டு ஆணை, குத்தகை ஒப்பந்தம் மற்றும் விற்பனைப் பத்திரம் ஆகியவை தமிழில் வழங்கப்படும்.

17. கட்டடங்களின் தரம் மூன்றாம் தரப்பு கண்காணிப்புக் குழுவின் மூலம் தணிக்கை.

தகுதி வாய்ந்த மூன்றாம் தரப்பு (Third Party) கண்காணிப்புக் குழு மூலம் வீட்டுவசதி வாரிய கட்டடங்களின் உறுதித் தன்மையும் தொழில்நுட்பமும் தணிக்கை செய்து உறுதிபடுத்தப்படும்.

18. வாரிய பணியாளர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி அளித்தல்.

கட்டுமான தொழில்நுட்பம், கட்டட விற்பனை (Real Estate) ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றின் சமீபத்திய முன்னேற்றங்களை அறிந்து கொள்ள உதவும் வகையில் புத்தாக்கத் தொழில்நுட்ப பயிற்சிகள் வாரிய பணியாளர்களுக்கு வழங்கப்படும்.

19. தவணை முறை திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பொருளாதாரத்தில் நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய் / மத்திய வருவாய் பிரிவுகளில் வீடு வாங்குவோர்களின் பொருளாதார அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் தவணை முறை திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தப்படும்.

20. மின்னணு சேவைகள் (Online Services)

பொது மக்கள் பயனுறும் வகையில் ஒப்பந்தப் புள்ளி, ஏலம் மற்றும் ஒதுக்கீடுகள் போன்ற பல்வேறு சேவைகளை எளிதாக்கும் வகையில் மின்னனு சேவைகளாக வழங்கப்படும்.

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்

21. சமுதாயக் கூடம் நவீனமயமாக்கல்

இடம்	:	செங்கல்பட்டு மாவட்டம்
சங்கத்தின் பெயர்	:	கார்த்திகேயபுரம் கூட்டுறவு சங்கம்
மதிப்பீடு	:	ரூ.75 இலட்சம்

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், மடிப்பாக்கத்தில் உள்ள கார்த்திகேயபுரம் கூட்டுறவு சங்கத்தின் சமுதாய நலக் கூடத்தில் மின்தூக்கி, குளிர்சாதன வசதி மற்றும் இதர நவீன வசதிகளுடன் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

22. கடைகள் கட்டுதல்

இடம்	:	வேலூர் மாவட்டம்
சங்கத்தின் பெயர்	:	காட்பாடி கூட்டுறவு நகரமைப்புச் சங்கம்
மதிப்பீடு	:	ரூ.70 இலட்சம்

வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காட்பாடி கூட்டுறவு நகரமைப்புச் சங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் 24 கடைகள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

நகர் ஊரமைப்பு இயக்ககம்

23. சோளிங்கர், வடலூர், திருக்கோவிலூர் மற்றும் கூடலூர் ஆகிய நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள் (Master Plans) தயாரித்தல்.

சோளிங்கர், வடலூர், திருக்கோவிலூர் மற்றும் நீலகிரி மாவட்டம் – கூடலூர் ஆகிய நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள் இல்லை. இயற்கை வளத்தைப் பாதுகாக்கவும், புராதன தொன்மையினை பாதுகாக்கவும் திட்டமிட்ட வளர்ச்சியினை உறுதிப்படுத்த முழுமைத் திட்டங்கள் (Master Plans) தயாரிக்கப்படும்.

24. மயிலாடுதுறையில் புதிய மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உருவாக்குதல்.

பொதுமக்கள் திட்ட அனுமதிகளை தங்கள் மாவட்டத்தில் பெறும் வகையில் மயிலாடுதுறையில் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உருவாக்கப்படும்.

25. பதினெட்டு மாவட்டங்களில் சொந்த அலுவலக கட்டடங்கள் கட்டுதல்.

மதிப்பீடு : ரூ.60 கோடி

திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, அரியலூர், கள்ளக்குறிச்சி, கரூர், நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, புதுக்கோட்டை, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, தென்காசி, தேனி, திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய 18 மாவட்டங்களில் இத்துறையின் மாவட்ட அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்க ஏதுவாக ரூ.60 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

26. சென்னைப் பெருநகரப் பகுதி விரிவாக்குதல்

இரண்டாம் முழுமைத் திட்டம் உணர்த்தியுள்ளபடி சென்னைப் பெருநகர எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் ஏற்பட்டு வரும் விரைவான வளர்ச்சி மற்றும் அதற்கான உட்கட்டமைப்பு தேவைகளைக் கருத்தில் கொண்டு திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் சில பகுதிகள் மற்றும் அரக்கோணத்தை உள்ளடக்கி சென்னை பெருநகரப் பகுதி விரிவாக்குதல் பற்றி பொதுமக்கள் கருத்தினை பெற்று விரிவாக்கப்படும்.

27. மீஞ்சூர் முதல் வண்டலூர் வரையிலான வெளிவட்டச் சாலையை ஒட்டி அமைந்துள்ள நிலத்தில் ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்துதல்.

வெளிவட்டச் சாலையின் கிழக்கு எல்லையை ஒட்டிய, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குச் சொந்தமான 50 மீட்டர் அகலம் கொண்ட 770 ஏக்கர் நிலத்தின் சிறந்த பயன்பாட்டை அறிவதற்கான ஆய்வில் பரிந்துரைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடியிருப்பு நகரியம், தோட்டக்கலை பூங்கா, அவசர சிகிச்சை மையம், தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர் குடியிருப்புகள், மாநாட்டு அரங்கம், போக்குவரத்து நகர் மற்றும் சேமிப்பு கிடங்குகள் வளாகம் போன்ற பல்வேறு திட்டங்களுக்கான விரிவான சாத்தியக்கூராய்வு செய்து சாத்தியப்படும் திட்டங்கள், அருகிலுள்ள தனியார் நிலங்களையும் இணைத்து நிலச்சேர்ம (Land Pooling) பகுதி வளர்ச்சித் திட்டத்தில் செயல்படுத்தப்படும்.

28. கோயம்பேடு மொத்த விற்பனை வளாகத்தை மேம்படுத்துதல்.

மதிப்பீடு – ரூ.20 கோடி

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தை நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி அங்காடி வளாகத்தில், பொருத்தமான போக்குவரத்து மேலாண்மை நடவடிக்கைகள், திறன்மிகு குப்பை அகற்றல் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், பொதுமக்களுக்கான கூடுதல் பொதுவசதிகள் ஆகியவை ரூ.20 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

29. பழைய மகாபலிபுரம் சாலையையும், கிழக்கு கடற்கரைச் சாலையையும் இணைக்க மேம்பாலம் கட்டுதல்.

மதிப்பீடு – ரூ.180 கோடி

பழைய மகாபலிபுரம் சாலையையும் கிழக்கு, கடற்கரைச் சாலையையும் இணைக்கும் வகையில், ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகருக்கும், ஈஞ்சம்பாக்கத்திற்கும் இடையே ஏற்கெனவே உள்ள சாலைகளை அகலப்படுத்தி பக்கிங்காம் கால்வாய் மீது சுமார் ரூ.180 கோடி செலவில் உயர் மட்ட சுழற்சாலை வகை மேம்பாலம் கட்டப்படும்.

30. தகவல் தொழில்நுட்ப சேவைகள் செயல்படுத்துதல்

மதிப்பீடு – ரூ.4 கோடி

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் ஒற்றைச் சாளர அனுமதி, திட்டக் கண்காணிப்பு, மின் ஏலம், மின்–ஒப்பந்தப்புள்ளி, நிலப் பதிவுகள் மற்றும் சொத்து மேலாண்மையை மின் இலக்கமயமாக்குதல் போன்ற மேம்பட்ட தகவல் தொழில்நுட்ப சேவைகள் ரூ.4 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

குடிசைப்பகுதி மாற்று வாரியம்

மானியக் கோரிக்கை எண். 26

1. **சிதிலமடைந்த 7,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் நடப்பு நிதியாண்டில் ரூ.1,200 கோடி திட்ட மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்யப்படும்.**

சென்னை மற்றும் இதர நகரங்களில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட குடியிருப்புகள் பயன்பாடு மற்றும் தேய்மானம், இயற்கையின் தட்ப வெப்ப மாறுபாடு ஆகியவற்றால் சிதிலமடைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இக்குடியிருப்புகள் தொழில்நுட்ப குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் நான்கு ஆண்டுகளில் மறுகட்டுமானம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. **மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான முழுத்தொகை செலுத்திய 10,000 குடும்பங்களுக்கு நீண்ட காலமாக வழங்கப்படாமல் உள்ள விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும்.**

MUDP, TNUDP திட்டங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி உள்ளிட்ட பல நகரங்களில்

1977 முதல் 1992 வரையில் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டங்களின் கீழ் மாதாந்திர தொகை முழுவதுமாக செலுத்திய 10,000 குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும். மறுவிற்பனை மூலம் தற்போது வசித்துவரும் குடியிருப்போருக்கு விற்பனைப் பத்திரம் வழங்க புதிய சமரசத் திட்டம் வகுக்கப்படும்.

3. வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு முழுத்தொகை செலுத்திய 15,000 பயனாளிகளுக்கு நடப்பு நிதியாண்டில் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மாதாந்திர தவணைத் தொகை, முழுமையாகச் செலுத்திய குடியிருப்புகளின் ஒதுக்கீடுதாரர்களுக்குக் குறிப்பிட்ட கால வரம்பிற்குப் பின்னர் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும். 2021–2022ஆம் நிதியாண்டில் 15,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும். மீதமுள்ள குடியிருப்புகளுக்குத் தகுதியின் அடிப்படையில் படிப்படியாக வழங்கப்படும்.

4. கட்டுமானப் பணிகளின் தரத்தினை பல்வேறு நிலைகளில் உறுதி செய்ய இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் போன்ற மேன்மையான மூன்றாம் தரப்பு தரக் கட்டுப்பாடு வல்லுநர் குழுக்கள் அமைக்கப்படும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் நகர்ப்புற ஏழை மக்களுக்காகக் கட்டப்படும் கட்டடங்களின் தரத்தினை

உறுதி செய்ய சென்னை—IIT, தேசிய தொழில்நுட்பக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அரசு பொறியியல் கல்லூரிகள் போன்ற மூன்றாம் தரப்பு தரக்கட்டுபாடு வல்லுநர் குழுக்களை நியமித்து ஆய்வு மேற்கொண்டு, கட்டடப் பணிகளின் தரம் உறுதி செய்யப்படும்.

5. மறுகட்டுமானம் செய்யும் காலத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் ரூ.8,000 கருணைத் தொகை ரூ.24,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

மறுகட்டுமானம் செய்ய ஏதுவாக அடுக்குமாடி குடியிருப்புகளை காலி செய்து வாடகை வீட்டில் வசிப்பதற்காக வழங்கப்படும் ரூ.8,000 கருணைத் தொகை ரூ.24,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இத்திட்டத்தை விரிவுபடுத்தி நகரக் குடிசைப்பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு அதே பகுதியில் புதிய குடியிருப்புகள் கட்டப்படும் பொழுது அங்கு வசிக்கும் மக்களுக்கும் கட்டுமானம் செய்யும் காலத்தில் வாடகை வீடுகளில் வசிப்பதற்காக ரூ.24,000 கருணைத் தொகை வழங்கப்படும்.

6. பராமரிப்பின்றி பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.70 கோடி செலவில் எழில்மிகு தோற்றப் பொலிவு பெறும் வகையில் புனரமைக்கப்படும்.

சென்னை மற்றும் இதர நகரங்களில் 15 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட 17,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் போதிய அடிப்படை வசதிகள் மற்றும் பராமரிப்பின்றி பொலிவு இழந்த நிலையிலுள்ளன.

இத்திட்டப்பகுதிகள் புது பொலிவு பெறும் வகையில் குடியிருப்புகளைப் பழுது பார்த்தல், புதுவர்ணம் பூசுதல், கீழ்நிலை தண்ணீர் தொட்டி அமைத்தல், குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளைச் சரிசெய்தல், பாதுகாப்புடன் நவீன மின் இணைப்பு வசதிகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

7. குடியிருப்போர் நலச்சங்கங்களின் பங்களிப்புடன் "நம் குடியிருப்பு – நம் பொறுப்பு" என்ற திட்டத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழகமெங்கும் 1.80 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகளைத் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் பராமரித்து வருகின்றது.

"நம் குடியிருப்பு – நம் பொறுப்பு" என்ற புதிய திட்டத்தின் மூலம் குடியிருப்போர் நலச் சங்கங்களை ஈடுபடுத்தி குடியிருப்புகள் பராமரிக்கப்படும். குடியிருப்புகளின் பராமரிப்பு செலவினங்களுக்கான மொத்த செலவில் 50 விழுக்காடு அரசாலும் மீதமுள்ள 50 விழுக்காடு குடியிருப்போர் நலச் சங்கங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

8. வசதியற்ற பயனாளிகளின் சிரமத்தினை குறைக்கும் வகையில் வங்கிக் கடன் பெற்றுப் பங்களிப்பு தொகை செலுத்த வழிவகை செய்யப்படும்.

அடுக்குமாடிக் குடியிருப்பிற்கான திட்ட செலவினத்தில் பயனாளிகளின் பங்களிப்பும் அடங்கும். இத்தொகையை ஒரே தவணையில் செலுத்த இயலாத பயனாளிகளுக்கு அவர்களது

பங்களிப்பினை செலுத்துவதற்கு ஏதுவாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், முதன்மை கடன் நிறுவனங்கள் மற்றும் பயனாளிகளுக்கு இடையே முத்தரப்பு ஒப்பந்தம் மூலம் கடனுதவி பெற்றுத் தரப்படும்.

9. புதியதாகக் கட்டப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மாற்றுத்திறனாளிகளின் தேவைக்கேற்ப வசதிகள் அமைக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் தரைதள வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

அடுக்குமாடி திட்டப்பகுதியிலுள்ள தரைதள குடியிருப்புகள் மாற்றுத்திறனாளிகளின் தேவைக்கேற்ப கட்டமைப்பு வசதிகளான கைப்பிடியுடன் கூடிய சாய்தளம் மற்றும் இதர வசதிகளும் அமைக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

10. தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் குடிசைப் பகுதி வாழ் இளைஞர்களுக்கு முழு நிதியுதவி வழங்கி விளையாட்டுத் திறன் மேம்படுத்தப்படும்.

குடிசைப்பகுதிகள் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்பு திட்டப் பகுதிகளில் விளையாட்டு நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படும். விளையாட்டு திறமை, நிபுணர்களால் கண்டறியப்பட்டு, சிறப்புப் பயிற்சிகள் வழங்கத் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ஊக்கம் அளிக்கப்படும். தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் இளைஞர்களுக்கு முழு நிதி உதவியுடன் இதர ஒத்துழைப்புகளும் வழங்கப்படும்.

11. வாரிய திட்டப்பகுதிகள் மற்றும் குடிசைப் பகுதிகளில் வாழும் 10,000 இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கி வேலை வாய்ப்புகள் பெற ஊக்குவிக்கப்படும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் குடிசைப்பகுதி வாழ் இளைஞர்களின் கல்வித் தகுதிக்கேற்ப திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி (CSR) ஆகியவற்றின் மூலமாக 10,000 இளைஞர்கள் பயன்பெறும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும்.

❖ ❖ ❖

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மானியக் கோரிக்கை எண். 42

1. 5,780 கி.மீ. நீளத்திற்கு ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் 121 பாலங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் ரூ.2,097 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

ஊரகச் சாலை இணைப்பினை மேம்படுத்துதல் ஊரக வளர்ச்சியின் ஓர் முக்கிய அங்கமாகும். இந்த அரசால் 5,780 கி.மீ. நீளத்திற்கான ஊராட்சி ஒன்றிய / கிராம ஊராட்சி சாலைகள் மற்றும் 121 புதிய பாலங்கள், மொத்தம் ரூ.2,097 கோடி மதிப்பீட்டில் 2021–2022ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

2. நிலத்தடி நீரை அதிகரிக்கவும், நீர்ப்பாசன தேவைகளை நிறைவேற்றவும், ரூ.1,149 கோடி மதிப்பீட்டில் தடுப்பணைகள், உறிஞ்சு குழிகள், கிணறுகள் மற்றும் இதர பசுமையாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய கிராமங்களை உருவாக்குதல் இன்றைய முக்கியத் தேவையாகும். இந்நிலையை அடையும் விதமாக ஊரகப் பகுதிகளில் நிலத்தடி நீரை அதிகரிக்க 68 இலட்சம் மரக்கன்றுகள் நடுதல், 10,000 தடுப்பணைகள் கட்டுதல், வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரைத் தூய்மைப்படுத்தி நிலத்தடியில் செலுத்துவதற்காக 25,500 சமுதாய உறிஞ்சு குழிகள், 1,75,000 தனிநபர் உறிஞ்சு குழிகள் அமைத்தல்

போன்ற பணிகள் ரூ.948.50 கோடி மதிப்பீட்டிலும், நீர்ப்பாசனத் தேவையை நிறைவேற்றுவதற்காக 500 சமுதாயக் கிணறுகளும், 1,500 தனிநபர் கிணறுகளும் ரூ.200.50 கோடி மதிப்பீட்டிலுமாக மொத்தம் ரூ.1,149 கோடி மதிப்பீட்டில், நிலத்தடி நீரை அதிகரிக்கும் பணிகளும், நீர்ப்பாசனப் பணிகளும் 2021–2022ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

3. ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள பழைய சமத்துவபுரங்களில் உள்ள வீடுகள், குடிநீர் கட்டமைப்பு, தெரு விளக்குகள் போன்றவற்றைச் சீரமைக்கும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

24.06.2021 அன்று நடைபெற்ற ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள சமத்துவபுரங்கள் சீரமைக்கப்படும் என அறிவித்ததன் தொடர்ச்சியாக, ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள பழைய சமத்துவபுரங்களைச் சீரமைப்பதற்காக, பழைய வீடுகளைப் பழுதுபார்த்தல், குடிநீர் விநியோகப் பணிகள், தெரு விளக்குப் பராமரிப்பு, விளையாட்டு மைதானம், பூங்கா பராமரிப்பு, தந்தை பெரியாரின் சிலை பராமரிப்பு போன்ற பராமரிப்பு பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

4. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 12,525 நூலகங்கள் படிப்படியாகப் புதுப்பிக்கப்படும்.

கிராமப்புற இளைஞர்களுக்கிடையே வாசிப்பு மற்றும்

கூர்ந்தாய்வுத் திறனை ஏற்படுத்திப் பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்குவது அவர்களின் சுய முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. இதற்காக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் IIஇன் கீழ் அனைத்து நூலகங்களும், படிப்படியாக முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான கட்டமைப்புகளுடன் புனரமைக்கப்பட்டுக் கூடுதல் புத்தகங்களும், புதிய தளவாடங்களும் வழங்கப்படும்.

5. ரூ.916.75 கோடி மதிப்பீட்டில் ஊரகப் பகுதிகளில் சொத்துக்களை உருவாக்கி அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் பயன்பாட்டிற்காக 1,000 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், 600 கி.மீ. நீளத்திற்கு பேவர் பிளாக் சாலைகள், 350 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் வடிகால்கள் அமைத்தல் மற்றும் 500 இடுகாடு / சுடுகாடு மேம்பாட்டுப் பணிகள் ரூ.916.75 கோடி மதிப்பீட்டில் 2021–2022ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

6. சிறப்பான சேவைகள் வழங்குவதற்காக 550 கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், 15 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 500 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் ரூ.233.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஊரக உள்ளாட்சிகள் மூலம் வழங்கப்படும் சேவைகளைப் பொதுமக்கள் எளிதாகப் பெறும் வகையில் தேவையான

வசதிகளை உருவாக்குவதே இந்த அரசின் முதன்மைக் குறிக்கோளாகும். அதனடிப்படையில், 2021–2022ஆம் ஆண்டில் 15 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், 550 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 500 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் ரூ.233.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

7. திட்டக் கண்காணிப்பினை வலுப்படுத்துவதற்காக மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

திட்டக் கண்காணிப்பினை திறம்பட மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்குப் பழைய வாகனங்களுக்குப் பதிலாக 68 புதிய வாகனங்கள் 2021–2022ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

8. ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியம் 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

ஊரகப் பகுதிகளின் வளர்ச்சியில் ஊராட்சி மன்றத் தலைவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். அவர்களை மேலும் ஊக்குவிக்கும் விதமாக ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியம் 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

9. சுகாதாரத்தில் சிறப்பாகச் செயல்படும் கிராமங்களுக்கு 'முன்மாதிரி கிராம விருது' வழங்கப்படும்.

சுகாதாரத்தில் சிறப்பாகச் செயல்படும் கிராம ஊராட்சிகளை ஊக்குவிக்கும் வகையில், 'முன்மாதிரி கிராம

விருது’ தோற்றுவிக்கப்பட்டு, மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி என்ற அடிப்படையில், 37 கிராம ஊராட்சிகளுக்கு ‘முன்மாதிரி கிராம விருது’ வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் விருதிற்கான கேடயமும், தலா ரூ.7.5 இலட்சம் பரிசுத் தொகையும் வழங்கப்படும். மேலும், மாவட்ட அளவிலான விருதுகளுடன், சிறப்பாகச் செயல்படும் மூன்று ஊராட்சிகளுக்கு மாநில அளவில் ‘முன்மாதிரி கிராம விருது’ வழங்கி அதற்கான கேடயமும், தலா ரூ.15 இலட்சம் பரிசுத் தொகையும் வழங்கப்படும்.

10. பாதுகாக்கப்பட்ட குடிநீரை உறுதி செய்யும் பொருட்டு நீரின் தரத்தைப் பரிசோதிப்பதற்காகச் சுயஉதவிக் குழு பெண்களுக்குப் பயிற்சி அளித்தல்.

வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை நீர் ஆதாரத்திலிருந்து விநியோகம் வரை கள பரிசோதனை உபகரணங்களைப் பயன்படுத்தி பரிசோதனை செய்து குடிநீரின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக ரூ.10.92 கோடி மதிப்பீட்டில் 12,525 ஊராட்சிகளிலுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 62,625 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

11. ஊராட்சி நிருவாகத்தில் உள்ள கணக்குகள், பதிவேடுகள் மற்றும் படிவங்கள் எளிமைப்படுத்தப்பட்டு முறைப்படுத்தப்படும்.

கிராம ஊராட்சிகள் தற்போது 11 வகையான வங்கிக் கணக்குகளையும், 31 வகையான பதிவேடுகள் மற்றும்

படிவங்களையும் பராமரித்து வருகின்றன. இவற்றை மீள்பார்வை செய்து, தற்போதைய தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப வங்கிக் கணக்குகள், பதிவேடுகள் மற்றும் படிவங்கள் ஆகியன எளிமைப்படுத்தப்பட்டு முறைப்படுத்தப்படும்.

12. ஊரகப் பகுதிகளில் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் ரூ.84.68 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

தமிழகத்திலுள்ள சுயஉதவிக் குழுக்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களின் வாழ்வாதார மேம்பாடு இவ்வரசின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகும். அதன் பொருட்டு, தனிநபர் பயன்பெறும் வகையில் 400 எண்ணிக்கையிலான பட்டுப்புழு வளர்ப்புக் கூடங்கள் ரூ.27.68 கோடி மதிப்பீட்டிலும், 400 எண்ணிக்கையிலான காளான் வளர்ப்புக் கூடங்கள் ரூ.9 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 500 சுயஉதவிக் குழுவினருக்கான பணிக்கூடங்கள் ரூ.48 கோடி மதிப்பீட்டிலுமாக மொத்தம் ரூ.84.68 கோடி மதிப்பீட்டில் 2021–2022ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

13. பெண் கிராம ஊராட்சி செயலர்களுக்கான மகப்பேறு விடுப்பை உயர்த்தி வழங்குதல்.

தமிழகத்திலுள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரிந்து வரும் பெண் ஊராட்சி செயலர்களுக்கு மகப்பேறு விடுப்பு 9 மாதங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 13.08.2021 அன்று சட்டமன்றத்தில் அனைத்துப் பெண் அரசு ஊழியர்களுக்கும் மகப்பேறு

விடுப்பு ஒன்பது மாதங்களிலிருந்து ஓராண்டாக உயர்த்தி அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் பெண் கிராம ஊராட்சி செயலர்களுக்கும் மகப்பேறு விடுப்பினை ஒன்பது மாதங்களிலிருந்து ஓராண்டாக உயர்த்தி வழங்கப்படும்.

14. சுயஉதவிக் குழுக்கள் மற்றும் சமுதாய அமைப்புகளை வலுப்படுத்த ரூ.188 கோடியில் சுழல்நிதி மற்றும் சமுதாய நிதி வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் 12,000 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்களும், நகர்ப்புறப் பகுதிகளில் 20,000 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்களும் அமைக்கப்படும். இக்குழுக்களுக்கு ஆதார நிதியாக ஊரக மகளிர் குழு ஒன்றுக்கு ரூ.15,000 வீதமும் நகர்ப்புற மகளிர் சுயஉதவிக் குழு ஒன்றுக்கு ரூ.10,000 வீதமும் மொத்தம் ரூ.38 கோடி சுழல் நிதி வழங்கப்படும். இந்நிதியானது, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் காப்பு நிதியாகவும், வங்கி மூலம் கடனுதவி பெற ஏதுவாகவும் அமையும். இத்தகைய நிதி உதவிகள் குழு உறுப்பினர்களுக்குச் சிறு தொழில் துவக்கவும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் கைகொடுக்கும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வாயிலாகப் பொருளாதார நடவடிக்கைகள் மூலம் வருமானத்தைப் பெருக்கிட 30,000 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு ரூ.50,000 வீதம் மொத்தம் ரூ.150 கோடி சமுதாய முதலீட்டு நிதியாக வழங்கப்படும்.

15. மகளிர் சுயஉதவிக் குழுக்களின் நுண் மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களைப் பங்கு மூலதனம் மூலம் செம்மைப்படுத்தவும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் 36 சிறு தொழில் தொகுப்புகளுக்கு ரூ.10.80 கோடி நிதி மானியம் ஏற்படுத்தப்படும்.

தொகுப்பு மேம்பாட்டு நடவடிக்கையின் கீழ் உற்பத்தி அலகுகள் துவங்க அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் பங்கு மூலதனம் பெற்றுத்தர வழிவகை செய்யப்படும். இதன்மூலம் உட்கட்டமைப்பு வசதிகள், தேவையான நவீனத் தொழில்நுட்ப வசதி மற்றும் செயல்பாட்டு நிதி ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 36 சிறிய தொழில் தொகுப்புகளுக்கு ரூ.10.80 கோடி நிதி மானியத்துடன் வங்கிக்கடன் இணைப்பு ஏற்படுத்தப்படும்.

16. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கும் உற்பத்தியாளர் குழுக்களின் மூலம் உற்பத்தி மற்றும் வருமானத்தை அதிகரிக்க 100 சான்று பெற்ற விதை உற்பத்தித் தொகுப்புகளுக்கு ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கி ஊக்குவிக்கப்படும்.

தரத்திற்கு உத்தரவாதம், இரகத் தூய்மை, நவீன முன்னோடி சந்தைகளை அணுகுதல், பயிர் வளர்ச்சி பருவத்தில் நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குதல் ஆகிய பண்புகளை உட்புகுத்த உற்பத்தியாளர் குழுக்களுக்கு 100 விதைச் சான்று பண்ணைகள் அமைக்க, அலகு ஒன்றுக்கு ரூ.2 இலட்சம் வீதம் ரூ.2 கோடி நிதி வழங்கப்படும். இவ்விதைச் சான்று பண்ணைகளில் அனைத்து பயிர்களின்

விதைகளை உற்பத்தி செய்ய ஏதுவாக தமிழ்நாடு விதைச் சான்றளிப்புத்துறை மூலம் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் உதவிகள் செய்யப்படும்.

17. 1,860 தனி நபர் மற்றும் 2,717 குழுத் தொழில் நிறுவனங்களை உருவாக்கவும், ஊரகத் தொழில் முனைவை ஏற்படுத்தவும், ரூ.51.25 கோடி மதிப்பீட்டில் நிதி வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் விவசாயம் மற்றும் விவசாயம் சாராத் தொழில்களை மேம்படுத்துவதற்காக உற்பத்தியாளர் குழு, தொழிற் குழு மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, அதன்மூலம் 2,525 குழுத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.26.25 கோடி மதிப்பீட்டில் துவக்க நிதி வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட 192 குழுத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் இணைமானிய நிதி உதவி வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகளிலுள்ள ஆர்வமுள்ள தனிநபர்களைத் தொழில் தொடங்க ஊக்குவிக்கும் வகையில் 1,860 தனிநபர் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.20.50 கோடி மதிப்பீட்டில் இணை மானிய நிதி உதவி வழங்கப்படும்.

18. கிராமப்புறத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளாண், தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு போன்ற இணைத் தொழில்கள் ரூ.37 கோடி மானியத்தில் 185 பண்ணைத் தொகுப்புகளாக ஒருங்கிணைக்கப்படும்.

கிராமப்புறத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளாண்,

தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு போன்ற இணைத் தொழில்கள் ஒருங்கிணைக்கப்படும். இதனால் உற்பத்தி அதிகரிப்பு, பாதுகாப்பான சுற்றுச்சூழல், தரமான அங்கக விளைபொருட்கள் உற்பத்தி மற்றும் பயன்பாடு, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளைத் திட்டமிட்டு ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்புகள் (Integrated Farming Clusters) உருவாக்கப்பட்டுத் தொகுப்பு ஒன்றுக்கு ரூ.20 இலட்சம் வீதம் 185 ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்புகள் மொத்தம் ரூ.37 கோடி மானியத்தில் உருவாக்கப்படும்.

19. 5,000 மகளிர் விவசாயிகளை உள்ளடக்கிய 50 இயற்கை பண்ணைத் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வண்ணம், இயற்கை உரம் மற்றும் பயிர் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இயற்கை உணவுப் பொருட்களை உற்பத்தி செய்திட 50 இயற்கை பண்ணைத் தொகுப்புகள் அமைக்க ஒரு தொகுப்புக்கு ரூ.6 இலட்சம் வீதம் ரூ.3 கோடி நிதி ஒதுக்கப்படும்.

20. மகளிர் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தினை உறுதி செய்ய இரண்டு இலட்சம் ஊட்டச்சத்துத் தோட்டங்கள் அமைக்க ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இரண்டு இலட்சம் மகளிர் மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்தை உறுதி செய்திடவும், இரத்த சோகை

குறைபாடுகளைச் சரி செய்திடவும் மகளிர் குழு உறுப்பினர்களின் வீட்டின் பின்புறத்தில் ஊட்டச்சத்துத் தோட்டம் அமைத்து இத்தோட்டத்தில், இயற்கை முறையில் பலன் தரும் சத்தான கீரைகள், முருங்கை, பப்பாளி, கொய்யா, சப்போட்டா போன்ற பழமரக்கன்றுகள் வளர்க்க ரூ.1 கோடி நிதி மானியமாக வழங்கப்படும்.

21. உள்ளூர் சுயஉதவிக் குழுக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு மிக முக்கியத் தேவையாகக் கருதப்படும் பொது உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட வாழ்வாதாரப் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடத் தேவையான பொது இடங்கள், கட்டடங்கள் மற்றும் கருவிகள் / உபகரணங்கள் போன்றவை தேவையின் அடிப்படையில் பிற துறைகளின் ஒருங்கிணைப்புகள் மூலமாகக் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும். இப்பூங்காக்கள் மூலம் உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கைகளான இடவசதி, சேமிப்பு வசதி மற்றும் விற்பனைக்கு இணக்கமான சூழ்நிலை போன்றவை உருவாக்கப்படும்.

22. இயற்கை வளங்கள் மற்றும் பல்லுயிர் பன்மத்தை பேணிக்காக்கவும் உள்ளூர் சுயஉதவிக்குழு பெண்களுக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்.

நமது அன்றாடத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றிற்கு நாம் பல்லுயிர் காரணிகளைச்

சார்ந்தே வாழ வேண்டி உள்ளது. பல்லுயிர் பன்மம் (Biodiversity) எனக் குறிப்பிடக் கூடிய இக்காரணிகளைப் பேணிப் பாதுகாப்பது நமது முதற்கண் கடமையாகும்.

பல்லுயிர் பன்மம் மற்றும் வளங்களைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் அனைத்து ஊராட்சிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு பெண்களுக்கு இதன் முக்கியத்துவத்தை விளக்கி பல்லுயிர் பன்மப் பதிவேட்டை (Resource Inventory Register) பராமரிக்கத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி ரூ.2 கோடி மதிப்பீட்டில் அளிக்கப்படும்.

23. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 25,000 இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அமைத்திடவும், தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுவதற்குத் தேவையான திறன் பயிற்சிகள் அளிக்கவும் ரூ.87.80 கோடி வழங்கப்படும்.

கிராமப்புறங்களில் நலிவடைந்த குடும்பத்தைச் சேர்ந்த 18 வயது முதல் 35 வயது வரை உள்ள ஏழை இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திட தீனதயாள் உபாத்யாயா கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 10,000 இளைஞர்களுக்கு ரூ.60 கோடி செலவில் பயிற்சி அளிக்கப்படும். ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்களின் வாயிலாக 10,000 கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ.10 கோடி செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் ரூ.16.50 கோடி செலவில் 5,000 நகர்ப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு 130 வேலைவாய்ப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் ரூ.1.30 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

24. 31,900 ஊரக மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் தொகுப்பு அடிப்படையில் மதிப்புக் கூட்டல் மேற்கொள்ள ரூ.1.86 கோடி மதிப்பில் திறன் பயிற்சி அளிக்கப்படும்.

சந்தை நுண்ணறிவு கிடைப்பதற்கும், தனி வணிக முத்திரை பெறுவதற்கும், நவீன வகையான பொட்டலமிட்டு விற்பனை செய்வதற்கும், அறிவு சார் தகவல்களை விளக்கமாகப் பெற 1,900 மகளிர் தொழில்முனைவோருக்கு ரூ.81 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும். இதனால், தொழில் முனைவோர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு அதிகபட்ச இலாபம் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

புதிய தொழில் நிறுவனங்கள் துவங்க, அடிப்படைத் தொழில் நுணுக்கங்களான மூலப் பொருட்கள் கொள்முதல் செய்து பாரம்பரிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மதிப்புக் கூட்டுப் பொருட்களை உற்பத்தி செய்து, புதிய விற்பனை உத்திகள் மூலம் வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தேவையான திறன் பயிற்சியை

30,000 குழு உறுப்பினர்களுக்கு வழங்க ரூ.1.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

25. ஊரகத் தொழில்களை மேம்படுத்திடவும், ஊரக மகளிர் தொழில் முனைவோருக்கு உரியச் சேவைகள் வழங்கிடவும், 30 ஓரிட சேவை மையங்கள் ரூ.7 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

ஊரகத் தொழில் நிறுவனங்களுக்கான நிதி சேவைகள், தொழில்நுட்ப உதவி, உரிமம் பெறுதல், வரிசெலுத்துதல், தொழில் மேலாண்மைப் பயிற்சிகள், வியாபார உத்திகள் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான சேவைகள் வழங்கிடவும், ஊரக மகளிருக்குத் தொழில் தொடங்குவதற்கும், தொடர்வதற்கும் திட்டப் பகுதிகளிலுள்ள 30 இடங்களில் ஓரிட சேவை மையங்கள் ரூ.7 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

26. சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு விற்பனையகம் அமைத்தல், தனி முத்திரை பெறுதல் (Branding) மற்றும் மின்னணு வர்த்தக இணைய தளம் உருவாக்குதல் (e-Marketing) போன்றவற்றிற்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படும்.

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இக்குழுக்களுக்குத் தரமான உற்பத்திப் பொருட்கள்

தயாரிக்கவும், நவீன முறையில் பொட்டலமிடுதல் (Packaging) மற்றும் தனிமுத்திரை அமைக்கவும் வழிவகை செய்யப்படும்.

மாநில, மாவட்ட அளவிலான வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களை நவீனப்படுத்தி, புதுப்பொலிவுப் பெற்ற விற்பனையகங்களாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கு ரூ.1 கோடி நிதியுதவி அளிக்கப்படும்.

மின்னணு இணைய வர்த்தகம் மூலம் மகளிர் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தை வாய்ப்புகளை அதிகரிக்க மாநில அளவிலான வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

27. சிறப்பாகச் செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு 'மணிமேகலை விருதுகள்' வழங்கப்படும்.

மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புறப் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 'மணிமேகலை விருதுகள்' வழங்கிட ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

28. வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட விபரங்கள் பெறுவதற்கு பிரத்யேக தொலைப்பேசி உதவி சேவை மையம் துவக்கப்படும்.

ஊரக மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு வாழ்வாதாரம் தொடர்பான வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள் குறித்த தகவல்கள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பெற பிரத்யேக தொலைப்பேசி உதவி சேவை மையம் துவக்கப்படும்.

❖ ❖ ❖

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மானியக் கோரிக்கை எண். 44

1. **தமிழ்நாடு சிட்கோ மூலம், தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுத்திட, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணப்பாறை, திருவள்ளூர் மாவட்டம் – காவேரிராஜபுரம், செங்கல்பட்டு மாவட்டம் – கொடூர் மற்றும் மதுரை மாவட்டம் – சக்கிமங்கலம் ஆகிய நான்கு இடங்களில் மொத்தம் 394 ஏக்கர் பரப்பளவில், ரூ.218.22 கோடி மொத்த திட்ட மதிப்பில் 4 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும். இதன் மூலம் மொத்தம் சுமார் 7,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் சிப்காட்டிடமிருந்து, 120 ஏக்கர் நிலம் பெறப்பட்டு ரூ.85 கோடி திட்ட மதிப்பில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 2,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், காவேரிராஜபுரம் கிராமத்தில் ரூ.65 கோடி திட்ட மதிப்பில் 144 ஏக்கரில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன்மூலம் சுமார் 2,500 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், கொடூர் கிராமத்தில் 98 ஏக்கரில் ரூ.45.94 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன்மூலம் சுமார் 1,500 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், சக்கிமங்கலம் கிராமத்தில் ரூ.22.28 கோடி திட்ட மதிப்பில் 32 ஏக்கரில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன் மூலம், சுமார் 1,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

2. **புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ், பயன் பெறத் தேவையானக் கல்வித்தகுதியைப் பன்னிரெண்டாம் வகுப்பு எனத் தளர்த்தியும், தனி நபர் முதலீட்டு மானியத்தை ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக உயர்த்தியும் வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தின்கீழ், பட்டியல் இனம் / பழங்குடியினர் மற்றும் மாற்றுத்திறனாளி தொழில்முனைவோருக்கு 10 விழுக்காடு கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.**

நீட்ஸ் திட்டத்தின் அதிகபட்ச முதலீடு ரூ.500 இலட்சம் ஆகும். மாநில அரசுத் திட்டத் தொகையில் 25 விழுக்காடு முதலீட்டு மானியம் அதிகபட்சமாக ரூ.50 இலட்சம் வரை வழங்குகிறது. தேவையான கல்வித்தகுதி பட்டம் / பட்டயம் / ஐடிஐ / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் தொழிற்பயிற்சி சான்றிதழ் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கல்வித் தகுதியைத் தளர்வு செய்து பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சியும் கல்வித் தகுதியாகச் சேர்க்கப்படும். இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும்

முதலீட்டு மானிய உச்ச வரம்பு ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக உயர்த்தப்படும். மேலும் பட்டியல் இனத்தோர், பழங்குடியினர் மற்றும் மாற்றுத்திறனாளி தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் முகமாக இத்திட்டத்தின் கீழ், அப்பிரிவு தொழில்முனைவோர்களுக்கு பொதுவான 25 விழுக்காடு தனிநபர் முதலீட்டு மானியத்துடன் 10 விழுக்காடு கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

3. **நீலகிரி மாவட்டத்தில் உள்ள 10 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் (RIDF) கடன் உதவியுடன், ரூ.50.06 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.**

தமிழ்நாடு அரசு உதவி மற்றும் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் (RIDF) கடன் உதவியுடன் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கரும்பாலம் தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, மேற்குநாடு தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, மகாலிங்கா தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, இத்தலார் தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, கட்டபெட்டு தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, பிராண்டியர் தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, கின்னக்கோரை தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, பிக்கட்டி தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, எபநாடு தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, பிதர்காடு தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை ஆகிய 10 தேயிலைத் தொழிற்சாலைகளில், சிதிலமடைந்த மற்றும் பயனற்று இருக்கும் தேயிலை உற்பத்தி இயந்திரங்கள்,

உபகரணங்கள் மாற்றப்பட்டு ரூ.50.06 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும். இதனால் தரமான தேயிலைத்தூளை தயாரிக்க இயலும். இதன்மூலம் தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் வருமானம் பெருகி அவற்றின் 25,000 உறுப்பினர்கள் / சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரம் செழிப்படையும்.

4. தமிழ்நாடு சிட்கோ மூலம் செங்கல்பட்டு மாவட்டம், கடம்பாடியில் 19 ஏக்கரில் ரூ.23 கோடி திட்ட மதிப்பில், சிற்பக் கலைஞர்களின் மேம்பாட்டிற்காகச் சிற்பக் கலைஞர் தொழிற்பூங்கா (Park for sculptors) **சுமார் 100 சிற்பக் கலைஞர்கள் மற்றும் இதர 1,000 நபர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்படும்.**

புராதன சிறப்பும், சுற்றுலா சிறப்பும், சிற்பப் பாரம்பரியமும் நிறைந்த மாமல்லபுரம் பகுதியில் சூழல் தூய்மை, சிற்பக்கலைஞர்களின் உடல் நலன், திறன் மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தும் வாய்ப்பு ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், கடம்பாடி கிராமத்தில் 19 ஏக்கரில் காற்று மாசற்ற, உகந்த சூழலுடனும் மற்றும் தரமான உட்கட்டமைப்பு வசதிகளுடனும் ரூ.23 கோடி திட்ட மதிப்பில் சிற்பக் கலைஞர்களுக்கான தொழிற்பூங்கா அமைக்கப்படும். இந்த சிற்பக் கலைஞர் தொழிற்பூங்காவை (Park for Sculptors) உருவாக்குவதன் மூலம், மாமல்லபுரத்தைச் சுற்றியுள்ள சுமார் 100 சிற்பக்கலைஞர்கள் பயன்பெறுவர். மேலும், இதன்மூலம் கூடுதலாக சுமார் 1,000 நபர்களும் சிற்பக்கலை சார்ந்த இதர வேலைவாய்ப்புகளைப் பெறுவர்.

5. கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டையில் நேரடியாக 10,000 வேலைவாய்ப்புகளை உருவாக்கிட ஏதுவாக சங்க உறுப்பினர்களின் நிதி பங்களிப்புடன், ரூ.17.57 கோடி திட்ட மதிப்பீட்டில் 585 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பாட்டிற்காக அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டையில் உறுப்பினர்களின் நிதி பங்களிப்புடன் சாலை அமைத்தல், தண்ணீர் வசதி, கழிவு நீர் வெளியேற்ற வசதி மற்றும் தெரு விளக்கு வசதி போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். இதன்மூலம், 585 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் புதியதாகத் துவங்கப்பட்டு 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

6. கொசிமா (COSIEMA) **மூலம் கோயம்புத்தூர் மாவட்டம், சொலவம்பாளையம் கிராமத்தில் 42.42 ஏக்கரில் ரூ.18.13 கோடி திட்ட மதிப்பில், ரூ.9.06 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன்மூலம் சுமார் 1,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.**

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், சொலவம்பாளையம் கிராமத்தில், 42.42 ஏக்கரில் ரூ.18.13 கோடி திட்ட மதிப்பில் கொசிமா (COSIEMA -

Coimbatore SIDCO Industrial Estate Manufacturers Association) மூலம் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்கப்படும். இத்தொழிற்பேட்டையில் தமிழ்நாடு அரசின் ரூ.9.06 கோடி மானியத்துடன் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இத்தொழிற்பேட்டையை உருவாக்குவதன் மூலம் சுமார்1,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

7. பொது உற்பத்தி கட்டமைப்பு திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர், மதுக்கரை மற்றும் வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஆகிய மூன்று இடங்களில் அமையப்பெறும் குழுமங்களுக்காக மொத்தம் ரூ.12.81 கோடி திட்ட மதிப்பில் ரூ.7.50 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் பொது உற்பத்தி உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம், சுமார் 150 குறுந்தொழில்முனைவோர் பயன்பெறுவர்.

தமிழ்நாடு சிட்கோ மூலம் பொது உற்பத்தி உட்கட்டமைப்பு (CPI) திட்டத்தின்கீழ், தமிழ்நாடு அரசு மானிய உதவியுடன் கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூரில் ரூ.4.76 கோடி மதிப்பில் வார்ப்பு குழுமம், மதுக்கரையில் ரூ.4.44 கோடி மதிப்பில் பொறியியல் குழுமம் மற்றும் வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் ரூ.3.61 கோடி மதிப்பில் தீப்பெட்டிக்குழுமம் ஆகிய மூன்று குழுமங்கள் அமைக்கப்படும். இவற்றிற்கு பொது உற்பத்தி உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு மானியமாக ரூ.7.50 கோடி வழங்கப்படும். இதன் மூலம் சுமார் 150 குறுந்தொழில் முனைவோர் பயனடைவர்.

8. **குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள் தங்களின் தரத்தை மேம்படுத்தி, அவை கொள்முதல் செய்யும் உயர் விலை கொண்ட அளவீடு மற்றும் சோதனை கருவிகளில் செய்யப்படும் முதலீடு, மானியம் கணக்கிட தகுதியானதாகச் சேர்க்கப்பட்டு, முதலீட்டு மானியம் வழங்கப்படும்.**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்கள் செயல்முறை மற்றும் உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்த வேண்டிய அவசியம் இருந்தாலும், அளவீடு மற்றும் சோதனைக் கருவிகள் பல இலட்ச ரூபாய் செலவாகும் என்பதால் இத்தகைய விலையுயர்ந்த அளவீடு மற்றும் சோதனைக் கருவிகளை கொள்முதல் செய்ய முடிவதில்லை.

எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் தங்கள் தரத்தை மேம்படுத்த அளவீடு மற்றும் சோதனைக் கருவிகள் / உபகரணங்களில் செய்யப்படும் முதலீடு, மானியம் கணக்கிட தகுதியானதாகச் சேர்க்கப்பட்டு முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

9. **மாநிலத்தில் நலிவுற்று வரும் பாரம்பரிய குறு மற்றும் சிறு தொழில்களான உப்பு உற்பத்தி, வெள்ளிக் கொலுசு, வெள்ளி விளக்கு தயாரித்தல், பித்தளைப் பொருட்கள் மற்றும் பாத்திரப் பொருட்கள் உற்பத்தி, பூட்டு உற்பத்தி மற்றும் பட்டு சார்ந்த தொழில்கள் ஆகியவை சிறப்பு தொழில் வகையின்** (Thrust Sector) **கீழ் கொண்டு வரப்பட்டு, சிறப்பு முதலீட்டு மானியம் வழங்கப்படும்.**

மாநிலத்தில் நலிவுற்று வரும் பாரம்பரியத் தொழில்களான உப்பு உற்பத்தி, வெள்ளி கொலுசு மற்றும் வெள்ளி விளக்கு

தயாரித்தல், பித்தளைப் பொருட்கள் மற்றும் பாத்திரப் பொருட்களின் உற்பத்தி, பூட்டு உற்பத்தி மற்றும் பட்டு சார்ந்த தொழில்கள் ஆகியவை பாரம்பரியத் தொழில்கள் (Traditional Sector) என வகைப்படுத்தப்பட்டு, சிறப்பு தொழில் வகையின் (Thrust Sector) கீழ் கொண்டுவரப்பட்டு அவற்றிற்கு சிறப்பு முதலீட்டு மானியம் அளிக்கப்படும். இதன் மூலம், பின்தங்கிய வட்டாரங்கள் அல்லாத பகுதிகளில் அமைக்கப்படும் இப்பிரிவின் கீழ் வரும் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முதலீட்டு மானியம் பெறலாம்.

10. சேகோசர்வ் நிறுவனத்தின் நான்கு கிடங்குகளில் பணிகளை எளிதாகக் கையாளுவதற்கு ரூ.45.05 கோடி செலவில் இயந்திரமயமாக்கல் மற்றும் விரிவுபடுத்துதல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சேலம் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கத்தின் (சேகோசர்வ்) தற்போது உள்ள நான்கு கிடங்குகளில் ஏற்றி இறக்கும் பணிகளை எளிதாக கையாளுவதற்கு 130 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கன்வேயர், சரக்கு மின்தூக்கி போன்றவற்றைப் பொருத்தி இயந்திரமயமாக்கல் மற்றும் விரிவுபடுத்துதல் பணிகள் ரூ.45.05 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

11. சேகோசர்வ் நிறுவனத்தின் தற்போதுள்ள கிடங்குகளின் கொள்ளளவை அதிகமாக்கிட ரூ.40 கோடி செலவில் புதிய சேமிப்புக் கிடங்கு 1.07 இலட்சம் சதுர அடியில் கட்டப்படும்.

சேலம் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கத்தின் (சேகோசர்வ்) தற்போது

உள்ள சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவை அதிகமாக்கிட சுமார் 1.07 இலட்சம் சதுர அடியில் புதிய சேமிப்புக் கிடங்கு ரூ.40 கோடி செலவில் கட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

12. தாய்கோ வங்கி கிளைகளின் வணிக வலிமையை அதிகரிக்கும் பொருட்டு 5 கிளைகளில் கரோட்டோ மீட்டர் நிறுவுவதற்கும், வாடிக்கையாளர் வசதிக்காக 4 கிளைகளை நவீனமயமாக்கவும், ரூ.82 இலட்சம் செலவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தாய்கோ வங்கியின் வணிக வலிமையை அதிகரிக்கும் பொருட்டு, நகைக்கடன் அதிகம் வழங்கும் 5 கிளைகளில், தங்கத்தின் தரத்தை மதிப்பிட ஏதுவாக 5 கரோட்டோ மீட்டர் உபகரணங்கள் ரூ.35 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்படும். மேலும், வாடிக்கையாளர் வசதிக்காக தாய்கோ வங்கியின் எழும்பூர், வியாசர்பாடி, சேப்பாக்கம் மற்றும் நெய்வேலி கிளைகள் ரூ.47 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்படும்.

13. தொழில்முனைவோருக்கு காலக்கடன் (Term Loan) **மற்றும் நடைமுறை மூலதனக்கடன்** (Working Capital Loan) **தாய்கோ வங்கியிலிருந்து எளிதில் கிடைத்திடும் வகையில், தாய்கோ வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்** (TIIC) **இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.**

தொழில்முனைவோருக்கு காலக்கடன் (Term Loan) மற்றும் நடைமுறை மூலதனக்கடன் (Working Capital Loan)

தாய்கோ வங்கியிலிருந்து எளிதில் கிடைத்திடும் வகையில், தாய்கோ வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

தாய்கோ வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதால், தாய்கோ வங்கி, தொழில்முனைவோருக்கு அதிக அளவில் கடன் தர இயலும். இதனால் தொழில்முனைவோர் தாய்கோ வங்கியிலிருந்து எளிதாகக் கடன்பெற்றுப் பயன்பெறுவார்கள்.

14. தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத் தன்மை விதிகள், 2000இல் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள 25 விழுக்காடு வரையிலான கொள்முதல் முன்னுரிமையைக் கண்காணிக்க, புதியதாக உருவாக்கப்பட உள்ள கொள்முதல் வலைத்தளத்தில் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

அரசு கொள்முதல் முறைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசிற்கென, தனி மின்னணு கொள்முதல் வலைத்தளம் ஒன்று உருவாக்கப்படும் என 2021–2022ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, இந்த கொள்முதல், வலைத்தளத்தில் தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத் தன்மை விதிகள் 2000இல் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள 25 விழுக்காடு வரையிலான கொள்முதல் முன்னுரிமையைக் கண்காணிப்பதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

15. மாவட்டத் தொழில் மைய அலுவலகங்களுக்குப் பழுதடைந்த பழைய நான்கு சக்கர வாகனங்களுக்குப் பதிலாக ரூ.60 இலட்சம் செலவில் எட்டு புதிய ஈப்புகள் கொள்முதல் செய்யப்படும்.

சென்னை, திண்டுக்கல், கரூர், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, தேனி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய 8 மாவட்டத் தொழில் மைய அலுவலகங்களுக்கு ரூ.60 இலட்சம் செலவில், பழுதடைந்த பழைய நான்கு சக்கர வாகனங்களுக்குப் பதிலாக எட்டு புதிய ஈப்புகள் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

16. டான்சி நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைச் சந்தைப்படுத்த ஒரு பிரத்யேக காட்சியகம் மற்றும் மின் வணிக இணைய முகப்பு ஆகியன ரூ.3 கோடி செலவில் உருவாக்கப்படும்.

டான்சி நிறுவனம் உற்பத்தி செய்யும் அனைத்து வகையான எஃகு, மர அறைகலன்கள் மற்றும் பிற பொருட்களைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்ய, சென்னையில் ஓர் பிரத்யேக காட்சியகம் மற்றும் விற்பனை நிலையம் நிறுவப்படும். மேலும், டான்சி உற்பத்தி செய்யும் அறைகலன்களை விற்பனை செய்வதற்காக நிகழ்நிலை மின் வணிக இணைய முகப்பு (e-commerce online portal) உருவாக்கப்படும்.

17. ஆர்வமுள்ள அனைத்து தொழில்முனைவோருக்கும் இணைய வழியில் எளிதில் பயிற்சிகள் வழங்குவதற்கு

ஏதுவாக EDII நிறுவனத்தின் பயிற்சி திட்டங்கள் ரூ.1 கோடி மதிப்பில் இணையமயமாக்கப்படும்.

‘தொழில்முனைவு, புத்தாக்கம் மற்றும் புத்தொழில் தொடர்பான பயிற்சிகள் மற்றும் ஆதரவு, UYEGP மற்றும் NEEDS திட்டப் பயனாளிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் முதலியன தங்குதடையின்றிக் கிடைத்திட ஏதுவாகவும், தொழில்முனைவு ஆர்வம் கொண்ட பெரும்பான்மையான நபர்களுக்குத் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் பயிற்சிகள் இணைய வழியில் எளிதில் கிடைக்கப்பெறும் விதமாகவும் ரூ.1 கோடி மதிப்பில் பயிற்சி திட்டங்கள் இணையமயமாக்கப்படும்.

18. தமிழ்நாட்டிலுள்ள புத்தொழில்களை ஆதரிக்கும் வகையில் தமிழ்நாடு புத்தாக்க ஆதார மானிய (டான்சீட்) திட்டத்தின் மூலம், 50 புத்தொழில்களுக்கு மானியமாக, தலா ரூ.10 இலட்சம் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் அதிக அளவில் புத்தாக்கங்களை உருவாக்குவதைக் கருத்தில் கொண்டு, அவற்றின் ஆரம்பக்கால நிதி தேவைகளான கருத்தாக்கம், ஆராய்ச்சி, முன்மாதிரி வடிவங்களை உருவாக்குதல், சந்தை நுழைவு போன்றவற்றை மேற்கொள்ளும் வகையில் தமிழ்நாடு புத்தாக்க ஆதார மானியத் திட்டத்தின் (டான்சீட்) மூலம், 50 புத்தொழில்களுக்கு, தலா ரூ.10 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

❖ ❖ ❖

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

செய்தி மற்றும் விளம்பரம்

மானியக் கோரிக்கை எண். 28

எழுதுபொருள் மற்றும் அச்சு

மானியக் கோரிக்கை எண். 30

செய்தி மற்றும் விளம்பரம்

1. **தாய்நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகிகள், மொழிப்போர்த் தியாகிகள், தலைசிறந்த இலக்கியப் படைப்பாளிகள், சமூகநீதிக்காகப் போராடியவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர், திராவிட இயக்க முன்னோடிகள் ஆகியோரைப் போற்றும் வகையில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் திருவுருவச்சிலைகள் நிறுவப்படும்.**

    1. தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டுத் தூக்குக் கயிற்றினை ஏற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் பாஞ்சாலங்குறிச்சி குறுநில மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்குச் சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

2. தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

3. இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றத் தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு கடலூரில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

4. மொழிப்போரில் தேக்குமரத் தேகத்தைத் தீக்கிரையாக்கி, இந்தித் திணிப்பினை எதிர்த்து முதன்முதலில் உயிர்த்தியாகம் செய்த மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூரில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

5. இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்கு சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

6. இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும், இந்தியத் திருநாட்டின் தேசிய கீதத்தை இயற்றியவருமான வங்கக்கவி ரவிந்திரநாத் தாகூர் அவர்களுக்கு சென்னை, இராணி மேரி கல்லூரியில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

7. திராவிட இயக்கத் தளகர்த்தர்களில் முன்னோடியாகவும், தலைசிறந்த இலக்கியவாதியும், முன்னாள் நிதி அமைச்சருமான, நடமாடும் பல்கலைக்கழகம் மறைந்த நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்கு சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகையில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

8. பெண் சமூக சீர்திருத்தவாதி, எழுத்தாளர், தேவதாசி ஒழிப்பு இயக்க மற்றும் திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடி பெண் சமூக சீர்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

9. இந்தியாவின் முதல் பெண் சட்டப்பேரவை உறுப்பினர், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர், தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தப் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு புதுக்கோட்டையில், திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

10. இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்களில் ஒருவரும், பல்வேறு இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், புதினங்கள் மற்றும் சிறுகதைகள் ஆகியவற்றைத் தமிழில் படைத்து, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றிய பன்முக ஆற்றல் கொண்ட தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

மேற்சொன்ன தலைவர்களுக்குத் திருவுருவச் சிலைகள் நிறுவ ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. இந்தியத் திருநாட்டின் 75ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்கள் மேம்படுத்துதல்.

75ஆவது சுதந்திர தின விழாவையொட்டி பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் ஒலி, ஒளிக்காட்சி அமைக்கவும், சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் குறும்படங்கள் தயாரிக்கவும், மக்களுக்குத் தொண்டாற்றிய தியாகிகளை நினைவுகூரும் வகையில் நினைவு மண்டபங்களைப் புதுப்பிக்கவும், பொதுமக்கள் அறிந்துகொள்ள உதவும் வகையில் புகைப்படக் கண்காட்சி மற்றும் ஒலி, ஒளிக்காட்சி போன்றவை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

3. சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள தியாகச்சீலர்களின் நினைவு மண்டபங்கள் மேம்படுத்தப்படும்.

சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் தியாகச்சீலர்களை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள காந்தி மண்டபம் மற்றும் அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் நினைவு மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் நினைவு மண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவு மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்த ரூ.3.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டத்தில் திருவுருவச்சிலையும், அரங்கமும் அமைக்கப்படும்.

வீரபாண்டிய கட்டபொம்மனை நயவஞ்சகமாகத் தூக்கிலிட்ட ஆங்கிலேயருக்குப் பாடம் புகட்டும் வகையில், தஞ்சையிலிருந்து திருப்பூர் மாவட்டம் தளிக்கு அனுப்பப்பட்ட தூதுவர்களின் தலைவன் ஆண்ட்ரூ கேதிஷ் என்ற ஆங்கிலேயரைத் தூக்கிலிட்ட சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களது நினைவைப்போற்றும் வகையிலும், இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையிலும் திருப்பூர் மாவட்டத்தில் அன்னாருக்குத் திருவுருவச்சிலை மற்றும் அரங்கம் அமைப்பதற்கு ரூ.2.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. பொள்ளாச்சியில் உள்ள நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் “சி.சுப்பிரமணியம் வளாகம்” என்று பெயர் சூட்டப்படும்.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் உருவாக முக்கியக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு ஆழியாறு அணையின் பூங்காவில் நினைவு மண்டபம் மற்றும் மார்பளவுச்சிலை அமைக்கும் பணிகள் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதனை பி.ஏ.பி. திட்டப்பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவு மண்டபமாக மாற்றி அமைக்கப்படும்.

மேலும், பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு, ஒன்றிய அரசின் மறைந்த முன்னாள் அமைச்சர் “சி.சுப்பிரமணியம் வளாகம்” என்று பெயர் சூட்டப்படும்.

இவ்வளாகத்தில், விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள் மற்றும் கருத்தரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திட ஏதுவாக ரூ.4 கோடி மதிப்பீட்டில் இரண்டு அடுக்குகள் கொண்ட புதிய அரங்கு கட்டமைக்கப்படும். இவ்வரங்கத்திற்கு “வி.கே.பழனிசாமி அரங்கம்” எனப் பெயர் சூட்டப்படும்.

✶ மேற்தளத்தில் அமைக்கப்படும் அரங்கத்திற்கு "பொள்ளாச்சி நா.மகாலிங்கம்" அவர்களின் பெயர் சூட்டப்படும்.

✶ இம்மண்டபத்தில் பரம்பிக்குளம் ஆழியாறுத் திட்டப்பணிகள் குறித்துப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்படும்.

இவ்வளாகத்தில்

1. வி.கே.பழனிசாமி கவுண்டர்,
   மேனாள் சட்டமன்ற உறுப்பினர்

2. முன்னாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம்,

3. தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம்,
   மேனாள் சட்டமன்ற உறுப்பினர்

ஆகியோரை பெருமைப்படுத்துகின்ற வகையில், அன்னார்களது முழுத்திருவுருவச் சிலைகள் அமைக்க ரூ.30 இலட்சம் என ஆக மொத்தம் ரூ.4.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இன்றைய இளைய தலைமுறையினர் நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணரும் பொருட்டு பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டத்தை அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் துவக்கிவைத்த நாளான 07.10.1961ஆம் நாளை "பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்ட தினம்" என அறிவித்து, ஆண்டுதோறும், இந்நாளில் அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

6. சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு சென்னையில் முழுத்திருவுருவச் சிலையும், நாமக்கல் நகரில் அரங்கமும் அமைக்கப்படும்.

தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூக நீதிக் கோட்பாடுகளுக்காகச் சட்டவடிவம் கொடுத்தவருமான, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களது சேவைகளை நினைவுகூரும் வகையில், அன்னாருக்கு சென்னையில் முழுத்திருவுருவச் சிலை அமைக்க ரூ.10 இலட்சம் மற்றும் நாமக்கல் நகரில் அன்னாரின் பெயரில் ஓர் அரங்கம் அமைக்க ரூ.2.50 கோடி என மொத்தம் ரூ.2.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. கீழ்பவானி பாசனத் திட்டம் உருவாகக் காரணமாக இருந்த உத்தமத் தியாகி திரு.ஈஸ்வரன் அவர்களுக்கு திருவுருவச்சிலை மற்றும் அரங்கம் அமைக்கப்படும்.

கொங்கு மண்டலத்தில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஏக்கர் பாசனம்பெறும் நீர்ப்பாசனத் திட்டமான கீழ்பவானி பாசனத் திட்டம் கொண்டுவர முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த ஈரோடு தொகுதியின் மேனாள் சட்டமன்ற உறுப்பினரும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று சுமார் பதினோறு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த உத்தமத் தியாகி ஐயா திரு.ஈஸ்வரன் அவர்களது நினைவைப் போற்றும் வகையிலும், இன்றைய தலைமுறையினரும் அவர் செயல்பாடுகளைத் தெரிந்துகொள்ளும் வகையிலும், ஈரோடு மாவட்டத்தில் திருவுருவச்சிலை மற்றும் அரங்கம் அமைப்பதற்கு ரூ.2.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

8. முன்னாள் அமைச்சரும், ஏழை, எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி மறைந்த தலைவர் திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் அரங்கம் அமைக்கப்படும்.

முன்னாள் அமைச்சரும், ஏழை, எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி மறைந்த தனிப்பெரும் தலைவரும், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்களின் அமைச்சரவையில் சிறப்புடன் பணியாற்றியவருமான திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டத்தில் திருவுருவச்சிலை மற்றும் அரங்கம் அமைப்பதற்கு ரூ.2.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. பத்திரிகையாளர்கள் நலன் காக்கும் வகையில் பத்திரிகையாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் முதன்முறையாக, உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

அதனடிப்படையில், உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செவ்வனே செயல்படுத்துவதோடு, நலவாரிய உதவித்தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் ‘பத்திரிகையாளர்கள் நல வாரியம்’ அமைக்கப்படும்.

10. பணிக்காலத்தில் இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி உயர்த்தப்படும்.

பத்திரிகைத்துறையில் பணியாற்றும் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழைதிருத்துவோர் பணிக்காலத்தில் இயற்கை எய்திட நேரிட்டால், அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தற்பொழுது குடும்ப உதவி நிதியாக அவர்கள் பணிபுரிந்த காலத்திற்கேற்ப ரூபாய் மூன்று இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் குடும்ப உதவி நிதி ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

11. பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சிகள்.

பத்திரிகையாளர்கள் தங்களின் துறை சார்ந்த தொழிற் தகுதியை மேம்படுத்திக்கொள்வதற்கும் திறன் மேம்பாட்டை அதிகரிக்கவும், மொழித்திறன் மற்றும் நவீனத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கவும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும்.

12. இளம் பத்திரிகையாளர்கள் உயர்கல்வி படிக்க அரசு நிதியுதவி.

இளம் பத்திரிகையாளர்கள் ஊடகத்துறையில் சிறந்து விளங்கவும், அதன் நுணுக்கங்களை முழுமையாக அறிந்துகொள்ளவும், அவர்களை ஊக்குவிக்கும் வகையில்,

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த இளம் பத்திரிகையாளர்களைத் தெரிவுசெய்து, இந்திய அளவில் புகழ்மிக்க இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மாஸ் கம்யூனிகேஷன்ஸ் (IIMC), ஏசியன் காலேஜ் ஆப் ஜர்னலிசம் (ACJ) போன்ற பத்திரிகை சார்ந்த கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி படிக்கவும், பயிற்சி பெறவும் நிதியுதவி வழங்கப்படும்.

13. சிறந்த இதழியலாளருக்கு "கலைஞர் எழுதுகோல் விருது".

இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றிவரும் ஒரு சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும் "கலைஞர் எழுதுகோல் விருது" மற்றும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

14. அரசு நிகழ்ச்சிகளில் எடுக்கப்பட்ட கறுப்பு வெள்ளை மற்றும் வண்ணப் புகைப்பட நெகடிவ் சுருள்கள் டிஜிட்டல் முறையில் பாதுகாக்கவும் தற்பொழுது எடுக்கப்படும் புகைப்படங்களை ஆவணப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் எடுக்கப்பட்டு, புகைப்படப் பிரிவில் பாதுகாக்கப்பட்டுவரும் கறுப்பு வெள்ளை மற்றும் வண்ணப் புகைப்பட நெகடிவ் சுருள்களை டிஜிட்டல் முறையில் மாற்றியமைத்திட ரூ.25 இலட்சமும், மேலும், தற்போது எடுக்கப்படும் புகைப்படங்களைப் பாதுகாப்பான முறையில் சேமித்து ஆவணப்படுத்துவதற்காக கணினி சர்வர் மற்றும்

அதற்கான துணை உபகரணங்கள் வாங்குவதற்கும் தேவையான பராமரிப்புப் பணிகளை ஒப்பந்த முறையில் எடுத்துக் கொள்வதற்கும் ரூ.25 இலட்சம் என மொத்தம் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

15. அரசின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களைப் பொதுமக்கள் அறிந்து பயன்பெற்றிடும் வகையில் சமூக ஊடகப் பிரிவு என்ற தனிப்பிரிவு உருவாக்கப்படும். அரசின் விளம்பரங்களுக்கு மின் சுவர்கள் உருவாக்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகள், சாதனைகள் (ம) நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றைக் கீச்சகம் (Twitter), படவரி (Instagram), முகநூல் (Facebook) மற்றும் வலையொளி (YouTube) ஆகிய சமூக ஊடகங்களின் வாயிலாக உடனுக்குடன் பொதுமக்களுக்குக் கொண்டு செல்வதற்கு ஏதுவாக, சமூக ஊடகப் பணிகளை மேற்கொள்வதற்குச் செய்தி மக்கள் தொடர்புத்துறையில், சமூக ஊடகப் பிரிவு என்ற தனிப்பிரிவு புதியதாக உருவாக்கப்படும்.

அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களைச் சென்றடையக் கூடிய வகையில், பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களான பேருந்து நிலையம், சந்தைகள் போன்றவற்றில் மின் சுவர்கள் உருவாக்கப்பட்டு ஒளிபரப்பப்படும்.

16. அரசு விளம்பரங்கள் வெளியிடும் பணிகள் அனைத்தும் இணையம் வழியாக மேற்கொள்ள மென்பொருள்

உருவாக்கவும், பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் வரைகலை விளம்பரங்களை வெளியிட செய்தித்துறைக்கு இணையம் வாயிலாகப் பதிவேற்றம் செய்தல், வெளியிடுதல், ஊடகங்களுக்கு அனுப்பும் பணிகள், கட்டணம் நேர்செய்யும் பணிகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் இணையம் வாயிலாக மேற்கொள்ளும் வகையில், மென்பொருள் (Software) உருவாக்க, பராமரிக்க, உபகரணங்கள் வாங்க, தொழில்நுட்ப அலுவலருக்கான ஊதியம் வழங்க ஆண்டொன்றுக்கு ரூ.9.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

17. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கூட்ட அரங்கம் அமைத்தல், பராமரிப்புப் பணிகள், பழுதடைந்த கட்டடங்கள் (ம) மின்கலங்கள் சீரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கூட்ட அரங்கம் அமைத்தல், பயிற்சிப் பிரிவுகளில் பராமரிப்புப் பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல், பெயர்ப்பலகை அமைத்தல், பழமையான பழுதடைந்த கட்டடங்களைச் சீரமைத்தல், மின்கலங்கள் சீரமைத்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.1.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

எழுதுபொருள் மற்றும் அச்சு

1. அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகக் கட்டடங்கள் புனரமைப்பு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பழுதடைந்துள்ள சேலம் அரசு கிளை அச்சகக் கட்டடம், அரசு மைய அச்சகத்தில் பிரதான அச்சு இயந்திரம் அமைந்துள்ள கட்டடம், திருச்சி அரசு கிளை அச்சகக் கட்டடம், மதுரை அரசு கிளை அச்சகக் கட்டடம் மற்றும் விருத்தாச்சலம் அரசு கிளை அச்சகக் கட்டடம் ஆகியவை ரூ.4.55 கோடி மதிப்பில் புனரமைக்கப்படும்.

2. சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு சுமையூர்தி ஒன்று கொள்முதல் செய்தல்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சென்னை, அரசு மைய அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், அரசிதழ்கள் மற்றும் நாட்காட்டிகள் ஆகியவற்றைச் சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு ரூ.25.80 இலட்சம் மதிப்பில் சுமையூர்தி ஒன்று கொள்முதல் செய்யப்படும்.

3. சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு ஒரு காகிதம் சிப்பம் கட்டும் இயந்திரம் (Paper Baling Machine) **கொள்முதல் செய்தல்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு மைய அச்சகத்தில் அச்சுப் பணிகளின்போது ஏற்படும் காகிதக் கழிவுகளை ஒழுங்குப்படுத்தச் சிப்பம் கட்டும் இயந்திரம் ஒன்று ரூ.5 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும். ❖

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை

மானியக் கோரிக்கை எண். 45

அறிவிப்பு எண். 01

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 75 இலட்சம் முதியோர்கள் வாழ்ந்து வருகின்றனர். 2017–2018ஆம் ஆண்டில் முதியோர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 11.2 விழுக்காடாக உள்ளது. தமிழ்நாட்டில் 2030ஆம் ஆண்டில் முதியோர்களின் எண்ணிக்கை 1.5 கோடியாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள முதியோர்கள் கண்ணியமான வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்யும் வகையில் “மாநில மூத்த குடிமக்கள் கொள்கை” உருவாக்கப்படும்.

அறிவிப்பு எண். 02

அரசியலமைப்பு சட்டத்தின்படி பெண்களுக்கான சம வாய்ப்பு, சம உரிமை, பொருளாதார மேம்பாடு, திறன் வளர்த்தல், பாதுகாப்பான வாழ்வுரிமை, கண்ணியம் காத்தல் ஆகியவற்றை உறுதி செய்திடவும், சமுதாயத்தில் மேலான நிலையை அடையவும், அரசியலில் வாய்ப்பு பெறவும், அவர்களை தயார்ப்படுத்துவதற்கும், உரிமைகளைப் பெற்றுத் தரவும், அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்கப்படுத்தவும், கண்காணிக்கவும் “தமிழ்நாடு மாநில புதிய மகளிர் கொள்கை” உருவாக்கப்படும்.

அறிவிப்பு எண். 03

தமிழ்நாட்டிலுள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், முதிர்கன்னிகள் உள்ளிட்டோர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளைக் களைந்து அவர்கள் வாழ்வதற்குரிய வசதிகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சுயஉதவிக் குழுக்கள் அமைப்பது, தொழிற்பயிற்சிகள் வழங்குதல் போன்ற தேவையான திட்டங்களை வகுத்து, அவர்கள் சமூகத்தில் பாதுகாப்புடன் சிறப்பான முறையில் வாழ்வதற்காக "கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்" அமைக்கப்படும்.

அறிவிப்பு எண். 04

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களிடையே பயிற்சி மற்றும் விழிப்புணர்வை வருடம் முழுவதும் ஏற்படுத்த வேண்டியுள்ளது. தற்பொழுது அதற்காக வேண்டிய பயிற்சி வழங்குவதற்கு, அடிப்படை வசதிகளைக் கட்டமைக்க வேண்டிய அவசியம் எழுகிறது.

எனவே, தாம்பரத்தில் செயல்பட்டு வரும் சேவை இல்லத்தில் உள்ள கட்டடங்களை புதுப்பிக்கவும் மற்றும் பயிற்சி அளித்திடத் தேவையான தளவாட சாமான்களை வாங்கிடவும் ரூ.1.18 கோடி செலவில் துறைக்கான பயிற்சி மையம் ஆரம்பிக்கப்படும்.

அறிவிப்பு எண். 05

தமிழ்நாடு அரசால் தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் செங்கல்பட்டு ஆகிய 6 புதிய மாவட்டங்களில் "சமூக நல அலுவலகங்கள்", "குழந்தைகள் பாதுகாப்பு அலகு" "இளைஞர் நீதிக் குழுமங்கள்" "குழந்தை நலக் குழுக்கள்" மற்றும் புதியதாக ஏற்படுத்தப்படும்.

அறிவிப்பு எண். 06

பெண் குழந்தைகளின் கல்வி நிலை உயர்ந்துள்ளதால் அவர்கள் திருமணம் செய்யும் வயதும் உயர்ந்துள்ளது. பல சூழ்நிலைகளால் திருமணங்கள் தாமதமாகவே நடைபெறுவதால் இரண்டு பெண் குழந்தைகள் பெற்றெடுக்கும் போது தாயாரின் வயது 35ஐ கடந்துவிடும் நிலை உள்ளது.

எனவே, திட்டத்தின் நோக்கங்களை முழுமையாக அடையவும், அதிக எண்ணிக்கையில் ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இத்திட்டத்தில் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தோடும், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளுள் ஒன்றான, பெண் குழந்தைகள் உள்ள பெற்றோரில் ஒருவர் 35 வயதுக்குள் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டவராக இருக்க வேண்டும் என்பதில் உள்ள அந்த வயது வரம்பு 35லிருந்து 40ஆக உயர்த்தப்படும்.

அறிவிப்பு எண். 07

சத்துணவுத் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் சத்துணவு மையங்களுள் தற்போது வரையில் 20,680 சத்துணவு மையங்களுக்குச் சமையலறைக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், சத்துணவுத் திட்டத்தில், 1,291 சத்துணவு மையங்களுக்கு ரூ.69.24 கோடி மதிப்பீட்டில் வைப்பறையுடன் கூடிய சமையலறைக் கட்டடங்கள் கட்டப்படும்.

அறிவிப்பு எண். 08

சத்துணவுத் திட்டத்தின்கீழ் செயல்படும் 1,000 சத்துணவு மையங்களில், மையம் ஒன்றுக்குத் தோராயமாக ரூ.8,000 வீதம், மொத்தம் ரூ.80 இலட்சம் செலவில் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்படும்.

அறிவிப்பு எண். 09

சத்துணவுத் திட்டத்தின்கீழ் 43,174 சத்துணவு மையங்களின் வாயிலாக 42.13 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இப்பயனாளிகளுக்குப் பள்ளி வளாகத்தினுள்ளேயே நாள்தோறும் பல்வேறு வகையிலான சூடான சுவைமிக்க கலவை சாதத்துடன் முட்டையும் வழங்கப்பட்டு வருகிறது.

கொரோனா நோய்த் தொற்றினால் பள்ளிகள் மூடப்பட்டிருந்த நிலையில் குழந்தைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் உலர் உணவுப் பொருட்களுடன் 10 முட்டைகளும் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வழங்கப்பட்டு

வருகின்றது. உலர் உணவுப் பொருட்கள் மற்றும் முட்டைகள் தொடர்ந்து வழங்கப்பட்டுவரினும், நீண்ட நாட்களாக மூடப்பட்டிருந்த பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும்போது குழந்தைகள் முழுமையான பயன் அடைந்துள்ளார்களா என்பதைக் கண்டறியும் பொருட்டு, பள்ளி திறக்கும்போது, உடல் நிறை குறியீட்டின்படி (BMI) மாணவ, மாணவியரின் ஊட்டச்சத்து நிலையை இரண்டு மாதங்களுக்குள் கண்டறிய ரூ.2 கோடி செலவினத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் 43,174 பள்ளிகளில் பயிலும் 42,13,617 சத்துணவு பயனாளிகளுக்கு உடல் நிறை குறியீட்டு எண் (Body Mass Index) கணக்கீடு செய்யப்படும். ஊட்டச்சத்துக் குறைபாடுகள் இருப்பின் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அறிவிப்பு எண். 10

ஊரகப் பகுதி, நகர்ப்புற பகுதி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தனியார் வாடகை கட்டடங்களில் செயல்படும் 7,228 அங்கன்வாடி மையங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாத வாடகைத் தொகையான ரூ.750, ரூ.3,000 மற்றும் ரூ.5,000 முறையே ரூ.1,000, ரூ.4,000 மற்றும் ரூ.6,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

அறிவிப்பு எண். 11

அங்கன்வாடி மையங்களில் பயன்பெறும் 2 வயதிற்குட்பட்ட இளம் சிறார் மற்றும் குழந்தைகளின் பெற்றோர் மற்றும் குழந்தைகளைப் பேணுவோருக்கு உணவூட்டும் முறைகள்

குறித்த சுயமதிப்பீட்டுத் தாள்கள் வழங்கும் திட்டமானது மீதமுள்ள 27 ஒருங்கிணைந்த மாவட்டங்களுக்கு ரூ.1.30 கோடி செலவில் விரிவுபடுத்தப்படும்.

அறிவிப்பு எண். 12

அங்கன்வாடி மையங்களில் முன் பருவ கல்வி பயில வருகை புரியும் 2 வயது முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்கும் திட்டம், எஞ்சியுள்ள 7 மாவட்டங்களான கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கரூர், நீலகிரி, சிவகங்கை, தூத்துக்குடி மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு ரூ.4.38 கோடி ஒதுக்கீட்டில் விரிவுபடுத்தப்படும்.

அறிவிப்பு எண். 13

மின்வசதியின்றி அரசு சொந்தக் கட்டடங்களில் செயல்படும் 7,757 அங்கன்வாடி மையங்களுக்கு மின் வசதி ஏற்படுத்தப்படும்.

அறிவிப்பு எண். 14

சென்னை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சிறுவர்களிடையே உள்ள போதைப் பழக்கம் அதிகரித்து காணப்படுவதால் அவர்களை அப்போதை பழக்கத்திலிருந்து மீட்டு, நன்மக்களாக சமுதாயத்தில் உயர்த்திடும் பொருட்டு, சென்னை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் போதை தடுப்பு மையங்கள் ரூ.76 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

அறிவிப்பு எண். 15

சமூகப் பாதுகாப்புத்துறையின்கீழ் மதுரையில் மண்டல அலுவலகம் தோற்றுவிக்கப்படும்.

அறிவிப்பு எண். 16

குழந்தைகளை நிறுவனங்களில் வைத்துப் பராமரிப்பதற்கு (Institutional care) மாற்றாக, குடும்பங்களில் வைத்துப் பராமரிப்பதை ஊக்குவிக்கும் வண்ணம், அவர்களுக்கு நம்முடைய அரசு உதவிபுரிந்து வருகிறது. ஆகவே, காத்திருப்பு பட்டியலில் உள்ள 1,148 குழந்தைகளுக்கும், மாதந்தோறும் ஒரு குழந்தைக்கு ரூ.2 ஆயிரம் வீதம், மூன்று ஆண்டுகளுக்கு நம்முடைய மாநில அரசின் முழு பங்களிப்புடன் நிதியுதவி வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அறிவிப்பு எண். 17

“யூனிசெப் (UNICEF) நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு மாநில குழந்தை பாதுகாப்பு பயிற்சி மையம் (Tamil Nadu State Child Protection Academy) சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் உருவாக்கப்படும்.

❖ ❖ ❖

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

கால்நடை பராமரிப்பு

மானியக் கோரிக்கை எண். 6

1. கால்நடைகளின் நலனைப் பாதுகாக்க அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ரூ.7.76 கோடி நிதி ஒதுக்கீட்டில் 7,760 கால்நடை சுகாதார முகாம்கள் நடத்தப்படும்.

கால்நடைகளின் நலன்களைப் பேணுவதற்காகவும், தரமான சிகிச்சை வழங்குவதற்காகவும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.7.76 கோடி நிதி ஒதுக்கீட்டில் 7,760 கால்நடை சுகாதார முகாம்கள் நடத்தப்படும். இந்த முகாம்களில் கால்நடைகளுக்குச் சிகிச்சை, குடற்புழு நீக்கம், தடுப்பூசி, ஆண்மை நீக்கம், செயற்கைமுறை கருவூட்டல், மலடு நீக்கச் சிகிச்சைகள், சிறிய மற்றும் பெரிய அறுவை சிகிச்சைகள், மகப்பேறியல் சிகிச்சைகள், அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வு ஆகியவை வழங்கப்படும்.

2. தொலைதூர கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு முதல் உதவி, செயற்கை முறை கருவூட்டல், தடுப்பூசி, குடற்புழு நீக்கம் ஆகிய சேவைகளை வழங்க ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில்

50 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படும்.

குக்கிராமங்களில் விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்கள் மற்றும் இழப்புகளைத் தடுக்கும் வகையிலும் அங்குள்ள கால்நடைகளுக்கு முதல் உதவி மற்றும் செயற்கை முறை கருவூட்டல், தடுப்பூசி, குடற்புழு நீக்கம் அளிக்கும் வகையிலும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் 50 புதிய கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கப்படும்.

3. கால்நடைகள் மற்றும் கோழி இனங்களின் உடல் நலத்தைப் பேணவும் மருத்துவச் சிகிச்சை வழங்கவும், சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளைக் கால்நடை வளர்ப்போர் அறிந்து கொள்ளவும் ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் 25 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழி இனங்களுக்குக் கால்நடை மருத்துவ சேவைகளை அளிக்கவும், அவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் நலன் கருதியும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் 25 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

4. ஏழ்மை நிலையில் உள்ள கணவனை இழந்த / கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற 38,800 பெண்களுக்கு ரூ.75.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் பயனாளி ஒருவருக்கு தலா 5 செம்மறியாடுகள் / வெள்ளாடுகள் வழங்கப்படும்.

ஏழ்மை நிலையிலுள்ள குறிப்பாக, கணவனை இழந்த / கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்களைத் தொழில் முனைவோர் ஆக்குவதற்காக முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.75.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் 38,800 பெண்களுக்கு தலா 5 செம்மறியாடு / வெள்ளாடுகள் 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

5. கால்நடை மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக 85 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு ரூ.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

மாநிலம் முழுவதும் உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், தரமான சிகிச்சையைக் கால்நடைகளுக்கு வழங்குவதற்காகவும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் நபார்டு வங்கி உதவியுடன், 85 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

6. அரியலூர், கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு ரூ.3.46 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

கால்நடைகளில் நோய் கண்டறிதல், நோய் கண்காணிப்பு, நோய்த்தடுப்பு பணிகளுக்காகவும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.3.46 கோடி நிதி ஒதுக்கீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் அரியலூர், கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

7. மாநிலத்தில் பசுந்தீவன இருப்பை அதிகரிப்பதற்காக ரூ.4.82 கோடி நிதி ஒதுக்கீட்டில் 18 தீவன வங்கிகள் நிறுவப்படும்.

மாநிலத்தில் கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகவும் கால்நடைகளின் நலனைப் பாதுகாப்பதற்காகவும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.4.82 கோடி நிதி ஒதுக்கீட்டில் 18 தீவன வங்கிகள் முன்னோடியாக நிறுவப்படும். இதற்காகத் தரிசு நிலங்களாக உள்ள பொது மேய்ச்சல் நிலங்கள் அறிவியல் ரீதியாக மேம்படுத்தப்பட்டு, பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு, சேமிக்கப்படும் பசுந்தீவனம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

8. நாட்டுக் கோழி உற்பத்தியினை அதிகரிக்க, நாட்டுக் கோழி இனப்பெருக்கப் பண்ணை மற்றும் கோழிக்குஞ்சு பொரிப்பகம் ரூ.9.42 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் நிறுவப்படும்.

அறிவியல் ரீதியிலான மற்றும் நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, நாட்டுக் கோழிக் குஞ்சுகள் உற்பத்தியினை அதிகரித்து, விவசாயிகளுக்கு வழங்குவதற்காக முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.9.42 கோடி நிதி ஒதுக்கீட்டில் நாட்டுக் கோழி இனப்பெருக்கப் பண்ணை மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பகம் திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் நிறுவப்படும்.

9. விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் வெறிநோயினை தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவதற்காக வெறிநோய் தடுப்பூசி முகாம்கள் மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரம் ரூ.77.36 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நடத்தப்படும்.

விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் கொடிய நோயான வெறிநோயைத் தடுப்பதற்காகவும் மனிதர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.77.36 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வெறிநோய் தடுப்பூசி முகாம்கள்

மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரம், அனைத்து மாவட்டங்களிலும் மாதம் 1 முகாம் வீதம் 12 மாதங்களுக்கு நடத்தப்படும்.

10. செல்லப்பிராணிகள் மருத்துவத்தில் உயர் ஆராய்ச்சி, நவீன நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகளையும், மருத்துவ கல்வியையும், சர்வதேச தரத்தில் வழங்கச் செல்லப்பிராணிகளுக்கான பன்னோக்கு கால்நடை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் (முதல் நிலை) சென்னை நந்தனத்தில் ரூ.7.99 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும்.

செல்லப்பிராணிகளுக்கான பன்னோக்கு கால்நடை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் (முதல் நிலை) சென்னை, நந்தனத்தில், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.7.99 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும். இம்மையத்தில் செல்லப்பிராணிகள் மருத்துவத்தில் உயர் ஆய்வு, நவீன நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகளைக் கையாள்வதுடன், சர்வதேச தரத்திற்கீடான சிகிச்சையியல் மருத்துவக் கல்வியினை அளித்து மருத்துவ நிபுணர்களுக்குத் தொடர் கல்வியினை அளிக்கவும் வழிவகை செய்யப்படும்.

11. தமிழகத்தின் வடமேற்கு மண்டலங்களில் நிலையான கால்நடை உற்பத்திக்காக தீவன விதை உற்பத்திப்பிரிவு ரூ.1.49 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.

கால்நடைகளின் உற்பத்தித்திறன் மற்றும் இனவிருத்தியை

மேம்படுத்த, பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்காக முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.1.49 கோடி நிதி ஒதுக்கீட்டில் வடமேற்கு மண்டலங்களில் பெருகிவரும் கால்நடைகளின் தீவனத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிய இனத்தீவனப் பயிர்களில் ஆராய்ச்சி மேற்கொள்ள 25 ஏக்கர் நிலப் பரப்பளவில் தீவன விதை உற்பத்திப் பிரிவு அமைக்கப்படும்.

12. தருமபுரி மாவட்டத்தில், திருச்சி கருப்பு செம்மறி ஆட்டின ஆராய்ச்சி நிலையம் ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை இருப்பிடமாகக் கொண்ட திருச்சி கருப்பு செம்மறி ஆடுகளை அழிவிலிருந்து பாதுகாக்கவும், மரபியல் திறனை உயர்த்தவும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருச்சி கருப்பு செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம், தருமபுரி மாவட்டத்தில் 200 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும்.

13. மாதவரம் கோழியினை ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாட்டின சிறுவிடை கோழியின வள மையம் ரூ.1.52 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.

அதிக நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டதாகவும், குறைந்த

பராமரிப்புச் செலவு கொண்டதாகவும் இருப்பதனால் சிறுவிடை கோழி இனங்களை அழிவிலிருந்து பாதுகாக்க, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.1.52 கோடி நிதி ஒதுக்கீட்டில் மாதவரம் கோழியின ஆராய்ச்சி நிலையத்தில் சிறுவிடை கோழியின வள மையம் நிறுவப்படும். இம்மையத்தின் மூலம் உயர்ரக நாட்டின சிறுவிடை கோழிகள் உற்பத்தி செய்யப்பட்டு கோழி வளர்ப்போருக்கு அளிக்கப்படும்.

14. தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தமிழகத்தின் பட்டணம் செம்மறி ஆட்டின வள மையம் ரூ.1.97 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.

தமிழகத்தில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் செம்மறி ஆட்டினங்களில் முக்கியத்துவம் வாய்ந்த பட்டணம் செம்மறி ஆட்டினத்தினை பாதுகாக்க, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.1.97 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பட்டணம் செம்மறியாட்டின வள மையம் நிறுவப்படும்.

15. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும்

கருவிமயமாக்கல் மையத்தின் வளாக வசதிகள் ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்படும்.

கால்நடைப் பண்ணையாளர்களுக்குத் தேவையான பண்ணைத் தளவாடங்களைக் குறைந்த விலையில் உற்பத்தி செய்து வழங்கும் நோக்குடன், இம்மையத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீட்டில், பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவி மயமாக்கல் மையத்தின் வளாக வசதிகள் மேம்படுத்தப்படும்.

16. தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்காக விலங்கு வழி பரவும் நோயறி ஆய்வகம் மற்றும் சுகாதாரத் தளம் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ரூ.1.61 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.

கால்நடைகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும், மனிதனுக்கு உயிர்ச் சேதம் விளைவிக்கும் முக்கியத்துவம் வாய்ந்த நோய்களைக் கண்டறிதலில் கால தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.1.61 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், “விலங்குவழி பரவும் நோயறி ஆய்வகம் மற்றும் சுதாதார தளம்” நிறுவப்படும்.

❖ ❖ ❖

காலநடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

மீன்வளம் மற்றும் மீனவர் நலன்
மானியக் கோரிக்கை எண். 7

1. **சென்னை கொளத்தூரின் முக்கிய தொழிலாக விளங்கும் வண்ணமீன் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் விதமாகவும், அதனைச் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில், கொளத்தூரில் சர்வதேச தரத்திலான வண்ணமீன் வர்த்தக மையம் ரூ.50 கோடி செலவில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.**

சென்னை கொளத்தூர் பகுதியில் வண்ண மீன்கள் உற்பத்தி, விற்பனை மற்றும் ஏற்றுமதி பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தொழிலை தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள சுமார் 2,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் வண்ண மீன் உற்பத்தியினை பெருக்கிடவும், வண்ண மீன்களை எளிதாகச் சந்தைப்படுத்திடவும் மற்றும் ஏற்றுமதி மூலம் தமிழ் நாட்டின் வண்ண மீன் வர்த்தகத்தை அதிகரித்திடவும் ரூ.50 கோடி செலவில் சென்னை கொளத்தூரில் வண்ண மீன் வர்த்தக மையம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன், சர்வதேச தரத்தில் நிறுவப்படும்.

2. பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு 2,000 வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரங்கள் ரூ.9.60 கோடி மானியத்தில் வழங்கப்படும்.

பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களின் மீன்பிடித் திறன் மற்றும் வருவாயினை அதிகரித்திட உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் அலகு ஒன்றுக்கு 40 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.48,000 மானியத்துடன் வழங்கப்படும். நடப்பாண்டில், ரூ.9.60 கோடி மானியத்தில் 2,000 பாரம்பரிய மீனவர்களுக்கு உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்படும்.

3. மீன்பிடி விசைப்படகுகளுக்கு மின்னணு மீன்பிடி அனுமதிச் சீட்டு வழங்கும் திட்டம் ரூ.30 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள 12 மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் முக்கிய மீன் இறங்கு தளங்களிலிருந்து மீன்பிடிக்கச் செல்லும் படகுகளுக்கு ரூ.30 இலட்சம் செலவில், இணையதளம் மூலம் மின்னணு மீன்பிடி அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும். இதனால், புயல் மற்றும் மோசமான வானிலை போன்ற இடர்பாடு காலங்களில் கடலில் உள்ள படகுகளின் நிலையினை நிகழ்நிலையில் அறிந்து தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்ள முடியும்.

4. தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் தூர்வாரி, ஆழப்படுத்திச் சீரமைக்கப்படும்.

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்திலிருந்து 240க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளன. தற்போது கடல் சிற்றம் மற்றும் காலநிலை மாற்றங்களால் அதிகப்படியான மண்படிவுகள் மற்றும் மணல் திட்டுகள் மீன்பிடி துறைமுகப் பகுதியில் ஏற்பட்டு படகுகளின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே படகுகளின் எளிதான போக்குவரத்திற்காக, மீன்பிடி துறைமுகப் பகுதி ரூ.5 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி, ஆழப்படுத்திச் சீரமைக்கப்படும்.

5. உள்நாட்டு மீன் உற்பத்தியினை பெருக்கிட 100 பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பதற்கு இடுபொருள் மானியமாக ரூ.30 இலட்சம் வழங்கப்படும்.

விவசாய நிலங்களில் மழைநீரைச் சேகரிக்கப் பண்ணைக்குட்டைகள் அமைக்கப்படுகிறது. பண்ணைக் குட்டைகளில் சேகரிக்கப்படும் நீரில் மீன் வளர்ப்பு மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் ஈட்டிடும் வகையில் 10 மாவட்டங்களில் 100 பயனாளிகளுக்கு பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு மேற்கொள்ள ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மீன்குஞ்சு மற்றும் மீன் தீவனம் போன்ற இடுபொருட்கள் 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

6. கடலூர் மாவட்டத்தில் விலைமதிப்புமிக்க நாட்டு இன விரால் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் விலைமதிப்பு மிக்க விரால் மீன் வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக,விரால் மீன்குஞ்சு பொரிப்பகம் மற்றும் விரால் மீன்குஞ்சு வளர்ப்பு மையம், ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாவட்டம் அகரத்தில் அமைக்கப்படும். இத்திட்டத்தினால் மதிப்பு வாய்ந்த விரால் மீன் உற்பத்தி அதிகரிப்பதற்கும் மற்றும் மீன் வளர்ப்போருக்குக் கூடுதல் வருமானம் கிடைத்திடவும் வழிவகை ஏற்படும்.

7. செங்கல்பட்டு மாவட்டம், கொக்கிலமேடு, கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னக்குப்பம் மற்றும் கடலூர் ஆளிக்குப்பம் ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.39 கோடி செலவில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில், கொக்கிலமேடு, கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னக்குப்பம் மற்றும் கடலூர் ஆளிக்குப்பம் ஆகிய மீனவ கிராமங்கள் கடலரிப்பினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. கடல் சீற்றத்தினால் இக்கிராமங்களில் உள்ள மீனவர்கள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். எனவே இக்கிராமங்களில் உள்ள சுமார் 2,800 மீனவ குடும்பங்கள் பயனடையும் வகையில், கொக்கிலமேடு, கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னக்குப்பம் மற்றும் கடலூர் ஆளிக்குப்பம் ஆகிய இடங்களில் ரூ.39 கோடி செலவில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.

8. தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு கிராமத்தில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் முகத்துவாரத்தினை நிலைப்படுத்தி மீன் இறங்குதளம் அமைக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு மீனவ கிராமத்தில் கருமேனி ஆறு கடலில் சேரும் இடத்தில் மண் மேடுகள் உருவாகி முகத்துவாரம் அடைபட்டு விடுவதால், இப்பகுதி மீனவ மக்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதில் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இப்பகுதி மீனவர்கள் கடலுக்குச் சென்று வர ஏற்படும் சிரமங்களை நீக்கவும், அவர்களின் வாழ்வாதாரம் மேம்படவும், மணல் மேடு உருவாகுவதைத் தடுத்திட நேர்கல் சுவர் அமைத்து முகத்துவாரத்தினை நிலைப்படுத்தி மீன் இறங்குதளம் அமைத்திட ரூ.45 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

9. தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரத்தில் உள்ள மீன் இறங்குதளம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரத்தில் உள்ள மீன் இறங்குதளம் சேதமடைந்துள்ளது. இதனால் மீனவர்கள் படகுகளை நிறுத்துவதற்கும், மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும் போதுமான வசதிகள் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். எனவே ரூ.10 கோடி செலவில் படகு அணையும் சுவர், அணுகு சாலை ஆகிய கூடுதல் வசதிகளுடன் மீன் இறங்குதளம் மேம்படுத்தப்படும்.

10. விழுப்புரம் மாவட்டம், எக்கியார்குப்பம் மீன் இறங்குதளம் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் அனுமந்தை கிராமத்தில் புதிய மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

விழுப்புரம் மாவட்டம், எக்கியார்குப்பத்தில் உள்ள மீனவர்கள் சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாள ஏலக்கூடம் இன்றி சிரமப்படுகின்றனர். மேலும் கடலரிப்பு ஏற்பட்டு கடல்நீர் மீனவ கிராமத்திற்கு உள்ளே புகும் நிலை உள்ளதால் மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்து உள்ளனர். எனவே எக்கியார்குப்பம் மீன் இறங்குதளத்தில் கூடுதலாக நேர்கல் சுவர்கள், மீன் ஏலக்கூடம், வலைப்பின்னும் கூடம் மற்றும் சாலை வசதிகளுடன் மேம்படுத்துதல் மற்றும் அனுமந்தை கிராமத்தில் புதிய மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இதனால் இங்குள்ள 3,200 மீனவ மக்கள் பயனடைவர்.

11. தூத்துக்குடி மாவட்டம், அமலி நகர், ஜீவா நகர், ஆலந்தலை, மீனவர் காலனி மற்றும் குலசேகரபட்டினம் ஆகிய கடலோர கிராமங்களில் மொத்தம் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம் அமலி நகர், ஜீவா நகர், ஆலந்தலை, மீனவர் காலனி மற்றும் குலசேகரபட்டினம் ஆகிய மீனவ கிராமங்களில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் தாங்கள் கொண்டு வரும் மீன்களைச் சுகாதாரமான முறையில் விற்பனை செய்வதற்கும், தங்களது படகுகளைப்

பாதுகாப்பாக நிறுத்துவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சாலை வசதிகளின்றி சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, இக்கிராமங்களைச் சார்ந்த சுமார் 6,200 மீனவ மக்கள் பயனடையும் வகையில், மீன்ஏலக்கூடம், வலைபின்னும் கூடம் மற்றும் கான்கிரீட் சாலை வசதிகளுடன் கூடிய மீன் இறங்கு தளங்கள் ரூ.12 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

12. செங்கல்பட்டு மாவட்டம், பழைய நடுக்குப்பம், புது நடுக்குப்பம், அங்காளம்மன் குப்பம், செம்மஞ்சேரிக் குப்பம் மற்றும் கரிகாட்டுக் குப்பம் ஆகிய மீனவ கிராமங்களில் மொத்தம் ரூ.57 கோடி செலவில் மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில், பழைய நடுக்குப்பம், புது நடுக்குப்பம், அங்காளம்மன்குப்பம், செம்மஞ்சேரிக் குப்பம் மற்றும் கரிகாட்டுக்குப்பம் ஆகிய மீனவ கிராமங்கள் கடலரிப்பினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. எனவே, மீனவர்களின் சிரமங்களைப் போக்கிடும் பொருட்டு, இக்கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் ரூ.57 கோடி செலவில் ஏற்படுத்தப்படும். இதனால் இங்குள்ள 4,500 மீனவ மக்கள் பயனடைவர்.

13. கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புத்தன்துறை, கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி ஆகிய கடலோர கிராமங்களில் ரூ.79 கோடி மதிப்பீட்டில்

நேர்கல் சுவர்களுடன் கூடிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புத்தன்துறை, கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி ஆகிய கடலோர மீனவ கிராமங்களில் பருவநிலை மாற்றங்களினால் கடலரிப்பு ஏற்பட்டு மீன்பிடிப் படகுகளை இயக்குவதில் பெரும் சிரமம் உள்ளது. இக்கிராமங்களை கடலரிப்பிலிருந்து காப்பதற்கும், சுமார் 750க்கும் மேற்பட்ட படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்து வதற்கும், நேர்கல் சுவர்களுடன் கூடிய மீன் இறங்குதளங்கள் ரூ.79 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் சுமார் 8,000 மீனவர்கள் பயன் பெறுவார்கள்.

14. மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசல் மற்றும் புதுக்குப்பம் மீனவ கிராமத்தில் மீன் இறங்கு தளம் மேம்படுத்துதல் மற்றும் நேர்கல் சுவர் அமைக்கும் பணிகள் ரூ.27 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசலில் மீன் இறங்குதளம், சாலை வசதிகள், படகு அணையும் தளம், கடலரிப்பு தடுப்புச் சுவர் போன்ற கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தப்படும். புதுக்குப்பம் மீனவ கிராமத்தில் பருவமழை காலங்களில் கடலரிப்பு ஏற்பட்டு, கடல் நீர் உட்புகுந்து விடுகிறது. எனவே திருமுல்லைவாசல் மற்றும் புதுக்குப்பம் கிராம மீனவர்கள் பயன்பெறும் சிறிய நேர்கல் சுவர்கள், வலைபின்னும் கூடம், அணுகு சாலைப் பணிகள் ரூ.27 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

15. தூத்துக்குடி மாவட்டம் பெரியதாழை மற்றும் வீரமாண்டியபட்டினம் ஆகிய கடலோர கிராமங்களில் ரூ.14 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழை மற்றும் வீரபாண்டியபட்டினம் ஆகிய மீனவ கிராமங்களில் பருவநிலை மாற்றம் காரணமாகக் கடல் அரிப்பு ஏற்பட்டு அங்கு அமைக்கப்பட்டிருந்த மீன் ஏலக்கூடங்கள், சாலைகள் உள்ளிட்ட கட்டுமானங்கள் சேதமடைந்துள்ளது. இப்பகுதி மீனவ மக்களைப் பாதுகாத்து அவர்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட நேர்கல் சுவர், மீன் ஏலக்கூடங்கள், கான்கிரீட் சாலைகள் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.14 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் சுமார் 11,000 மீனவ மக்கள் பயன் பெறுவர்.

16. கடலூர் மாவட்டத்தில், வெள்ளார் முகத்துவாரம் நிலைப்படுத்தும் பணி ரூ.30 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

கடலூர் மாவட்டத்தில், வெள்ளார் ஆற்று, முகத்துவாரத்தின் வடக்குக்கரையில் பரங்கிப்பேட்டை மீன் இறங்குதளமும், தென்கரையில் முடசலோடை மீன் இறங்குதளமும் அமைந்துள்ளன. இவ்விரு மீன்பிடி இறங்குதளங்களிலிருந்து சுமார் 15 கிராம மீனவர்கள் 160 விசைப்படகுகளிலும் 1,000 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளிலும் வெள்ளாறு முகத்துவாரத்தின் வழியாகத் தினமும் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று வருகின்றனர்.

ஆனால் இந்த முகத்துவாரம் அடிக்கடி தூர்ந்து போவதால் இங்குள்ள சுமார் 12,000 மீனவர்கள் மிகவும் பாதிப்பு அடைகின்றனர். எனவே மீனவர்களின் சிரமங்களை போக்கிடும் பொருட்டு நேர்கல் சுவர் அமைத்து முகத்துவாரத்திற்கு நிலைப்புத் தன்மை ஏற்படுத்திட ரூ.30 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

17. கடலூர் மாவட்டம் பெரியகுப்பம், புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டை ஆகிய கடலோர கிராமங்களில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர்களுடன் கூடிய புதிய மீன் இறங்குதளங்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

கடலூர் மாவட்டம் பெரியகுப்பம், புதுக்குப்பம் மற்றும் சி. புதுப்பேட்டைக் கிராமங்களில் மீன் இறங்குதள கட்டமைப்பு வசதிகள் இல்லாததால், மீனவர்கள் தங்களின் படகுகளைப் பாதுகாப்பான முறையில் நிறுத்த மிகவும் சிரமப்படுகின்றனர். இம்மீனவ கிராமங்களில் மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்குக் கடல் அரிப்பு தடுப்புச் சுவர்களுடன் கூடிய மீன் இறங்கு தளங்கள் ரூ.25 கோடி செலவில் அமைக்கப்படும். இதனால் இங்குள்ள சுமார் 4,000 மீனவ மக்கள் பயனடைவர்.

18. தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரம், சிப்பிகுளம் மற்றும் கீழவைப்பார் ஆகிய கிராமங்களில் உள்ள மீன் இறங்குதளங்கள் ரூ.38 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரம், சிப்பிகுளம், மற்றும் கீழவைப்பார் ஆகிய மீனவ கிராமங்களின் கடற்கரைப்

பகுதிகளில் பருவநிலை மாற்றம் காரணமாகக் கடல் அரிப்பு ஏற்பட்டு, மீனவர்கள் தங்களது மீன்பிடி படகுகளை நிறுத்துவதற்கு மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். மேலும் திரேஸ்புரம் கடற்கரைப் பகுதியில் மணல்மேடு ஏற்பட்டு, போதிய ஆழமின்றி காணப்படுவதால் இங்குள்ள மீன்பிடி படகுகள் மீன்பிடிக்கச் செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, இக்கிராமங்களில் படகு அணையும் சுவர்கள், கடற்கரைப் பகுதியை ஆழப்படுத்தும் பணிகள், மீன் ஏலக்கூடம் மற்றும் சாலை வசதிகள், போன்ற பணிகள் ரூ.38 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

19. செங்கல்பட்டு மாவட்டம், கோவளம் கிராமத்தில் கிழக்குப் பகுதியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம், கோவளம் கிராமத்தின் கிழக்குப் பகுதியில் 350 மீனவ குடும்பங்கள் மீன்பிடித் தொழிலையே நம்பி வசித்து வருகின்றனர். இக்கிராமத்திலுள்ள மீனவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான வலை பின்னும் கூடம், மீன் உலர்தளம், வடிகால் வசதிகள் மற்றும் உட்புற சாலைகள் இல்லாமல் மிகுந்த சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே மீனவர்களின் சிரமங்களை போக்கிடும் பொருட்டு இங்கு மீன் இறங்குதளம் அமைக்கும் பணி ரூ.3 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

20. கன்னியாகுமரி மாவட்டம், புத்தன்துறை கிராமத்தில் கடலரிப்பு தடுப்பு பணிக்காகக் கூடுதல் நேர்கல் சுவர் ரூ.22 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், புத்தன்துறை, மீனவ கிராமத்தில் பருவமழைக் காலங்களில் ஏற்படும் காலநிலை மாற்றத்தால் கடலரிப்பு ஏற்பட்டு கடற்கரை அருகிலுள்ள வீடுகள் சேதமடைவதுடன், நாட்டுப்படகுகள் கடலுக்குள் செல்ல முடியாத சூழலும் உள்ளது. இக்கிராமத்தை கடலரிப்பில் இருந்து காப்பதற்கும், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், நேர்கல் சுவர்களுடன் கூடிய மீன் இறங்குதளம் ரூ.22 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

21. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.2.40 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

i. ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணை மற்றும் திண்டுக்கல் மாவட்டம் பாலாறு பொறந்தலாறு அணை – மீன் விற்பனை மையம்.

ii. பழையார், அக்கரைப்பேட்டை, சோழியக்குடி, பூம்புகார், கடலூர்–2, மல்லிப்பட்டினம் மற்றும் குந்துக்கல் மீன் இறங்குதளம் – டீசல் விற்பனை நிலையங்கள்.

iii. கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியார் நீர்த்தேக்கம் – மீன் உணவகம்.

iv. திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் – வண்ணமீன் இனவிருத்தி மையம்.

v. சென்னை, சேத்துப்பட்டு பசுமை பூங்கா – மீன் காட்சியக பொருட்கள் விற்பனை மையம்.

22. தமிழ்நாட்டில் மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தமிழ்நாட்டின் 10 இடங்களில் மீனவ மகளிருக்கு முன்னுரிமை அளித்திடும் வகையில் மீன் விற்பனை அங்காடிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நவீன மீன் விற்பனை நிலையங்கள், அங்காடிகள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் மூலம் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களை விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாடு. மீன்வளர்ச்சி கழகத்தின் மீன் விற்பனைப் பணிகளில் மீனவ மகளிரை ஒருங்கிணைத்து அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 10 மீன் விற்பனை அங்காடிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

23. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு தூத்துக்குடியில் திட்ட அலுவலகம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் வானகிரியில் டீசல் விற்பனை நிலையம் ஆகிய வசதிகள் ரூ.85 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள படகுகளுக்கு மானிய விலை மண்ணெண்ணெய் மற்றும் வரி விலக்களிக்கப்பட்ட

எரியெண்ணெய் விற்பனை தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ளும் திட்ட அலுவலகமானது தற்போது வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. எனவே தூத்துக்குடி மீன்பிடி துறைமுக வளாகத்தில் திட்ட அலுவலகம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், வானகிரியில் மீன்பிடி படகு உரிமையாளர்களும், பொதுமக்களும் பயன்பெறும் சில்லறை டீசல் விற்பனை நிலையம் ஆகிய வசதிகள் ரூ.85 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

24. உள்நாட்டு மீன் வளர்ப்போரின் திறன் மேம்பாட்டிற்காக தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஒருங்கிணைந்த செயல் விளக்க மீன் பண்ணை வளாகம் ரூ.3.20 கோடி செலவில் அமைக்கப்படும்.

ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் நீரின் தரம், மீன் உணவு தயாரித்தல், உணவிடுதல் மற்றும் சுகாதார பராமரிப்பு போன்ற தொழில்நுட்பப் பயிற்சிகள் ஊரக இளைஞர்களுக்கும், சுயஉதவிக் குழுக்களுக்கும் வழங்கும் வகையில், ஒருங்கிணைந்த செயல் விளக்க மீன் பண்ணை வளாகம் தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

25. இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், மீன்வளத் தொழில் காப்பகம் மற்றும் தொழிற்சார் பயிற்சி இயக்குநரகத்தில்

கடலில் மீனவர் பாதுகாப்பிற்கான பயிற்சி வசதிகள் ரூ.1.20 கோடி செலவில் நிறுவப்படும்.

தமிழக கடற்பகுதியில் ஏறத்தாழ 42,500 பாரம்பரிய மீன்பிடிக்கலன்களும் 5,800 விசைப்படகுகளும் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இப்படகுகளின் ஓட்டுநர்களாகப் பணியாற்றும் மீனவர்களுக்கு கடல்சார் இயந்திரங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பில் போதுமான அளவு பயிற்சி அளித்து, நடுக்கடலில் இயந்திரம் பழுது ஏற்பட்டு மீனவர்கள் இன்னல்படும் சூழ்நிலைகளைத் தவிர்த்திடும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் அமைந்துள்ள மீன்வளத் தொழில் காப்பகம் மற்றும் தொழிற்சார் பயிற்சி இயக்ககத்தில் ரூ.3.20 கோடி செலவில் புதியதாக நவீன மீன்பிடி இயந்திரங்களுடன் கூடிய கடல்சார் இயந்திர பயிற்சி வசதிகள் ஏற்படுத்தப்படும்.

26. செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு மீன் வளர்ப்பு தொழில்காப்பகம் மற்றும் தொழில்சார் பயிற்சி இயக்குநரகத்தில், கொடுவா மீன்களுக்குத் தீவனம் மற்றும் சிறந்த பண்ணை மேலாண்மை முறைகள் ரூ.80 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

கொடுவா மீன்களுக்குக் குறைந்த செலவில் தீவனம் உருவாக்குதல் மற்றும் தகுந்த வளர்ப்பு முறையைக் கண்டறிவதன் மூலம், கடல் மீன் உற்பத்தியை 2 முதல் 5 விழுக்காடு வரை அதிகரிக்கும் வகையில், கொடுவா மீன்களுக்குத் தீவனம் தயாரிக்கும் முறைகளைப் பற்றியும் அதன் வளர்ப்பு முறைகளைப் பற்றியும், செய்முறை பயிற்சி

மற்றும் செயல் விளக்கம், முட்டுக்காடு மீன் வளர்ப்பு தொழில்காப்பகம் மற்றும் தொழிற்சார் பயிற்சி இயக்குநரகத்தில் ரூ.80 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

27. தமிழ்நாட்டின் மீன் உற்பத்தியை அதிகரிக்க ஒருங்கிணைந்த மீன் நோய் கண்காணிப்பு மேற்பார்வை மற்றும் மீன் குஞ்சுகளின் தர மதிப்பீட்டினை மேற்கொள்ளும் அமைப்பு ரூ.1.30 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

மீன்களில் தொடர் நோய் கண்காணிப்பு மிகவும் அவசியமாகிறது. மேலும். ஆரோக்கியமான மீன் குஞ்சுகளைத் தேர்வு செய்யும் முறைகள் மற்றும் சீரிய மேலாண்மை முறைகளைப் பற்றியும் மீன் உற்பத்தியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகும். இதற்கென, மீன் நோய் கண்காணிப்பு மேற்பார்வை மற்றும் மீன் குஞ்சுகளின் தரமதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான அமைப்பு ரூ.1.30 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

28. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், நீருயிரி வளர்ப்பு மற்றும் மீன்வளத்திற்கான மின்னணு விரிவாக்க மையம் [DIGITAL BLUE] ரூ.1.6 கோடி செலவில் நிறுவப்படும்.

சிறந்த மற்றும் புதுமையான மீன்வள தொழில்நுட்பங்களைப் பின்பற்றி மாநிலத்தின் மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏதுவாக, நீருயிரி வளர்ப்பு மற்றும் மீன்வளத்திற்கான

மின்னணு விரிவாக்க மையம் [DIGITAL BLUE], ரூ.1.6 கோடி செலவில், பொன்னேரி டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப்படும். இதன்மூலம், நீருயிரி வளர்ப்பு பண்ணையாளர்கள், மீனவர்கள் மற்றும் மீன்வளம் சார்ந்த தொழில்முனைவோர்கள் தொழில்நுட்ப ஆற்றல் பெற்று அறிவியல் ரீதியாக மீன் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் அவர்களின் வருமானம் உயரும்.

❖ ❖ ❖

போக்குவரத்துத்துறை

மானியக் கோரிக்கை எண். 48

இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்

மானியக் கோரிக்கை எண். 25

1. தமிழ்நாட்டில், புதியதாக BS-VI குறியீட்டிற்கு இணக்கமான 2,213 டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்தல்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான பேருந்துகளை நவீனமயமாக்கும் பொருட்டு, ஜெர்மனி வங்கி (KfW) நிதி உதவியுடன், வயது முதிர்ந்த பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, புதியதாக BS-VI குறியீட்டிற்கு இணக்கமான 2,213 டீசல் பேருந்துகள் மற்றும் காற்று மாசினை குறைப்பதற்காக 500 மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும்.

2. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் கூடுதல் வருவாய்க்காக பெட்ரோல் / டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான 10 இடங்களில் நிறுவுதல்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இயக்க வருவாயைத் தவிரக் கூடுதல் வருவாய்க்காக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான 10 இடங்களில் பெட்ரோல் / டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள்

அமைக்கப்படும். பொதுமக்களின் வரவேற்பினைப் பொறுத்து மேலும் பல இடங்களுக்கு நீட்டிக்கப்படும்.

3. அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் கட்டடங்களின் கூரையில் சூரியசக்தி மின்னாற்றல் தகடுகள் நிறுவுதல்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் உதவியுடன் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மின்சார செலவினை குறைப்பதற்காக, அவற்றிற்குச் சொந்தமான பணிமனைகள் மற்றும் அலுவலகங்கள் போன்ற 12 இடங்களின் மேற்கூரையில் சூரியசக்தி மின்னாற்றல் தகடுகள் நிறுவப்படும்.

4. அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலுள்ள காலிப் பணியிடங்கள் நிரப்புதல்.

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. பொதுமக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு வராமலேயே பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம் ஆகிய சேவைகளை பெறுதல்.

ஆதார் அட்டையை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி பொதுமக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு நேரில் வராமலேயே (contactless service) போக்குவரத்து சேவைகளான பழகுநர் உரிமம்,

ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம் ஆகிய சேவைகள் வழங்குவது நடைமுறைப்படுத்தப்படும்.

6. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு (பகுதி அலுவலகம்) சொந்தக் கட்டடம் கட்டுதல்.

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு (பகுதி அலுவலகம்) ரூ.3.02 கோடி செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

7. மதுரை மாவட்டம், மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் தேர்வு தளம் கட்டுதல்.

பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகளுடன் ஓட்டுநர் தேர்வு தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடம், மதுரை மாவட்டம், மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.5.28 கோடி செலவில் கட்டப்படும்.

8. கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்.

பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.4.98 கோடி செலவில் கட்டப்படும்.

9. போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் முதன்மைக்கணக்கு அலுவலர், கணக்கு அலுவலர், உதவி இயக்குநர் (உள் தணிக்கை) உதவி இயக்குநர் (புள்ளியியல்) மற்றும் அனைத்து சரக அலுவலகங்களில் பணிபுரியும் உதவி கணக்கு அலுவலர்கள் உட்தணிக்கைப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு மடிக்கணினி மற்றும் தரவு அட்டைகள் ரூ.17.92 இலட்சம் செலவில் வழங்குதல்.

போக்குவரத்து துறையில் உட்தணிக்கைப் பணிகளை மேற்கொண்டு வரும் தணிக்கை அலுவலர்கள் தணிக்கை பணியினை மேற்கொள்ளவும் வாகன் மற்றும் சாரதி இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவும் ஏதுவாக 16 மடிக்கணினிகள் அதற்கான இணைய இணைப்பு வழங்கும் தரவு அட்டைகள் (Data Card) ரூ.17.92 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

10. அனைத்து சரக அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் மோட்டார்

வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளுக்கு புதிய கணினிகள், அச்சுப்பொறிகள் ரூ.2.91 கோடி செலவில் வழங்குதல்.

போக்குவரத்துத் துறையில் கணினி பயன்படுத்தும் நிலையில் (பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர், காவலர் மற்றும் ஓட்டுநர் தவிர) 1,583 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஏற்கனவே 504 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து சோதனை சாவடிகளின் பணிகளும் ஆன்லைன் செய்ய இருப்பதாலும் தற்போதைய தொழில்நுட்பத்தினை கருத்தில் கொண்டும் மீதமுள்ள பணியாளர்களுக்கும் கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் ரூ.2.91 கோடி செலவில் வழங்கப்படும்.

❖ ❖ ❖

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

வனம்

மானியக் கோரிக்கை எண். 54

1. **வன விலங்குகளுக்கான அவசர சிகிச்சை மற்றும் மறுவாழ்வு தேவைகளுக்கென, மூன்று உயர் வனவிலங்கு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்கள் கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும்.**

வனங்களை விட்டு வெளியே வரும் காயமடைந்த வன விலங்குகளுக்கு அவசர மருத்துவச் சிகிச்சை அளிக்கவும், அவற்றினை மீட்டு, மறுவாழ்வு அளிக்கவும் வன விலங்குகளுக்கான அவசர சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்கள் கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும்.

இம்மையங்கள் மூலமாகக் கருத்தரங்குகள், விரிவுரைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவையும் நடத்தப்படும். இடம்பெயர்ந்து இன்னலுக்கு உள்ளாகும் வன உயிரினங்களை மீட்டு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு அளிக்கும் பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள் உரிய நெறிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும் இந்நிகழ்ச்சிகள் உதவிபுரியும்.

2. தற்போதுள்ள வனத்துறையின் தேவைகள் மற்றும் சிறந்த மேலாண்மைக்கென தமிழ்நாடு வனத்துறை நடவடிக்கைகள் மின்னணுமயமாக்கப்படும்.

வன மற்றும் வன உயிரின வாழ்விடங்களைத் திறம்பட மேலாண்மை செய்ய வலுவான புவிசார் தகவல் தரவினை உருவாக்கும் நோக்கில் தமிழ்நாடு வனத்துறையின் நடவடிக்கைகளை மின்னணு மயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் திட்ட உருவாக்கம், கண்காணிப்பு மற்றும் கூர்ந்தாய்வு போன்றவற்றிற்குத் தேவையான துல்லியமான, நம்பகமான மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய தகவல் தரவு கிடைக்க வழிவகை செய்யப்படும்.

இத்திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்படும் :

- வனத்துறைக்கான ஒருங்கிணைந்த புவிசார் தகவல் தரவு ஏற்படுத்தப்படும்.
- வனங்களை நிலையாக மேலாண்மை செய்ய இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை வன வளங்களை அளவீடு செய்தல், சரிபார்ப்பு அமைப்பினை உருவாக்குதல்.
- வனத்துறை நடவடிக்கைகளை முழுவதுமாக மின்னணு மயமாக்குதல்.

வன உயிரின வழித்தடங்கள், சூழல் தாக்க மண்டலங்கள், ஈரநிலங்கள், வனப்பகுதிகள் மற்றும் வன உயிரின வாழ்விடங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் மண்டலங்கள் போன்றவற்றினை வரையறுக்கவும் இது உதவிபுரியும்.

3. வன உயிரினங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கான நிவாரணத் தொகை உயர்த்தி வழங்கப்படும்.

மனித வன உயிரின மோதலைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இருப்பினும் மனித உயிரிழப்புகள், காயம் அடைதல் போன்ற சேதங்களைத் தவிர்க்க இயலாமல் போகிறது. எனவே, வனவிலங்கு தாக்கி உயிரிழந்தோர் குடும்பங்களுக்கும், நிரந்தர இயலாமை ஏற்படும் நேர்வுகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகையான ரூ.4 இலட்சம், ரூ.5 இலட்சமாக அதிகரித்து வழங்கப்படும். இந்த ஆண்டு வன விலங்குகளால் ஏற்பட்ட உயிரிழப்பு, காயம் மற்றும் பயிர்ச்சேதம் போன்றவற்றிற்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் இந்த ஆண்டு நிவாரணத் தொகைக்கென ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. தமிழ்நாட்டில் தென்மாவட்ட யானைகள் வாழ்விடங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அகத்தியர்மலை யானைகள் காப்பகம் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது நீலகிரி, கோயம்புத்தூர், ஆனைமலை மற்றும் திருவில்லிப்புத்தூரில் யானைகள் பாதுகாப்பிற்கென்று யானைகள் காப்பகம் ஏற்படுத்தப்பட்டு, யானைகள் திட்டம் மூலம் வாழ்விட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதைப் போல், ஆசிய யானைகள் அவற்றின் வாழ்விடங்களை மேலும் சிறப்பாக மேலாண்மை செய்யும் பொருட்டு கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டத்திலுள்ள யானைகளின் வன

வாழ்விடங்களை உள்ளடக்கி தமிழ்நாட்டின் ஐந்தாவது யானைகள் காப்பகமாக அகத்தியர்மலை யானைகள் காப்பகம் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் ஒருங்கிணைந்த யானைகள் வாழ்விட மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

5. தமிழ்நாட்டில் அழிந்து வரும் நிலையிலுள்ள மிக அரிதான கடற்பசு (Sea Cow) இனத்தையும் அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பொருட்டு, "கடற்பசு பாதுகாப்பகம்" மன்னார் வளைகுடா, பாக் விரிகுடா பகுதியில் ஏற்படுத்தப்படும்.

மன்னார் வளைகுடா மற்றும் பாக் கடற்பகுதியில் காணப்படும் கடற்பசு என்பது மிக அரிய வகை கடல் வாழ் பாலூட்டியாகும். கடல்மாசு மற்றும் கடற்புல் படுகைகள் அழிக்கப்படுவதால் இந்த இனம் அழிவைச் சந்தித்து வருகிறது. இதைப் பாதுகாக்கும் பொருட்டு, இந்தியாவில் முதன்முறையாக "கடற்பசு பாதுகாப்பகம்" இப்பகுதியில் சமூக பங்களிப்புடன் ஏற்படுத்தப்படும். தமிழ்நாட்டின் வளமையான கடல் வாழ் உயிர்ப்பன்மை பாதுகாப்பிற்கு இக்காப்பகம் உதவிபுரியும்.

6. வனத்துறையின் வனப்பாதுகாப்பு மற்றும் வனக் குற்றங்களை எளிதில் கண்டறிய மோப்பநாய் பிரிவுகள் ஒவ்வொரு வனமண்டலத்திற்கும் ஏற்படுத்தப்படும்.

வனப்பகுதியில் நடைபெறும் வனவிலங்கு வேட்டை, திருட்டு மரவெட்டு உள்ளிட்ட சட்ட விரோதமான செயல்களை உடனுக்குடன் கண்டறியவும், குற்றப் புலனாய்விற்கு

உதவியாகவும் சிறப்பு மோப்ப நாய் பிரிவு ஒன்று ஒவ்வொரு மண்டலத்திலும் ஏற்படுத்தப்படும். இதில் நமது காலநிலைக்குப் பழக்கப்பட்ட உள்ளூர் வகை நாய்கள் பயன்படுத்தப்படும். இதற்குரிய பயிற்சி, உரியத் தேசிய பயிற்சி நிறுவனம் மூலம் அளிக்கப்படும். வனப்பாதுகாப்பை வலுப்படுத்த இந்த மோப்ப நாய் பிரிவு (Sniffer Dog Squad) உதவிபுரியும்.

7. மாநிலத்தில் கடல் வாழ் விலங்கு வேட்டை தடுத்தல் மற்றும் கடத்தல் உள்ளிட்ட கடல் வாழ் வன உயிரினக் குற்றங்களுக்கென சிறப்பு கடல்சார் உயர் இலக்குப் படை (Marine Elite Force) ஒன்று உருவாக்கப்படும்.

கடல் வாழ் விலங்குகள் கொல்லப்படுதல் மற்றும் கடத்தல் தற்போது நன்கு திட்டமிடப்பட்டதாகவும், பல மாநிலங்களுக்கிடையே உள்ள சட்ட விரோத குழுக்கள் உதவியுடனும் நடைபெறுகிறது. இதைச் சரியாகக் கண்டறியவும், புலனாய்வு செய்யவும், சிறப்புப் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு கடல்சார் உயர் இலக்குப்படை (Marine Elite Force) ஒன்று ஏற்படுத்தப்படும்.

8. தமிழ்நாட்டின் வனப்பகுதிகளில் காணப்படும் அந்நிய களைத் தாவரங்களை அகற்றுவது மற்றும் அவ்வாறு அகற்றப்பட்ட வனப்பகுதிகளை நல்ல வளமைக்குக் கொண்டு வருவது தொடர்பாக இந்த அரசு தனிக் கொள்கை ஒன்றை வகுக்கும்.

மாநிலத்தின் பெரும்பாலான வனப்பகுதிகளில் உண்ணிச் செடி எனப்படும் லாண்டனா, சீமைக் கருவேல் உள்ளிட்ட அந்நிய களைத் தாவரங்கள் பெருமளவில் வளர்ந்து

இயற்கையான வனச் சூழலையும், வன வாழ்விடங்களின் வளமையையும் பாதிக்கின்றன. வன மேலாண்மையில் இது மிகப்பெரும் சவாலாக உள்ளது. இவ்வாறான அந்நிய களைத் தாவரங்களை அகற்றுவது தொடர்பாக வல்லுநர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்தி, இதுதொடர்பாக அரசின் தனிக் கொள்கை ஒன்று வெளியிடப்படும்.

9. வன ஆவணக் களஞ்சியம் மற்றும் வனத் தரவு மையம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

வனத்துறை வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆய்வுக் குறிப்பேடுகள், வன மேலாண்மை தொடர்பாக இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஆவணங்கள், ஆணைகள், கட்டுரைகள் அனைத்தையும் பாதுகாக்கவும், அடுத்த தலைமுறையினருக்கு எளிதில் கொண்டு செல்லவும், பொது மக்கள் வனத்துறை தொடர்பான தகவல்களை எளிதில் அறிந்து கொள்ளும் வகையிலும் “மாநில வன ஆவணக் களஞ்சியம் மற்றும் வனத் தரவு மையம்” ஒன்று ஏற்படுத்தப்படும்.

10. மாநில அளவில் திட்டமிடப்பட்ட வன உயிரினக் குற்றங்களைக் கண்டறிந்து தடுக்க வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.

நான்கு மண்டல அலகுகளுடன் கூடிய வன மற்றும் வன உயிரினக் கட்டுப்பாட்டுப் பிரிவு பின்வரும் குறிக்கோள்களுடன் ஏற்படுத்தப்படும்.

- வனம் மற்றும் வன உயிரினக் குற்றக் கட்டமைப்புகளின்

சமீபத்திய போக்குகள் மற்றும் தொடர்புடைய மாதிரிகளை அறிந்துகொள்ளுதல்.

- பெருகி வரும் திட்டமிடப்பட்ட குற்றங்கள் என அங்கீகரிக்கப்பட்ட வன உயிரினக் கடத்தலைக் கட்டுப்படுத்துதல்.
- வனம் மற்றும் வன உயிரின சட்டத்தினை திறம்பட நடைமுறைப்படுத்தத் தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் மற்றும் குற்ற நுண்ணறிவு வாயிலாக வனத்துறைக்கு அதிகாரம் அளித்தல்.
- வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள், வனக் குற்றவாளிகள் மற்றும் திட்டமிடப்பட்ட வன உயிரினக் கடத்தல்கள் போன்றவை குறித்த மாநில அளவிலான தகவல் தரவுகளை உருவாக்கிப் பராமரித்தல்.
- சுங்கத்துறை, வருவாய் புலனாய்வுத்துறை, மாநில காவல் துறை போன்ற புலனாய்வு அமைப்புகள் மற்றும் பிற மாநில வனத்துறைகளுடன் தொடர்பு கொண்டு தகவல் தொழில்நுட்ப நடைமுறைகள் மற்றும் வனம் மற்றும் வன உயிரினக் குற்றத்தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல்.

தற்போதைய காலச் சூழலுக்கேற்ப மாறிவரும் குற்றங்கள், குற்ற நடைமுறைகளுக்கேற்ப, சிறப்பாகச் செயலாற்ற இந்த பிரிவு உதவி புரியும்.

11. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரிந்து வரும் ஊழியர்களின் நீண்ட கால கோரிக்கையாக இருந்து வரும் நிலுவையிலுள்ள திருத்திய ஊதியம் இந்தாண்டு முதல் வழங்கப்படும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் தற்போது பணிபுரிந்து வரும் 212 பணியாளர்களுக்கு நீண்ட நாள் கோரிக்கையாக உள்ள திருத்தப்பட்ட ஊதியம் இந்த ஆண்டு முதல் அமல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கென இந்த நிதியாண்டில் ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

12. அரசுக்குச் சொந்தமான வன நிறுவனங்களில் அவற்றின் செயல்திறனை மேம்படுத்த விரிவான வணிக ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், அரசு ரப்பர் கழகம் மற்றும் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் ஆகிய அரசுக்குச் சொந்தமான வன நிறுவனங்களில் நவீனமயமாக்கும் பணிகள், தொழிற்முறைப் பயிற்சி அளித்தல், திறன் மேம்பாடு, வணிகத் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் தொடர்ந்து இலாபம் ஈட்டுவதற்குமான வழிவகைகள் குறித்து மதிப்புமிக்க முகமைகள் மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் உதவியுடன் விரிவான வணிக ஆய்வு மேற்கொள்ளப்படும்.

❖ ❖ ❖

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

மானியக் கோரிக்கை எண். 13

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

1. சென்னை (நகரம்) வடக்கு சரகத்திலுள்ள வில்லிவாக்கம், ஆவடி மற்றும் திருவொற்றியூர் மண்டலங்களில் உள்ள சில பகுதிகளைத் தனியாகச் சேர்த்து கொளத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மண்டல அலுவலகம் ஒன்று ஒரு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

2. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 குறித்து உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு ரூ.20 இலட்சம் செலவில் அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

3. பள்ளி மற்றும் கல்லூரிகளில் செயல்பட்டுவரும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் வாயிலாகத் தேசிய நுகர்வோர் நாள் மற்றும் உலக நுகர்வோர் உரிமை நாள் அனுசரித்து நுகர்வோர் விழிப்புணர்வு ஏற்படுத்திட ரூ.50 இலட்சம் செலவிடப்படும்.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத்துறை

1. காவல்துறையில் உள்ள நான்கு மண்டலங்களைப் போலக் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத்துறையில் உள்ள இரண்டு மண்டலங்களை நான்கு மண்டலங்களாக்கி திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் புதிய மண்டலங்கள் தோற்றுவிக்கப்படும்.

2. புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறையின் அலகுகள் ஏற்படுத்தப்படும்.

3. குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறைக்கு ரூ.53 இலட்சம் மதிப்பீட்டில் கணிப்பொறிகள், துணைக் கருவிகள் மற்றும் படியெடுக்கும் இயந்திரங்கள் புதிதாய் வாங்கப்படும்.

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக இன்றியமையாப் பொருட்களின் நகர்வினைக் கண்காணிக்க ஒருங்கிணைந்த நவீன கட்டுப்பாட்டு அறை ஒன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத் தலைமை அலுவலகத்தில் நிறுவப்படும்.

5. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் பணியாற்றும் காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு இன்றியமையாப் பண்டங்கள் சட்டம்

மற்றும் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டங்களைச் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்த ரூ.10 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

1. ஐந்து, திறந்தவெளி நெல் சேமிப்பு மையங்கள் தலா ரூ.2 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் அமைக்கப்படும்.

2. 140 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

3. 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்ட நிதியின் கீழ் ரூ.17 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

4. நவீன அரிசி ஆலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் நபார்டு வங்கி நிதி உதவியுடனும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியிலிருந்தும் ரூ.25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

5. தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், மயிலாடுதுறை மற்றும் தேனி மாவட்டங்களில் நவீன அரிசி ஆலைகள் தனியார் பங்களிப்புடன் நிறுவப்படும்.

6. நபார்டு வங்கி நிதியுதவி மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் நிதியினைக் கொண்டு

ரூ.20 கோடி செலவில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்குகளின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

7. புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல அலுவலகங்கள் தோற்றுவிக்கப்படும். இதற்காகச் சொந்த நிதியிலிருந்து ஆண்டுதோறும் ரூ.2.87 கோடி செலவிடப்படும்.

8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் கட்டுமானம் மற்றும் பொறியியல் பிரிவுகளில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

9. 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தலா ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் கட்டமைப்பு வசதி நவீனமயமாக்கப்படும்.

10. கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை இயற்கை சேதங்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் திறந்தவெளி நெல் சேமிப்பு மையங்களுக்கு மேற்கூரை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் அமைக்கப்படும்.

11. தானியங்கி வசதியுடன் கூடிய சைலோ மற்றும் நவீன வசதி அரிசி ஆலை நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.100 கோடி மதிப்பில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

12. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நவீன அரிசி ஆலை வளாகங்களில் ரூ.37.50 கோடி செலவில் சிமெண்ட் கான்கிரிட் சாலை வசதிகள் நபார்டு வங்கி நிதி உதவியுடன் அமைக்கப்படும்.

13. தானிய பரிசோதனைக் கூடம் நவீன பகுப்பாய் உபகரண வசதிகளுடன் ரூ.7.50 கோடி செலவில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

1. புதுக்கோட்டை மாவட்டத்தில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சேமிப்புக் கூடுதலாக 3,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட ஒரு கிட்டங்கி ரூ.5.75 கோடி மதிப்பீட்டில் சொந்த நிதியிலிருந்து நிறுவப்படும்.

2. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் காலியாக உள்ள 91 பணியிடங்கள் நிரப்பப்படும்.

❖ ❖ ❖

எரிசக்தித்துறை

மானியக் கோரிக்கை எண். 14

1. துரித நடவடிக்கை மூலம் விவசாயிகளுக்கு 1,00,000 புதிய மின் இணைப்புகள் (Agriculture Service Connections) வழங்குதல்.

மாநிலத்தின் விவசாய உற்பத்தியினை பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் 1,00,000 புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. தமிழகம் முழுவதும் 4,000 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் மற்றும் 2,000 மெகாவாட் திறனுள்ள மின்கலன் சேமிப்பு திட்டத்துடன் கூடிய "சூரிய மின் சக்தி பூங்கா" (Solar Power Park) தொழில்நுட்ப மற்றும் வர்த்தகரீதியான சாத்தியக்கூறின் அடிப்படையில் நிறுவப்படும்.

தமிழகத்தில் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் மின் தேவையினைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமானது தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறும் அபரிமிதமான சூரிய சக்தியினைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் "சூரிய மின் சக்தி பூங்கா" (Solar Power Park) மாவட்டம் தோறும், (மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகள் நீங்கலாக) நிறுவ உள்ளது.

தனியார் நிறுவனங்களிடம் இருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதைக் குறைத்து சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து, அவற்றின் மூலம் 10 ஆண்டுகளில் 20,000 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி மற்றும் 10,000 மெகாவாட் மின்கலன் சேமிப்பு செய்து மக்களுக்குத் தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதன் முதற்கட்டமாகத் தமிழகத்தில் சுமார் 4,000 மெகாவாட் திறனுள்ள சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் 2,000 மெகாவாட் திறனுள்ள மின்கலன் சேமிப்பு திட்டம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3. எண்ணூரில் 2,000 மெகாவாட் அளவிற்கு சிறிய அளவிலான திறன் கொண்ட (18 முதல் 20 மெகாவாட்) அதிக எண்ணிக்கையிலான எரிவாயு இயந்திர மின் திட்டங்கள் சாத்தியக்கூறின் அடிப்படையில் அமைத்தல்.

சென்னையில் அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் மரபுசாரா எரிசக்தி நிருவாகத்திற்கும் சிறு அளவிலான திறன் கொண்ட (18 முதல் 20 மெகாவாட்) அதிக எண்ணிக்கையிலான இயந்திரங்களைக் கொண்டு 2,000 மெகாவாட் அளவிற்கு எரிவாயு இயந்திர மின் திட்டத்தினை சாத்தியக் கூறின் அடிப்படையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த எரிவாயு திட்டத்திற்கு எண்ணூரில் அமைந்துள்ள இந்திய எண்ணெய்க் கழகத்தின் (M/s. IOCL) சேமிப்புக் கிடங்கிலிருந்து மறுவாயுவாக்கும் திரவ நிலை எரிவாயு (R_LNG) உபயோகப்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணூர் மாற்று அனல் மின் நிலையம் நிறுத்தி வைக்கப்பட்டதால் தேவையான நிலம் எண்ணூரில் கிடைக்கப் பெற்றுள்ளது. புதிய எரிவாயு இயந்திர நிலையத்தின் மின் உற்பத்தியானது மின் நுகர்வு தேவைக்கும், மரபு சாரா எரிசக்தி மின்சார நிருவாகத்திற்கும் பயன்படும். காற்றாலை மின்சாரமும் சூரிய சக்தி மின்சாரமும் கிடைக்கப்பெறாத தருணங்களில் மின் தேவையைச் சமநிலைப்படுத்த இந்த எரிவாயு இயந்திர மின் நிலையங்கள் மூலம் மின்சாரம் பெறப்படும்.

4. கன்னியாகுமரி மாவட்டம், கோதையாரில் 500 மெகாவாட் நீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டம் அமைத்தல்.

தமிழ்நாட்டின் உச்ச மின் தேவை தேவைப்படும் கால நேரங்களில் (அதிர்வெண் வரம்பு 50 Hz முதல் 50.5 Hz வரை) தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோதையாரில் 500 மெகாவாட் நீரேற்று புனல் மின் திட்டம் அமைக்கப்படும்.

5. தேனி மாவட்டம், மணலாற்றில் 500 மெகாவாட் நீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டம் அமைத்தல்.

தமிழ்நாட்டின் உச்ச மின் தேவை தேவைப்படும் கால நேரங்களில் (அதிர்வெண் வரம்பு 50 Hz முதல் 50.5 Hz வரை) தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், தேனி மாவட்டத்தில் உள்ள மணலாற்றில் 500 மெகாவாட் நீரேற்று புனல்மின் திட்டம் அமைக்கப்படும்.

6. பல்வேறு மாவட்டங்களில் 7,500 மெகாவாட் மொத்த நிறுவு திறன் கொண்ட 11 புதிய நீரேற்றுத் திட்டங்கள் சாத்தியக் கூறின் அடிப்படையில் அமைத்தல்.

7,500 மெகாவாட் மொத்த நிறுவு திறன் கொண்ட புதிய நீரேற்று புனல் மின் திட்டங்களை சாத்தியக்கூறின் அடிப்படையில் நிறுவுவதற்காகத் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 11 இடங்கள் அடையாளம் காணப்பட்டு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. ஆய்வின் அடிப்படையில் திட்டம், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்டச் செயலாக்கத்திற்குத் தேவையான அனைத்து ஒப்புதல்களும் பெறுவதற்காக ஆலோசகரை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அடையாளங் காணப்பட்டுள்ள இடங்கள் :

★ மேல் பவானி நீரேற்று புனல் மின் திட்டம் (1,000 மெகாவாட்)/நீலகிரி மாவட்டம்.

★ வெள்ளிமலை நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/கன்னியாகுமரி மாவட்டம்.

★ ஆழியாறு நீரேற்று புனல் மின் திட்டம் (1,000 மெகாவாட்)/ கோயம்புத்தூர் மாவட்டம்.

★ சாண்டிநல்லா நீரேற்று புனல் மின் திட்டம் (1,000 மெகாவாட்) நீலகிரி மாவட்டம்.

★ மேட்டூர் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்), சேலம் மாவட்டம்.

★ பாலார் – பொரந்தலார் நீரேற்று புனல் மின் திட்டம் (1,000 மெகாவாட்)/திண்டுக்கல் மாவட்டம்.

★ காரையார் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/ திருநெல்வேலி மாவட்டம்.

★ மஞ்சளார் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/ தேனி மாவட்டம்.

★ சாத்தார் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/ கன்னியாகுமரி மாவட்டம்.

★ சிகூர் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்) / நீலகிரி மாவட்டம்.

★ ஆத்தூர் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/ திண்டுக்கல் மாவட்டம்.

7. உடன்குடி விரிவாக்கத் திட்டம் நிலை–II (2x660 மெகாவாட்), உடன்குடி விரிவாக்கத் திட்டம் நிலை–III (2x660 மெகாவாட்) ஆகிய அனல் மின் உற்பத்தி திட்டங்களைச் செயலாக்கத்திற்கு கொண்டுவர மறு ஆய்வின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

2007–2008ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு வராத,

1. உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை–II (2x660 மெகாவாட்)

2. உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை–III (2x660 மெகாவாட்) ஆகியவற்றைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் உப்பூர் அனல் மின்திட்டத்தை உடன்குடிக்கு மாற்றவும் தமிழ்நாடு மின்னுற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தமிழக அரசிடம் விண்ணப்பித்துள்ளது. உப்பூர் மின்திட்டத்தை உடன்குடிக்குப் பதிலாக உப்பூரிலேயே மீண்டும் நிறுவ மறு ஆய்வு செய்யப்படும். மேற்சொன்ன மறு ஆய்வு முடிவின் அடிப்படையில், முடிவு எடுக்கப்படும்.

8. நீலகிரி மாவட்டம் சில்லஹல்லா புனல் மின் நீரேற்று உற்பத்தித் திட்டத்தை நிலை–I & II (2,000 மெகாவாட்) செயலாக்கத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

தமிழகத்தின் உச்ச மின் தேவையை நிறைவு செய்வதற்காக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் நீலகிரி மாவட்டத்தில் 2,000 மெகாவாட் சில்லஹல்லா நீரேற்று புனல் மின்திட்டம் உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்தை இரண்டு பகுதிகளாகச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், முதற்படியாக சில்லஹல்லா ஆற்றின் குறுக்கே அமைக்கப்படவுள்ள சில்லஹல்லா நீர்த்தேக்கத்தை மேல் நீர்த்தேக்கமாகவும், குந்தாபாலம் நீர்த்தேக்கத்திற்குக் கீழே அமைக்கப்படவிருக்கும்

நீர்த்தேக்கத்தைக் கீழ் நீர்த்தேக்கமாகவும் உபயோகப்படுத்தி சில்லஹல்லா நீரேற்று புனல் மின்திட்டம் நிலை-I & II (2,000 மெகாவாட்) செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்பந்தப்புள்ளி விரைவில் கோரப்பட்டு இத்திட்டத்தை விரைவாக முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

9. மகாநதி நிலக்கரி நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டு வழங்கப்படாத நிலக்கரிக்கு ஈடாக, பரிமாற்று முறையில் (Tolling of Coal) 1,000 மெகாவாட் வரை மின்சாரம் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய மொத்த உள்நாட்டு நிலக்கரி ஆண்டுக்கு 237.63 இலட்சம் டன்கள் ஆகும். அதாவது நாளொன்றுக்கு 17 ரேக்குகள். இது மகாநதி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து (MCL) நிலக்கரி எரிபொருள் வழங்கும் ஒப்பந்தம் மூலமாக 195.63 இலட்சம் டன்கள் மற்றும் சிங்கரேணி நிறுவனத்திடமிருந்து (SCCL) புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக 42 இலட்சம் டன்கள் ஆகும். கடந்த 5 ஆண்டுகளில் (2016–2021) மகாநதி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து நிலக்கரி 71 சதவிகிதம் மட்டும்தான் வழங்கப்பட்டுள்ளது. 29 சதவிகிதம் வழங்கப்படவில்லை.

எரிபொருள் விநியோக ஒப்பந்தம் மூலம் வழங்கப்படாத நிலக்கரியின் ஒரு பகுதியை, நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகில் உள்ள தற்சார்பு மின் உற்பத்தி நிலையங்களுக்கு (IPP) வழங்கி அதற்கு ஈடாக மின் கொள்முதல் செய்து கொள்ளும்

திட்டத்தின்படி, மகாநதி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து வழங்கப்படாத நிலக்கரியை அருகில் உள்ள தற்சார்பு மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கி அதற்கு ஈடாக 1,000 மெகாவாட் வரை நிலக்கரி பரிமாற்ற முறையில் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. மின் ஏல முறையில் இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திடமிருந்து எரிவாயுவைக் கொள்முதல் செய்து, தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கி, அதற்கு ஈடாக மின்சாரம் பெறும் திட்டம் (Tolling of Gas) செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

எரிவாயு பரிமாற்ற முறை என்பது, மின்சாரத்தை வாங்குபவர் மின் உற்பத்தியாளருக்கு எரிவாயுவினை பரிமாற்றி அதற்கு நிகரான மின்சாரத்தை மின் உற்பத்தியாளரிடமிருந்து பெறும் செயல் முறையாகும். உள்நாட்டில் கிடைக்கப் பெறும் எரிவாயுவின் அளவு குறையும் நிலையிலுள்ளது. ஆந்திர மாநிலம் காக்கி நாடாவிலுள்ள இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம், கிருஷ்ணா – கோதாவரி படுகைகளில் கிடைக்கும் 2,00,000 கனமீட்டர் இயற்கை எரிவாயுவை 3 முதல் 5 ஆண்டுகள் வரை ஒப்பந்த அடிப்படையில் விற்பனை செய்ய, ஒப்பந்தப் புள்ளிகளை மின் ஏல முறையில் கோரியுள்ளது.

இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் 2024ஆம் நிதி ஆண்டில் கிருஷ்ணா – கோதாவரி படுகையில் எரிவாயு உற்பத்தி உச்சநிலையை அடையும்

என்று மதிப்பிட்டுள்ளது. கிருஷ்ணா – கோதாவரி படுகையில் கிடைக்கும் எரிவாயுவை இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திடமிருந்து மின் ஏல முறையில் கொள்முதல் செய்து தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கி இதற்குப் பதிலாக 2,500 மெகாவாட் மின்சாரம் பெறும் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

11. மூன்று வருட காலத்திற்குக் குறைந்த விலையில் நடுத்தர கால ஒப்பந்தம் (Medium Term) மூலம் யூனிட் ஒன்று, ரூ.3.26க்கு 1,500 மெகாவாட் மின் கொள்முதல் செய்தல்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சேமிப்பை ஏற்படுத்தும் வகையில் குறைந்த விலையில் நடுத்தர கால ஒப்பந்தம் மூலம் யூனிட் ஒன்று, ரூ.3.26க்கு 1,500 மெகாவாட் மின்சார கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தடையில்லா மின்சாரம் வழங்க, மாலை நேர உச்ச மின் தேவைக்காகவும் மற்றும் கோடைக் கால முழுநேர மின் தேவையைப் பூர்த்தி செய்யவும் குறுகிய கால (Short Term) ஒப்பந்தம் மூலம் மின் கொள்முதல் செய்தல்.

மின் பற்றாக்குறையைச் சமாளித்துத் தொடர்ந்து, தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு 2021ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2022ஆம் ஆண்டு மே மாதம் வரை குறுகிய கால ஒப்பந்தம் மூலம் மின்சாரம் கொள்முதல் செய்வது அவசியமாகிறது.

குறுகிய கால மின் கொள்முதலுக்குக் குறைந்தது 85% நிலைய மின் சுமை காரணி (PLF) அளவிற்குக் கொள்முதல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளதால், நிதி இழப்பு ஏற்படாத வண்ணம் கீழ்க்கண்டவாறு குறுகிய கால மின் கொள்முதல் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

வ. எண்	மாதம்	நேரம்	மெகாவாட்
1	அக்டோபர் 2021	மாலை நேரம் மட்டும்	1200
		நாள் முழுவதும்	500
2	நவம்பர் 2021	மாலை நேரம் மட்டும்	600
3	டிசம்பர் 2021	மாலை நேரம் மட்டும்	900
4	ஜனவரி 2022	மாலை நேரம் மட்டும்	1100
5	பிப்ரவரி 2022	மாலை நேரம் மட்டும்	2400
6	மார்ச் 2022	மாலை நேரம் மட்டும்	2400
		நாள் முழுவதும்	1200
7	ஏப்ரல் 2022	மாலை நேரம் மட்டும்	2200
		நாள் முழுவதும்	1500
8	மே 2022	மாலை நேரம் மட்டும்	2200
		நாள் முழுவதும்	900

மேற்கண்ட கொள்முதல் மின்சாரம் போகப் பற்றாக்குறை வரும் பட்சத்தில், நடைமுறை சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் வெளிச்சந்தையில் தேவைக்குக் கொள்முதல் செய்யும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது.

13. காற்றாலை மின் உற்பத்தி காலங்களில் உபரியாக உள்ள மின்சாரத்தைத் தேவைப்படும் மாநிலங்களுக்கு வழங்கி கோடைக் காலங்களில் திரும்பப் பெறும் மின் பரிமாற்ற முறையை (Swapping of Power) சீரிய முறையில் செயல்படுத்துதல்.

மின் பரிமாற்ற ஏற்பாடு என்பது இரு மாநில அரசு மின் நிறுவனங்களுக்கிடையில் பணப் பரிவர்த்தனைகள் இல்லாமல் மின்சாரப் பரிமாற்றம் மட்டுமே நடைபெறுவதாகும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின் பரிமாற்ற ஏற்பாட்டின் மூலம் பருவக்காற்று காலத்தில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) காற்றாலை மூலம் பெறப்படும் உபரி மின்சாரத்தைப் பிற மாநில அரசு மின் நிறுவனங்களுக்கு வழங்கி அதனை அடுத்த கோடைக் காலத்தில் (பிப்ரவரி முதல் மே வரை) திரும்பப் பெறும். கூடுதலாகக் கோடை மாதங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மின் பரிமாற்ற ஏற்பாட்டின் மூலம் பிற மாநில அரசு மின் நிறுவனங்களிடமிருந்து மின்சாரம் பெற்று அதனை வரும் பருவக்காற்றின் காலத்தில் திரும்ப வழங்கும்.

தற்சமயம், பருவக்காற்றின் காலத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் பரிமாற்ற மின் ஏற்பாடு வாயிலாக உபரி மின்சாரத்தை வழங்குகிறது. தற்போது இந்த பரிமாற்ற முறையில் 100 சதவீதம் பெறப்படும் மின்சாரத்திற்கு 105 சதவீதம் வரை மின்சாரம் திரும்ப அளிக்கப்பட்டு வருகிறது.

இதில் சேமிப்பு ஏற்படுத்தும் விதத்திலும், வலுப்படுத்தும் விதத்திலும் 2021ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுக்

காலத்திற்கு 1,000 மெகாவாட் அளவிற்கு இதர மாநில அரசு மின் நிறுவனங்களுடன் கலந்து பேசி திரும்ப அளிக்கும் மின்சாரத்தை 100 சதவீதத்திற்கும் குறைவாகத் திருப்பி செலுத்தும் வகையில் சேமிப்புத் தொகையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் பற்றாக்குறை காலங்களில் குறுகியகால கொள்முதலைக் குறைக்க முடியும்.

14. மின் தடை மற்றும் மின் வழித்தடங்களில் ஏற்படும் தொழில்நுட்ப மற்றும் இழப்புகளைக் கண்டறியும் நோக்குடன் ரூ.1,270 கோடி மதிப்பீட்டில் மின்மாற்றிகளில் (Transformers) சிறப்பு மின் அளவி (Smart Meter) பொருத்துதல்.

தமிழ்நாட்டில் தற்சமயம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினரால் 3,63,200 மின்மாற்றிகள் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. இதன் திறன் 16 KVA முதல் 500 KVA உள்ளது. இந்த மின்மாற்றிகள் நகரங்களின் நெருக்கடியான தெருக்களிலிருந்து மலைப்பிரதேசம் வரை அனைத்து இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய மின்மாற்றிகள் பழுதாகும் சமயங்களில் மின்தடை ஏற்படுகிறது.

இதனைத் தவிர்க்கும் பொருட்டு, அனைத்து மின்மாற்றிகளிலும் அதி நவீன வசதிகளுடன் கூடிய மின்மாற்றி கண்காணிப்பு அமைப்புடன் (Transformer Monitoring System) கூடிய மின் அளவி பொருத்தப்பட உள்ளது. இந்த மின் அளவி மூலம், அந்தந்த மின்மாற்றியில் ஏற்படும் மின்னழுத்த

ஏற்றத் தாழ்வுகள், வெப்பம், எண்ணெய் அளவு, செல்லும் மின்சாரத்தின் அளவு, அதிர்வெண் மற்றும் மொத்த மின் தடை ஆகியன பதிவு செய்யப்பட்டு ஸ்கேடா (SCADA) மூலம் அந்தந்த பிரிவு அலுவலக கணினியுடன் இணைக்கப்படும். இதனால் அந்த மின்மாற்றியின் நிலையினை எந்த நொடியிலும் துறை சார்ந்த அலுவலரால் கண்காணிக்க முடியும். இவ்வாறு ஒவ்வொரு மின்மாற்றியின் சிறப்பு மீட்டரும் ஸ்கேடா (SCADA) மூலம் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைக்கப்பட்டு அனைத்து மின்மாற்றிகளையும் கணினித் திரையில் பார்த்துத் தகுந்த நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்படும்.

இந்த அமைப்பானது மின் வழித்தடங்களில் ஏற்படும் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளைத் துல்லியமாக கணக்கிடவும், மின் திருட்டு பகுதிகளைக் கண்டறியவும் ஏதுவாக இருக்கும், மேலும், மின்மாற்றியில் ஏற்படும் பழுதுகள் வெகுவாக குறைக்கப்படும். இவ்வாறு பழுது குறைவதால், தங்குதடையில்லா மின்சாரம் பொதுமக்களுக்குக் கிடைக்க ஏதுவாகும். இதன்மூலம் வருவாய் கூடுவதுடன், மின் ஊழியர் சந்திக்கும் மின் விபத்துகளையும் தவிர்க்க இயலும். மின் நுகர்வோருக்கு நாளின் 24 மணி நேரமும் எவ்வித தங்கு தடையின்றி தடையில்லா மின்சாரம் வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டே இத்திட்டத்தினை அமல்படுத்தத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான திட்ட மதிப்பீடு சுமார் ரூ.1,270 கோடியாகும்.

15. மின் நுகர்வோர்களுக்கு மின் பயன்பாட்டினை கண்காணிக்கவும், கணக்கீட்டாளர் இன்றி இணைய

வசதி மூலமே மின் நுகர்வைக் கணக்கிடவும் மின் இணைப்புகளில் வினைத்திறன் மிகு மின் அளவி (Smart Meter) பொருத்துதல்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் உள்ள அனைத்து தாழ்வழுத்த மின் இணைப்புகளிலும் தற்சமயம் சாதாரண மின் அளவிகளே பொருத்தப்பட்டுள்ளன. மின் நுகர்வோர் நலத்தினைக் கருத்திற் கொண்டும், அவர்களது குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் அனைத்து மின் இணைப்புகளிலும் தற்போது உள்ள மின் அளவிகளை வினைத்திறன் மிகு மின் அளவிகளாக மாற்றம் செய்யப்படும்.

இந்த வினைத்திறன் மிகு மின் அளவி பொருத்துவதினால் மின் நுகர்வோர் அனைவரும் தமது மின் பயன்பாட்டினை எந்நேரமும் கண்காணிக்க முடியும். இதனால் மின் நுகர்வோர் (Postpaid & Prepaid) முன் கூட்டியே தமக்கான மின் கட்டணத்தினை செலுத்த இயலும். உபயோகித்த மின்சாரம் முழுவதுமே கணக்கிடப்படுவதால், ஆட்களின் தலையீட்டால் ஏற்படும் வருவாய் இழப்பு இந்த வினைத்திறன் மிகு மின் அளவி அமைப்பின் மூலம் தவிர்க்கப்படுவதுடன் கணக்கீடு குறித்த புகார்களும் மின் நுகர்வோரிடம் இருந்து வருவது தவிர்க்கப்படும்.

மின் நுகர்வோர்கள் தாங்கள் உபயோகித்த மின்சாரத்தின் அளவினை தங்களது அலைபேசியின் மூலமே எந்நேரமும் பார்க்க இயலும். மேலும், மின் பயனீட்டாளர்கள் தமது மின் கட்டணத்தினை மின் இணைப்பு துண்டிப்பு தேதிக்கு முன்பே

மீள்நிரப்பு (Recharge) முறை மூலம் செலுத்திவிட்டால், மின் இணைப்பு துண்டிப்பினை முற்றிலுமாக தவிர்க்கலாம்.

16. ரூ.9 கோடி மதிப்பீட்டில் வடசென்னை அனல் மின் நிலையம் – I ல் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

வடசென்னை அனல் மின் நிலையம் – I அலகு–2 மற்றும் அலகு–3 ஆகியவற்றில் பகிர்ந்தளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்பை (Distributed Control System), ஒவ்வொரு அலகிற்கும் சுமார் ரூ.9 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

17. ரூ.50 கோடி மதிப்பீட்டில் வடசென்னை அனல் மின் நிலையம்–II ல் உலர் சாம்பலை வெளியேற்றும் அமைப்பு அமைத்தல்.

வடசென்னை அனல்மின் நிலையம்–II ல் அலகு–1 மற்றும் –2இல் உலர்ந்த சாம்பல் வெளியேற்றத்தை மேம்படுத்த உலர் சாம்பலை அழுத்தி எடுத்துச்செல்லும் அமைப்பை (Pressurized Dense Fly Ash Conveying System), சுமார் ரூ.50 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

18. ரூ.1,979 கோடி மதிப்பீட்டில் 159 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவுதல்.

தடையற்ற மின்சாரம் வழங்கும் நோக்குடன் நான்கு 230 கி.வோ துணை மின் நிலையங்கள், ஐம்பத்து மூன்று 110 கி.வோ துணை மின் நிலையங்கள் மற்றும் நூற்று இரண்டு 33 கி.வோ துணை மின் நிலையங்கள்

என மொத்தம் 159 புதிய துணை மின் நிலையங்கள் ரூ.1, 979 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

19. ரூ.125 கோடி மதிப்பீட்டில் 110 கி.வோ துணைமின் நிலையங்கள் தரம் உயர்த்துதல்.

தரமான தடையற்ற மின் சேவையை வழங்கும் நோக்குடன் பன்னிரண்டு 33 கி.வோ துணை மின் நிலையங்கள் 110 கி.வோ துணை மின் நிலையங்களாக ரூ.125 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்த துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

20. ரூ.679 கோடி மதிப்பீட்டில் புதிய மின்மாற்றிகள் (Transformers) மற்றும் திறன் மேம்படுத்துதல்.

மின்மாற்றிகளின் கூடுதல் மின்சுமையைத் தவிர்ப்பதற்காகவும் மற்றும் கூடுதல் மின் தேவையை பூர்த்தி செய்வதற்காகவும், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், கூடுதல் மின்மாற்றிகள் மற்றும் மின்மாற்றிகளின் திறன் மேம்படுத்துதல் ஆகியவை சுமார் ரூ.679 கோடி செலவில் அடுத்த மூன்று ஆண்டுகளில் அமைக்கப்படும்.

21. ரூ.5,050 கோடி மதிப்பீட்டில் 900 (Feeders) உயர் பகிர்மான அமைப்பினை மின்னூட்டிகளில் மின்னழுத்த நிறுவுதல்.

உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த விகிதாச்சாரங்களை குறைத்து, மின்னழுத்தத்தினை மேம்படுத்தி, நம்பகத்தன்மையை ஏற்படுத்திடவும், ஒட்டு மொத்த தொழிற்நுட்ப மற்றும் வணிக இழப்புகளைக் குறைப்பதற்காகவும்

சுமார் ரூ.5,050 கோடி திட்ட மதிப்பீட்டில், 900 மின்னூட்டிகளில் உயரழுத்த மின் பகிர்மான அமைப்பு (HVDS) நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக ஆண்டிற்கு 300 மின்னூட்டிகள் வீதம், அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் மாநிலம் முழுவதும் படிப்படியாக மாற்றப்படும்.

22. சென்னை மாநகரம் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகர பகுதிகளில் மேல்நிலை மின் பாதைகளை புதை வடங்களாக (Underground Cable) மாற்றுதல்.

சென்னை மாநகரம் மற்றும் விரிவுப்படுத்தப்பட்ட சென்னை மாநகராட்சிக்குப் பகுதிகளிலும் மின் மாற்றி அனைத்து புதை வடங்களாக உட்பட்ட பாதைகளை, செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும்.

23. மாவட்டங்கள் தோறும் மின் பகிர்மான வட்டம் அமையும் வகையில் 3 புதிய மண்டலங்கள் மற்றும் 3 மின் பகிர்மான வட்டங்களை உருவாக்கும் சீரமைப்பு நடவடிக்கையைத் தொடங்குதல்.

தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில், மின் பகிர்மானம் 9 மண்டலங்களையும், 44 மின் பகிர்மான வட்டங்களையும் 176 கோட்டங்களையும், 644 உப கோட்டங்களையும் மற்றும் 2,855 பிரிவு அலுவலகங்களையும் உள்ளடக்கி உள்ளது. சில மாவட்டங்கள் பல மின் பகிர்மான வட்டங்களின் கீழ் வருவதால் நிருவாக சிரமத்திற்கு வழிவகுக்கிறது, மேலும், மின் இணைப்புகள் பிரிவு அலுவலகங்களுக்கிடையே சமமாகப்

பிரிக்கப்படவில்லை. அதாவது, குறைந்தபட்ச மின் இணைப்பு 678 முதல் அதிகபட்ச மின் இணைப்பு 51,689 வரை கையாளும் பிரிவுகள் உள்ளன.

நிருவாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும், அன்றாட நடவடிக்கைகளில்வேலையைச்சமநிலைப்படுத்துவதற்காகவும், பகிர்மான நிருவாக அமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும். இதன்படி, ஒவ்வொரு மாவட்டமும் குறைந்தது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களை முழுமையாகக் கொண்டிருத்தல், அரசுத் திட்டங்களை எந்த தடையும் இல்லாமல் மாவட்ட வாரியாக செயல்படுத்துவதற்குச் சாத்தியமாக்கும்.

மேற்படி மறுசீரமைப்பு ஏற்பாட்டின் படி மண்டலங்களின் எண்ணிக்கை, தற்போதுள்ள 9 லிருந்து 12 ஆகவும், பகிர்மான வட்டங்கள் தற்போதுள்ள 44 லிருந்து 47 ஆகவும் தேவைக்கேற்ப கோட்டங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்களை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

24. தகவல் தொழில்நுட்பம் மூலம் எளிதாக வணிகம் செய்ய புதிய முயற்சிகள்

விண்ணப்பிக்கும் செயல்முறையை எளிதாக்கும் பொருட்டு மற்றும் நுகர்வோரின் நலனுக்காகவும்,

i. விவசாய மின் இணைப்புகளுக்கான விண்ணப்பங்கள் இணையதள வழி மூலம் செயல்முறைப்படுத்தப்படும்.

ii. மின் கட்டண மாற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் இணையதள வழி மூலம் பரிசீலனை செய்ய

உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது, மின் நுகர்வோருக்கு விண்ணப்பிக்கும் செயல்முறையை எளிதாக்கும்.

iii. இரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கான தொகையை வங்கி பரிமாற்றத்தின் மூலம் இணையதள வழியில் திருப்பித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது விண்ணப்பதாரர்கள் கைமுறையாக விண்ணப்பித்து காசோலை மூலம் தொகையைப் பெற வேண்டும். இனிமேல், விண்ணப்பதாரர் எந்த அலுவலகத்திற்கும் செல்லாமல் தானாகவே தனது கணக்கில் தொகையைப் பெறுவார்.

நுகர்வோருக்கு வலைத்தள வங்கி பரிவர்த்தனை மூலம் பணம் செலுத்துவதற்காக அனைத்து வங்கிகளுக்கும் ஒற்றை கட்டண நுழைவாயிலைக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது 17 வங்கிகள் மட்டுமே வலைத்தள வங்கி பரிவர்த்தனை மூலம் ஒருங்கிணைக் கப்பட்டுள்ளன. புதிய திட்டத்தின்கீழ் நுகர்வோர் எந்த வங்கியின் மூலமாகவும் வலைத்தள வங்கி பரிவர்த்தனை மூலம் பணம் செலுத்தலாம்.

25. மின்மாற்றிகளின் எண்ணெய் பரிசோதனை ஆய்வகம் அமைத்தல்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பணிகளின் ஒரு பகுதியாக, மின்மாற்றிகளின் எண்ணெய் குறித்த பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக, சுமார் ரூ.2 கோடி திட்ட மதிப்பீட்டில்

திருநெல்வேலி மாவட்டத்தில் புதியதாக மின்மாற்றிகளின் எண்ணெய் பரிசோதனை ஆய்வகம் ஒன்றினை அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

26. ரூ.15 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், கள்ளக்குறிச்சி மற்றும் பல்லடம் ஆகிய பகுதிகளில் புதிய மின் பகிர்மான அலுவலக கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அ. திருவாரூர் மின் பகிர்மான மத்திய அலுவலக கட்டடம்.

திருவாரூர் மின் பகிர்மான வட்டத்திற்கு புதிய மத்திய அலுவலகம் சுமார் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டதிட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. கள்ளக்குறிச்சி மின் பகிர்மான மத்திய அலுவலக கட்டடம்.

கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டத்திற்கு புதிய மத்திய அலுவலகம் சுமார் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இ. பல்லடம் மின் பகிர்மான மத்திய அலுவலக கட்டடம்

பல்லடம் மின் பகிர்மான வட்டத்திற்கு புதிய மத்திய அலுவலகம் சுமார் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

27. இந்தியக் கணக்கு தரநிலை விதிகளின்படி (Indian Accounting Standards) கணக்கு அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுத்தல்.

தமிழ்நாடு மின்வாரியத்தின் நிறுவனங்களான தமிழ்நாடு

மின்சார வாரிய நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் ஆண்டுக் கணக்கு அறிக்கைகள் நிறுவன சட்டத்தின் விதிகளின்படி, 2017–2018ஆம் நிதி ஆண்டு முதல் இந்திய கணக்கு தரநிலை (Indian Accounting Standards) விதிகளின்படி தயாரிக்கப்படவேண்டும். இதுவரை இவ்வாறு தயாரிக்கப்படாததால் நிதி நிறுவனங்களான ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC) மற்றும் மின் விசை நிதி நிறுவனம் (PFC) மூலம் பெறப்படும் கடன்களுக்கு 0.5% வட்டி விகிதம் உயர்த்தப்பட்டு, ஆண்டொன்றிற்கு ரூ.300 கோடி நட்டம் ஏற்படுகிறது. இந்தியக் கணக்கு தரநிலை விதிகளின்படி, 2018–2019ஆம் ஆண்டு முதலான தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகள் மாற்றி அமைக்கப்பட்டு, 2020–2021ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

28. 1x800 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டம், நிலை 3இல் தூசித்திரை அமைத்தல்.

காற்றில் பரவும் நிலக்கரி துகள்களினால் வடசென்னை அனல் மின் திட்டம், நிலை–3இன் அதி நவீன மின் உபகரணங்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கவும் மற்றும் மத்திய அமைச்சகம் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற விதிகளைப் பின்பற்றியும் வடசென்னை அனல் மின் நிலையம்–1 மற்றும் வடசென்னை அனல் மின் திட்டம், நிலை–3 ஆகியவற்றிற்கு இடையே 1 கி.மீ. தூரத்திற்கு தூசித்திரை சுமார் ரூ.33 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

29. அனைத்து அனல் மின் நிலையங்களுக்கும் நிலக்கரி பரிசோதனை செய்யும் தானியங்கி ஐசோபெரிபால் பாம் கலோரி மீட்டர் நிறுவப்படும்.

அனைத்து அனல் மின் நிலையங்களிலும் நிலக்கரியின் தரக்கண்காணிப்புக்காகத் தானியங்கி ஐசோபெரிபால் பாம் கலோரி மீட்டர் (Automatic Isoperibol Bomb Calorimeters) சுமார் ரூ.168 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

30. ரூ.14.54 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்பை (Distributed Control System), ஒவ்வொரு அலகிற்கும் ரூ.14.54 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு செய்து அதனுடைய கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

31. ரூ.24.75 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் அனல்மின் நிலையம்–IIஇல் உலர் சாம்பலை வெளியேற்றும் அமைப்பு அமைத்தல்.

மேட்டூர் அனல் மின் நிலையம்–IIஇல் உலர்ந்த சாம்பல் வெளியேற்றத்தை மேம்படுத்த உலர் சாம்பலை அழுத்தி எடுத்துச் செல்லும் அமைப்பு (Pressurized Dense Fly Ash Conveying System), சுமார் ரூ.24.75 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

32. மின் பாதைகளில் ஏற்படும் தடைகளை நீக்க ரூ.140 கோடி மதிப்பீட்டில் காற்றழுத்த திறப்பான்கள் (Sectionalizer) அமைத்தல்.

துணை மின் நிலையங்களிலிருந்து செல்லும் உயரழுத்த மின் பாதைகளின் தூரம் அதிகம் உள்ளதால் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு. நீண்ட தூரத்திற்குச் செல்லும் உயரழுத்த மின்பாதைகள் அனைத்திலும் இடையிடையே காற்றழுத்த திறப்பான்கள் அமைக்கப்படும். இதனால் மின்தடை நேரம் வெகுவாக குறைக்கப்படும். இதற்காக ரூ.140 கோடி மதிப்பீட்டில், 11 கிலோ வோல்ட் திறப்பான்கள் 25,000 மற்றும் 22 கிலோ வோல்ட் திறப்பான்கள் 7,500 கொள்முதல் செய்யப்படும்.

33. மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மானக் கட்டமைப்பை மேம்படுத்த புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல்.

மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மானக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, 765 கி.வோ துணை மின் நிலையம் ஒன்று, 400 கி.வோ துணை மின் நிலையங்கள் ஆறு, 230 கி.வோ துணை மின் நிலையங்கள் பதினேழு மற்றும் இருபத்தியொன்று 110 கி.வோ துணை மின் நிலையங்கள் என மொத்தம் 45 துணை மின் நிலையங்கள் செயலாக்கத்திற்குக் கொண்டு வர துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ ❖ ❖

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

கைத்தறி மற்றும் துணிநூல்

மானியக் கோரிக்கை எண். 17

1. **கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசால் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தள்ளுபடி மானியத்திற்குக் கூடுதலாக ரூ.160.11 கோடி வழங்கப்படும்.**

31.03.2021ஆம் தேதியில் நிலுவையாக உள்ள தள்ளுபடி மானியத் தொகை ரூ.160.11 கோடியினை சிறப்பினமாக ஒரே தவணையில் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸிற்கு வழங்கிட, கூடுதலாக ரூ.160.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. **ஆண்டுக்கு ரூ.21 கோடி கூடுதல் செலவினத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூ.4 இலட்சமாக உயர்த்தி, நகர்ப்புற நெசவாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.**

கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூ.4 இலட்சமாக உயர்த்தி வழங்கிட, ஆண்டு ஒன்றிற்கு, கிராமப்புறத்தில் 500 வீடுகளும்

நகர்ப்புறத்தில் 500 வீடுகளும் கட்டுவதற்குக் கூடுதலாக ஆண்டுக்கு ரூ.21 கோடி நிதி வழங்கப்படும்.

3. ரூ.6 கோடி திட்ட மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டியில் சாயக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டியில் நெசவாளர்கள் பயன் பெறும் வகையிலும் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படாத வகையிலும். ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுடன், ரூ.6 கோடி திட்ட மதிப்பீட்டில் சாயக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

4. தமிழ்நாட்டின் கைத்தறி இரகங்களின் பாரம்பரியம் மற்றும் கைத்திறனைப் பாதுகாக்கும் வகையில் ரூ.5 கோடி செலவில் 'கைத்தறி அருங்காட்சியகம்' அமைக்கப்படும்.

கைத்தறி நெசவில் ஆண்டாண்டு காலமாக உள்ள பாரம்பரியம் மற்றும் கலைநயத்தினை பாதுகாக்கவும், வருங்கால புதிய தலைமுறையினர் நெசவுத் தொழிலின் மேன்மை, கைத்தறி நெசவாளர்களின் திறன், தமிழ்நாட்டிலுள்ள கலைநயமிக்க கைத்தறி இரகங்களின் சிறப்பினை அறிந்து கொள்ளவும், கைத்தறி இரகங்களின் வடிவமைப்பு மற்றும் வண்ணங்களில் புதிய உத்தியினை பயன்படுத்தி உற்பத்தி மேற்கொள்ளவும், கைத்தறி அருங்காட்சியகம் ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படும்.

5. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையின் உற்பத்தி மற்றும் வியாபாரத் திறனை மேம்படுத்த ரூ.4 கோடி மதிப்பில் தொடர் சலவை இயந்திரம் நிறுவப்படும்.

ஈரோட்டில் அமைந்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல் மற்றும் அச்சிடல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை மாதம் ஒன்றிற்கு 23 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிடும் திறன் பெற்றுள்ளது. ஆலையின் உற்பத்தி மற்றும் வியாபாரத்திறனை மேலும் அதிகரிக்கும்பொருட்டு, ரூ.4 கோடி மதிப்பில் தொடர் சலவை இயந்திரம் (Continiuous Bleaching Range) நிறுவப்படும்.

6. கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படை கூலியில் 10% உயர்வும் அகவிலைப்படியில் 10% உயர்வும் வழங்கப்படும்.

தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி, நெசவாளர்களுக்கு 2015ஆம் ஆண்டுக்கு பின்னர் அடிப்படை கூலி உயர்வு வழங்கப்படாததைக் கருத்தில் கொண்டும், நெசவாளர்களின் வருவாயை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டும் கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அடிப்படை கூலியில் 10% உயர்வும் அகவிலைப்படியில் 10% உயர்வும் வழங்கப்படும்.

இதன் மூலம் சுமார் 1 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் பயன் பெறுவர்.

7. ரூ.3.67 கோடி கூடுதல் செலவினத்தில், வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி வேட்டி, சேலை இரகங்களுக்கு தற்போது வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி உயர்த்தி வழங்கப்படும்.

வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி சேலை இரகங்களுக்கு, தற்போது வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி, ஒரு உருப்படிக்கு ரூ.20.50லிருந்து ரூ.26.67 ஆக உயர்த்தியும் வேட்டி இரகங்களுக்கு ஒரு உருப்படிக்கு ரூ.10.30லிருந்து ரூ.12.36 ஆக உயர்த்தியும் வழங்கப்படும். இதன் மூலம் அரசுக்கு ரூ.3.67 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

8. இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட் துணி இரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி உயர்த்தி வழங்கப்படும்.

இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட் துணி இரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி, ஒரு மீட்டருக்கு ரூ.4.32லிருந்து, ரூ.4.89ஆக உயர்த்தியும், கைத்தறி டிரில் துணி இரகங்களுக்கு ஒரு மீட்டருக்கு, ரூ.3.81–லிருந்து ரூ.4.69ஆக உயர்த்தியும் வழங்கப்படும். இதன் மூலம் அரசுக்கு ரூ.75 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

9. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 1,033 நிரந்தரப் பணியாளர்களின் ஊதிய விகிதத்தினை சீரமைக்க ஊதிய நிர்ணயக் குழு அமைத்து சம்பள உயர்வு வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்படுகிறது. தற்போது உயர்ந்து வரும் விலைவாசியினை கருத்தில்கொண்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் 1,033 நிரந்தரப் பணியாளர்களின் ஊதிய விகிதத்தினை சீரமைக்க ஊதிய நிர்ணயக் குழு அமைத்து சம்பள உயர்வு வழங்கப்படும்.

10. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து, சிறப்புக் காலமுறை ஊதியம் பெற்று வரும் 406 தற்காலிக பணியாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவர்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வரும் சிறப்புக் காலமுறை ஊதியம் பெறும் தற்காலிக பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் பணிநிரந்தரம் செய்யப்படும். இதன் மூலம் 246 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிந்து வரும் 406 சிறப்பு கால முறை ஊதியம் பெற்று வரும் பணியாளர்கள் பயன் பெறுவர்.

11. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களில் கண்கவர் வடிவமைப்புகளை உருவாக்கி நெசவு செய்ய பயன்படும்

மின்னணு ஜக்கார்டு இயந்திரங்கள் பராமரிப்பு சேவை மையம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரத்தில் அமைக்கப்படும்.

காஞ்சிபுரத்தில் உள்ள 22 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்பெறும் வகையில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு ஜக்கார்டு இயந்திரங்கள் பராமரிப்பு சேவை மையம் அமைக்கப்படும்.

12. மாநில அளவிலான சிறந்த கைத்தறி நெசவாளர் விருது வழங்கும் திட்டத்தின்கீழ் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்படும்.

மாநில அளவிலான சிறந்த கைத்தறி நெசவாளர் விருது வழங்கும் திட்டத்தின்கீழ், பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் புதுமையான வடிவமைப்புகளை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.1 இலட்சம், ரூ.75,000 மற்றும் ரூ.50,000 வழங்கப்பட்டு வருவதை முறையே ரூ.5 இலட்சம், ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.2 இலட்சம் ஆகப் பரிசுத்தொகை உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ.15.50 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

13. தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள விற்பனை நிலைய விற்பனையாளர்களின் பணித் திறனை மேம்படுத்துவதற்கு ரூ.35 இலட்சம் செலவில் விற்பனைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில்

உள்ள விற்பனை நிலைய விற்பனையாளர்களின் பணித்திறனை மேம்படுத்துவதற்கும், வாடிக்கையாளர்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்களின் விருப்பத்தினை அறிந்து அவர்கள் எதிர்பார்க்கும் இரகங்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யப்படும் இரகங்கள் குறித்த சிறப்புகளை வாடிக்கையாளர்களுக்குச் சரளமாக எடுத்துரைப்பது போன்ற விற்பனை யுத்திகளை மேம்படுத்துவதற்கு 350 விற்பனையாளர்களுக்கு ரூ.35 இலட்சம் செலவில் விற்பனைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

14. தமிழ்நாட்டில் இயங்கும் ஆறு கூட்டுறவு, நூற்பாலைகளில் பணிபுரியும் 75 நிரந்தரப் பணியாளர்களுக்கு புதிய ஊதிய விகிதம் மாற்றியமைத்து வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் இயங்கும் ஆறு கூட்டுறவு, நூற்பாலைகளில் பணிபுரியும் 75 நிரந்தரப் பணியாளர்களுக்கு புதிய ஊதிய விகிதம் மாற்றியமைத்து வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.42 இலட்சம் கூடுதலாகச் செலவினம் ஏற்படும்.

15. கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அமல்படுத்த ஆலோசனைக் குழு அமைத்து ஊதிய உயர்வு வழங்கப்படும்.

கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அமல்படுத்த ஊதிய

உயர்வு ஆலோசனைக் குழு அமைத்து ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு ஊதிய உயர்வு வழங்கப்படும்.

16. கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்விற்காக 'ஆரோக்கிய நெசவாளர் நல்வாழ்வு மற்றும் காப்பீடுத் திட்டம்' செயல்படுத்தப்படும்.

கைத்தறி நெசவு என்பது ஒரு குடும்பம் சார்ந்த தொழில். கைத்தறி நெசவாளர்கள் நாளொன்றுக்கு 16 மணி நேரம் வரை நெசவு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கைத்தறி நெசவாளர்களின் உடல் நலத்தைப் பாதுகாக்க அவர்கள் எதிர்கொள்ளும் ஆரோக்கிய குறைபாடுகளை வரும்முன் தடுப்பதற்கு நெசவாளர்களுக்கு 'யோகா' பயிற்சி வழங்கப்படும்.

நெசவுத் தொழிலில் பஞ்சு தூசிகளாலும், தறி அமைப்பினால் தொடர்ந்து அமர்ந்த நிலையில் நெசவு மேற்கொள்வதாலும் நெசவாளர்களுக்குத் தொழில் சார்புடைய ஆரோக்கிய குறைபாடுகளான கண் பார்வை குறைதல், மூட்டு வலி, மூச்சுத் திணறல் மற்றும் சுவாசப் பிரச்சினை ஆகியன ஏற்படுகிறது.

கடந்த ஆண்டுகளில் நெசவாளர்களின் நலனை. பாதுகாத்திட நல்வாழ்வு காப்பீடுத் திட்டத்தின்கீழ் புறநோயாளி மருத்துவச் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டம் ஒன்றிய அரசினால் கைவிடப்பட்டுள்ளதால், நெசவாளர்கள் உடல்சார்ந்த புறநோயாளி மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கு 'ஆரோக்கிய நெசவாளர் நல்வாழ்வு மற்றும் காப்பீட்டுத் திட்டம்' செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் கைத்தறி

நெசவாளர்கள் பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகளில் பணம் செலுத்தாமல் மருத்துவச் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

17. கைத்தறி நெசவாளர்களுக்கு மின் வணிகத்திற்கான கணினிப் பயிற்சி வழங்கப்படும்.

கைத்தறி நெசவாளர்களுக்கு வடிவமைப்புத் திறன் குறித்துப் பயிற்றுவித்து மின் வணிகம் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு, கணினிப் பயிற்சி அளிக்கப்படும். இது நெசவாளர்களுக்கு பல்வேறு வடிவமைப்பு நுணுக்கங்களைப் புரிந்துகொள்ளவும், அவ்வடிவமைப்புகளை நெசவில் பயன்படுத்தவும், உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி இரகங்களை மின் வணிகம் செய்வதற்கும் பயனுள்ளதாக அமையும்.

18. கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆணையரகத்தில் நெசவாளர் குறை தீர்க்கும் மையம் அமைக்கப்படும்.

கைத்தறி நெசவாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதற்காகவும், நெசவாளர்களின் குறைகளான வேலைவாய்ப்பு, கூலி, நலத்திட்டங்கள், நெசவாளர்களுக்கு துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் சேர்ப்பது போன்றவற்றை மேம்படுத்தவும், அவர்கள், தங்களின் குறைகளை தெரிவிக்க ஏதுவாகவும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆணையரகத்தில் குறை தீர்க்கும் மையம் அமைக்கப்படும். இதன் மூலம் நெசவாளர்கள் தங்கள் குறைகளை இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட முகமை அதிகாரியிடம் தெரிவித்து, உடனுக்குடன் தீர்வை சரியான நேரத்தில் பெற முடியும்.

19. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தில் மருத்துவம் சார்ந்த தொழில்நுட்ப ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படும்.

ஜவுளித் துறையில் தொழில்நுட்ப ஜவுளிகள் என்பது புதியதாக உதயமாகி வளர்ந்து வரும் ஒரு பிரிவாகும். இது உள்ளூர் நுகர்வுக்கு மட்டுமின்றி, ஏற்றுமதிக்கும் நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது. தொழில்நுட்ப ஜவுளிகள், பன்னிரெண்டு பயன்பாட்டுப் பகுதிகளை மையமாகக் கொண்டுள்ளது. அதில் ஒரு பிரிவான மருத்துவம் சார்ந்த தொழில்நுட்பத்தின் (மெடிடெக்) கீழ், தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தில் புதிய இயந்திரங்கள் ரூ.1 கோடி மதிப்பில் கொள்முதல் செய்து மருத்துவம் சார்ந்த தொழில்நுட்ப ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படும்.

20. வாடிக்கையாளர்கள் தங்கள் இரசனைக்கேற்ற சேலை வடிவமைப்புகளை தாங்களே வடிவமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

வாடிக்கையாளர்களின் மாறிவரும் இரசனைக்கே இரகங்களை வலுப்படுத்தவும், புதிய இரகங்களின் வடிவமைப்புகளை மேம்படுத்தவும். தேடி வரும் வாடிக்கையாளர்களின் உள்ளார்ந்த ஆசையினை பூர்த்தி செய்யவும், அவர்களின் எண்ணத்திற்கேற்ற வடிவமைப்புகளை அவர்களே வடிவமைத்து, திறன்மிக்க நெசவாளர்களால் நெசவு செய்து வழங்கும் சேலை வடிவமைப்புகளை தாங்களே வடிவமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க விற்பனை

மையங்கள் மற்றும் லூம் வேர்ல்டு விற்பனை மையங்களில் செயல்படுத்தப்படும்.

21. தூய ஜரிகை பட்டுச் சேலைகளில் உள்ள ஜரிகையின் தரம் உறுதிபடுத்துவதற்காக "ஜரிகை உத்திரவாத அட்டை" முதன்முறையாக கோ–ஆப்டெக்ஸில் அறிமுகப்படுத்தப்படும்.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் காஞ்சிபுரம் சரகத்திலிருந்து கொள்முதல் செய்யப்படும். சுற்றப்பட்டு, சுத்த ஜரிகை பட்டுச் சேலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள ஜரிகையில் உள்ள தங்கம் மற்றும் வெள்ளியின் அளவு சதவீதமானது அரசு நிர்ணயித்துள்ள தர அளவீடுகளின்படி உள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் வாங்கும் பட்டுச் சேலைகளின் மீது, ஆண்டாண்டு காலமாக வாடிக்கையாளர்களுக்கு உள்ள நம்பகத்தன்மையை மேலும் அதிகரிக்கும் வகையில், தமிழ்நாடு ஜரி லிமிடெட் நிறுவனத்தில் பரிசோதனை செய்து தரத்தினை உறுதிபடுத்திக் கொண்டு அச்சேலைகளில் மட்டும் "ஜரிகை உத்தரவாத அட்டை" இணைக்கப்படும். மேற்கண்ட ஜரிகை உத்தரவாத அட்டை முதன்முறையாக கோ–ஆப்டெக்ஸில் அறிமுகப்படுத்தப்படும்.

22. 300 கைத்தறி நெசவாளர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடுப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படும்.

மாறிவரும் வாடிக்கையாளர் இரசனைக்கேற்ப புதிய ஜவுளி இரகங்கள் உற்பத்தி செய்து அறிமுகப்படுத்தப்பட்டுச்

சேலைகள், பட்டு பருத்தி சேலைகள், பருத்தி சேலைகள், கைலிகள் மற்றும் வீட்டு உபயோக துணிவகைகள் ஆகிய இரகங்களை நெசவுச் செய்யும் 300 நெசவாளர்களுக்கு புதிய வடிவங்கள், வண்ணங்கள், நெசவு தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் நெசவு பயிற்சி வழங்கப்படும். இதன் மூலம் நெசவாளர்களின் நெசவுத்திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவு மேம்படுவதோடு அவர்களின் வருவாய் உயர வழிவகை செய்யப்படும்.

23. "இல்லந்தோறும் கோ–ஆப்டெக்ஸ்" என்ற இலக்கினை அடைய ரூ.50 இலட்சம் செலவில் புதிய வடிவமைப்புகளில் இரகங்களை அறிமுகப்படுத்தி விளம்பர பிரச்சாரம் செய்யப்படும்.

"இல்லந்தோறும் கோ–ஆப்டெக்ஸ்" என்ற விளம்பர முழக்கம் மூலம் ஒவ்வொரு இல்லத்திலும் குறைந்தபட்சம் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை செய்யும் ஒரு இரகமாவது இருக்கும் பொருட்டும், வாடிக்கையாளர்களிடம் கைத்தறி இரகங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களின் துணித் தேவைகளில் கைத்தறித் துணிகளுக்கு முன்னுரிமை அளிக்கவும், ஒரு விளம்பர பிரச்சார யுக்தி மேற்கொள்ளப்பட இருக்கிறது. ஒவ்வொரு இரகத்தின் உற்பத்தியில் புதிய வடிவமைப்புகள் மற்றும் வண்ணக் கலவைகளை அறிமுகப்படுத்தி அதன்மூலம் 2021–2022ஆம் ஆண்டில் புதிய படுக்கை விரிப்புகள், போர்வைகள், துண்டுகள், லுங்கிகள், வேட்டிகள், குர்த்திஸ் மற்றும் நைட்டி இரகங்களை விளம்பர பிரச்சாரத்துடன்

பிரபலப்படுத்த ரூ.50 இலட்சம் மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

24. இயற்கை முறையில் பெறப்பட்ட பருத்தி நூலிழைகள் மூலம் தயார் செய்யப்பட்ட (Organic) குழந்தைகளுக்கான ஆடைகள் அறிமுகப்படுத்தப்படும்.

குழந்தைகளின் ஆடைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், குறிப்பாக அவர்களின் பாதுகாப்பு, சௌகரியம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், இதனுடன் சுற்றுச் சூழலுக்குச் சாதகமான அம்சங்களையும் சேர்த்து, 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆர்கானிக் ஆடைகளின் உற்பத்தியை மேம்படுத்தி அதன் மூலம் உயர்ந்த தன்மைகளான சருமத்திற்கு இதம், நல்ல வடிவமைப்புகள், மிருதுத்தன்மை, இலகுவாக உடுத்துதல் மற்றும் எளிதாக தூய்மைப்படுத்துதல் ஆகிய அம்சங்களை உறுதி செய்யும் பொருட்டு குழந்தைகளுக்கான ஆர்கானிக் ஆடைகளின் உற்பத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆடைகளை சென்னையில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் ஐந்து விற்பனை நிலையங்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படும்.

25. சென்னை மயிலாப்பூர், லஸ் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் புதிய விற்பனை நிலையம் ரூ.65 இலட்சம் மதிப்பில் கட்டப்படும்.

சென்னை மயிலாப்பூர், இராமகிருஷ்ணா ரோடு, லஸ் பகுதியில் உள்ள உறையூர் தேவாங்கா பிரதம நெசவாளர்

கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான **630** சதுர அடி பரப்பில் உள்ள பழைய கட்டடத்தை கோ–ஆப்டெக்ஸ் **33** ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்துள்ளது. மேற்கண்ட பழைய கட்டடத்தினை இடித்து, ரூ.**65** இலட்சம் மதிப்பில் புதிய கட்டடம் கட்டி நவீனமயமான விற்பனை நிலையம் அமைக்கப்பட உள்ளது.

❖ ❖ ❖

கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

மானியக் கோரிக்கை எண். 18

1. திருவண்ணாமலை கதர் அங்காடி கட்டடம் ரூ.44 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்

திருவண்ணாமலை நகரில், திருமஞ்சன கோபுர வீதியில் தரைதளம் 769.40 சதுரடி மற்றும் முதல்தளம் 769.40 சதுரடி ஆக மொத்தம் 1,538.80 சதுரடி கொண்ட கதர் அங்காடி கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அக்கட்டடத்தைச் சீரமைத்து நவீனப்படுத்துவது இன்றியமையாததாக உள்ளது. இக்கட்டடம் ரூ.44 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.

2. ரூ.20 இலட்சம் செலவில், கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு இரகங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப்படுத்தப்படும்.

கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு இரகங்களின் சிறப்புகளைப் பொதுமக்கள் அறிந்து கொள்ள மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களில் விழிப்புணர்வு மற்றும் கண்காட்சி முகாம்கள் நடத்துவது, சமூக ஊடகங்களான படவரி (Instagram), முகநூல் (Facebook), வலையொளி (YouTube) மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்துவது போன்ற பணிகள் ரூ.20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

3. தற்பொழுது உள்ள கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியத்தினை, மறு சீரமைப்பு செய்து புத்துயிர் அளிக்கப்படும்.

2010–2011இல், கதர் நூற்போர் மற்றும் நெசவாளர்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்த துவக்கப்பட்டதே, கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியமாகும். இவ்வாரியம் துவக்கப்பட்டதன் நோக்கத்தின்படி செயல்படாமல் செயலிழந்து இருப்பதைக் கருத்தில் கொண்டு, வாரியத்திற்குப் புதியதாக உறுப்பினர்களைச் சேர்த்து, உறுப்பினர் அட்டை வழங்கி, அவர்களுக்கு நலத்திட்ட நிதியுதவி வழங்கிடவும், நூற்பு மற்றும் நெசவுப் பணித் தன்மைக்கேற்ப புதிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்திடவும், புதியதாக அலுவல் சாரா உறுப்பினர்களைத் தேர்வு செய்து நிருவாகக் கட்டமைப்பை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. மக்களைக் கவரும் வண்ணம், ரூ.4 இலட்சம் செலவில், கிராமப் பொருட்களுக்கான புதிய மேலுறைகள் மற்றும் பட்டுப் புடவைகளுக்கான அட்டைப் பெட்டிகளை உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வாரியத்தின் சோப்பு வகைகள், தேன், ஊதுபத்தி, சாம்பிராணி மற்றும் ஜவ்வாது போன்ற கிராமப் பொருட்களுக்கான மேலுறை பெட்டிகளின் வண்ணங்கள் மற்றும் டிசைன்கள், மக்களைக் கவரும் வகையில் வண்ணக்கலவையுடன் புதியதாக வடிவமைத்து, அடைப்பான்களை (Containers) உருவாக்குவது மற்றும் புதிய வடிவமைப்புடன் கூடிய அட்டைப் பெட்டிகளை உருவாக்கி,

அதனில் பட்டுப் புடவைகளை விற்பனை செய்வது போன்ற பணிகள் ரூ.4 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

5. ரூ.5.10 இலட்சம் செலவில், இராணிப்பேட்டை மாவட்டம் – அரக்கோணம் தச்சு கருமார அலகில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து, அலுவலக அறை புதுப்பிக்கப்படும்.

இராணிப்பேட்டை மாவட்டம் – அரக்கோணம் தச்சு கருமார அலகில் வாரியப் பணியாளர்கள், தொழிலாளர்கள் பயன்பாட்டிற்கு அலுவலக அறையினைப் புதுப்பித்தல் மற்றும் தண்ணீர் தேவைக்கென புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்தல் போன்ற பணிகள் ரூ.5.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

6. ரூ.15 இலட்சம் செலவில், கதர் பட்டு நெசவாளர்களுக்கு, நவீன முறையில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்.

மாறிவரும் நுகர்வு கலாச்சாரத்தினை கருத்தில் கொண்டு பாரம்பரியம் மாறாமல் கதர் பட்டு உற்பத்தியில் புதுமையான வடிவமைப்புகளை வரைகலை மற்றும் ஜவுளி வடிவமைப்பு மென்பொருள் (Photoshop and Textile Design Software) ஆகியவற்றின் மூலம் உருவாக்கி, அது குறித்து திண்டுக்கல் மாவட்டம் – நரிக்கல்பட்டி, சேலம் மாவட்டம் – காட்டம்பட்டி மற்றும் திருப்பூர் மாவட்டம் – அவிநாசி ஆகிய இடங்களிலுள்ள 90 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்.

7. ரூ.16 இலட்சம் செலவில், ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் – திருக்கழுக்குன்றம் ஆகிய இரு சோப்பு அலகுகளில் தானியங்கி சோப்பு வெட்டும் இயந்திரங்கள் நிறுவப்படும்.

மக்களைக் கவரும் வகையிலான தோற்றமுடைய சோப்புகளை உற்பத்தி செய்திடவும், உற்பத்தித் திறனை அதிகரித்திட இரண்டு தானியங்கி சோப்பு வெட்டும் இயந்திரங்களை தலா ரூ.8 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.16 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து, ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி சோப்பு அலகிலும், செங்கல்பட்டு மாவட்டம் – திருக்கழுக்குன்றம் சோப்பு அலகிலும் நிறுவப்படும்.

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்

8. ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில், திருநெல்வேலி – தூத்துக்குடி மாவட்ட பனைப் பொருள் விற்பனை கூட்டுறவு சம்மேளன வளாகத்தில், பனை வெல்லம் உற்பத்தி செய்திட பொது பயன்பாட்டு மையம் அமைக்கப்படும்.

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பனைத் தொழிலாளர்கள் பயனடையும் வகையில், பதநீரை கொண்டு, நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, திருநெல்வேலி – தூத்துக்குடி மாவட்ட பனைப் பொருள் விற்பனை கூட்டுறவு சம்மேளன அலுவலக வளாகத்தில் சுத்தமான பனை வெல்லம் உற்பத்தி செய்திட பொதுப் பயன்பாட்டு மையம் (Common Facility Centre) ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

9. ரூ.15 இலட்சம் செலவில், பனைப் பொருட்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப்படுத்தப்படும்.

பனை வெல்லம், பனங்கற்கண்டு, சுக்குக் காபித் தூள், பனஞ்சீனி மற்றும் பனங்கற்கண்டு மிட்டாய் போன்ற பொருட்களின் சிறப்புகளைப் பொதுமக்கள் அறிந்து கொள்ள, மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களில் விழிப்புணர்வு மற்றும் கண்காட்சி முகாம்கள் நடத்துவது, சமூக ஊடகங்களான படவரி (Instagram), முகநூல் (Facebook), வலையொளி (YouTube) மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் பொது மக்களுக்கு, விளம்பரப்படுத்துவது போன்ற பணிகள் ரூ.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

10. ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில், பனைப் பொருட்களை நவீன முறையில் பேக்கிங் செய்து, விற்பனை செய்திட புதிய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

பனைப் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு அதிகம் ஏற்பட்டுள்ளதோடு, தேவைகளும் அதிகரித்துள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு, பனஞ்சர்க்கரை, பனை வெல்லத்தூள் மற்றும் பனங்கிழங்குத் தூள் போன்ற பனைப் பொருட்களைக் கொள்முதல் செய்து சந்தைப்படுத்தி, சென்னை– எழும்பூர் மற்றும் கடலூர் ஆகிய இரு இடங்களில், மக்களைக் கவரும் வகையில் அழகிய வடிவமைப்புடன் கூடிய சிறிய பைகளில் (Standing Pouch & Sachet) பனைப் பொருட்களை அடைத்து, விற்பனை செய்யத் தேவையான நவீன இயந்திரங்கள் ரூ.16.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

பட்டு வளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்

மானியக் கோரிக்கை எண். 18

1. **ரூ.5.25 கோடி மதிப்பில் வெண்பட்டு கூடுகளின் தரத்தை அதிகரிக்க 1,000 பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வழங்கப்படும்.**

வெண் பட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக்கூடுகளின் தரம் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்திட, 1,000 பட்டு விவசாயிகளுக்கு உயர்தரப் பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் ரூ.5.25 கோடி மதிப்பில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

2. **தரமான பட்டுக்கூடுகள் உற்பத்தியினை ஊக்குவிக்க, 300 பட்டு விவசாயிகளுக்கு ரூ.3.60 கோடி மதிப்பில் தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க உதவித்தொகை வழங்கப்படும்.**

பட்டுப்புழு வளர்ப்பிற்குத் தேவையான தட்பவெப்பநிலை மற்றும் சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு, தரமான பட்டுக்கூடுகள் அறுவடை செய்திடும் வகையில், பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க, இதுவரை ரூ.87,500 உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. அவ்வுதவித்தொகை இவ்வாண்டு முதல் ரூ.1,20,000ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் 300 பட்டு விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைத்துப் பயன்பெறும் வகையில் மொத்தம் ரூ.3.60 கோடி நிதி உதவி வழங்கப்படும்.

3. ரூ.5.25 கோடி மதிப்பில் 5,000 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

2016–2017ஆம் ஆண்டு முதல் 3,500 ஏக்கரில் மல்பெரி நடவு செய்ய ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதனை 5,000 ஏக்கராக உயர்த்தி, உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ஊக்கத்தொகையாக ரூ.10,500 வீதம் மொத்தம் ரூ.5.25 கோடி நிதி உதவி வழங்கப்படும்.

4. ரூ.70 இலட்சம் மதிப்பில் 200 முன்னோடிப் பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

பட்டு விவசாயிகளின் மல்பெரித் தோட்டங்களில் வேலையாட்கள் பயன்பாட்டினைக் குறைத்து தோட்டப் பராமரிப்புப் பணிகளை எளிதாக மேற்கொள்ள பவர் டில்லர் பயன்படுகிறது.

பட்டு விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையினை ஏற்று முன்னோடிப் பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2021–2022ஆம் ஆண்டில், முதன்முறையாக 200 முன்னோடிப் பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லருக்கு தலா ரூ.35,000 வீதம், 200 பவர் டில்லர்கள் கொள்முதல் செய்து வழங்கிட மொத்தம் ரூ.70 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

5. ரூ.20 இலட்சம் மதிப்பில் நான்கு அரசு ஆதார விதைப் பண்ணைகள் வலுப்படுத்தப்படும்.

வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யும் நான்கு அரசு ஆதார விதைப் பண்ணைகளை வலுப்படுத்திட, ஒரு பண்ணைக்கு ரூ.5 இலட்சம் வீதம் ரூ.20 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

6. ரூ.24.45 இலட்சம் மதிப்பில் மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

2021–2022ஆம் ஆண்டில் வெண்பட்டுக் கூடுகள் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில், மாவட்ட அளவில் 37 மாவட்டங்களில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே ரூ.25,000, ரூ.20,000, ரூ.15,000 பரிசும், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே, ரூ.1,00,000, ரூ.75,000, ரூ.50,000/– பரிசுகள் வழங்கிட ரூ.24.45 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

7. ரூ.4.50 இலட்சம் மதிப்பில் மாநில அளவில் சிறந்த பட்டு நூற்பாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

2021–2022ஆம் ஆண்டில் தரமான பட்டு நூல் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் அதிக அளவு பட்டு வர்த்தகம் செய்யும் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு, மாநில அளவில் முறையே ரூ.1,00,000, ரூ.75,000, ரூ.50,000 என முதல், இரண்டாம்

மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ரூ.4.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

8. ரூ1.82 கோடி மதிப்பில் 14 அரசு பட்டுப்பண்ணைகளில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் பயன்பெறும் வகையில் இளம் புழு வளர்ப்பு மையம் அமைக்கப்படும்.

பட்டு விவசாயிகளுக்கு தரமான இளம்புழுக்கள் உற்பத்தி செய்து வழங்கிடவும், பட்டு விவசாயிகளிடையே இளம்புழுக்கள் நுகர்வினை அதிகரிக்கவும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும். வகையில், முதன்முறையாக 14 அரசு பட்டுப் பண்ணைகளில் 14 இளம் புழு வளர்ப்பு மையங்கள் தலா ரூ.13 இலட்சம் என ரூ.1.82 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

இந்த இளம்புழு வளர்ப்பு மையம் அமைப்பதற்கான செலவினம் ரூ.13 இலட்சத்தில், தலா ரூ.7 இலட்சம் மாநிலத் திட்டத்தின் மூலமும், தலா ரூ.6 இலட்சம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் மூலமும் இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்கப்படும்.

9. ரூ.2.42 கோடி மதிப்பில் பட்டு வளர்ச்சித்துறையின் அனைத்து செயல்பாடுகளும் கணினிமயமாக்கப்படும்.

பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் மற்றும் பட்டு முறுக்காளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரைவாக மற்றும் வெளிப்படை சேவைகளை விரைவாக மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் வழங்கிடும் பொருட்டு, பட்டு வளர்ச்சித்துறையின் செயல்பாடுகளை முற்றிலுமாக கணினிமயமாக்கிட ரூ.2.42 கோடி நிதி உதவி வழங்கப்படும்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக்கழகம்

1. ரூ.1 கோடி செலவில் பூம்புகார் நிறுவனத்தின் பொன் விழா ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்படும்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் அவர்களை அங்கீகரிப்பதற்கும், சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. இந்நிறுவனம் துவங்கி 2023ஆம் ஆண்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதால் இதைப் பொன் விழா ஆண்டாகச் சிறப்பாகக் கொண்டாட, ரூ.1 கோடி நிதியுதவி வழங்கப்படும்.

2. ரூ.3.50 கோடி செலவில், 7 பூம்புகார் கைவினைப் பொருட்கள் உற்பத்தி நிலையங்கள் மேம்படுத்தப்படும்.

கைவினைஞர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நாச்சியார்கோவில், மதுரை, வாகைகுளம், சுவாமிமலை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய 7 இடங்களில் அமைந்துள்ள பூம்புகாரின் சொந்த உற்பத்தி நிலையங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவற்றை ரூ.3.50 கோடி செலவில் சீர்செய்து மேம்படுத்தப்படும்.

3. ரூ.5 கோடி செலவில் 4 பூம்புகார் விற்பனை நிலையங்கள் புதுப்பிக்கப்படும்.

பூம்புகாரின் முக்கிய பெரும் விற்பனை நிலையங்கள் சென்னை, கோயம்புத்தூர், புதுதில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இவை பழுதடைந்துள்ளதால், இவ்விற்பனை நிலையங்களைப் புதுப்பித்து மற்றும் அழகுபடுத்தி வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் ரூ.5 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

4. ரூ.1 கோடி செலவில் மாமல்லபுரத்தில் அமைந்துள்ள நகர்ப்புறக் கண்காட்சித் திடல் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மாமல்லபுரம் கடற்கரைச் சாலையில் சுமார் 4.45 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.4.25 கோடி செலவில் ஒரு நிரந்தர நகர்ப்புறக் கண்காட்சித் திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதனை விரிவுபடுத்தும் வகையில் மேலும், 14 விற்பனை அரங்குகள், உணவுக்கூடம், கைத்திறப் பொருட்கள் செய்முறை விளக்கக்காட்சி அரங்கம் மற்றும் நுழைவு வாயில் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ.1 கோடி நிதியுதவி வழங்கப்படும்.

❖ ❖ ❖

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை

மானியக் கோரிக்கை எண். 19

1) 15ஆவது நிதி ஆணையத்தால் மருத்துவத் துறை மேம்பாட்டிற்காக, தமிழ்நாட்டிற்கு வரும் ஐந்து ஆண்டுகளுக்குப் பரிந்துரைத்துள்ள ரூ.4,280 கோடி நிதியைப் பயன்படுத்தி, வட்டார அளவிலான மருத்துவமனைகள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும். ஆரம்பச் சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கு நோய் கண்டறியும் கருவிகள் வழங்கப்படும். மேலும், இந்த நிலையங்கள் "அனைவருக்கும் நலவாழ்வு மையங்களாக" மேம்படுத்தப்படும்.

15ஆவது நிதி ஆணையத்தால் மருத்துவத் துறை மேம்பாட்டிற்காக, தமிழ்நாட்டிற்கு வரும் ஐந்து ஆண்டுகளுக்கு பரிந்துரைத்துள்ள ரூ.4,280 கோடி நிதியைப் பயன்படுத்தி, வட்டார அளவிலான மருத்துவமனைகள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும். மேலும், அதிக நோயாளிகள் பயன்படுத்தும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கு நோய் கண்டறியும் கருவிகள் வழங்கப்படும். இது தவிர, இந்த நிதியின் கீழ் இந்த மையங்கள் 'அனைவருக்கும் நலவாழ்வு மையங்களாக' மேம்படுத்தப்படும்.

2) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற மகத்தான திட்டம் ரூ.258 கோடி செலவில் தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கப்படும்.

"மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் 05.08.2021 அன்று தொடங்கப்பட்டு, ஊரகப் பகுதிகளில் 50 வட்டாரங்கள் மற்றும் மூன்று மாநகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், இத்திட்டம் 11,086 பெண் சுகாதார தன்னார்வலர்கள் மூலமாகத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தில், உயர் இரத்த அழுத்தம் / நீரிழிவு போன்ற தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்ட 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மருந்துகளை அவர்கள் இல்லங்களுக்குச் சென்று வழங்கிடவும், மருத்துவர், செவிலியர் மற்றும் இயன்முறை சிகிச்சையாளர் கொண்ட 497 நடமாடும் குழுக்கள், தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட வாகனம் மூலம் நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று, நோய் ஆதரவு சேவைகள் (Palliative Care), இயன்முறை மருத்துவ சேவைகள் (Physiotheraphy), சிறுநீரக நோயாளிகளைப் பராமரித்தல் (Peritoneal Dialysis), ஆகிய சேவைகளை மேற்கொள்ளவும், நோயாளிகளை அத்தியாவசிய மருத்துவ சேவைகளுக்காக மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைத்தல்,

குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிதல் போன்ற பல்வேறு சுகாதார சேவைகளை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட இம்மகத்தான திட்டம், ரூ.258 கோடி செலவில் இந்நிதி ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்.

3) தமிழ்நாட்டில் முதல்முறையாக அரசு மருத்துவமனைகளில் செவிலியர் கண்காணிப்பு மையங்கள் (Central Monitoring Nursing Stations) **ஏற்படுத்தி, 1,583 ஆக்ஸிஜன் படுக்கைகளுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ரூ.266.73 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 35 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 18 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 139 அரசு மருத்துவமனைகளில் கூடுதலாக 1,583 ஆக்ஸிஜன் படுக்கைகளுடன் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும். இப்பிரிவுகளில், மல்டிபாராமானிட்டர், பல்ஸ் ஆக்ஸிமீட்டர், சிபேப், இசிஜி கருவி, எக்ஸ்ரே கருவி, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் கருவி, சிரிஞ் பம்ப், என்டோடிரக்கியல் கப் மானோமீட்டர் (Endotracheal Cuff Manometer) ஆகிய கருவிகள் வழங்கப்பட்டு, இக்கருவிகளின் ஒருங்கிணைந்த தரவுகளை (Vitals Monitoring) ஒரே இடத்திலிருந்து கணினி வாயிலாக கண்காணிக்க, தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக 24 மணிநேரமும் செயல்படும் செவிலியர் கண்காணிப்பு மையம்

(Central Monitoring Nursing Station) ஏற்படுத்தப்படும். இதற்காக ரூ.266.73 கோடி செலவிடப்படும்.

4) 25 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 18 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் தலா ரூ.2.27 கோடி வீதம் பன்முக உயர்தர தீவிர சிகிச்சை பிரிவுகள் ரூ.97.49 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகளை மேம்படுத்தும் வகையில் இந்த ஆண்டில் 25 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 18 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 12 படுக்கை வசதிகள் கொண்ட பன்முக உயர்தர தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (Hybrid ICU) தலா ரூ.2.27 கோடி செலவில் ஏற்படுத்தப்படும். இப்பிரிவுகளில், ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய அவசர சிகிச்சை படுக்கைகள், மல்டிபாராமானிட்டர், பல்ஸ் ஆக்ஸிமீட்டர், சிபேப், இசிஜி கருவி, எக்ஸ்ரே கருவி, எக்கோ கருவி, சிரிஞ் பம்ப், என்டோடிரக்கியல் கப் மானோமீட்டர் (Endotracheal Cuff Manometer) போன்ற நவீன கருவிகளுடன் ரூ.97.49 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

5) 8 அரசு மருத்துவமனைகளில் தலா ரூ.9 கோடி வீதம் ரூ.72 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு தரம் உயர்த்தப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி, திருப்பூர் மாவட்டம் – உடுமலைப்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம்

– பழனி, கிருஷ்ணகிரி மாவட்டம் – ஒசூர், நாகப்பட்டினம் மாவட்டம் – வேதாரண்யம், கோயம்புத்தூர் மாவட்டம் – வால்பாறை, திருவாரூர் மாவட்டம் – திருத்துறைப்பூண்டி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – பூந்தமல்லி ஆகிய எட்டு அரசு மருத்துவமனைகளில் தலா ரூ.9 கோடி வீதம் ரூ.72 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு தரம் உயர்த்தப்படும்.

6) தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவச் சேவையை வலுப்படுத்த 389 புதிதாக நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் 2008ஆம் ஆண்டு தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவச் சேவை வழங்கும் பொருட்டு நடமாடும் மருத்துவக் குழு சேவை தொடங்கப்பட்டது. நடமாடும் மருத்துவச் சேவைத் திட்டம் தொய்வின்றி சீரான முறையில் தொடர்ந்து செயல்படப் புதிதாக 389 நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

7) திண்டிவனம், தாம்பரம், ஸ்ரீவில்லிபுத்தூர், கோபிசெட்டிப்பாளையம், அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசி ஆகிய 6 அரசு மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையங்களுக்கு (CEmONC) **தலா ரூ.6.90 கோடி வீதம் புதிய கட்டடங்கள் ரூ.41.40 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம், செங்கல்பட்டு மாவட்டம் – தாம்பரம், விருதுநகர் மாவட்டம் – ஸ்ரீவில்லிபுத்தூர்,

ஈரோடு மாவட்டம் – கோபிசெட்டிப்பாளையம், திருநெல்வேலி மாவட்டம் – அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசி மாவட்டம் – தென்காசி ஆகிய 6 அரசு மருத்துவமனைகளிலுள்ள ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையங்களில் (CEmONC) புதிய கட்டடங்கள் தலா ரூ.6.90 கோடி வீதம் ரூ.41.40 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

8) ஊரகப் பகுதிகளில் உள்ள 2,400 துணை சுகாதார நிலையங்கள் 'நலவாழ்வு மையங்களாக' ரூ.35.52 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 2,400 துணை சுகாதார நிலையங்கள் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்திற்கு ஏதுவாக 'நலவாழ்வு மையங்களாக' ரூ.35.52 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

9) மரபணு இரத்த நோய்களான தலசீமியா மற்றும் ஹீமோபிலீயா சிகிச்சைக்காக மருந்துகள் மற்றும் உபகரணங்கள் 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூ.34 கோடி செலவில் வழங்கப்படும்.

மரபணு இரத்த நோய்களான தலசீமியா மற்றும் ஹீமோபிலீயா சிகிச்சைக்காகத் தருமபுரி, சேலம், மதுரை, தேனி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, வேலூர், விழுப்புரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஒன்பது அரசு

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு 'ஹீமோகுளோபினோபதி' தினசரி சிகிச்சை மையங்களுக்கு மருந்து மற்றும் உபகரணங்கள் ரூ.34 கோடி செலவில் வழங்கப்படும்.

10) 57 ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையங்களில் (CEmONC) **தங்கு தடையின்றி ஆக்ஸிஜன் கிடைக்க ரூ.25.80 கோடி மதிப்பீட்டில் திரவ மருத்துவ ஆக்ஸிஜன் கலன்கள் அமைக்கப்படும்.**

57 ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையங்களில் (CEmONC) தங்கு தடையின்றி ஆக்ஸிஜன் கிடைக்க ஏதுவாக திரவ மருத்துவ ஆக்ஸிஜன் கலன்கள் (LMO) மற்றும் அதற்குரிய இணைப்புக் குழாய்கள் ரூ.25.80 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

11) தென்காசி, மயிலாடுதுறை மற்றும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைகளில் ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் எம்.ஆர்.ஐ. (MRI) ஸ்கேன் கருவி நிறுவப்படும்.

தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, மயிலாடுதுறை மற்றும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைகளில் தலா ரூ.6.50 கோடி வீதம் ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் மூன்று எம்.ஆர்.ஐ. (MRI) ஸ்கேன் கருவிகள் நிறுவப்படும்.

12) கொரோனா நோய்க் கட்டுப்பாடு மற்றும் சிகிச்சை மேலாண்மை பணிகளைக் கண்காணிக்க 286 அரசு

மருத்துவமனைகளுக்கு ரூ.18.61 கோடி செலவில் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் வழங்கப்படும்.

கொரோனா நோய்க் கட்டுப்பாடு மற்றும் சிகிச்சை மேலாண்மை பணிகளை மாநில அளவில் திறம்படக் கண்காணித்துச் செயல்படுத்துவதற்காகவும், துரிதமான தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்காகவும் **286** அரசு மருத்துவமனைகளுக்குக் கணினி, பார்கோடு ஸ்கேன் கருவி, பார்கோடு அச்சு கருவி போன்ற தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் ரூ.**18.61** கோடி செலவில் வழங்கப்படும்.

13) 29 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடங்கள் தலா ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.17.40 கோடி செலவில் கட்டப்படும்.

புதுக்கோட்டை மாவட்டம் – மீமிசல் மற்றும் பெருங்களூர், அரியலூர் மாவட்டம் – டி.பாலூர், கடலூர் மாவட்டம் – மங்களூர், திண்டுக்கல் மாவட்டம் – ஆலமரத்துப்பட்டி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – மணிமுத்தாறு அணை, கரூர் மாவட்டம் – உப்பிடமங்கலம், தூத்துக்குடி மாவட்டம் – பெரிலோவன்பட்டி, புதுக்கோட்டை – ஆனந்தபுரம், மதுரை மாவட்டம் – கள்ளந்திரி, நாகப்பட்டினம் மாவட்டம் – கிளியனூர், வாய்மேடு, நாமக்கல் மாவட்டம் – நாமகிரிப்பேட்டை, இராமநாதபுரம் மாவட்டம் – நைனார்கோவில் – உச்சிப்புளி, பெரம்பலூர் மாவட்டம் – மருவத்தூர், திருவள்ளூர் மாவட்டம் – பாரிவாக்கம், இராணிப்பேட்டை மாவட்டம் – நவ்லாக், விருதுநகர் மாவட்டம் –

உப்பத்தூர், ஜமீன்கொலன்கொண்டான், பந்தல்குடி, கன்னிசேரிபுதூர், தென்காசி மாவட்டம் – மடத்துப்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – அரசன்குடி, திருப்பத்தூர் மாவட்டம் – மாதனூர், திருவண்ணாமலை மாவட்டம் – நார்தம்பூண்டி, ஆவூர், வேலூர் மாவட்டம் – பொய்கை ஆகிய 29 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவு தலா ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.17.40 கோடி செலவில் அமைக்கப்படும்.

14) 23 நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்களின் உள்கட்டமைப்பை வலுப்படுத்த தலா ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.17.25 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்

சிவகங்கை மாவட்டம் – தேவகோட்டை, காரைக்குடி, முத்துபட்டினம், அரியலூர் மாவட்டம் – ஜெயம்கொண்டம், இராமநாதபுரம் மாவட்டம் – பாரதியார் பார்க் மற்றும் இராமநாதபுரம், மதுரை மாவட்டம் – கொடிகுளம், தென்காசி மாவட்டம் – கடையநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில், தென்காசி, வேலூர் மாவட்டம் – அலமேலுமங்காபுரம், சைதாப்பேட்டை, தாரப்படவேடு, கொணவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் – வந்தவாசி, ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம், நாகப்பட்டினம் மாவட்டம் – சீர்காழி, கன்னியாகுமரி மாவட்டம் – குழித்துறை மற்றும் பத்மநாபபுரம், திருச்சிராப்பள்ளி – துறையூர், தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி, விழுப்புரம் – திண்டிவனம் ஆகிய 23 நகர்ப்புற

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தலா ரூ.75 இலட்சம் வீதம் ரூ.17.25 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்படும். இதனால் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகள் சேவை, மகப்பேறு மருத்துவம், தொற்றா நோய்கள் சேவை மற்றும் பல்துறை சிறப்புச் சேவைகள் வலுப்படுத்தப்படும்.

15) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களின் நலனைப் பாதுகாக்க மக்கள் நலப் பதிவு (Population Health Registry) என்னும் சுகாதார தகவல் இயங்குதளம் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களின் நலனைப் பாதுகாக்க மக்கள் நலப் பதிவு (Population Health Registry) என்னும் சுகாதார தகவல் இயங்குதளம் (Health IT Platform) தனி மனித சுகாதார அடையாள எண்ணுடன் (Unique Health Identification Number) ஒருங்கிணைக்கப்பட்டு, சுகாதாரம் சார்ந்த நடவடிக்கைகள், நிகழ் நேர தரவு சார் முடிவுகள் (Data Driven Decision Making) எடுக்கப்பட்டு மாநில சுகாதார தரம் (SDG State Health Index) மேம்படுத்தப்படும்.

16) கிராமப்புற சுகாதார சேவையை மேம்படுத்தப் புதியதாக 2,400 செவிலியர்கள் மற்றும் 2,448 சுகாதார ஆய்வாளர்கள் ரூ.17.42 கோடி செலவில் நியமனம் செய்யப்படுவார்கள்.

தமிழ்நாட்டில் நலவாழ்வு மையங்களில் 2,400 துணை சுகாதார நிலையங்களுக்குப் புதியதாகச் செவிலியர்கள்

நியமனம் செய்யப்படுவதன் மூலம் கிராம பொதுமக்கள் அவரவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள துணை சுகாதார நிலையங்களில் ஒருங்கிணைந்த தாய்சேய் நலன், குடும்பக் கட்டுப்பாடு சேவைகள், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள், தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கான ஆரம்ப சிகிச்சைகள், முதியோர் நலன், கண் மற்றும் காது சார்ந்த சேவைகள், அடிப்படை பல் மருத்துவம் உள்ளிட்ட மருத்துவச் சேவைகளைப் பெற்று பயனடையவும், மேலும் **2,448** புதிய சுகாதார ஆய்வாளர்கள் நியமனம் மூலம் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் வலுப்படுத்த ரூ.17.42 கோடி நடப்பு நிதியாண்டில் செலவிடப்படும்.

17) முதியோர் மனநலம் காக்க, அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் முதியோர் மறதி நோய்க்கான தனி சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படும்.

தேசிய சுகாதார குழுமம், தொண்டு நிறுவனத்துடன் இணைந்து முதியவர்களுக்கு வயது மூப்பின் காரணமாக ஏற்படும் மன அழுத்தம் மற்றும் மறதி நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அவர்களின் நலன் காக்க “முதியோர் மனநலம்” சேவை தொடங்கப்படும். இச்சேவைகளை வழங்குவதற்காகத் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் செயல்படும் முதியோர் நலப் பிரிவு மருத்துவர்கள் மற்றும் வட்டார அளவிலான ஆரம்பச்

சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு உரிய பயிற்சிகள் தொண்டு நிறுவனம் மூலம் வழங்கப்படும். மேலும் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் முதியோர் மறதி நோய்க்கான தனி சிகிச்சைப் பிரிவு தொடங்கப்பட்டு அவர்களுக்கு மனநல மருத்துவச் சேவைகள் வழங்கப்படும்.

18) தமிழ்நாட்டில் தற்கொலை முயற்சிகளைத் தடுப்பதற்காகத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து தற்கொலைத் தடுப்பு ஆலோசனை பயிற்சிகள் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் தற்கொலை முயற்சிகளைத் தடுப்பதற்காக இத்துறையில் நீண்ட அனுபவம் வாய்ந்த தொண்டு நிறுவனத்துடன் இணைந்து தற்கொலைத் தடுப்பு ஆலோசனை பயிற்சிகள் வழங்கப்படும்.

19) வீடற்ற மக்களின் மனநலம் காக்கும் திட்ட வரைவு, உலக மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மனநல ஆராய்ச்சி பல்கலைக்கழக மனநல வல்லுநர்கள் உதவியுடன் உருவாக்கப்படும்.

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை, தேசிய சுகாதார குழுமம் இணைந்து 'வீடற்ற மக்களின் மனநலம் காக்கும் திட்ட வரைவு' உருவாக்கப்படும். இப்பணிக்காக உலகம் மற்றும் தேசிய அளவில் சிறந்து விளங்கும் மனநல ஆராய்ச்சி நிறுவனங்களின் வல்லுநர்களை உறுப்பினர்களாகக்

கொண்டிருக்கும். அமெரிக்காவில் உள்ள பெனிசில்வேனியா பல்கலைக்கழகம், கார்னல் பல்கலைக்கழகம், நியுயார்க் பல்கலைக்கழகம், இங்கிலாந்து நாட்டில் உள்ள லான்செட் கமிஷன், நெதர்லாந்தில் உள்ள அத்தினா பல்கலைக்கழகம், இந்தியாவின் புகழ் பெற்ற டாடா சமூகவியல் பல்கலைக்கழகம், பெங்களூரில் அமைந்துள்ள தேசிய மனநல மற்றும் நரம்பியல் ஆராய்ச்சி நிறுவனம், பாணியன் நிறுவனம் மற்றும் சென்னை அரசு தலைமை மனநல மருத்துவமனை மருத்துவர்கள் சிறப்பு வல்லுநர்களாக அமைவார்கள். இக்குழு உருவாக்கும் திட்ட வரைவு வீடற்ற சமுகத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் வாழும் மக்களின் மன நலனைப் பேணிக் காக்கவும், அவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைக்கும் போது அவர்களின் உரிமை மற்றும் கண்ணியம் பாதுகாக்கும் வகையிலும் வடிவமைக்கப்படும்.

20) பெருநகர சென்னை மாநகராட்சியில் 13 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.9.75 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்–1 திருவொற்றியூர் – குப்பம் மற்றும் சாத்தான்காடு, மண்டலம்–4 தண்டையார்பேட்டை – புதிய வண்ணாரப்பேட்டை, மண்டலம்–5 இராயபுரம் – சஞ்சீவராயன்பேட்டை, புதுப்பேட்டை, மண்டலம்–6 திரு.வி.க. நகர் – பெரியார்நகர் மற்றும் சூளை, மண்டலம்–9 தேனாம்பேட்டை – புஷ்பாநகர், சமுதாயக்

கல்லூரி, திருவல்லிக்கேணி, மண்டலம்–10 கோடம்பாக்கம் – தியாகராயநகர், மண்டலம்–11 வளசரவாக்கம் – மதுரவாயல், மண்டலம்–12 பெருங்குடி – பாலவாக்கம் ஆகிய 13 புதிய நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு தலா ரூ.75 இலட்சம் வீதம் ரூ.9.75 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

21) 108 அவசரக்கால ஊர்திகள் சேவையை (108 Emergency Ambulance Services) மேலும் வலுப்படுத்த, ரூ.69.18 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 188 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 1,303 ஆம்புலன்ஸ்களுடன் '108' அவசரக்கால ஊர்திகள் சேவை (108 Emergency Ambulance Services) செயல்பட்டு வருகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், கூடுதலாக 188 புதிய அவசரக்கால சேவை வாகனங்கள் ரூ.69.18 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். இதன் மூலம் விபத்து மற்றும் அவசரக் காலங்களில் நோயாளிகள் அவசர வாகன சேவைக்காகக் காத்திருக்கும் நேரம் குறையும்.

22) அனைத்து மருத்துவத் துறை பணியாளர்களுக்கும் கோவிட் பெருந்தொற்று தொடர்பான தகவல் தொழில்நுட்ப மேலாண்மை பயிற்சிகள் ரூ.9.23 கோடி செலவில் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவ அலுவலர்கள்,

செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்களுக்கு கோவிட் பெருந்தொற்று மேலாண்மை, குழந்தைகளுக்கான கோவிட் பெருந்தொற்று சிகிச்சை, கோவிட் தடுப்பூசி, தகவல் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகியவை குறித்த சிறப்புப் பயிற்சிகள் ரூ.9.23 கோடி செலவில் வழங்கப்பட்டு அவர்களது பணித்திறன் மேம்படுத்தப்படும்.

23) 12 அரசு மருத்துவமனைகளில் 105 DNB (Diplomate of National Board) உயர் மருத்துவ பட்டய படிப்புகள் ரூ.8.09 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

கோவில்பட்டி, ஈரோடு, கடலூர், காஞ்சிபுரம், சிதம்பரம், பொள்ளாச்சி, பெரம்பலூர், காரைக்குடி ஆகிய 8 அரசு மருத்துவமனைகளிலும் விருதுநகர், திண்டுக்கல், இராமநாதபுரம், நாமக்கல் ஆகிய 4 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ரூ.8.09 கோடி செலவில் மயக்கவியல், குடும்பநல மருத்துவம், மகப்பேறு மருத்துவம், கண் மருத்துவம், காசநோய் மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், கதிரியக்க சிகிச்சை முறை ஆகியவற்றில் 105 உயர் மருத்துவ பட்டய படிப்புகள் (Diplomate of National Board) ஏற்படுத்தப்படும்.

24) தமிழகத்தில் உள்ள அனைத்து கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அதிக பாதிப்புக்கு உள்ளாகும் நபர்களுக்கு (High Risk Group) ஹெபடைடிஸ்–பி மற்றும் சி வைரஸை கண்டறிந்து (Universal

Screening) அவர்களுக்கு ரூ.8.19 கோடி செலவில் சிகிச்சை வழங்கப்படும்.

ஹெபடைடிஸ்—பி மற்றும் சி (Hepatitis B and C) ஆகிய கல்லீரலைப் பாதிக்கும் உயிர்க்கொல்லி வைரசினால் ஏற்படும் இழப்புகளைத் தடுக்கும் விதமாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கு (Ante-natal Mothers) ஹெபடைடிஸ்—பி கண்டறியும் பரிசோதனை, வைரஸ் தொற்று பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிறக்கும் பச்சிளங் குழந்தைகளுக்கு ஹெபடைடிஸ்—பி இம்யுனோகுளோபிளின் சிறப்பு தடுப்பூசி (Immunoglobulin) மற்றும் அதிக பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய நபர்களுக்கு (High Risk Group) ஹெபடைடிஸ்—பி மற்றும் சி நோய்களைக் கண்டறிவதற்கான பரிசோதனை, தொற்றை உறுதிப்படுத்த – வைரஸ் அளவீடு பரிசோதனைகள் மற்றும் உயர்தர சிகிச்சைகள் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள பிரத்தியேக கல்லீரல் அழற்சி மையம் மற்றும் ஆய்வகங்களுக்கு ரூ.8.19 கோடி செலவில் சிகிச்சை வழங்கப்படும்.

25) பெருநகர சென்னை மாநகராட்சியில் சஞ்ஜீவராயன் பேட்டை நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையம் 100 படுக்கை வசதியுடன் ரூ.8 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 5 இராயபுரம் – சஞ்ஜீவராயன் பேட்டை நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையம் ரூ.8 கோடி செலவில் 100 படுக்கை

வசதியுடன் உயர்தர மருத்துவமனையாக மேம்படுத்தப்படும். இதன் மூலம் மகப்பேறு மருத்துவச் சேவைகள், டயாலிசிஸ் சிகிச்சை, குழந்தை நலம், பொது மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை, பல் மருத்துவம் மற்றும் மயக்கவியல் சேவைகள் அளிக்கப்பட்டு வட சென்னை பகுதியில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள் பயனடைவார்கள்.

26) உளுந்தூர்பேட்டை, ஒசூர், ஜெயம்கொண்டம், பொள்ளாச்சி மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய 5 மாவட்ட மருத்துவமனைகளில் 'ஒருங்கிணைந்த அவசரச் சிகிச்சை' (Trauma Emergency Care Centre) சேவைகளை மேம்படுத்த ரூ.17.07 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் – உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.6.17 கோடி செலவிலும், கிருஷ்ணகிரி மாவட்டம் – ஒசூர் அரசு மருத்துவமனை மற்றும் அரியலூர் மாவட்டம் – ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைகளில் தலா ரூ.4 கோடி செலவிலும், கோயம்புத்தூர் மாவட்டம் – பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.1.90 கோடி செலவிலும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் – பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் ரூ.1 கோடி மதிப்பீட்டிலும் மொத்தம் ரூ.17.07 கோடி செலவில் ஒருங்கிணைந்த அவசரச் சிகிச்சைப் பிரிவிற்கு (Trauma Emergency Care Centre) புதிய கட்டடங்கள் கட்டப்படும். இதன் மூலம் உயிர்காக்கும் அவசரச் சிகிச்சை சேவைகள் மேலும் துரிதமாக கிடைத்திட வழிவகுக்கும்.

27) காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், தென்காசி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 5 மாவட்டங்களில் குழந்தை நல மாவட்ட முன் இடையீட்டு மையங்கள் (District Early Intervention Center) ரூ.7.07 கோடி செலவில் அமைக்கப்படும்.

காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், தென்காசி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 5 மாவட்ட தலைநகரங்களில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் / அரசு மருத்துவமனைகளில் ரூ.7.07 கோடி செலவில் குழந்தைகளுக்கான மாவட்ட முன் இடையீட்டு மையங்கள் (District Early Intervention Center) அமைக்கப்படும். இம்மையங்களில் குழந்தைகள் நல மருத்துவர், மருத்துவ அலுவலர், செவிலியர், செவித்திறன், பேச்சுத்திறன் சிகிச்சையாளர், பல் மருத்துவர், இயன்முறை சிகிச்சையாளர், ஆக்குபேஷனல் சிகிச்சையாளர் (Occupational Therapist) உள்ளிட்ட 12 மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா பணியாளர் குழு 18 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சிறப்புச் சிகிச்சைகள் வழங்குவார்கள்.

28) 2025ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிக்கும் நோக்கில் ரூ.7 கோடி செலவில் 10 ஊடுகதிர் வாகனங்கள் வழங்கப்படும்

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்ட வரையறையின் கீழ் 2025ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிக்கும் நோக்கில் (National TB Elimination Program) காசநோய்

கண்டறிவதற்கான நடமாடும் 10 ஊடுகதிர் வாகனம் (Mobile X-ray Van) ரூ.7 கோடி செலவில் அரியலூர், செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், தென்காசி, மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்குப் புதியதாக வழங்கப்படும்.

29) அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பேறுகால சேவையை மேம்படுத்த 'லக்ஷயா' (LaQshya) திட்டத்தின்கீழ் ரூ.6.31 கோடி செலவிடப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் திட்டத்தின்கீழ் ரூ.6.31 கோடி செலவில் பிரசவ அறைகள், மகப்பேறு அறுவை சிகிச்சை மையங்களில் பராமரிப்புச் சேவைகள் வழங்கப்படும்.

30) 13 நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தலா ரூ.45 இலட்சம் வீதம் ரூ.5.85 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

கடலூர் மாவட்டம் – திருப்பாதிரிபுலியூர், மதுரை மாவட்டம் – சிந்தாமணி, முனிசாலை, சாத்தமங்கலம், திருப்பரங்குன்றம், திருப்பூர் மாவட்டம் – மேட்டுப்பாளையம் நெசவாளர் காலனி, விருதுநகர் மாவட்டம் – விருதுநகர், திருநெல்வேலி மாவட்டம் – பாட்டபத்து, எம்.விபுரம், கொக்கிரகுளம், தேனி மாவட்டம் – பெரியகுளம், கம்பம் ஆகிய 13 நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்களில்

உள்கட்டமைப்பை மேம்படுத்த தலா ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.5.85 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

31) 11 ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு மையங்களில் இரத்த வங்கிகள் (CEmONC Blood Bank) ரூ.5.50 கோடி செலவில் நிறுவப்படும்.

அரியலூர் மாவட்டம் – ஜெயங்கொண்டம், கரூர் மாவட்டம் – குளித்தலை, மதுரை மாவட்டம் – திருமங்கலம், சேலம் மாவட்டம் – ஓமலூர், தேனி மாவட்டம் – போடிநாயக்கனூர், திருவள்ளூர் மாவட்டம் – பொன்னேரி மற்றும் திருத்தணி, திருவண்ணாமலை மாவட்டம் – ஆரணி, திருவாரூர் மாவட்டம் – திருத்துறைப்பூண்டி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோவிலூர், விருதுநகர் மாவட்டம் – ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய 11 அரசு மருத்துவமனைகளில் அதிக தாய்மார்களைக் கையாளும் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு மையங்களில் ரூ.5.50 கோடி செலவில் இரத்த வங்கிகள் (CEmONC Blood Bank) நிறுவப்படும்.

32) 17 புதிய RT-PCR பரிசோதனை கருவிகள் ரூ.5.10 கோடி செலவில் வழங்கப்படும்.

2021–2022ஆம் ஆண்டில் கொரோனா நோய் கண்டறியும் 17 புதிய RT-PCR பரிசோதனைக் கருவிகள் தேவைப்படும் ஆய்வகங்களுக்கு ரூ.5.10 கோடி செலவில் வழங்கப்படும்.

33) மதுரை மற்றும் கோவையில் உள்ளஅரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான 'ஒப்புயர்வு மையங்கள்' (Center of Excellence) ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படும்.

கோவிட் பெருந்தொற்றை கருத்தில் கொண்டு குழந்தைகளுக்கான 'ஒப்புயர்வு மையங்கள்' (Center of Excellence) கூடுதலாக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படும். இந்த ஒப்புயர்வு மையங்கள் இணையவழி மூலமாக இதர மாவட்டங்களில் உள்ள குழந்தை நல மருத்துவர்களுக்கு நிபுணத்துவம் வாய்ந்த சிறந்த மருத்துவர்களால் கொரோனா பெருந்தொற்று குறித்த ஆலோசனை மற்றும் சிகிச்சை மேலாண்மை அளிக்கப்படும்.

34) 16 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.4 கோடி செலவில் செவிலியர் குடியிருப்புகள் கட்டப்படும்.

ஆரம்பச் சுகாதார சேவைகளை 24 மணிநேரமும் தங்குதடையின்றி கிடைத்திட அரியலூர் மாவட்டம் – டி.பாலூர், செங்கல்பட்டு மாவட்டம் – மேடவாக்கம், புதுக்கோட்டை மாவட்டம் – விராச்சிலை, முத்துப்பட்டிணம், திண்டுக்கல் மாவட்டம் – ஐயம்பாளையம், காஞ்சிபுரம் மாவட்டம் – சாலவாக்கம், கரூர் மாவட்டம் – நச்சலூர், தூத்துக்குடி மாவட்டம் – ஈராட்ச்சி, கிருஷ்ணகிரி மாவட்டம் – உரிகம், நாகபட்டினம் மாவட்டம் – திருமருகல், நாமக்கல் மாவட்டம் –

திம்மராவுத்தம்பட்டி, விருதுநகர் மாவட்டம் – எரிச்சநத்தம், திருவள்ளூர் மாவட்டம் – கவரப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டம் – அடிஅண்ணாமலை, வேலூர் மாவட்டம் – பீஞ்சமந்தை, விழுப்புரம் மாவட்டம் – மேல்செவலம்பாடி ஆகிய 16 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தலா ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.4 கோடி செலவில் செவிலியர் குடியிருப்புகள் கட்டப்படும்.

35) 74 பச்சிளம் குழந்தைகள் சிகிச்சை மையங்களுக்கு (Special Newborn Care Unit) ரூ.3.83 கோடி செலவில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

பச்சிளம் குழந்தைகள் சிகிச்சைக்காக ரூ.3.83 கோடி செலவில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் அமைந்துள்ள 74 சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்களுக்கு (Special Newborn Care Unit) சிரிஞ்சி பம்ப், வார்மர், போட்டோதெரபியூனிட், மல்டிபாராமானிட்டர், சிபேப், ஆகிய நவீன உபகரணங்கள் வழங்கப்படும். இதன் வாயிலாக பச்சிளங் குழந்தைகளுக்கு உயர் சிகிச்சைகள் அளிக்கப்படும்.

36) முதன்முறையாக தமிழ்நாட்டில் சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ‘அரியவகை இரத்த சிவப்பணுக்கள் உறைநிலை சேமிப்பு அலகு’ (Frozen Red Blood Cell Storage Unit) ரூ.3.75 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் முதன்முறையாக சென்னை இராஜீவ் காந்தி

அரசு பொது மருத்துவமனையில் அவசர மற்றும் பேரிடர் கால மேலாண்மைக்காக அரியவகை இரத்த சிவப்பணுக்கள் உறைநிலை சேமிப்பு அலகு (Frozen Red Blood Cell Storage Unit) ரூ.3.75 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

37) 3 தாய்சேய் நல திறன் பயிற்சி பள்ளிகளில் ரூ.3.55 கோடி செலவில் புதிய விடுதிகள் கட்டப்படும்.

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறையின் கீழ் செயல்படும் மதுரை மாவட்டம் – சமயநல்லூர், நாமக்கல் மாவட்டம் – மாணிக்கம்பாளையம் மற்றும் திருநெல்வேலி தாய்சேய் நலத் திறன் பயிற்சிப் பள்ளி ஆகிய 3 பயிற்சி பள்ளிகளில் புதிய தங்கும் விடுதிகள் ரூ.3.55 கோடி செலவில் அமைக்கப்படும்.

38) காது கேளாமை தடுப்பு சிகிச்சைக்காக அனைத்து மருத்துவப் பணியாளர்களுக்குப் பயிற்சிகள் மற்றும் 14 அரசு மருத்துவமனைகளில் ஒலிபுகா அறைகள் (Sound Proof Room) ரூ.4.22 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

அனைத்து மாவட்டங்களிலும் தேசிய காது கேளாமை தடுப்பு மற்றும் கட்டுபாட்டுத் திட்டத்தின்கீழ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் முதல் துணை சுகாதாரம் நிலையம் வரை உள்ள அனைத்து பணியாளர்களுக்கும் 7 கட்ட பயிற்சிகள் ரூ.3.52 கோடி செலவில் அளிக்கப்படும்.

மேலும், நீலகிரி, விருதுநகர், நாமக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், திருப்பூர், திருவள்ளூர், திண்டுக்கல்,

திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திண்டிவனம் ஆகிய 13 அரசு மருத்துவமனைகளில் மற்றும் விழுப்புரம் மாவட்டம் – முகையூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் தலா ரூ.5 இலட்சம் செலவில் மொத்தம் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் ஒலிபுகா அறைகள் (Sound Proof Room) ஏற்படுத்தப்படும். இதன் மூலம் காது கேளாமை நோயை உரிய நேரத்தில் கண்டறிந்து சிகிச்சை வழங்க வழிவகை செய்யப்படும்.

39) 11 அரசு மருத்துவமனைகளுக்குக் காது கேளாமை தடுப்பு சிகிச்சைக்காக உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் ரூ.2.25 கோடி செலவில் வழங்கப்படும்.

வாலாஜாபேட்டை, மயிலாடுதுறை, தென்காசி, திருப்பத்தூர், திண்டிவனம், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், கள்ளக்குறிச்சி, திருப்பூர், விருதுநகர் ஆகிய 11 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்குக் காது கேளாமை தடுப்பு சிகிச்சைக்காக உயர் தொழில்நுட்ப மருத்துவ உபகரணங்களான (Hightech Ear Equipment) மைக்ரோஸ்கோப், ஒ.ஏ.இ. பெரா (OAE with BERA), ஆடியோகிராம் ஆகியவை ரூ.2.25 கோடி செலவில் வழங்கப்படும். இதனால் சிறியவர்கள் முதல் முதியோர்கள் வரை அனைவருக்கும் காது கேளாமையை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அறுவைச் சிகிச்சை மூலம் உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் மூலம் சரிசெய்யப்படும்.

40) கண் அறுவைச் சிகிச்சை அரங்கங்கள் மற்றும் நவீன உபகரணங்கள் தேசிய பார்வை இழப்பு தடுப்பு

திட்டத்தின்கீழ் ரூ.5.70 கோடி செலவில் புதியதாக வழங்கப்படும்.

இராணிப்பேட்டை மாவட்டம் – அரக்கோணம், புதுக்கோட்டை மாவட்டம் – அறந்தாங்கி, இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி மற்றும் சேலம் மாவட்டம் – ஆத்தூர் அரசு மருத்துவமனைகள், தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை ஆகியவற்றில் கண் அறுவை சிகிச்சை அரங்கங்கள் தலா ரூ.70 இலட்சம் செலவில் மொத்தம் ரூ.3.50 கோடி செலவில் புதியதாக அமைக்கப்படும்.

மேலும், திருவள்ளூர், தென்காசி, திருப்பத்தூர், பெரியகுளம், ஆற்காடு, ஸ்ரீரங்கம், மேட்டூர், பத்மநாபபுரம் ஆகிய மாவட்ட அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.2.20 கோடி செலவில் ஆப்தால்மோஸ்கோப் (Ophthalmoscope), ரெட்டினோஸ்கோப் போன்ற நவீன கண் சிகிச்சை உபகரணங்கள் வழங்கப்படும்.

41) கரூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு நடமாடும் கண் சிகிச்சை வாகனங்கள் ரூ.1.50 கோடி செலவில் வழங்கப்படும்.

கரூர் மற்றும் நாகப்பட்டினம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், திருவண்ணாமலை மாவட்டம் – செய்யார், தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம் மற்றும் கடலூர் ஆகிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்குக் கண் பரிசோதனை மேற்கொள்ள ரூ.1.50 கோடி செலவில் 5 நடமாடும் கண் சிகிச்சை வாகனங்கள் வழங்கப்படும். இதன் மூலம்

தேசிய பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சேவைகள் மேம்படுத்தப்படும்.

42) காசநோய் இல்லா தமிழ்நாட்டை உருவாக்கத் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் விவரங்களை அரசுக்குத் தெரிவிக்கும் முறையை ஊக்கப்படுத்த (Patient - Provider Support Agency) ரூ.7.16 கோடி செலவிடப்படும்.

தேசிய காசநோய் ஒழிப்பு திட்ட இலக்கான 2025ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிக்கும் நோக்கில் புதுக்கோட்டை, திருவாரூர், காஞ்சிபுரம், கரூர், பெரம்பலூர், தேனி, திருவள்ளூர், நீலகிரி, தூத்துக்குடி, கடலூர், திருவண்ணாமலை, விருதுநகர், இராமநாதபுரம், விழுப்புரம், திண்டுக்கல், சென்னை, கிருஷ்ணகிரி, சிவகங்கை, நாமக்கல், கன்னியாகுமரி, வேலூர், தருமபுரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 23 மாவட்டங்களிலும், தூத்துக்குடி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிகளிலும் தனியார் மருத்துவமனைகள் காசநோயைக் கண்டறிந்து அரசுக்குத் தெரிவிக்கும் முறை (Patient - Provider Support Agency) ஊக்கப்படுத்தும் ரூ.7.16 கோடி செலவில் ஊக்கப்படுத்தப்படும்.

43) 7 மாவட்டங்களில் காசநோய் அறிகுறிகள் குறித்த கணக்கெடுப்பு மற்றும் 3 மாவட்டங்களில் இக்ரா (IGRA) பரிசோதனை மூலம் காசநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை வழங்க ரூ.3.85 கோடி செலவிடப்படும்.

2025இல் காசநோய் இல்லா தமிழ்நாட்டை உருவாக்க

மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் ஒன்றாகத் தூத்துக்குடி, கரூர், சிவகங்கை, தஞ்சாவூர், திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் ரூ.3.38 கோடி செலவில் சமூக அளவில் காசநோய் அறிகுறிகள் (vulnerability mapping) குறித்த கணக்கெடுப்பு மருத்துவத் துறை ஊழியர்கள் மூலம் மேற்கொள்ளப்படும். திருவண்ணாமலை, திருவள்ளூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளில் உள்ள மற்ற நோய் அறிகுறியில்லாத 18 வயது மேற்பட்ட நபர்களுக்கு (Latent Tuberculosis) காசநோய் இக்ரா (IGRA) பரிசோதனை மூலம் நோயின் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அவர்களுக்கு உரியச் சிகிச்சைகள் வழங்கப்படும். இதற்காக ரூ.47.12 இலட்சம் செலவிடப்படும்.

44) 40 டயாலிசிஸ் (Dialysis) புதிய கருவிகள் ரூ.2.60 கோடி செலவில் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும்.

நாள்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் (Chronic Kidney Disease) சிகிச்சைக்காக, தனியார் மையங்களில் செலவிடப்படும் தனிமனித செலவினங்களை குறைக்கும் பொருட்டு, நடப்பு ஆண்டில் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 6 கருவிகள், கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு 4 கருவிகள், புதுக்கோட்டை மாவட்டம் – திருமயம் அரசு மருத்துவமனைக்கு 10 கருவிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துறையூர் அரசு மருத்துவமனைக்கு 6 கருவிகள், அரியலூர் மாவட்டம் –

செந்துறை அரசு மருத்துவமனைக்கு 5 கருவிகள், மயிலாடுதுறை மாவட்டம் – சீர்காழி அரசு மருத்துவமனைக்கு 4 கருவிகள், திருவாரூர் மாவட்டம் – திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு 3 கருவிகள், நாமக்கல் மாவட்டம் – பரமத்திவேலூர் அரசு மருத்துவமனைக்கு 2 கருவிகள் என 40 டயாலிசிஸ் (Dialysis) புதிய கருவிகள் ரூ.2.60 கோடி செலவில் வழங்கப்படும்.

45) வேலூர் மற்றும் ஆவடி மாநகராட்சிகளில் 30 படுக்கை வசதி கொண்ட சமுதாய நல மையங்கள் தலா ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ரூ.3 கோடி செலவில் கட்டப்படும்.

மாநகராட்சி பகுதியில் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்குத் தேசிய நகர்ப்புற நலவாழ்வு குழுமத்தின் மூலம் சிறப்பு மருத்துவச் சிகிச்சைகளை மேம்படுத்தவும் மற்றும் பெருந்தொற்று காலங்களில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படும் நெருக்கடி நிலையைக் கையாளும் விதமாக, 2.5 இலட்சம் மக்கள் தொகைக்கு, ஒரு நகர்ப்புற சமுதாய நல மையம் (Urban Community Health Centre) அமைக்கும் வகையில் இந்நிதி ஆண்டில் ஆவடி மாநகராட்சியில் உள்ள விளிஞ்சியம்பாக்கம், வேலூர் மாநகராட்சியில் உள்ள தொரப்பாடி ஆகிய இடங்களில் தலா ரூ.1.50 கோடி செலவில் மொத்தம் ரூ.3 கோடியில் 30 படுக்கை வசதி கொண்ட சமுதாய நல மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு பல்துறை மருத்துவச் சிகிச்சைகள் வழங்கப்படும்.

46) பிரத்யேக இரத்தம் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அலகு சிகிச்சை மையம் (Paediatric Bone Marrow Transplant Unit) சென்னை எழும்பூர் அரசு சிறார் நல நிலையம் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் ரூ.2.56 கோடி செலவில் அமைக்கப்படும்.

குழந்தைகளுக்கு நோய்த் தொற்று மற்றும் கீமோதெரபி சிகிச்சை மூலமாகச் சேதமடையும் எலும்பு மஜ்ஜையை மாற்றுவதற்காகச் சென்னை எழும்பூர் அரசு சிறார் நல நிலையம் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் குழந்தைகளுக்கான பிரத்தியேக இரத்தம் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அலகு சிகிச்சை மையம் (Paediatric Bone Marrow Transplant Unit) ரூ.2.56 கோடி செலவில் அமைக்கப்படும்.

47) மரபணு பகுப்பாய்வுக் கூடம் (Whole Genome Sequencing) ரூ.4 கோடி செலவில் சென்னை டி.எம்.எஸ். வளாக பொதுச் சுகாதார ஆய்வகத்தில் நிறுவப்படும்.

கொரோனா நோய்த் தொற்றின் தீவிரம் மற்றும் தன்மை குறித்த முழு மரபணு பகுப்பாய்வு முறையை மற்றும் வைரஸ் பரவுதலைக் கண்டறிய உதவும் மரபணு பகுப்பாய்வுக் கூடம் (Whole Genome Sequencing) ரூ.4 கோடி செலவில் டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள பொதுச் சுகாதார ஆய்வகத்தில் நிறுவப்படும்.

48) சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவு புதியதாக 5 மருத்துவமனைகளிலும், வெளி மருத்துவமனைகளிலிருந்து வரும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவு 2 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ரூ.3.87 கோடி செலவீட்டில் உருவாக்கப்படும்.

சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவு (Special Newborn Care Unit) இராணிப்பேட்டை மாவட்டம் – வாலாஜா அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் தேனி மாவட்டம் – பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம் அரசு மருத்துவமனை மற்றும் திருநெல்வேலி மாவட்டம் – அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனை, திருப்பத்தூர் மாவட்டம் – புதூர்நாடு அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் (மலைப்பகுதி சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவு) ஆகிய அரசு மருத்துவமனைகளில் ரூ.2.37 கோடி செலவில் மருத்துவர்கள், செவிலியர்கள் பணியமர்த்துவதோடு, மருத்துவ உபகரணங்களும் வழங்கப்படும்.

மதுரை இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவமனைகளில் பிற மருத்துவமனைகளிலிருந்து பரிந்துரைக்கப்படும் பச்சிளம் குழந்தைகளுக்குத் தனிக் கவனத்துடன் சிகிச்சை அளிக்க, சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு (Extra Mural SNCU) ஏற்படுத்தப்படும். இப்பிரிவிற்கு மல்டிபாராமானிட்டர், பல்ஸ் ஆக்ஸிமீட்டர், சிபேப், சிரிஞ்சி பம்ப், வார்மர் மற்றும் போட்டோதெரபி உள்ளிட்ட கருவிகள் ரூ.1.50 கோடி செலவில் வழங்கப்படும்.

49) 10 மாவட்டங்களில் புகையிலை கட்டுப்பாடு மையங்கள் ரூ.2.35 கோடியில் செலவில் நிறுவப்படும்.

தூத்துக்குடி, கன்னியாகுமரி, அரியலூர், பெரம்பலூர், ஈரோடு, சேலம், நாமக்கல், திருவள்ளூர், வேலூர், தருமபுரி ஆகிய 10 மாவட்டங்களில் புகையிலை கட்டுப்பாடு மையங்கள் (Tobacco Control Cell) ரூ.2.35 கோடி செலவில் நிறுவப்படும்.

50) சிறப்புக் குழந்தைகளுக்கான உணர்திறன் சிகிச்சை பூங்கா (Sensory Therapeutic Park) ரூ.2.24 கோடி செலவில் 16 மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும்.

சென்னை ஸ்டான்லி, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தேனி, விழுப்புரம், திருவாரூர், சிவகங்கை, கரூர், தஞ்சாவூர் இராஜா மிராசுதார், நாமக்கல், திருவண்ணாமலை, நீலகிரி, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் கடலூர் மாவட்ட தலைமை மருத்துவமனை ஆகியவற்றில் சிறப்புக் குழந்தைகளுக்கான (Special Child) உணர்திறன் சிகிச்சை பூங்கா (Sensory Therapeutic Park) ரூ.2.24 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

51) இரத்த சேகரிப்பு பைகளைக் கண்காணிக்க 2 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு கதிரியக்க அலைவீச்சு கருவி (Radio Frequency Identification Device) ரூ.2.08 கோடி செலவில் வழங்கப்படும்.

மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சென்னை இராஜீவ் காந்தி அரசு

பொது மருத்துவமனைகளில் செயல்படும் இரத்த வங்கிகளில், இரத்த வகைபாடுகளை (Blood grouping) உறுதிப்படுத்தவும், நோயாளிகளுக்குச் சரியான இரத்த வகைப்பாடுள்ள இரத்தம் செலுத்தி, பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இரத்த சேகரிப்பு பைகளைக் கண்காணிக்க ரூ.2.08 கோடி செலவில் கதிரியக்க அலைவீச்சு கருவி (Radio Frequency Identification Device) வழங்கப்படும்.

52) குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களைக் கண்டறியும் பயிற்சிகள் தென்காசி, பெரம்பலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.1.76 கோடி செலவில் வழங்கப்படும்.

தென்காசி, பெரம்பலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் “பள்ளி சிறார் நலக் கல்வித் திட்டம்” மூலமாகப் பள்ளிக் குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களைக் கண்டறிந்து மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைக்குப் பரிந்துரைக்க ரூ.1.76 கோடி செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

53) சேலம் மாவட்டம் – கோனேரிப்பட்டி அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் குடியிருப்பு ரூ.1.32 கோடி செலவில் கட்டப்படும்.

சேலம் மாவட்டம், கோனேரிப்பட்டி அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர்கள் அங்கேயே தங்கி

பணிபுரியும் வகையில் 4 குடியிருப்புகள் ரூ.1.32 கோடி செலவில் கட்டப்படும்.

54) 24 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் படுக்கை வசதியுடன் கூடிய மின் கல ஊர்தி (Battery Car with Stretcher) ரூ.1.30 கோடி செலவில் வழங்கப்படும்.

சென்னை இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம், இராயப்பேட்டை, ஓமந்தூரார் அரசு மருத்துவமனை, தருமபுரி, IRT பெருந்துறை, கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, கரூர், மதுரை, புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், விருதுநகர், செங்கல்பட்டு, மற்றும் திண்டுக்கல் ஆகிய 24 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை முன்னெடுப்பு திட்டத்தின்கீழ் மருத்துவ வளாகத்திற்குள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நோயாளியைத் தேவைப்படும் சிகிச்சையை மேற்கொள்ளக் கொண்டு செல்வதற்கு, படுக்கை வசதியுடன் கூடிய மின் கல ஊர்தி (Battery Car with Stretcher) ரூ.1.30 கோடி செலவில் வழங்கப்படும்.

55) 6 மாவட்டங்களில் புதியதாக மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள் ரூ.1.27 கோடி செலவில் உருவாக்கப்படும்.

திருநெல்வேலி, விழுப்புரம், செங்கல்பட்டு, வேலூர்,

திருப்பத்தூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய **6** மாவட்டங்களில் ஏற்படக்கூடிய கொள்ளை நோய்களை (Epidemic) ஆய்வக பரிசோதனை மூலம் உறுதிசெய்து, நோய் கண்காணிப்பு பணியினை தீவிரப்படுத்தவும், நோய் பரவலைத் தடுக்கவும் மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள் (District Public Health Laboratory) ரூ.1.27 கோடி செலவில் உருவாக்கப்படும்.

56) ஒருங்கிணைந்த நச்சு மேலாண்மை ஒப்புயர்வு மையங்கள் (Comprehensive Poison Management Centres) பொள்ளாச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் பெரம்பலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் ஹப் மற்றும் ஸ்போக் முறையில் ஒருங்கிணைந்த நச்சு மேலாண்மை ஒப்புயர்வு மையங்கள் (Comprehensive Poison Management Centres) ஏற்படுத்தப்படும்.

57) 19 நகர்ப்புற ஆரம்பச் சுகாதார மையங்களுக்கு நவீன கருவிகள் ரூ.1.27 கோடி செலவில் வழங்கப்படும்.

ஒருங்கிணைந்த நகர்ப்புற ஆரம்பச் சுகாதார சேவைகளை மேம்படுத்தத் திண்டுக்கல் மாநகராட்சி – பழனி ரோடு, சவேரியார் பாளையம், மரியநாதபுரம், வேலூர் மாநகராட்சி – கொணவட்டம், தொரப்பாடி, தரப்படவேடு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – பீமாநகர், காட்டூர், கோயம்புத்தூர் மாநகராட்சி – இரத்தினபுரி, சேலம் மாநகராட்சி – சுப்ரமணியநகர், மதுரை

மாநகராட்சி – பைக்காரா, தருமபுரி மாவட்டம் – தருமபுரி, தஞ்சாவூர் மாவட்டம் – பட்டுக்கோட்டை, தென்காசி மாவட்டம் – கிருஷ்ணாபுரம், விருதுநகர் மாவட்டம் – அருப்புக்கோட்டை, திருப்பத்தூர் மாவட்டம் – வாணியம்பாடி, திருவள்ளூர் மாவட்டம் – திருவள்ளூர், கோவில்பட்டி சுகாதார மாவட்டம் – ஸ்ரீராம் நகர், விழுப்புரம் மாவட்டம் – கீழ்பெரும்பாக்கம், ஆகிய 19 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், மல்ட்டிபாராமானிட்டர், ஈ.சி.ஜி, மற்றும் செமிஆட்டோ அனலைசர் கருவிகள் வழங்கப்படும்.

58) தாய்ப்பால் வங்கிகள் (Human Breast Milk Bank) 12 அரசு மருத்துவமனைகளில் ரூ.1.20 கோடி செலவில் நிறுவப்படும்.

அரியலூர், கள்ளக்குறிச்சி, கரூர், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், உதகமண்டலம், விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஒசூர், பழனி, ஈரோடு, அறந்தாங்கி, மணப்பாறை ஆகிய 12 அரசு மருத்துவமனைகளில் ரூ.1.20 கோடி செலவில் தாய்ப்பால் வங்கிகள் (Human Breast Milk Bank-Lactation Management Units) நிறுவப்படும்.

59) கர்ப்பிணித் தாய்மார்களுக்கு யோகா பயிற்சிகள் ரூ.1.19 கோடி செலவில் வழங்கப்படும்.

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ‘மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்’ – நலவாழ்வு மையங்களில் பொதுமக்கள்,

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.1.19 கோடி செலவில் யோகா பயிற்சிகள் வழங்கப்படும்.

60) 5,686 துணை சுகாதார நிலையங்களுக்கு இரத்த அழுத்தத்தைக் கண்டறியும் கருவிகள் (BP Apparatus) ரூ.1.14 கோடி செலவில் வழங்கப்படும்.

தொற்றா நோய் கண்டறிதல் திட்டத்தின் கீழ் 5,686 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூ.1.14 கோடி செலவில் இரத்த அழுத்தத்தைக் கண்டறியும் கருவிகள் (BP Apparatus) வழங்கப்படும்.

61) கர்ப்பிணித் தாய்மார்கள் பரிசோதனைக்காக 10 அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் கருவிகள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூ.1.10 கோடி செலவில் வழங்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள திருவொற்றியூர், மணலி, புழல், ஆர்.கே. நகர், புளியந்தோப்பு, பாடி, அயனாவரம், மீர்சாகிப்பேட்டை, வடபழனி மற்றும் போரூர் ஆகிய 10 நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்களில் கர்ப்பிணித் தாய்மார்கள் பரிசோதனைக்காக அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் (Ultrasound Scan) கருவிகள் ரூ.1.10 கோடி செலவில் வழங்கப்படும்.

62) மாவட்ட மன நலத் திட்டம் ரூ.85 இலட்சம் செலவில் 5 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

செங்கல்பட்டு, திருப்பத்தூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்களில் ரூ.85 இலட்சம்

செலவில் மாவட்ட மன நலத் திட்டம் (District Mental Health Programme) விரிவுபடுத்தப்பட்டு, இத்திட்டத்தின் மூலமாக மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் மனநல உள்நோயாளிகள் பிரிவும், மாவட்டத்தின் அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சிறப்பு மனநல புறநோயாளிகள் பிரிவும் ஏற்படுத்தப்படும்.

63) மலைவாழ் மக்களிடையே காணப்படும் மரபணு நோய்களுக்கான சிகிச்சை மைய கட்டடம் தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.75 இலட்சம் செலவில் கட்டப்படும்.

மலைவாழ் மக்களிடையே காணப்படும் சிக்கில்செல் மற்றும் தலசீமியா எனப்படும் மரபணு நோய்களுக்கான சிகிச்சை மைய கட்டடம் தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.75 இலட்சம் செலவில் கட்டப்படும்.

64) 1969ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த பிறப்பு, இறப்பு பதிவேடுகளை (Civil Registration System) ரூ.75 இலட்சம் செலவில் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

அனைத்து மாவட்டங்களிலும் 1969ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த பிறப்பு, இறப்பு பதிவுகளை (Civil Registration System) இணையத்தில் பதிவேற்றம் செய்ய ரூ.75 இலட்சம் செலவில் நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் பொதுமக்கள் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களுக்காக

உள்ளாட்சி அமைப்பு அலுவலகங்களுக்கு நேரடியாக சென்று அலையாமல், இணையவழி மூலமாகப் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

65) 14 மாநகராட்சிகளில் மருத்துவம் சார்ந்த தகவல்கள் GIS (Geographical Information System) செயலி மூலம் ரூ.71 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப்படும்.

மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், தூத்துக்குடி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், வேலூர், ஒசூர் மற்றும் ஆவடி ஆகிய 14 மாநகராட்சிகளில் அனைத்து மருத்துவம் சார்ந்த தகவல்களை GIS (Geographical Information System) செயலி மூலம் ரூ.71இலட்சம் செலவில் கணினிமயமாக்கப்படும்.

66) 15 அரசு மருத்துவமனைகளில் உள்ள இரத்த வங்கி மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்களுக்கு உபகரணங்கள் வழங்கவும், 5 புதிய இரத்த சேமிப்பு மையங்களை ஏற்படுத்தவும் ரூ.1.15 கோடி செலவிடப்படும்.

வால்பாறை, சிதம்பரம், விருத்தாசலம், கடலூர், தாம்பரம், தேன்கனிக்கோட்டை, சீர்காழி, பரமக்குடி, இராமேஸ்வரம், கமுதி, ஓமலூர், கூடலூர், செய்யாறு, ஆரணி, திருத்துறைப்பூண்டி ஆகிய 15 அரசு மருத்துவமனைகளில் இரத்த வங்கி மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்களுக்குக் கூடுதல் உபகரணங்கள் ரூ.61.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

மேலும், நாமக்கல் மாவட்டம் – பரமத்திவேலூர், தூத்துக்குடி மாவட்டம் – விளாத்திகுளம், இராணிப்பேட்டை மாவட்டம் – ஆற்காடு, விழுப்புரம் மற்றும் திருத்தங்கல் அரசு மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு மையங்கள் தலா ரூபாய் 10 இலட்சம் செலவில் மொத்தம் ரூ.50 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

67) 38 அரசு மருத்துவமனைகளுக்கு நுரையீரல் செயல்பாட்டினை கண்டறியும் ஸ்பைரோமீட்டர் (Spirometer) கருவி ரூ.56.62 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

38 அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.56.62 இலட்சம் செலவில் நுரையீரல் செயல்பாட்டினை கண்டறியும் ஸ்பைரோமீட்டர் (Spirometer) கருவிகள் வழங்கப்படும்.

68) கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியும் மேக்னாவிசன் (Magna Vision) உபகரணம் அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.42 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் பெண்களுக்கு ஏற்படும் கொடிய நோய்களில் ஒன்று கருப்பைவாய் புற்றுநோய், இந்நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும் நிலையில் 100 விழுக்காடு குணப்படுத்த முடியும். இதற்கு மேக்னாவிசன் உபகரணங்கள் மிகவும் உறுதுணையாக உள்ளது. இந்த உபகரணம் அரசு ஆரம்பச் சுகாதார

நிலையங்கள் உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.42 இலட்சம் செலவில் கூடுதலாக வழங்கப்படும்.

69) உசிலம்பட்டி மற்றும் பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு இதயநோய் பரிசோதனைக்காக எக்கோ (ECHO) கருவிகள் ரூ.25.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

உசிலம்பட்டி, பெரம்பலூர் ஆகிய இரண்டு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு இதயநோய் பரிசோதனைக்காக எக்கோ (ECHO) கருவிகள் ரூ.25.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

70) 'சற்றே குறைப்போம்' என்ற திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்குச் சர்க்கரை, உப்பு, எண்ணெய் பயன்பாட்டை படிப்படியாகக் குறைப்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

தமிழர்களின் பாரம்பரிய உணவு சரிவிகித உணவாக இருந்தது. நமது புதிய வாழ்க்கை முறையில் சர்க்கரை, உப்பு, எண்ணெய் வகைகள், உடம்பின் தேவைக்கு அதிகமாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். சரிவிகித உணவை உறுதிச் செய்ய சர்க்கரை, உப்பு, எண்ணெய் வகைகளை அதிகமாக எடுத்துக் கொள்வதை படிப்படியாகக் குறைக்கப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 'சற்றே குறைப்போம்' என்ற திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

71) விடுதிகள், விழாக் காலங்களில் உபரி உணவை வீணாக்காமல் பயன்படுத்த பரீட்சார்த்த ரீதியாக 10 மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்படும்.

நட்சத்திர விடுதிகளிலும், விழாக் காலங்களிலும், பயன்படுத்த உகந்த அதிகப்படியான உணவு, வீணாவதை தவிர்க்கும் விதமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, வீணாகக்கூடிய உபரி உணவை – உணவை நாடுகின்ற எளியோருக்கு சேர்க்கும் திட்டம், முதல் கட்டமாக 10 மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்படும்.

72) உபயோகித்த சமையல் எண்ணெயின் மறு பயன்பாட்டை தடுக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அதிலிருந்து பயோ – டீசல் உற்பத்தி செய்வது உறுதிப்படுத்தப்படும்.

ஒரு முறை உபயோகித்த சமையல் எண்ணெயை மீண்டும், மீண்டும் உபயோகிப்பதால் உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், குடல் அழற்சி, மஞ்சள் காமாலை போன்ற பல்வேறு நோய்களுக்குக் காரணமாகிறது. ஒரு முறை உபயோகித்த எண்ணெய்யை மீண்டும் உணவு தயாரிக்கப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், மறுபயன்பாடு செய்திட ஏதுவாக உணவகங்கள் மற்றும் துரித உணவு உற்பத்தியாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். ஒரு முறை உபயோகித்த சமையல் எண்ணெய்யைச் சேகரித்து அதிலிருந்து பயோ – டீசல் உற்பத்தி செய்வது உறுதிப்படுத்தப்படும்.

73) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2022 ஜனவரி முதல் மேலும் ஐந்தாண்டுகளுக்குத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். இதற்கென நடப்பாண்டில் ரூ.1,248.29 கோடி செலவிடப்படும்.

தற்போது செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் வரும் ஜனவரி 2022இல் முடிவு பெறுகிறது. அதனைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலும் அதிக சிகிச்சை முறைகளுடன், பொதுத்துறை காப்பீட்டு நிறுவனத்தின் மூலம், ஏழை, எளிய திட்டப் பயனாளிகள் அதிகபட்சம் ஆண்டு ஒன்றுக்கு குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் வரையில் கட்டணமில்லா சிகிச்சை பெறும் வகையில் செயல்படுத்தப்படும். இதற்கென நடப்பாண்டில் ரூ.1,248.29 கோடி செலவிடப்படும்.

74) மார்பக புற்றுநோய் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியும் மற்றும் சிகிச்சை கருவிகள் ரூ.6.98 கோடி செலவில் வழங்கப்படும்.

பெண்களிடையே மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் பாதிப்பு மற்றும் இறப்பு விகிதம் மிக அதிகமாக உள்ளது. இதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதன் மூலம் உரியச் சிகிச்சை முறையைத் துவங்கலாம். இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மார்பகப் புற்றுநோய் கண்டறியும் மேமோகிராம் (Mammogram) கருவிகளும், 35 அரசு வட்டார மருத்துவமனைகள் மற்றும் 3 அரசு

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு தெர்மோகொயாகுலேட்டர் கருவிகளும், 176 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 12 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 12 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு செமிஆட்டோ அனலைசர் கருவிகளும் ரூ.6.98 கோடி செலவில் வழங்கப்படும்.

75) "கர்ப்பகால பரிசோதனை பெட்டகம்" அரியலூர், இராமநாதபுரம் உள்ளிட்ட 10 முன்னுரிமை மாவட்டங்களில் உள்ள 2,249 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூ.2.59 கோடி செலவில் வழங்கப்படும்.

ஆரம்ப நிலையிலேயே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதன் காரணமாக வரும் வலிப்பு நோயினை தடுக்கவும் மற்றும் குழந்தையின் இருதயத் துடிப்பினை கண்டறியவும் டிஜிட்டல் இரத்த அழுத்தக் கருவி, எடை பார்க்கும் கருவி மற்றும் இருதயத் துடிப்பு கண்டறியும் கருவி ஆகியவைகள் அடங்கிய கர்ப்பகால பரிசோதனை பெட்டகம் ரூ.2.59 கோடி செலவில் முன்னுரிமை மாவட்டங்களான அரியலூர், இராமநாதபுரம், தேனி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி, நீலகிரி, தருமபுரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 2,249 துணை சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படும்.

76) விபத்து மற்றும் காயப் பதிவேடு (TAEI Registry) ரூ.1.56 கோடி செலவில் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் விரிவுப்படுத்தப்படும்.

அவசரச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவோரின்

உடல்நிலையினை தொடர்ந்து கணினி மூலம் கண்காணிக்கும் வகையில் தற்போது விபத்து மற்றும் காயப் பதிவேடு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை மற்றும் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, விபத்து மற்றும் காயப் பதிவேடு ரூ.1.56 கோடி செலவில் உருவாக்கப்படும்.

77) கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரத்தசோகை பரிசோதனைக் கருவி விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 245 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூ.78 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

விருதுநகர் மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களிடையே இரத்தசோகை அதிக அளவில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் பேறுகாலத்தின் போது வரும் பின்விளைவுகளைத் தடுக்கும் வண்ணம் ஆரம்ப நிலையிலேயே இரத்தசோகை பரிசோதனை மேற்கொள்ள 245 சுகாதார நிலையங்களுக்கு இரத்தசோகை பரிசோதனை கருவி சுமார் ரூ.78 இலட்சம் செலவில் வழங்கப்படும். இதனால் விருதுநகர் மாவட்டத்தில் சுமார் 25,000 கர்ப்பிணித் தாய்மார்கள் பயன்பெறுவர்.

78) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், அரசால் அங்கீகரிக்கப்பட்ட

பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.72,000 வருமானம் உச்சவரம்பின்றி விரிவாக்கம் செய்யப்படும்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம் தற்போது ரூ.72,000ஆக உள்ளது. பத்திரிகையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றும் வண்ணம், அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் வருமான உச்சவரம்பின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயனாளியாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

79) சென்னை கொளத்தூர் – பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு ரூ.2.90 கோடி செலவில் மேம்படுத்தப்படும். மேலும் ரூ.75 இலட்சம் செலவில் டயாலிசிஸ் (Dialysis) மையம் ஒன்றும் அமைக்கப்படும்.

சென்னை கொளத்தூர், பெரியார் நகர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை சேவையை மேம்படுத்த வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் பெரியார் நகர் அரசு மருத்துவமனை விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு மற்றும் மனிதவளம் மேம்படுத்துவதற்காக சுமார் ரூ.2.90 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

மேலும் ரூ.75 இலட்சம் செலவில் 10 கருவிகளுடன் புதிய டயாலிசிஸ் (Dialysis) மையம் ஏற்படுத்தப்படும்.

80) மனநலம் குன்றிய ஆதரவற்ற நோயாளிகளுக்கான மீட்பு சேவைகள் 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் விரிவுபடுத்தப்படும்.

மனநலம் குன்றிய ஆதரவற்ற நோயாளிகளுக்கான மீட்பு சேவைகள் 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் (விழுப்புரம், திருவண்ணாமலை, திருநெல்வேலி நீங்கலாக) ஆரம்பிக்கப்படும். இம்மருத்துவமனைகளில் உள்ள மனநலப் பிரிவுகளில் 10 பிரத்தியேக படுக்கைகள் ஒதுக்கப்பட்டு மனநலம் குன்றிய ஆதரவற்ற நோயாளிகள் மீட்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படும்.

81) தாய்மார்களுக்குப் பிரசவத்திற்குப் பிந்தைய மன அழுத்தத்தைத் தடுக்கும் விதமாக மனநல நிபுணர்களால் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்படும்.

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மகப்பேறியல் துறையில் தாய்மார்களுக்குப் பிரசவத்திற்குப் பிந்தைய மன அழுத்தத்தை தடுக்கும் விதமாக மனநல நிபுணர்களால் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்படும்.

82) குழந்தைகள் “இணைய அடிமை” (Internet Addiction) நோய்க்கு ஆளாவதைத் தடுக்க அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மனநல நிபுணர் குழுவால் சிறப்பு ஆலோசனை வழங்கப்படும்.

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் குழந்தைகள் நலப் பிரிவுகளில்

குழந்தைகளிடையே அலைபேசி பயன்பாட்டைக் குறைக்கவும், இணைய அடிமை நோய்க்கு (Internet Addiction) ஆளாவதை தடுக்கவும் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்படும். இதற்கென ஆலோசகர்கள் மற்றும் மனநல நிபுணர்கள் அடங்கிய சிறப்புக் குழு நியமிக்கப்படும்.

83) அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் முதியோர் மற்றும் மனநலம் குன்றியவர்களுக்கு "தினசரி பராமரிப்பு மையங்கள்" (Cognitive Rehabilitation Day Care Centres) ஏற்படுத்தப்படும்.

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் முதியோர் மற்றும் மனநலம் குன்றியவர்களுக்கு அறிவாற்றல் மறுவாழ்வுக்காக "தினசரி பராமரிப்பு மையங்கள்" (Cognitive Rehabilitation Day Care Centres) ஏற்படுத்தப்படும்.

84) பிரசவத்திற்குப் பிந்தைய வார்டுகளில் பச்சிளங் குழந்தைகளுக்கு "காது கேட்கும் திறன் பரிசோதனை சேவைகள்" வழங்கப்படும்.

செவிப்புலன் பிரச்சினைகளுக்கான சிறப்பு பரிசோதனை சேவை அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், குழந்தைகளின் காதுகேளாமை மற்றும் பேச்சுப் பிரச்சினைகளை முன்கூட்டியே கண்டறிந்து தடுப்பதற்காக, பிரசவத்திற்குப் பிந்தைய வார்டுகளில் பச்சிளங்

குழந்தைகளுக்கு “செவிப்புலன் பிரச்சினைகளுக்கான சிறப்புப் பரிசோதனை சேவைகள்” நிறுவப்படும்.

85) உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்ட முதியோர்களுக்குப் புற்றுநோய் கண்டுபிடிப்பு பரிசோதனைகள் செய்யப்படும்.

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்ட முதியோர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்த நோய்க்கான சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தாலும் புற்றுநோய் கண்டுபிடிப்பு பரிசோதனைகள் செய்யப்படும்.

86) தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் நுரையீரல் மறுவாழ்வு மையம் (Pulmonary Rehabilitation Centre) நிறுவப்படும்.

தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் கோவிட் – நுரையீரல் மறுவாழ்வு மையம் நிறுவப்படும். இதன் மூலம் கோவிட் பெருந்தொற்றின் பிந்தைய பாதிப்பாக நுரையீரலில் ஏற்படக்கூடிய சுகாதார பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே சரிப்படுத்தச் சிகிச்சைகள் மற்றும் இயன்முறை (Physiotherapy) பயிற்சிகள் வழங்கப்படும்.

87) அதிநவீன அவசர சிகிச்சைத்துறை (Emergency Department) 11 புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிறுவப்படும்.

அனைத்து 11 புதிய மருத்துவக் கல்லூரிகளிலும் பின்வரும்

உள்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய அதிநவீன அவசர சிகிச்சைத்துறை நிறுவப்படும். ஆம்புலன்சுகளுக்கு பிரத்தியேகமான நுழைவாயில் மற்றும் வெளியேறும் வாயில்கள் அமைக்கப்படும். பச்சை, மஞ்சள் மற்றும் சிவப்பு மண்டலங்களுக்கான முத்தரப்பு சிகிச்சை. இ—ஃபாஸ்ட் எக்ஸ்ரே, அல்ட்ராசோனோகிராம், ஆய்வகம், இரத்த வங்கி / இரத்த சேமிப்பு வசதி மற்றும் ரேடியோலஜி போன்ற வசதிகள் ஒரே அமைப்பின் கீழ் கிடைக்கும் வசதி, ஐ.சி.யு., எச்.டி.யு., பிரேம், தனிமைப்படுத்தும் அறை, விஷ நீக்கச் சிகிச்சை அறை (Stomach wash), அவசர அறுவை சிகிச்சை அரங்குகள், செப்டிக் ஆபரேஷன் தியேட்டர்கள் போன்ற வசதிகளுடன் கூடிய அவசர சிகிச்சைத்துறை நிறுவப்படும்.

88) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அமைந்துள்ள ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் (Stem Cell Research Centre) ரூ.2.44 கோடி செலவில் “வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித்துறையாக” (Department of Regenerative Medicine and Research) மேம்படுத்தப்படும்.

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைந்துள்ள ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் (Stem Cell Research Centre) ரூ.2.44 கோடி செலவில் “வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையாக” (Department of Regenerative Medicine and Research)

மேம்படுத்தப்படும். இத்துறையின் செயல்பாட்டிற்காக 11 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.

89) 8 புதிய மருத்துவக் கல்லூரிகளின் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.139.80 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

11 புதிய மருத்துவக் கல்லூரிகளுக்குக் கட்டுமான கட்டடங்கள் கட்ட ஏற்கெனவே ரூ.3,995.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக அதிக நிதி ஒதுக்கக்கோரிய 8 மருத்துவக் கல்லூரிகளுக்கும் ரூ.139.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

90) அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் வழங்கப்படும் ஒட்டு மொத்த சேவைகளின் தகவல்கள் குறித்த மின்னணு பலகைகள் (Digital Display Boards) அமைக்கப்படும்.

ஒவ்வொரு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் அங்கு அளிக்கப்படும் அனைத்து மருத்துவ சேவை வசதிகள் குறித்த தகவல்கள் கொண்ட தமிழ் மற்றும் ஆங்கிலத்திலான மின்னணு காட்சிப் பலகைகள் (Digital Display Boards) பொதுமக்கள் பார்வைக்காக நுழைவு வாயில்களில் அமைக்கப்படும்.

91) தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உறுப்பு மாற்று அங்கீகாரக் குழு அமைக்கப்படும்.

உறுப்பு தானம் செய்யும் நோயாளிகளுக்கான உறுப்பு

மாற்று அங்கீகாரக் குழு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்அமைக்கப்படும்.

92) சென்னை இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.7.75 கோடி செலவில் மின்தூக்கிகள் புனரமைக்கப்படும்.

சென்னை இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மின்தூக்கிகள் மற்றும் மின்சார கருவிகள் ரூ.7.75 கோடி செலவில் புனரமைக்கப்படும்.

93) கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் ஆண்டுக்கு 1,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலம் மீண்டும் புதுப்பொலிவுடன் செயல்படுத்தப்படும்.

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் புதுப்பொலிவுடன் மீண்டும் செயல்படுத்தப்படும். ஆண்டுக்கு 1,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். இம்முகாம்களில் பொது மருத்துவம், மகளிர் மற்றும் குழந்தை, இதயநோய் மருத்துவம், சிறுநீரக மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், தோல் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், எலும்பு மூட்டு மருத்துவம், மனநல மருத்துவம் ஆகிய 10 துறை சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு பொதுமக்களுக்குப் பரிசோதனை செய்து, நோயைக் கண்டறிந்து, தேவைப்படுவோர்க்கு உயர் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு உரிய சிகிச்சைகள் அளிக்கப்படும்.

94) கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி சேவைகள் குறுஞ்செய்திகள் மூலமாக நினைவூட்டும் திட்டம் வலுப்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் 100 விழுக்காடு தடுப்பூசி இலக்கினை அடையவும் சுமார் 10 இலட்சம் தாய்மார்களிடையே தடுப்பூசிகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும், பிரசவத்திற்கு முன் மற்றும் பிரசவத்திற்கு பின் பராமரிப்பு, 9.23 இலட்சம் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் அவர்களுக்குரிய தடுப்பூசிகளை உரியக் காலத்தில் செலுத்துவது பற்றிய சுகாதாரச் சேவைகளை நினைவூட்ட மேம்படுத்தப்பட்ட குறுஞ்செய்திகளின் வாயிலாக விழிப்பூட்டல்கள் வழங்குவதற்கு ஆண்டுதோறும் ரூ.22 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும்.

95) பல்நோக்கு சுகாதார பணியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.

பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர் (Multi Purpose Health Supervisor) மற்றும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (ஆண்) (Multi Purpose Health Worker (Male)) ஆகிய பதவிகளின் பெயரினை மாற்றம் செய்ய பல்வேறு சங்கங்கள் விடுத்த கோரிக்கையினை ஏற்று முறையே சுகாதார ஆய்வாளர் நிலை–1 மற்றும் சுகாதார ஆய்வாளர் நிலை–2 எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.

96) கொசுக்களால் பரவும் நோய்த் தடுப்பு திட்ட நடவடிக்கைகள் ரூ.26.86 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்.

டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா, ஜிகா வைரஸ், யானைக்கால் நோய் மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் போன்ற கொசுக்களால் பரவும் நோய்களை ஒழிக்க, தேவையான கொசு ஒழிப்பு பணியாளர்கள், உபகரணங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் வாங்கி கொசு ஒழிப்பு திட்ட நடவடிக்கைகள் ரூ.26.86 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

97) 19 மாவட்டங்களில்அரசு மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக மாற்றி அமைக்கப்படும்.

13 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாலும், புதியதாக 6 மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாலும், இந்த 19 மாவட்டங்களிலும் தலா ஒரு அரசு மருத்துவமனை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்படும்.

98) செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 மாவட்டங்களுக்கு இணை இயக்குநர் (நலப் பணிகள்) பணியிடங்கள் ரூ.1.11 கோடி செலவில் உருவாக்கப்படும்.

புதியதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, தென்காசி,

கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 மாவட்டங்களில் புதிய இணை இயக்குநர் (நலப் பணிகள்) பணியிடங்கள் ரூ.1.11 கோடி செலவில் உருவாக்கப்படும்.

99) வேலூர் மாவட்டம் காட்பாடியில் 60 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை அமைக்கப்படும்.

வேலூர் மாவட்டம் காட்பாடி தாலுக்காவில், அரசு மருத்துவமனைகள் இல்லாததைக் கருத்தில் கொண்டு, காட்பாடி தாலுக்காவிலுள்ள மக்கள் பயன்பெறும் வகையில் காட்பாடியில் 60 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை அமைக்கப்படும்.

100) தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறையில் வாகன ஒருங்கிணைப்பு தொகுப்பு திட்டம் (Common Pool of Health Department Vehicles) நடைமுறைப்படுத்தப்படும்.

சுகாதாரத் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட பல்வேறு வாகனங்களின், நிர்ணயிக்கப்பட்ட பயன்பாடு முடிவுற்ற நிலையில், அதனைத் தேவைப்படும் பிற சுகாதார திட்டங்களுக்கு பயன்படுத்த ஏதுவாக ஒதுக்கீடு செய்ய ஒரு ஒருங்கிணைப்பு தொகுப்பு திட்டம் (Common Pool of Health Department Vehicles) நடைமுறைப்படுத்தப்படும்.

101) முதியோர் நலனுக்காகச் சித்தர் நிறைவாழ்வு மையம் ரூ.3.25 கோடி செலவில் 100 சுகாதார நிலையங்களில் ஏற்படுத்தப்படும்.

முதியோர் நல்வாழ்வினை உறுதிசெய்யும் பொருட்டு சித்த மருத்துவத்தின் சிறப்புச் சிகிச்சை முறையான "காயகற்ப மருந்துகள்" ஒற்றடம், நீராவிக் குளியல், தொக்கணம் (Oil Massage) நசியம், திருமூலர் பிராணாயாமம், சித்தர் யோகம் போன்ற மருத்துவச் சிகிச்சைகள் மற்றும் மனநல ஆலோசனைகள் மூலம் உடல்நலம், சமூக நலனுக்கான சிறப்பு சிகிச்சை அளிக்கும் விதமாகத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டார அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் "முதியோர் நலனுக்கான சித்தர் நிறைவாழ்வு மையம்" ஏற்படுத்தப்படும். இம்மையத்தில் Nursing Therapist ஒருவர் பணியமர்த்தப்பட்டு முதியோர்களுக்கு மேற்கண்ட சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்படும். முதற்கட்டமாக ஒரு மையத்திற்கு ரூ.3.25 இலட்சம் வீதம் 100 வட்டார அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ரூ.3.25 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

102) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவில் 'தரவு அலகு' (Data Cell) ஏற்படுத்தப்படும்.

சித்த மருத்துவம் மற்றும் இதர இந்திய மருத்துவ முறைகளான ஆயர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி ஓமியோபதி இவற்றின் ஆய்வுகளை மேம்படுத்தவும், ஆய்வு முடிவுகளைப் பன்னாட்டு இதழில் வெளியிடும் விதமாக

அனைத்து அரசு மருத்துவ நிலையங்களில் அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை நெறிமுறைப்படுத்தும் பொருட்டு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவில் "தரவு அலகு" (Data Cell) ஏற்படுத்தப்படும்.

103) 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தின் மூலம் இந்தியமுறை மருத்துவ மருந்துகளும் வழங்கப்படும்.

"மக்களைத் தேடி மருத்துவம்" என்ற திட்டத்தின் மூலம் உயர் இரத்த அழுத்தம் (Hypertension) மதுமேகம் (சர்க்கரை நோய்) உள்ள முதியோருக்கு இந்தியமுறை மருத்துவ மருந்துகளும் வீடு தேடி சென்று வழங்கப்படும்.

104) 120 இந்திய மருத்துவமுறை மருந்தகங்கள் இந்திய மருத்துவமுறை சுகாதார நலவாழ்வு மையங்களாக ரூ.32 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

120 சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவ மருந்தகங்கள் சுகாதார நலவாழ்வு மையங்களாக ரூ.32 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

105) அருகி வரும் நிலையில் உள்ள மருத்துவ தாவரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் செங்கல்பட்டு – ஆலத்தூர் டாம்ப்கால் நிறுவனத்திற்காக ரூ.70 இலட்சம் செலவில் சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கப்படும்.

அருகி வரும் நிலையில் உள்ள மருத்துவ தாவரங்களை

இனங்கண்டு அவற்றினை பாதுகாக்கும் விதமாகத் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில மூலிகை தாவர வாரியம் மூலம் அழியாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு மூலிகை தாவரம் வாரியம் மூலம் விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் இருவரையும் இணைக்கும் பாலமாகப் பகுதிவாரியாகக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அவர்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு, உற்பத்தியாளருக்கும், வியாபாரிகளுக்கும் இணைப்பு பாலமாக செயல்படும்.

செங்கல்பட்டு மாவட்டம் ஆலத்தூர் தொழிற்பேட்டையில் (Industrial Estate) இயங்கி வரும் டாம்ப்கால் நிறுவனத்திற்கு சொந்தமான தயாரிப்பு தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மின்சார தேவைக்காக ரூ.70 இலட்சம் செலவில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படும்.

106) டாம்ப்கால் மருந்துகள் அரசு கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்படும்

டாம்ப்கால் நிறுவனம் உற்பத்தி செய்யும் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகள் மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்படும்.

107) இந்தியாவிலேயே முதன்முறையாகச் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் சென்னைக்கு அருகாமையில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டின் பழமையான மருத்துவமுறைகளான சித்த மருத்துவத்தைப் போற்றும் வகையில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சித்த மருத்துவத்திற்கென தனிப் பல்கலைக்கழகம் (இந்திய மருத்துவமுறைகளான ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் உட்பட) சென்னைக்கு அருகாமையில் ஏற்படுத்தப்படும்.

108) எச்.ஐ.வி / எய்ட்ஸ் தடுப்பு ஆதரவு பராமரிப்பு மற்றும் மருத்துவச் சிகிச்சைக்காக ரூ.128.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2021–2022ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு, எச்.ஐ.வி / எய்ட்ஸ் தடுப்பு ஆதரவு பராமரிப்பு மற்றும் மருத்துவச் சிகிச்சைக்காகத் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் மூலம் ரூ.128.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெறும்.

109) முதுகுத் தண்டு பாதிப்பு மற்றும் இதர நோய்களால் படுத்த படுக்கையாக இருக்கும் காரணத்தினால் ஏற்படும் உடல் புண் (Bed Sores) சிகிச்சைக்காக அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில்

10 பிரத்தியேக படுக்கைகளுடன் தனி சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

முதுகுத் தண்டு பாதிப்பு மற்றும் இதர நோய்களால் படுத்த படுக்கையாக இருக்கும் காரணத்தினால் ஏற்படும் உடல் புண் (Bed Sores) சிகிச்சைக்காக அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 10 பிரத்தியேக படுக்கை வசதிகளுடன் கூடிய தனி சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படும். இதனால் நீண்ட நாள் படுக்கையிலேயே இருந்து சிகிச்சை பெறும் காலங்களில் ஏற்படும் படுக்கைப் புண்ணிற்கு (Bed Sores) உரியசிகிச்சை அளிக்கப்படும்.

110) திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை சிப்காட் வளாகத்தில், 125 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆக்ஸிஜன் சேமிப்பு கலன் ரூ.2.25 கோடி செலவில் அமைக்கப்படும்.

மருத்துவ திரவ ஆக்ஸிஜன் சேமிப்பு திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், திரவ ஆக்ஸிஜனை கூடுதலாகச் சேமித்து வைக்கத் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை சிப்காட் வளாகத்தில், 125 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கலன் ரூ.2.25 கோடி செலவில் அமைக்கப்படும்.

❖ ❖ ❖

வணிகவரி மற்றும் பதிவுத்துறை

வணிகவரிகள்

மானியக் கோரிக்கை எண். 10

முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

மானியக் கோரிக்கை எண். 11

1. வணிகவரித்துறையின் சேவைகள் அனைத்தும் தமிழில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) சம்பந்தப்பட்ட அனைத்து சேவைகளும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய முகப்பு (GSTN) மூலமாக தற்போது ஆங்கில மொழியில் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் வரிவிகித விவரத்தை அறிந்து கொள்வதிலும் அறிக்கை தாக்கல் செய்வதிலும் சிரமம் ஏற்படுவதாக மண்டல கூட்டங்களில் கலந்து கொண்ட வணிகர்கள் தெரிவித்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று வணிகவரித்துறையின் அனைத்து சேவைகளும் தமிழிலும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. வணிகவரித்துறையில் ஏழு புதிய நிருவாக கோட்டங்கள் உருவாக்கப்படும்.

வணிகவரித்துறையில் தற்போது 12 நிருவாக கோட்டங்கள் இயங்கி வருகின்றன. வணிகவரித்துறையை மறுகட்டமைப்பு செய்யும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் ஓர் இடத்திலும் செங்கல்பட்டு,

கடலூர், திருவாரூர், ஒசூர், திருப்பூர் மற்றும் விருதுநகர் ஆகிய ஆறு இடங்களிலும் சேர்த்து மொத்தம் ஏழு புதிய வணிகவரி நிருவாக கோட்டங்கள் உருவாக்கப்படும். இதன் மூலம் கூடுதலான மனித வளங்களை களப்பணிக்கு அளிக்க இயலும்.

3. வணிகவரித்துறையில் ஆறு புதிய நுண்ணறிவு கோட்டங்கள் உருவாக்கப்படும்.

வணிகவரித்துறையில் தற்போது 9 நுண்ணறிவு கோட்டங்கள் இயங்கி வருகின்றன. இத்துறையின் புலனாய்வு சார்ந்த நடவடிக்கைகளை மேலும் வலுவாக்கவும் தணிக்கைகளை அதிகப்படுத்தவும் ஏதுவாக செங்கல்பட்டு, கடலூர், திருவாரூர், ஒசூர், திருப்பூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் புதியதாக ஆறு நுண்ணறிவு கோட்டங்கள் உருவாக்கப்படும்.

4. போலி பட்டியல் தயாரிக்கும் நபர்களின் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

போலி பட்டியல் தயாரிக்கும் நபர்கள், போலி பட்டியல்களைப் பயன்படுத்தி உள்ளீட்டு வரி வரவைப் பெற்று அரசுக்கு வருவாய் இழப்பு செய்வோர் மற்றும் வேண்டுமென்றே தவறான ஆவணங்களைத் தாக்கல் செய்து வரித் திருப்புத் தொகை பெறுவோர் மீது கடுமையான குற்றவியல் நடவடிக்கை எடுப்பதற்காகத் தமிழ்நாடு கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், போதைப் பொருள் குற்றவாளிகள், குண்டர்கள், பாலியல்

தொழில் குற்றவாளிகள், குடிசைப் பகுதி நிலங்களைப் பறிப்போர், மணல் திருட்டு குற்றவாளிகள், திருட்டு வீடியோ குற்றவாளிகள் அபாயகரச் செயல்கள் தடுப்புச் சட்டம் 1982இல் வரி ஏய்ப்பு செய்வோரையும் சேர்க்கும் வகையில் உரிய சட்ட திருத்தம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

5. வரி ஏய்ப்பு குற்றத் தடுப்பு நடவடிக்கைகளைக் காவல் துறையின் பொருளாதார குற்றத் தடுப்புப் பிரிவின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

போலி பட்டியல் தயாரிக்கும் நபர்கள், போலி பட்டியலைப் பயன்படுத்தி உள்ளீட்டு வரி வரவைப் பெற்று அரசுக்கு வருவாய் இழப்பு செய்வோர் மற்றும் தவறான ஆவணங்களைத் தயார் செய்து வரித் திருப்புத் தொகை பெறுவோர் மீது வணிகவரித்துறையால் கடுமையான குற்றவியல் நடவடிக்கை தொடர வேண்டியுள்ளது. இதனை விரைவுபடுத்துவதற்காக, வரி ஏய்ப்பு குற்றத் தடுப்பு நடவடிக்கைகளைக் காவல்துறையின் பொருளாதார குற்றத் தடுப்புப் பிரிவின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

6. வணிகவரித்துறையில் 'மாநில கட்டுப்பாட்டு அறை' ரூ.3.86 கோடி செலவில் உருவாக்கப்படும்.

வணிகவரித்துறையில் செயல்படும் சுற்றும் படைகளின் பணிகளை ஒருங்கிணைத்துக் கண்காணிப்பதற்கும் fasTAG உடன் இணைந்த மின்னணு வழிப்பட்டி மூலம் சந்தேகப்படக்கூடிய வாகனங்களைக் கண்டறிந்து, சுற்றும் படைகளிடம் தெரிவித்து உடனடியாக நடவடிக்கை

எடுப்பதற்காகவும் சென்னை வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் ‘மாநில கட்டுப்பாட்டு அறை’உருவாக்கப்படும். இந்த கட்டுப்பாட்டு அறையில் அலுவலர்கள் 24x7 சுழற்சி முறையில் பணியாற்றுவர். இக்கட்டுப்பாட்டு அறைக்கு உரிய உபகரணங்களோடு கூடிய கட்டமைப்பு வசதிகள் ரூ.3.86 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

7. வணிகவரித்துறையின் ஏழு அலுவலகங்களுக்கு ரூ.15 கோடி செலவில் சொந்த கட்டடங்கள் கட்டப்படும்.

வேலூர், திருச்சி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய வணிகவரி கோட்டங்களுக்கு உட்பட்ட பேரளூர், புதுக்கோட்டை, துறையூர், ஆத்தூர் (ஊரகம்), ஆத்தூர் (நகரம்), சத்தியமங்கலம் மற்றும் கோபிசெட்டிபாளையம் ஆகிய வரிவிதிப்பு அலுவலகங்கள் தற்போது வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்களுக்கு மொத்தம் ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

8. தாமதமாக வரி செலுத்துவோரைத் தொடர்ந்து வலியுறுத்த புதிய அழைப்பு மையங்கள் (New Call Centres) ஏற்படுத்தப்படும்.

தமிழகத்தில் தற்போது பத்து இலட்சத்திற்கும் மேலான வரி செலுத்துவோர் உள்ளனர். இவர்கள் மாதாமாதம் அறிக்கை தாக்கல் செய்வதைக் கண்காணிக்கவும் தாமதமாக அறிக்கை தாக்கல் செய்யப்படுவதைத் தவிர்க்கவும் ஏதுவாக, வரி செலுத்துவோரைத் தொடர்ந்து வலியுறுத்த புதிய அழைப்பு மையங்கள் ஏற்படுத்தப்படும்.

முதற்கட்டமாக, 40 பணியாளர்களைக் கொண்ட அழைப்பு மையம் ஒன்று ‘தமிழ்நாடு மின் ஆளுமை முகமை’ (TNeGA) மூலமாகச் சென்னையில் நிறுவப்படும். இதற்கான தொடர் செலவினம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.5.45 கோடி ஆகும்.

9. வணிகர் நல வாரியத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகளுடன் கூடுதலாகத் திருமண உதவித் தொகை மற்றும் விபத்துக் கால இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களாக உள்ள வணிகர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இனி வருங்காலங்களில், திருமண உதவித் தொகையாக ரூ.10,000 வழங்கப்படும். மேலும், விபத்தில் பாதிக்கப்படும் உறுப்பினர்களுக்கு நிரந்தர உடல் உறுப்பு இழப்பு ஏற்படும் நேர்வுகளில் விபத்துக் கால இழப்பீட்டுத் தொகையாக ரூ.25,000 வழங்கப்படும்.

10. வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட குக்கிராமங்கள் ஒரே சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் அமையும் வகையில் பதிவு எல்லைகள் சீரமைக்கப்படும்.

பதிவுத்துறையில் சில சார்பதிவக எல்லைகளில் ஒரு முக்கிய வருவாய் கிராமமானது, ஒரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் அதே வருவாய் கிராமத்திற்குட்பட்ட குக்கிராமம் வேறு ஒரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் அமைந்துள்ள நிலை உள்ளது. பட்டா மாற்றம் போன்ற பதிவுத்

துறை – வருவாய்த் துறை ஒருங்கிணைந்த செயல்பாடுகளுக்கு இது இடையூறாக உள்ளது. எனவே, ஒரு வருவாய் கிராமம் முழுவதையும் ஒரே சார்பதிவக எல்லைக்குள் கொண்டு வரும் வகையிலும் கிராமங்கள் அனைத்தும் அருகிலுள்ள சார்பதிவக எல்லைக்குள் வரும் வகையிலும் சார்பதிவக எல்லைகள் மூலம் வகையிலும் சார்பதிவக எல்லைகள் சீரமைக்கப்படும்.

11. திருவாரூர், திருவள்ளூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் பெரம்பலூர் ஆகிய வருவாய் மாவட்டங்களின் தலைமையிடங்களில் ஐந்து புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்கப்படும்.

தற்போது திருவாரூர், திருவள்ளூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் பெரம்பலூர் ஆகிய வருவாய் மாவட்டங்களின் தலைமையிடங்களில் பதிவு மாவட்டங்கள் இல்லாமல் உள்ளது. பொதுமக்களின் வசதிக்காக இம்மாவட்டங்களில் புதியதாகப் பதிவு மாவட்ட தலைமையிடங்கள் உருவாக்கப்படும். அதற்கேற்றாற்போல், பதிவு மாவட்ட எல்லைகள் வரையறை செய்யப்படும். மேற்படி பதிவு மாவட்டங்கள் ஏறத்தாழ ரூ.69 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

2021–2022 ஆம் நிதியாண்டு முதல் இதற்கான தொடர் செலவினம் ஆண்டுதோறும் ரூ.2.36 கோடியாக இருக்கும்.

12. பதிவுத்துறையில் கடந்த காலங்களில் நடந்த பதிவு முறைகேடுகள் தொடர்பாக விசாரிக்கச் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்படும்.

பதிவுத்துறையில் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ள பதிவு தவறுகள் குறித்து முழுமையாக ஆய்வு மேற்கொண்டு, போலியாகப் பதிவு செய்யப்பட்ட மற்றும் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்ட இனங்களைக் கண்டறிந்து அறிக்கை அளிப்பதற்காக, ஒரு சிறப்பு புலனாய்வுக் குழு ஏற்படுத்தப்படும். இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பதிவு தவறுகள் சரி செய்யப்பட்டு, தவறு செய்தவர்கள் மீது சட்டப் பூர்வ மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்படும்.

2021–2022ஆம் நிதியாண்டில் இதற்கான தொடரா செலவினம் ரூ.80 இலட்சம் மற்றும் தொடர் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.2.20 கோடி ஆகும்.

13. இந்தியக் கிறித்துவ திருமண பதிவுச் சான்றின் உண்மை வடிப்புகளைத் துணை பதிவுத்துறைத் தலைவர்களே வழங்கும் வகையில், இந்தியக் கிறித்துவ திருமணச் சட்டம், 1872இல் சட்டத் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

கிறித்துவ திருமணங்கள் தொடர்பான விவரங்கள் அந்தந்த மாவட்டப் பதிவாளர்களால் பெறப்பட்டு, பதிவுத்துறை தலைவருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. கிறித்துவ திருமணப் பதிவு வடிப்புகளின் சான்றிட்ட நகல்கள், தற்போது பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன. இந்நடைமுறையை எளிமைப்படுத்தும் வகையில், பதிவுத்துறையின் ஒன்பது மண்டல துணை பதிவுத்துறைத் தலைவர் அலுவலகங்களிலேயே மேற்படி இந்தியக் கிறித்துவ திருமண

உண்மை வடிப்புகளின் சான்றிட்ட நகல்களை வழங்கும் வகையில், இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872இல் சட்ட திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் கிறித்துவ திருமண உண்மை வடிப்புகளின் சான்றிட்ட நகல்களைப் பெறுவதற்காக தமிழகம் முழுவதிலும் இருந்து தலைநகர் சென்னைக்குப் பொதுமக்கள் வர வேண்டிய நிலை தவிர்க்கப்படும்.

14. திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் திண்டிவனம் ஆகிய மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கும் 26 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் பதிவுத் துறைக்கு சொந்தமாக உள்ள இடங்களில் ரூ.41.36 கோடி செலவில் புதிய அரசு கட்டடங்கள் கட்டப்படும்.

பதிவு அலுவலகங்கள் சொந்த கட்டடங்களில் இயங்கவும் வாடகை செலவினத்தைக் குறைக்கும் பொருட்டும் பதிவுத் துறைக்குச் சொந்தமாக உள்ள இடங்களில் புதிய அரசு கட்டடங்கள் கட்டப்படும். பதிவிற்கு அதிக எண்ணிக்கையில் வரும் பொதுமக்கள் அமரும் வகையில் மேம்படுத்தப்பட்ட, வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டு புதிய மாற்றங்களுடனான அமைப்பு முறையில் வடிவமைக்கப்பட்டு இக்கட்டடங்கள் கட்டப்படும்.

2021–2022ஆம் நிதியாண்டில், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் திண்டிவனம் ஆகிய மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.9.90 கோடி செலவிலும், 26 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.31.46 கோடி செலவிலும் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

15. தணிக்கை மாவட்டப் பதிவாளர்கள், நிருவாக மாவட்டப் பதிவாளர்கள், உதவி பதிவுத்துறைத் தலைவர்களுக்கு புதியதாக 50 வாகனங்கள் வழங்கப்படும்.

பதிவுத்துறையின் உள்தணிக்கைப் பணியையும் கள ஆய்வுகளையும் தணிக்கை மாவட்டப் பதிவாளர்கள் துரிதமாக மேற்கொள்ள ஏதுவாக அனைத்து தணிக்கை மாவட்டப் பதிவாளர்களுக்கும் (45) புதிய வாகனங்கள் வழங்கப்படும். மேலும், மூன்று நிருவாக மாவட்டப் பதிவாளர்கள், இரண்டு உதவி பதிவுத்துறைத் தலைவர்களுக்கும் என மொத்தம் 50 வாகனங்கள் ரூ.4.10 கோடி செலவில் வாங்கப்படும்.

இதற்கான தொடர் செலவினம் வருடத்திற்கு ரூ.2.49 கோடி ஆகும்.

16. அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கண்காணிப்பை மேம்படுத்துவதற்காக அந்த அலுவலகங்களில் உள்ள பதிவறைகளில் இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் (IP Camera) ரூ.5.98 கோடி செலவில் நிறுவப்படும்.

தற்போது பதிவுத்துறையின் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் தலா 3 இணையவழி புகைப்படக் கருவிகள் நிறுவப்பட்டு, அலுவலக செயல்பாடுகள் நேரடியாகத் தொலை கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இக்கண்காணிப்பை மேம்படுத்தும் வகையில், ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்தின் பதிவறையிலும் இணையவழி புகைப்படக் கருவிகள் நிறுவப்படும்.

இந்நிதியாண்டில் இவ்வசதிக்கான தொடரா செலவினம் ரூ.5.98 கோடி ஆகும்.

17. சார்பதிவாளர் அலுவலகங்களில் அடையாளவில்லை காட்சிக் கருவியில் (Token Display Unit) ஆவணதாரர் பெயரையும் காட்சிப்படுத்தப்படும் முறை ரூ.3.40 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.

அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் பொருத்தப்பட்டுள்ள அடையாளவில்லை காட்சிக் கருவியில் தற்போது அடையாளவில்லை எண் மட்டுமே காட்சிப்படுத்தப்படுவதால் ஆவணதாரர்கள் தங்களின் வரிசைக்கிரம முன்னுரிமையை அறிந்து கொள்வதில் குழப்பம் நிலவுகிறது. இதனைத் தவிர்க்கும் வகையில் ஆவணதாரர்களின் பெயரும் காட்சிப்படுத்தப்படும் வகையிலான மேம்படுத்தப்பட்ட காட்சிக் கருவிகள் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் பொருத்தப்படும்.

2021–2022ஆம் நிதியாண்டில், இவ்வசதிக்கான தொடரா செலவினம் ரூ.3.40 கோடி ஆகும்.

18. சார்பதிவாளர் அலுவலகங்கள் கூர்நோக்கு அடிப்படையில் ‘அ’, ‘ஆ’, மற்றும் ‘இ’ வகை அலுவலகங்களாக வகைப்படுத்தப்படும்.

பதிவுத்துறையில் பணியாற்றும் அனைத்து சார்பதிவாளர்களுக்கும் பதிவு பணியில் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, கூர்நோக்கு அடிப்படையில் சார்பதிவாளர் அலுவலகங்கள்

இனம் காணப்பட்டு, கீழ்க்கண்டவாறு மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்படும்.

1. ‘அ’ வகை அலுவலகம் –அதிக கூர்நோக்குடையது

2. ‘ஆ’ வகை அலுவலகம் –கூர்நோக்குடையது

3. ‘இ’ வகை அலுவலகம் – சாதாரண வகையிலானது

அனைத்து சார்பதிவாளர்களையும் முறையே, ‘அ’ வகை சார்பதிவாளர் அலுவலகங்களில் 1 வருடத்திற்கும், ‘ஆ’ வகை சார்பதிவாளர் அலுவலகங்களில் 2 வருடங்களுக்கும், ‘இ’ வகை சார்பதிவாளர் அலுவலகங்களில் 3 வருடங்களுக்கும் நியமனம் செய்யும் விதமாக, ‘பணியிட மாற்றக் கொள்கை’ உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

19. திங்கட்கிழமைதோறும் ‘பதிவு குறை தீர்க்கும் முகாம்’ நடத்தப்படும்.

பதிவுத்துறையில் பொது மக்களிடமிருந்து பதிவு தொடர்பான புகார்கள் அதிக எண்ணிக்கையில் பெறப்பட்டு வருகின்றன. சொத்து பதிவு தொடர்பான புகார்களை பொது மக்கள் பெரும்பாலும் நேரடியாகவே அளிக்க விரும்புவதால், திங்கட்கிழமை தோறும் ‘பதிவு குறை தீர்க்கும் முகாம்’ நடத்தப்படும். ஒவ்வொரு மண்டலத்திலும் துணை பதிவுத்துறைத் தலைவராலும் ஒவ்வொரு பதிவு மாவட்டத்திலும் மாவட்டப் பதிவாளராலும் அவர்களது அலுவலகங்களில் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் இம்முகாம் நடத்தப்படும்.

20. ஆவண எழுத்தர் நல நிதியத்தை முழுமையாக செயல்படுத்தி அந்நிதியத்தின் உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.

பதிவுத் துறையைச் சார்ந்து தொழில் புரிந்து வரும் 5,188 ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவண எழுத்தர் நல நிதியம் முழுமையான செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்படும். நல நிதிய உறுப்பினர்களாக இருந்து ஓய்வு பெறும் ஆவண எழுத்தர்களுக்குப் பிற நல வாரியங்களில் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் போலவே ஓய்வூதியம், விபத்தில் மரணமடையும் நல நிதிய உறுப்பினர் குடும்பத்திற்கு நிதியுதவி, ஆவண எழுத்தர் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை போன்ற நலத்திட்டங்கள் வழங்கப்படும்.

❖ ❖ ❖

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 9

1. **259 கல்லூரி விடுதிகளில் ரூ.2.59 கோடி செலவில் “செம்மொழி நூலகம்” ஏற்படுத்தப்படும்.**

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் மாணவ, மாணவியரின் கல்வி அறிவு மற்றும் பொது அறிவினை வளர்க்கவும், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிறப்பான முறையில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டும் 259 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகளில், தலா ஒரு நூலகம் (“செம்மொழி நூலகம்” என்ற பெயரில்) ரூ.2.59 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

2. **259 கல்லூரி விடுதிகளுக்கு ரூ.1.44 கோடி செலவில் உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள் வழங்கப்படும்.**

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் மாணவ, மாணவியரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, 259 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகளுக்கு உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள் ரூ.1.44 கோடி செலவில் வழங்கப்படும்.

3. 40 விடுதிகளுக்கு ரூ.10 இலட்சம் செலவில் போட்டி தேர்வுகளுக்கான புத்தகங்கள் வழங்கப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் மாணவ, மாணவியர் வேலைவாய்ப்புக்கான போட்டி தேர்வுகளில் பங்கேற்பதை ஊக்கப்படுத்தும் பொருட்டு, விடுபட்டுள்ள 40 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகளுக்குப் போட்டி தேர்வுகளுக்கான புத்தகங்கள் ரூ.10 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

4. 259 கல்லூரி விடுதிகளில் மாணவ, மாணவியருக்குத் தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் மாணவ, மாணவியர் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதற்கு ஏதுவாக, 259 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும்.

5. இயக்ககங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு IFHRMS திட்டத்திற்காக ரூ.85.20 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

இயக்ககங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் IFHRMS திட்டத்தினை உரிய முறையில் துரிதமாகச்

செயல்படுத்த, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் இயக்ககங்கள் மற்றும் 38 மாவட்ட அலுவலகங்களில் IFHRMS திட்டத்திற்காக, கணினிகள் மற்றும் அச்சுப் பொறிகள் மற்றும் இயக்கங்களுக்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.85.20 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

6. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித்தொகை திட்டங்களுக்கான வருமான வரம்பு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்படும்.

கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ், அதிக எண்ணிக்கையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் கல்வி உதவித்தொகை திட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்படும்.

7. கல்வி உதவித்தொகை திட்டங்களின் கீழ் பயன்பெற முதல் பட்டதாரி என்பதற்குப் பதிலாக முதல் தலைமுறை பட்டதாரி என்று நிபந்தனையில் மாற்றம் செய்யப்படும்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் கல்லூரிகளில் அதிக அளவில் சேர்ந்து கல்வி பயில வேண்டும் என்பதற்காக இம்மாணவர்களுக்கான

கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் பயன்பெற முதல் பட்டதாரி (First Graduation) என்ற நிபந்தனைக்குப் பதிலாக முதல் தலைமுறை பட்டதாரி (First Generation Graduate) என்ற அடிப்படையில் குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் உயர்கல்வி பயின்றாலும், சலுகைகள் வழங்க வாய்ப்பு அளிக்கும் வகையில் நிபந்தனை மாற்றம் செய்யப்படும்.

8. கல்வி உதவித்தொகை திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உண்டி மற்றும் உறையுள் கட்டணங்கள் ரூ.9 கோடி கூடுதல் செலவில் உயர்த்தி வழங்கப்படும்.

விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு உண்டி மற்றும் உறையுள் கட்டணத்தை எவ்வித பாகுபாடின்றி வழங்கும் பொருட்டு, கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு மாதாந்திர உண்டி மற்றும் உறையுள் கட்டணமாக தற்போது பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.175, தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.350, ஐடிஐ / பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு ரூ.235 என்று வழங்கப்படுவதை அனைவருக்கும் ரூ.400ஆக உயர்த்தி ரூ.9 கோடி கூடுதல் செலவில் வழங்கப்படும்.

9. விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் / காப்பாளினிகளுக்கு ரூ.83.92 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்.

விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் / காப்பாளினிகள் தங்கள் விடுதியைச் சிறந்த முறையில் பராமரிப்பு செய்திடவும், விடுதியைத் திறம்பட நடத்திடவும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் 7 காப்பாளினிகளுக்கு புத்தாக்கப் பயிற்சி ரூ.83.92 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

10. மாவட்ட அளவில் சிறந்த விடுதிகளுக்கு ரூ.7.80 இலட்சம் செலவில் பரிசுகள் வழங்கப்படும்.

மாநிலம் முழுவதும் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்பு விடுதிகள் சிறப்பாகச் செயல்படுவதை ஊக்கப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் மாவட்ட அளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகள் / கள்ளர் சீரமைப்பு விடுதிகளில் சிறந்த 3 விடுதிகளைத் தேர்வு செய்து ரூ.7.80 இலட்சம் செலவில் பரிசுகள் வழங்கப்படும்.

11. 20 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.23.60 இலட்சம் செலவில் முக அங்கீகார அடிப்படையில் பயோமெட்ரிக் கருவிகள் பொருத்தப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர், விடுதி காப்பாளர்கள் மற்றும் விடுதி பணியாளர்கள் ஆகியோரின்

வருகையை உறுதி செய்யும் பொருட்டு, முதற்கட்டமாக 20 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகளில், மாணவியரின் வருகையை உறுதி செய்ய முக அங்கீகார அடிப்படையில் பயோ–மெட்ரிக் கருவிகள் ரூ.23.60 இலட்சம் செலவில் பொருத்தப்படும்.

12. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சம் ஆக உயர்த்தப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவியர் சேர்ந்து தங்கிப் பயிலும் வகையில் இவ்விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சம் ஆக உயர்த்தப்படும்.

13. விடுதிகளில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதிப் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் சிறப்புப் பராமரிப்பு மற்றும்

பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

14. 7 மாணவியர் விடுதிகளுக்கு ரூ.91.68 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு 7 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிகளுக்கு ரூ.91.68 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

15. விடுதி மாணவ, மாணவியருக்கான பல்வகை செலவினத் தொகை ரூ.4.80 கோடி செலவில் உயர்த்தப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு சோப்பு, பற்பசை போன்றவற்றிற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகையினை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50லிருந்து ரூ.100ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.75லிருந்து ரூ.100ஆகவும், ரூ.4.80 கோடி செலவில் உயர்த்தப்படும்.

16. 234 கள்ளர் பள்ளி கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கு கழிப்பறை வசதிகள் ரூ.4.68 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

கள்ளர் பள்ளிகளில் மாற்றுத்திறனாளி மாணவ,

மாணவியருக்கானக் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தி தரும் பொருட்டு இப்பள்ளிகளில் உள்ள 234 கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர் பயன்படுத்தும் வகையில் ரூ.4.68 கோடி செலவில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

17. கள்ளர் பள்ளி கட்டடங்களில் ரூ.6 கோடி செலவில் பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கள்ளர் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதியும், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தி மாணவ, மாணவியரின் கற்றல், கற்பித்தல் சிறப்பாக அமைந்திட ஏதுவாக கள்ளர் பள்ளி கட்டடங்களில் பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் ரூ.6 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

18. 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்கப்படும்.

15 கள்ளர் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி தற்போது 8ஆம் வகுப்பு வரை நடைபெற்று வருகின்றது. இப்பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவியர் தொடர்ந்து இப்பள்ளிகளிலே பயில்வதற்கு ஏதுவாக, இந்த 15 கள்ளர் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் 9ஆம் வகுப்பில் ஆங்கில வழிக் கல்வி வகுப்புகள் தொடங்கப்படும்.

19. அனைத்து கள்ளர் தொடக்கப்பள்ளிகளில் முதலாம் வகுப்பில் ஆங்கில வழியிலான வகுப்புகள் தொடங்கப்படும்.

கள்ளர் பள்ளிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கையை

அதிகப்படுத்தும் பொருட்டு, அனைத்து கள்ளர் தொடக்கப்பள்ளிகளில் ஆங்கில வழியிலான வகுப்புகள் முதலாம் வகுப்பில் தொடங்கப்படும்.

20. கிராமப்புற மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்கான வருமான வரம்பு ரூ.72,000லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும்.

கிராமப்புறத்தைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர் அதிக எண்ணிக்கையில் பயனடையும் வகையில், கிராமப்புற மாணவியருக்குக் கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற நிருணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும்.

21. நரிக்குறவர் மற்றும் சீர்மரபினர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித்தொகை ஆண்களுக்கு ரூ.2,000லிருந்து ரூ.3,000 ஆகவும் பெண்களுக்கு ரூ.2,000லிருந்து ரூ.5,000 ஆகவும் உயர்த்தப்படும்.

அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு திருமண உதவித்தொகை உயர்த்தி வழங்கப்பட்டதை போன்று தமிழ்நாடு நரிக்குறவர் மற்றும் சீர்மரபினர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித்தொகை ஆண்களுக்கு ரூ.2,000லிருந்து

3,000 ரூபாயாகவும், பெண்களுக்கு ரூ.2,000லிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.

22. இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம், இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டங்களுக்கான வருமான வரம்பு ரூ.72,000லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் பயன்பெறும் வகையில், இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம், இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டங்களின் கீழ் பயன்பெற நிருணயிக்கப்பட்டுள்ள பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும்.

23. இலவசப் பித்தளை தேய்ப்பு பெட்டிகளின் எண்ணிக்கையிலான 2,000லிருந்து 3,000ஆக உயர்த்தி ரூ.48.71 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய சலவைத் தொழில் செய்பவர்கள் அதிக எண்ணிக்கையில் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் வழங்கப்படும் இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகளின் எண்ணிக்கையினை

2,000லிருந்து 3,000ஆக உயர்த்தி ரூ.48.71 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

24. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் அளிக்கப்படும்.

கள்ளர் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் தங்களது ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்தவும் மற்றும் தனித்திறனை வளர்க்கவும் ஏதுவாக, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக்கழகம் மூலம் அளிக்கப்படும்.

25. 2 பள்ளி விடுதிகள் ரூ.17.99 இலட்சம் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும்.

கல்லூரி விடுதிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு, 2 பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக ரூ.17.99 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்படும்.

26. 2 விடுதிகளுக்கு ரூ.6.60 கோடி செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ,

மாணவியரின் நலன் கருதி மாநில அரசுத் திட்டத்தின்கீழ் இரண்டு பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகளுக்கு ரூ.6.60 கோடி செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

27. மாநில அளவில் மையப்படுத்தப்பட்ட முறையில் விடுதிகளுக்கான மளிகைப் பொருட்கள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்படி கொள்முதல் செய்யப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளின் நிருவாகத்தினை மேம்படுத்தும் வகையிலும் மாணவ, மாணவியருக்குத் தரமான உணவினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டும், விடுதிகளுக்கு ஒரே மாதிரியான தரமான மளிகைப் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்திட மளிகைப் பொருட்கள் கொள்முதலை மாநில அளவில் மையப்படுத்தி தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்படி மேற்கொள்ளப்படும்.

28. சிறப்பாகச் செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு ரூ.50,000 செலவில் விருதுகள் வழங்கப்படும்.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் உள்ள அலுவலர்களின் செயல்பாடுகளை அங்கீகரிக்கும் வகையிலும், மாவட்ட அளவிலான அலுவலர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் சிறப்பாகச் செயல்படும். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு விருதுகள் ரூ.50,000 செலவில் வழங்கப்படும்.

29. விடுதி மாணவ, மாணவியருக்குக் கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற போட்டிகள் கலைத் திருவிழா என்ற பெயரில் ரூ.3.80 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் படைப்பாற்றல் மற்றும் தனித்திறனை ஊக்குவிக்கும் வகையில் விடுதி மாணவ, மாணவியருக்குப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் ("கலைத் திருவிழா" என்ற பெயரில்) ரூ.3.80 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

30. இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதி குறித்து ஒரு புத்தகம் வெளியிடப்படும்.

தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்து வரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை பற்றியும், சமூக நீதி செயல்பாடுகள் பற்றியும், வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில் இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதி குறித்து பல்வேறு தகவல்கள் கொண்ட புத்தகம் ரூ.5 இலட்சம் செலவில் வெளியிடப்படும்.

❖ ❖ ❖

இந்து சமய அறநிலையத்துறை

மானியக் கோரிக்கை எண். 47

1. ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் உள்ள 12,959 திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மாத ஊக்கத் தொகையாக ரூ.1,000 வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.13 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. திருக்கோயில்களின் பாதுகாப்பிற்கென 10,000 பாதுகாப்பு பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்படும்.

3. திருவருட்பிரகாச வள்ளலார் அவர்களின் புகழைப் போற்றும் வகையில் "வள்ளலார் சர்வதேச மையம்" வடலூரில் அமைக்கப்படும்.

4. கடந்த பத்து ஆண்டுகளாகத் திருக்கோயில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களில், திருக்கோயிலுக்குத் தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, ஏனைய இனங்களை மும்பையில் உள்ள ஒன்றிய அரசுக்குச் சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி, சொக்கத் தங்கமாக மாற்றி, திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வங்கிகளில் முதலீடு செய்து, அதிலிருந்து வரும் வட்டி மூலமாகத் திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளைக் கண்காணிப்பதற்கு

மூன்று மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஓய்வு பெற்ற மாண்பமை நீதியரசர்கள் தலைமையிலான குழுக்கள் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

5. சென்னை உட்படத் தமிழகத்தில் பத்து இடங்களில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ரூ.150 கோடி செலவில் தொடங்கப்படும்.

6. தமிழர் திருநாளாம் தைத்திருநாளில் ரூ.10 கோடி செலவில் அர்ச்சகர்களுக்கு புத்தாடைகள் மற்றும் பணியாளர்களுக்குச் சீருடைகள் வழங்கப்படும்.

7. பழநி மற்றும் திருவரங்கம் திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டமானது விரிவுபடுத்தப்பட்டு செப்டம்பர் 17ஆம் நாள் முதல் திருத்தணிகை, சமயபுரம், திருச்செந்தூர் ஆகிய மூன்று திருக்கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படும்.

8. அர்ச்சகர், ஓதுவார், பிரபந்த விண்ணப்பர், வேதபாராயணர் மற்றும் இசை கற்போர் ஆகியோருக்குப் பயிற்சிக் காலத்தில் ஏற்கெனவே ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, இந்த ஊக்கத்தொகை ரூ.3,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

9. திருக்கோயில்களில் பக்தர்கள் தங்களின் வேண்டுதல் பொருட்டு செய்யும் முடிக்காணிக்கைக்கான கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது. அதற்கான கட்டணத்தை அப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் திருக்கோயில் நிருவாகமே செலுத்தும்.

10. மணமக்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருப்பின் திருக்கோயிலில் அவர்களுக்கு நடைபெறும் திருமணத்திற்கான கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.

மேலும், திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றால் மண்டபத்திற்கான பராமரிப்புக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும்.

11. தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாமல் பராமரிப்பது குறித்த வழிமுறைகளைக் கொண்ட கையேடு (Conservation Manual) வெளியிடப்படும்.

12. திருத்தணிகை, திருச்செங்கோடு, திருச்சி மலைக்கோட்டை, திருநீர்மலை, திருக்கழுக்குன்றம் ஆகிய ஐந்து மலைத் திருக்கோயில்களுக்கு கம்பிவட ஊர்தி வசதி செய்திடச் சாத்தியக் கூறுகள் ஆராயப்படுவதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்படும்.

13. திருக்கோயில்களில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் தற்காலிகமாகப் பணிபுரியும் சுமார் 1,500 தகுதியான பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்படுவர்.

14. இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், விளையாட்டு மைதானம் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் ரூ.25 கோடி செலவிடப்படும்.

15. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும். மேலும், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து பணியாற்றி வரும் தற்காலிக ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள். இதன்மூலம் 496 ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பயனடைவார்கள்.

16. பக்தர்கள் அதிகளவில் வருகைபுரியும் 10 திருக்கோயில்களில் தேவையான மருத்துவர் மற்றும் மருத்துவ பணியாளர்களுடன் கூடிய முதலுதவி மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்படும். இதற்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

17. திருக்கோயில்களுக்குச் சொந்தமான 114 சமய நூலகங்கள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். தேவைகளின் அடிப்படையில் புதிய சமய நூலகங்கள் உருவாக்கப்படும்.

18. திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை விழிப்புடன் பாதுகாத்து மீட்பதற்கு 38 மாவட்டங்களில் உள்ள உதவி ஆணையர் அலுவலகங்களில் வட்டாட்சியர்கள் உள்பட 108 பணியிடங்கள் உருவாக்கப்படும். இதற்கான செலவு ஆண்டொன்றிற்கு ரூ.8.18 கோடி.

19. திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில்

திருக்கோயில் பணியாளர்களுக்கு நிருவாகப் பயிற்சி மையம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

20. ஆணையர் அலுவலக வளாகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கூடுதல் கட்டடம் ரூ.15 கோடி செலவில் கட்டப்படும்.

21. துறை அலுவலர்கள் பயன்பாட்டிற்கு 108 புதிய ஊர்திகள் ரூ.8 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும்.

22. திருக்கோயில்களில் தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்குத் தரமான திருநீறு மற்றும் குங்குமப் பிரசாதம் வழங்குவதற்காக 8 திருக்கோயில்களில் தயாரித்து, பிற திருக்கோயில்களுக்கும் வழங்கிட ரூ.3 கோடி செலவில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

23. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 490 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் ஆண்டுக்கான அரசு மானியம் ரூ.3 கோடியிலிருந்து ரூ.6 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

24. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 225 திருக்கோயில்களுக்கு நிருவாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக வழங்கப்பட்டு வரும் அரசு மானியம் ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

25. முதற்கட்டமாக 10 முக்கியத் திருக்கோயில்களில் தரிசனத்திற்கு வருகை தரும் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்படும்.

26. சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள எழும்பூர் அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில், திருக்கோயிலின் வருவாயைப் பெருக்கும் வகையில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வணிக வளாகம் கட்டப்படும்.

27. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள 1,000 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ஏற்கெனவே தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் 1,250 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள தலா ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

28. கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்படி கிராமப் பகுதிகளில் அமைந்துள்ள 1,000 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ஏற்கெனவே தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் 1,250 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ள தலா ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

29. “திங்கள் தோறும் திருக்கோயில்களில் தூய்மைப்பணி” திட்டத்தின் கீழ் திருக்கோயில்களின் அனைத்து இடங்களிலும் உழவாரப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

30. சென்னை, பழநி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூத்த குடிமக்களைப் பேணிப் பாதுகாக்க மூத்த குடிமக்கள் உறைவிடங்கள் ரூ.5 கோடி செலவில் அனைத்து வசதிகளுடன் தொடங்கப்படும்.

31. திருக்கோயில்கள் சார்பாகப் பக்தர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய 22 திருமண மண்டபங்கள் ரூ.53.50 கோடி செலவில் கட்டப்படும்.

32. துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமக்கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பூசாரிகளுக்குத் தமிழ்நாடு திருக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.3,000லிருந்து ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

மேலும் கிராமப்புற பூசாரிகள் நலவாரிய உறுப்பினர் மரணமடைந்தால் இறுதிச்சடங்கிற்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை ரூ.2,000லிருந்து ரூ.5,000ஆக உயர்த்தி வழங்கப்படும். உறுப்பினர் மரணமடைந்தால் அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.15,000லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

33. திருக்கோயில்களுக்குப் பெருமளவில் வருகை தரும் பக்தர்களுக்கான முழுமையான அடிப்படை

வசதிகளை உறுதிப்படுத்த, 40 முதுநிலைத் திருக்கோயில்களுக்கான ஒருங்கிணைந்த பெருந்திட்டம் (Master Plan) வகுக்கப்பட்டு ரூ.200 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

34. அர்ச்சகர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் 6 இடங்களில் ரூ.21.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

35. திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

36. பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலில் பக்தர்களின் அனைத்து தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் ரூ.125 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

37. ஆண்டு முழுவதும் அதிகளவில் பக்தர்கள் தரிசனத்திற்கு வந்து செல்லும் பழநி, சமயபுரம், திருவண்ணாமலை, திருத்தணி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய திருக்கோயில்களில் ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் ரூ.250 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

38. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் திருப்பணி மேற்கொள்வதற்காக நீண்ட நாட்கள் நிலுவையில் இருந்த திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் உட்பட 300 திருக்கோயில்களில் இருந்து பெறப்பட்ட திருப்பணி முன்மொழிவுகள் முறையாக

பரிசீலிக்கப்பட்டு குடமுழுக்கிற்கான திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், திருப்பணிகளுக்குத் தொடர்ந்து அனுமதி வழங்கப்படும்.

39. 18 திருக்கோயில்களுக்கு ரூ.8.70 கோடி செலவில் புதிய திருத்தேர்கள் செய்யப்படும்.

40. திருக்கோயில்களுக்குச் சொந்தமான 37 திருக்குளங்கள் ரூ.18 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

41. மதுரையில், திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி ரூ.35 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

42. காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட இடத்தில் திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வணிக வளாகம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

திருக்கோயில் திருப்பணிகள்

43. திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் உட்பட 30 அம்மன் திருக்கோயில்களுக்கு ரூ.16 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

44. ஆன்மீகச் செம்மல் ஆளவந்தார் அறக்கட்டளைக்குச் சொந்தமான இடங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு சுற்றுச்சுவர் மற்றும் வனம் அமைப்பதற்கு ரூ.15 கோடி செலவிடப்படும்.

45. 34 சைவ திருத்தலங்களுக்கு ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

46. தென்காசி மாவட்டம், ஆழ்வார்குறிச்சி அருள்மிகு வன்னியப்பர் திருக்கோயிலுக்கு ரூ.9 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

47. 24 வைணவத் திருத்தலங்களுக்கு ரூ.5.68 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

48. திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாத சுவாமி, ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்களில் ரூ.4.50 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

49. விழுப்புரம் மாவட்டம், சிங்கவரம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் வசதிக்காக மலைப்பாதை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.3 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

50. மதுரை, அழகர்கோயில், அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் வசதிக்காக மலைப்பாதையை மேம்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.7 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

51. திருக்குவளை, எட்டுக்குடி, சுப்பிரமணியர் மற்றும் சிக்கல் சிங்காரவேலர் திருக்கோயில்களில் ரூ.2.20 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

52. தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், கீழப்பாவூர் அருள்மிகு திருவாலீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

53. திருநீர்மலை, அருள்மிகு அரங்கநாதப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

54. சிவபெருமானின் பஞ்ச சபைகளில் ஒன்றான குற்றாலம் சித்திரசபையில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

55. திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலின் மின்வசதி ரூ.90 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

56. கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோயிலில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

57. கடலூர் மாவட்டம், பொய்யனப்பாடி, அருள்மிகு ஆண்டவர் செல்லியம்மன் திருக்கோயில் மதிற்சுவர் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

58. அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் வடகிழக்கு கோட்டை மதிற்சுவர் ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

59. அட்ட வீரட்டானத் திருத்தலங்களுள் இரு திருக்கோயில்களில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

60. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், பட்டீஸ்வரம் அருள்மிகு பிரம்மநந்தீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

61. கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர், அருள்மிகு திருவேங்கடநாத பெருமாள் திருக்கோயிலில் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

62. திருப்பத்தூர் மாவட்டம், மடவாளம், அருள்மிகு அங்கநாதீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

63. கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர், அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

64. திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம், அருள்மிகு கோடிலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.24 இலட்சம் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

65. கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, அருள்மிகு மகாதேவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான பழைய

அரண்மனை கட்டடத்தில் இயங்கி வந்த பள்ளிகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

திருத்தேர் திருப்பணிகள்

66. சென்னை, அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய வெள்ளித் திருத்தேர் செய்யப்படும்.

67. இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய வெள்ளித் திருத்தேர் செய்யப்படும்.

68. 9 திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருத்தேர்கள் ரூ.2 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

69. திருத்தேர்கள் இயற்கைச் சீற்றங்களால் பழுதடையாது பாதுகாத்திட திருத்தேர் கொட்டகைகள் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு ரூ.10 கோடி செலவில் அமைக்கப்படும்.

திருக்குளம்

70. சென்னை, மாதவரம், அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயிலுக்குப் புதிய திருக்குளம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

நந்தவனங்கள்

71. பூத்துக் குலுங்குகின்ற பூஞ்சோலைகளாக திருக்கோயில்கள் காட்சியளிப்பதற்கு, 100 திருக்கோயில்களில் ரூ.15 கோடி செலவில் புதியதாக மலர்த் தோட்டங்கள் அமைத்து, தல மரங்களையும் நட்டுப் பராமரிக்கப்படும்.

பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள்

72. இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர், அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் ரூ.11 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

73. அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் ரூ.9 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய விருந்து, காதுகுத்துதல் மற்றும் முடிக்காணிக்கை செலுத்தும் ஒன்பது மண்டபங்கள் கட்டப்படும்.

74. வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் அன்னதானக் கூடம் மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய முடிக்காணிக்கை மண்டபம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

75. இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் 20 விருந்து மண்டபங்கள் கட்டப்படும்.

76. சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 18 இடங்களில் உள்ள சிதிலமடைந்த வாடகைக் குடியிருப்புகளை அகற்றி விட்டு புதிய வணிக வளாகம், குடியிருப்புகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

77. சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடத்தில் உபயதாரர் பங்களிப்போடு ரூ.2 கோடி செலவில் பணியாளர் குடியிருப்புகளும், பக்தர்கள் தங்கும் விடுதியும் கட்டப்படும்.

78. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான எல்லீஸ் நகர் பகுதியில் உள்ள இடத்தில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

79. விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் முடிக்காணிக்கை மண்டபம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

80. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆலங்குளத்தில் உள்ள நிலத்திற்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும்.

81. சிவகங்கை மாவட்டம், மடப்புரம், அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் வணிக வளாகம், பக்தர்கள் தங்கும் அறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் ஆகியவை ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

82. அழகர்கோயில், அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் சஷ்டி மண்டபம் கட்டப்படும்.

83. திருப்பூர் மாவட்டம், தூரம்பாடி, அருள்மிகு குலமாணிக்கீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் புதிய இளைப்பாறும் மண்டபம் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

84. கன்னியாகுமரி மாவட்டம், திக்குறிச்சி, அருள்மிகு மகாதேவர் திருக்கோயிலின் சுற்றுச்சுவர் மற்றும் படித்துறை பராமரிப்புப் பணிகள் ரூ.75 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

85. விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அங்காளம்மன் திருக்கோயில் வளாகத்தில் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கப்படும்.

86. திருவாரூர் மாவட்டம், திருக்கொள்ளிக்கோடு, அருள்மிகு அக்னீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பக்தர்கள் வசதிக்காக ரூ.50 இலட்சம் செலவில் தங்கும் விடுதி ஏற்படுத்தப்படும்.

87. மருதமலை, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் புதிய முடிக்காணிக்கை மண்டபம் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

88. வேலூர் மாவட்டம், அணைக்கட்டு, விரிஞ்சிபுரம், அருள்மிகு மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயிலில் அன்னதானக் கூடம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

89. விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அங்காளம்மன் திருக்கோயில் வளாகத்தில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

90. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான வாகன நிறுத்துமிடம் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

அசையா சொத்துக்களைப் பாதுகாத்து மேம்படுத்துதல்

91. சென்னை, வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பல்நோக்குக் கட்டடம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

92. திருக்கோயிலுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களிலிருந்து திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் கொள்கைகளை உருவாக்கிடத் தேர்ந்த ஆலோசகர்கள் நியமனம் செய்யப்படுவர்.

93. சென்னை, கொசப்பேட்டை, அருள்மிகு ஆதி மொட்டையம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான சந்தை ரூ.50 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

94. காரைக்குடி, அருள்மிகு கொப்புடைநாயகியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான சிதிலமடைந்த நகர வாரச் சந்தையை அகற்றி, ரூ.1.50 கோடி செலவில் புதியதாகக் கட்டப்படும்.

பயிற்சிப் பள்ளிகள் மற்றும் நலப்பணிகள்

95. சாதி வேறுபாடின்றி அர்ச்சகர்களை உருவாக்கும் இந்து சமய அறநிலையத்துறையின் ஆறு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் ரூ.1.50 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

96. மாமல்லபுரம், ஆளவந்தார் அறக்கட்டளையில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் வைணவ பிரபந்த பாடசாலை ஏற்படுத்தப்படும்.

97. சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் திருநெல்வேலி, அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில்களில் ரூ.1 கோடி மதிப்பீட்டில், புதிய ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் ஏற்படுத்தப்படும்.

98. திருத்தணிகை, அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலின் உபக்கோயிலான அருள்மிகு கோட்டா ஆறுமுகசாமி திருக்கோயில் வளாகத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தப்படும்.

99. திருவண்ணாமலை மற்றும் மதுரையில் அமைந்துள்ள ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

100. திருச்சி, குணசீலம், அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயிலில் இயங்கிவரும் மனநலக் காப்பகம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

101. திருநாகேஸ்வரம், அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயிலில் உள்ள தவில், நாதஸ்வர இசைப்பள்ளி மேம்படுத்தப்படும்.

102. ஸ்ரீவில்லிப்புத்தூர், அருள்மிகு ஆண்டாள் திருக்கோயில் சார்பாக திவ்ய பிரபந்த பாடசாலை மீண்டும் தொடங்கப்படும்.

103. திருப்பெரும்புதூர், அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பாஷ்யக்கார சுவாமி திருக்கோயிலில் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி புதியதாகத் தொடங்கப்படும்.

104. திருக்கோயில் யானைகளுக்கு மாதம் இருமுறை மருத்துவப் பரிசோதனை செய்து, மருத்துவரின் ஆலோசனைப்படி மருத்துவ வசதி, உணவு, குளியல் வளாகம், நடைப் பயிற்சி வசதி மற்றும் தேவையான அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்படும்.

வணிக வளாகம்

105. திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

106. ஒசூர், அருள்மிகு காளிகாம்பாள் காமாட்டீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் மலர் வணிக வளாகம் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

107. திருவண்ணாமலை மாவட்டம், திருவத்திபுரம், அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் வணிக வளாகம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

இதர பணிகள்

108. நாகப்பட்டினம் இணை ஆணையர் மண்டலத்திற்கான ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் ரூ.3.53 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

109. மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோயில், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் ஆகியவற்றிலுள்ள கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு புத்தகமாக வெளியிடப்படும்.

110. முதுநிலை திருக்கோயில்களின் சிறப்பம்சங்களை வெளிப்படுத்தும் வகையில் முழு விவரக் காட்சிக் கையேடுகள் (Coffee Table Books) வெளியிடப்படும்.

111. திருக்கோயில்களின் கோபுரங்களில் பொருத்தப்பட்டுள்ள இடிதாங்கிகள் ஆய்வு செய்யப்பட்டுப் புதுப்பிக்கப்படும். மேலும், தேவையான இடங்களில் புதியதாகப் பொருத்தப்படும்.

112. சூரிய ஒளி வெப்ப விளக்குகள் (Solar lights) தேவைப்படும் அனைத்துத் திருக்கோயில்களிலும் பொருத்தப்படும்.

❖ ❖ ❖

மனித வள மேலாண்மைத் துறை

மானியக் கோரிக்கை எண். 35

1. போட்டித் தேர்வுகளில் தமிழ்மொழி பாடத்தாள் கட்டாயமாக்கப்படுதல்.

தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும், தமிழக இளைஞர்களை 100 சதவிகிதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்து போட்டித் தேர்வுகளிலும் தமிழ்மொழி பாடத்தாள் தகுதித் தேர்வாகக் கட்டாயமாக்கப்படும்.

2. வேலை வாய்ப்பில் முன்னுரிமை.

வேலை வாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசுப் பணியிடங்களில் பின்வரும் இனத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:

(1) கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள்

(2) முதல் தலைமுறை பட்டதாரிகள்

(3) தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ்மொழியில் பயின்ற நபர்கள்

3. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் புலனாய்வுகளைக் கூர்மைப்படுத்திட மென்பொருள் மற்றும் வல்லுநர்களின் சேவை.

ரூ.1.10 கோடி (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் மட்டும்) செலவில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கக வழக்கு விசாரணைகளில், இணையவழி வங்கி சேவையின் வாயிலான பணப்பரிமாற்றம் மற்றும் தரவுகளின் பகுப்பாய்விற்காக மென்பொருள் நிறுவுவதுடன் நிபுணத்துவம் பெற்ற பட்டயக் கணக்கர், இணையதள குற்ற தடயவியல் நிபுணர், ஓய்வு பெற்ற வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வு பெற்ற வருமான வரி ஆய்வாளர் / அலுவலர்கள் ஆகியோரின் சேவைகளும் பயன்படுத்தப்படும்.

4. புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 6 வருவாய் மாவட்டங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகங்கள் ஏற்படுத்துதல்.

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, இராணிப்பேட்டை, தென்காசி மற்றும் திருப்பத்தூர் ஆகிய வருவாய் மாவட்டங்களில் ரூ.2.93 கோடி (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சம் மட்டும்) செலவில் ஆறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும்.

5. கொரோனா பெருந்தொற்று காரணமாக வயது உச்ச வரம்பு உயர்த்துதல்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக, பணியாளர் தெரிவு முகமைகளால் (Recruiting Agencies) நடத்தப்படும் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் தாமதமானதால், நேரடி இரண்டு நியமன வயது உச்ச வரம்பு ஆண்டுகளாக உயர்த்தப்படும்.

6. அரசுப் பணி நியமனங்களில் பெண்களுக்கான ஒதுக்கீட்டினை 40 சதவீதமாக உயர்த்துதல்.

மாற்றத்தை ஊக்குவிப்பதில் பாலின சமத்துவம் முக்கியமானது என்பதை உணர்ந்து, நேரடி நியமனம் மூலம் மேற்கொள்ளப்படும் அரசுப் பணி நியமனங்களில் பெண்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஒதுக்கீடு 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்தப்படும். இதற்குரிய சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

7. தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

தலைமைச் செயலக ஆய்வுக் குழுக்கள் மற்றும் மாவட்ட ஆய்வுக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் திடீர் ஆய்வுகள் மற்றும் விரிவான ஆய்வுகளின் உரியப் பலன்களை உடனுக்குடன் பெறுவதற்காக ஆய்வுப் பிரிவிற்கு ரூ.15 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) செலவில் மடிக்கணினிகள் மற்றும் அதனைச் சார்ந்த மென்பொருட்கள் வழங்கப்படும்.

8. அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு மிகு மின்சாரம் வழங்குதல்.

மாநிலத்தின் முதன்மை பயிற்சி நிறுவனமான அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு சீரான மின்சாரம் பெறப்படுவதை உறுதி செய்ய 500 KVA திறன் கொண்ட ஸ்விட்ச் கியர் அமைப்புடன் ஒரு மின்மாற்றிகள் ரூ.4 கோடி (ரூபாய் நான்கு கோடி மட்டும்) செலவில் அமைக்கப்படும்.

9. அண்ணா மேலாண்மை நிலைய பணியாளர்களுக்கான வாடகை குடியிருப்புகள்.

அண்ணா மேலாண்மை நிலையத்தில் 2005ஆம் ஆண்டில் பணியாளர்களுக்காக ஆறு வாடகை குடியிருப்புகள் கட்டப்பட்டன. தற்போது கூடுதல் பணியாளர்களுக்காக அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்திலேயே ரூ.350 கோடி (ரூபாய் மூன்று கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் கூடுதல் பணியாளர் வாடகை குடியிருப்பு அமைக்கப்படும்.

10. 53 வயதைக் கடந்த தொகுதி ‘அ’ மற்றும் ‘ஆ’ அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி.

‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு அரசுப் பணியாளர்களில் 53 வயதுக்கு உட்பட்டவர்களுக்கே பிரத்தியேகமாகப் பயிற்சி நடத்தப்படுகிறது. இதற்கு மாறாக, 53 வயதைக் கடந்த அலுவலர்களுக்கு பொதுவான தலைப்புகளான மனித வள மேலாண்மை, நேர மேலாண்மை, தலைமைப் பண்புகள் மற்றும் பொதுமக்கள் நல்லுறவு போன்ற பிரிவுகளில் அவர்களின்

வயது மற்றும் பணி முதிர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வகுப்பறை அல்லா சூழலில் நடத்துவதற்குக் கூடுதலாக ரூ.2 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

11. அண்ணா மேலாண்மை நிலையத்தில் சிறப்புப் பயிற்சி அளித்தல்.

மாநில அரசுப் பணியில் உள்ள இடைநிலை ஆசிரியர்கள் முதல் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் வரை குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், சத்துணவுப் பணியாளர்கள், அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் பணிபுரியும் அரசு விடுதிக் காப்பாளர்கள் மற்றும் முறையான பயிற்சி பெறாத அனைத்து துறை பணியாளர்களுக்கும் அண்ணா மேலாண்மை நிலையத்தில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக ரூ.2 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்படும்.

12. காட்சி ஊடகப்பாதை – படப்பிடிப்புத் தளம் அமைத்தல்.

அண்ணா மேலாண்மை நிலையத்தின் AIM TN காட்சி ஊடகப்பாதை செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் ரூ.50 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பிரத்தியேகமாக ஒரு படப்பிடிப்புத் தளம்

(Studio) அமைக்கப்படும் மற்றும் அதற்கான அனைத்து உபகரணங்களும் வாங்கப்படும்.

13. இரண்டு புதிய மினி பேருந்துகள் வாங்குதல்.

முதன்மைப் பயிற்சி நிறுவனமான அண்ணா மேலாண்மை நிலையத்தில் மாநில / மத்திய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன அலுவலர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு இடங்களிலிருந்து வரும் பயிற்சியாளர்கள் அண்ணா மேலாண்மை நிலையத்தை வந்தடையவும், அங்கிருந்து பயிற்சி தொடர்பாகத் தலைமைச் செயலகம் உள்ளிட்ட பல இடங்களுக்குச் செல்லவும், பயிற்சியாளர்களின் போக்குவரத்து வசதிக்காக ரூ.40 இலட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) செலவில் 2 புதிய மினி பேருந்துகள் வாங்கப்படும்.

14. புதியதாகக் கணினி/உபகரணங்கள் வாங்குதல்.

அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் மற்றும் ‘அ’ (ம) ‘ஆ’ பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையத்தில் கணினி ஆய்வகத்தினை புதுப்பிக்கும் பொருட்டு ரூ.81 இலட்சம் (ரூபாய் எண்பத்தியொரு இலட்சம் மட்டும்) செலவில் கணினிகள், அச்சுப்பொறி மற்றும் உபகரணங்கள் வாங்கப்படும்.

❖ ❖ ❖

கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத்துறை

பால்வளத்துறை

மானியக் கோரிக்கை எண். 8

1. பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தித் திறனில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை ரூ.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தற்போது மாதம் ஒன்றிற்கு 10,000 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் கொள்முதல் செய்யப்பட்டுப் பால் உற்பத்தியாளர்களுக்கு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஈரோட்டில் உள்ள கால்நடை தீவன ஆலையிலிருந்து 3,500 மெட்ரிக் டன் கால்நடை தீவனமும் இதர கூட்டுறவு அமைப்புகளின் மூலம் 6,500 மெட்ரிக் டன் கால்நடை தீவனமும் கொள்முதல் செய்யப்பட்டு அவர்களுக்கு வினியோகிக்கப்படுகிறது.

தென் மாவட்டங்களான தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் மற்றும் இதர மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறனில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை ரூ.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

2. சேலம் பால்பண்ணையில் நாளொன்றுக்கு 2 மெட்ரிக் டன் அளவில் நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவுடன் கூடிய இனிப்பு இல்லாத பால்கோவா தயாரிக்கும் நவீன மற்றும் தொடர்ச்சியான உற்பத்திக்கான இயந்திரங்களுடன் கூடிய அலகு ரூ.8 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடனும், அதிகரித்து வரும் நுகர்வோர் தேவையைக் கருத்தில் கொண்டும் பாலை அடிப்படையாகக் கொண்ட இனிப்புகள் தயாரிக்கச் சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலுள்ள பால்பண்ணையில் நாளொன்றுக்கு 2 மெட்ரிக் டன் அளவில் இனிப்பு இல்லாத பால் கோவா தயாரிக்கும் அலகு ரூ.8 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

3. நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவுடன் கூடிய நொதியூட்டப்பட்ட பால் பொருட்களான மோர், பாக்கெட் தயிர் மற்றும் கப் தயிர் தயாரிக்கும் அலகு நவீன இயந்திரங்களுடன் காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட மக்களின் அதிகரித்து வரும் தேவையைக் கருத்தில் கொண்டும், ஒன்றியத்தின் விற்பனை வருவாயை அதிகரித்திடவும், நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவுடன் கூடிய

நொதியூட்டப்பட்ட பால் பொருட்களான மோர், பாக்கெட் தயிர் மற்றும் கப் தயிர் தயாரிக்கும் அலகு ஒன்று நவீன இயந்திரங்களுடன் ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

4. **அம்பத்தூர், சோழிங்கநல்லூர், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் பால் பண்ணைகளில் திரட்டுப் பால்** (Condensed Milk) **தயாரிக்க நவீன சவ்வூடு வடிகட்டுதல் தொழில்நுட்பத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

பல்வேறு பால் வகைகள், பால் பாக்கெட்களாகத் தயாரிக்கப்படும் போது பாலின் தரம், மணம் மற்றும் சத்துப் பொருட்கள் ஆகியன பாதுகாக்கப்படும் வகையில் தயாரிக்கப்படுவது அவசியமாகிறது. இதன் அடிப்படையில் அம்பத்தூர், சோழிங்கநல்லூர், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் பால் பண்ணைகளில் நவீன சவ்வூடு வடிகட்டுதல் தொழில்நுட்பத்துடன் திரட்டு பால் (Condensed Milk) தயாரிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

5. **பால் பொருட்கள், சிப்பம் கட்டும் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களுக்கான ஆய்வுக்கூடம், ஆராய்ச்சி மற்றும் உருவாக்கம் மற்றும் நுண்ணுயிரியல் பகுப்பாய்விற்கான ஆய்வுக்கூடம் ஆகியன அம்பத்தூர் பால்பண்ணையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

பால் மற்றும் பால் பொருட்கள், சிப்பம் கட்டும்

பொருட்களின் தரத்தினை ஆய்வு செய்யவும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் (FSSAI) வழிகாட்டுதலின்படி பால் பொருட்களின் தரத்தினை ஆய்வு செய்யவும், நுண்ணுயிரியல் பகுப்பாய்விற்கான ஆய்வுக் கூடத்தினை நிறுவவும், ஆராய்ச்சி மற்றும் உருவாக்கப் பணிகளை மேற்கொள்ளவும் அம்பத்தூர் பால்பண்ணையில் அதிநவீன உபகரணங்களுடன் தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கூடம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

6. பால் உற்பத்தியாளர்கள், சங்கப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குப் பால் உற்பத்தி தொடர்பான பயிற்சிக்காக விழுப்புரம், மாதவரம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி நிலையங்கள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.

ஒன்றியம் மற்றும் இணையப் பயிற்சி நிலையங்கள், அதனுடன் இணைந்துள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களின் பால் உற்பத்தியாளர்கள், பணியாளர்கள் மற்றும் ஒன்றிய அலுவலர்களுக்கு அவ்வப்போது வளர்ந்து வரும் தொழில்நுட்ப திறனை புத்தாக்கம் செய்வது அவசியமாகிறது. எனவே, மாதவரம் மற்றும் விழுப்புரம், வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பயிற்சி நிலையங்கள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.

7. முதல் முறையாக உறுப்பினர்களுக்குக் கால்நடை பராமரிப்புக் குறித்துக் குரல் ஒலி (Voice Message) **மற்றும் குறுஞ்செய்தி** (Text Message) **வாயிலான இலவச சேவை அறிமுகப்படுத்தப்படும்.**

ஆவின் மற்றும் இப்கோ கிஸான் நிறுவனம்

இணைந்து ஆவினுக்குப் பால் வழங்கும் ரூ.4.25 இலட்சம் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் தரமான பால் உற்பத்தி, கறவை மாடுகள் பராமரிப்பு மற்றும் நோய்த் தடுப்புக் குறித்துத் தொழிற்நுட்ப வல்லுநர்கள் கொண்ட குழுவின் ஆலோசனைகள் குறுஞ்செய்தி (Text Message) மூலமாகவும், குரல் ஒலி (Voice Message) செய்தியாகவும் தமிழகப் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும்.

இதனால் கால்நடை மேலாண்மை குறித்த தகவல்களை அவர்களிடம் நேரடியாகக் கொண்டு செல்வதன் மூலம் தரமான, நோயற்ற கால்நடைகள் பராமரிப்பிற்கான விவரங்கள் உற்பத்தியாளர்களுக்குத் தொடர்ந்து வழங்கிட உதவியாக இருக்கும்.

8. ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை முறையில் சீர்திருத்தம் மற்றும் விற்பனை விரிவாக்கம் செய்து அதிக இலாபத்தை ஈட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பால் பவுடர் மற்றும் வெண்ணெய் மொத்த விற்பனை முறையில் சீர்திருத்தம் செய்யப்படும். பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிப்பதற்காக, ஆவின் முகவர்களை நியமனம் செய்ய ஒற்றைச் சாளரமுறை நடைமுறைப்படுத்தப்படும். அனைத்து பாலகங்களிலும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படும்போது இரசீது வழங்கப்படும்.

புதிய பால் பொருட்கள் அறிமுகப்படுத்தப்படும். சந்தையிலுள்ள பால் பொருட்களின் மதிப்புக் கூட்டப்படும். பால் பொருட்களின் விலையை இதர நிறுவனங்களின் பால் பொருட்களின் விலையோடு ஒப்பிட்டு, விலை மாற்றியமைக்கப்படும்.

பிற மாநிலங்களில் ஆவின் பால் மற்றும் ஆவின் பொருட்களின் விற்பனையை விரிவாக்கம் செய்தல், வெளிநாடுகளில் ஆவின் பொருட்களை விற்பனை செய்ய வணிக ஏற்றுமதியாளர்களை நியமனம் செய்தல், ஆவின் பொருட்களை அதிக அளவில் விற்பனை செய்யக் கூடுதலாகச் சில்லரை விற்பனையாளர்களை நியமித்தல், கல்லூரி, விடுதிகள், மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு விநியோகம் செய்தல் ஆகியன மேற்கொள்ளப்படும்.

மேலும், மின் வணிக நிறுவனங்கள், உணவகங்கள், பால் பொருள் அங்காடிகள் மற்றும் அடுமனைகளில் விற்பனையை அறிமுகப்படுத்துதல், பால் மற்றும் பால் பொருட்களுக்குச் சீரான வடிவமைப்பு கொள்கையை உருவாக்குதல், விற்பனையாளர்களின் நியமன விதிமுறைகளைத் தளர்த்திக் கூடுதலாகப் புதிய சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்களை நியமனம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் விற்பனையை அதிகரிப்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு பால்வளத்துறை செயல்படும்.

9. மின்ஆளுமை (e-Governance) முறையினைக் கையாண்டு சிக்கனம் மற்றும் நிருவாகத்தை செம்மைப்படுத்ததும் முறைகள் செயல்படுத்தப்படும்.

பால்வளத் துறையின் செயல்பாடுகளை மின்னணு மயமாக்குதலை குறிக்கோளாகக் கொண்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உடனடி பால் மதிப்பாய்வு மற்றும் உறுப்பினர்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்குதல் (Spot Acknowledgement) மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு வாயிலாகப் பால்பணப் பட்டுவாடா ஆகியன செயல்படுத்தப்படும்.

இணைய வழி மூலமாகப் பால் அட்டை விற்பனை செய்யப்படும். இணைய வழியில் உறுப்பினர்கள் மற்றும் நுகர்வோர்களிடம் பின்னூட்டம் (Feedback) மற்றும் குறைகள் அறியப்பட்டு நிவர்த்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அனைத்து பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் பால் பண்ணைகளில் கண்காணிப்புக் கருவி (CCTV Surveillance) மூலம் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அனைத்து ஊழியர்களுக்கும் முகப் பதிவு (Face Detection) கருவி மூலம் வருகைப்பதிவு மேற்கொள்ளப்படும்.

ஆவின் முகவர்களுடைய உரிமம் இணைய வழியாகப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்திய தேசிய கூட்டுறவு பால் பண்ணை அமைப்பின் இணைய வழி விற்பனை (e-Auction) மூலம் பால்பவுடர், வெண்ணெய் போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பால் பொருட்களுக்கான

விற்பனை மேற்கொள்வதைப் போன்று இதர பால் பொருட்களையும் இவ்வமைப்பின் மூலம் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. பால்வளத் துறையில் அதன் தொடர் வளர்ச்சிக்காக கீழ்க்கண்ட நிருவாகச் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பால் உற்பத்தியாளர்கள் நிலுவைத் தொகையை உடனடியாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், செயலிழந்த சங்கங்கள் புதுப்பிக்கப்படும். இதன் மூலம் கூடுதலாகப் பால் உற்பத்தியாளர்கள் ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கவும் அதன் மூலம் பால் கொள்முதலை அதிகரிக்கவும் வாய்ப்புகள் உருவாக்கப்படும். அனைத்துக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கும் பொதுவான துணை விதிகள் உருவாக்கப்படும். மேலும், பால் உற்பத்தியாளர்களுக்கு மாதந்தோறும் குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்பட்டுத் தீர்வு காணப்படும். புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் உருவாக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

ஆவின் நிறுவனத்தில் உள்ள மேலாளர் வரையிலான பதவியிடங்கள், அரசு ஆணை பெற்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலமாகத் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. 60 தானியங்கி பால் கறக்கும் கருவிகள் வேலூர் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு ரூ.36 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.

வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் பலனடையும் விதத்திலும் தூய பால் உற்பத்தியினை மேம்படுத்தும் வகையிலும் 60 தானியங்கி பால் கறக்கும் கருவிகள் (Single Bucket) ரூ.36 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.

12. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்கள் வழங்கும் பாலினை பகுப்பாய்வு செய்து உடனே பாலின் தரம் மற்றும் பாலின் மதிப்பிற்கு இரசீது வழங்க 453 பால் பகுப்பாய்வு கருவிகள் ரூ.2.26 கோடி மதிப்பில் வழங்கப்படும்.

பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருதி, தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பால் வழங்குகின்ற பால் உற்பத்தியாளர்களின் பாலிலுள்ள மொத்த சத்துக்கள் அடிப்படையில், வெளிப்படைத் தன்மையுடன் பாலிற்கு உண்டான விலையினை வழங்குவதற்குக் காஞ்சிபுரம் – திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நீலகிரி, திருச்சி மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு ரூ.2.26 கோடி மதிப்பில் 453 பால் பகுப்பாய்வுக் கருவிகள் வழங்கப்படும்.

13. பாலின் தரத்தை மேம்படுத்த, பால் கேன்களை குளிர்விக்கும் 40 இயந்திரங்கள் ரூ.60 இலட்சம் மதிப்பில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு வழங்கப்படும்.

பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்கின்ற பாலை உடனடியாகக் குளிர்வித்து அதன் ஆரம்ப தரத்தினைக் கெடாமல், வெகு தொலைவிலுள்ள குளிரூட்டும் நிலையம் அல்லது தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்களுக்குக் கொண்டு சேர்க்கப் பால் கேன்களைக் குளிர்விக்கும் 40 இயந்திரங்கள், காஞ்சிபுரம்–திருவள்ளூர், கடலூர், வேலூர் மற்றும் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு ரூ.60 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.

14. வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தேவைக்காக 2 குளிர்காப்பு வாகனங்கள் (Puffed vehicle) **மற்றும் 3 குளிர்சாதன வசதி வேன்கள்** (Refrigerated Mini Van) **ஆகியன ரூ.88 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.**

வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உள்ள நுகர்வோர்கள் பலனடையும் விதத்தில் பால் மற்றும் ஐஸ்கிரீம், குல்பி மற்றும் நறுமணப்பால் போன்ற பால் பொருட்களைத் தொலை தூரங்களுக்குக் கொண்டு செல்ல உதவும் வகையில் 2 குளிர்காப்பு வாகனங்கள் (Puffed vehicle) மற்றும்

3 குளிர்சாதன வசதி வேன்கள் (Refrigerated Mini Vans) ஆகியன ரூ.88 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.

15. பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் முக்கியமான சேவைகளுள் ஒன்றாக அவர்களின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று கால்நடைகளுக்கு இலவச மற்றும் அவசர சிகிச்சை வசதிகளை ஏற்படுத்த 162 நடமாடும் கால்நடை மருத்துவ வழித்தடங்கள் ரூ.6.80 கோடி மதிப்பில் அமல்படுத்தப்படும்.

மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் பால் வழங்குகின்ற பால் உற்பத்தியாளர்களுடைய கறவை மாடுகளுக்கு இலவச சிகிச்சை, இனப்பெருக்க வசதி மற்றும் அவர்களுக்குத் தூய முறையில் பால் உற்பத்தி பயிற்சி, சமச்சீர் தீவனம், தாது உப்பு கலவை, பசுந்தீவனத்தின் முக்கியத்துவம் மற்றும் கறவை மாடுகள் பராமரிப்புப் பற்றிய ஆலோசனைகள் ஆகியன வழங்குவதற்காகக் கால்நடை மருத்துவ வழித்தடங்களில் 162 கால்நடை மருத்துவ ஆலோசகர்களை ரூ.6.80 கோடி திட்ட மதிப்பில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16. தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள பழைய கட்டடத்தில் தற்போது இயங்கி வரும் 5,000

லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று பால் தொகுப்புக் குளிர்விப்பான்களைப் புதிய கட்டடத்தில் மாற்றம் செய்ய ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டித்தரப்படும்.

தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் தற்சமயம் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 3 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் செயல்பட்டு வருகின்றன. சங்க கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாகவும், பால் டேங்கர்கள் (Milk Tanker) உள்ளே சென்று வருவதற்குப் போதிய இடவசதி இல்லாத காரணத்தினாலும் மேற்கூறிய மூன்று பால் குளிர்விப்பான்களைத் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்குச் சொந்தமான மன்னார்குடி நகராட்சிக்கு உட்பட்ட மேலப்பாலம் அருகில் மாற்றி அமைத்திட ரூ.50 இலட்சம் மதிப்பில் ஒரு புதிய கட்டடம் கட்டித்தரப்படும்.

❖ ❖ ❖

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

சிறுபான்மையினர் நலன்

மானியக் கோரிக்கை எண். 9

1. 14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் ரூ.14 இலட்சம் செலவில் நூலகம் ஏற்படுத்தப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் மாணவ, மாணவியரின் கல்வி அறிவு மற்றும் பொது அறிவினை வளர்க்கவும், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிறப்பான முறையில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டும் 14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் தலா ஒரு நூலகம் ரூ.14 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

2. 14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளுக்கு ரூ.5.90 இலட்சம் செலவில் உடற்பயிற்சிக் கருவிகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் வழங்கப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் மாணவ, மாணவியரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, 14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளுக்கு உடற்பயிற்சிக் கருவிகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் ரூ.5.90 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

3. 14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்குத் தமிழ்நாடு திறன் வளர்ப்பு மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் மாணவ, மாணவியர் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதற்கு ஏதுவாக, 14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு தனித்திறன் மற்றும் ஆங்கில வழி பேச்சாற்றல் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ப்பு மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும்.

4. சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்குக் வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சம் ஆக உயர்த்தப்படும்.

சிறுபான்மையினர் விடுதிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவியர் சேர்ந்து தங்கிப் பயிலும் வகையில் இவ்விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சம் ஆக உயர்த்தப்படும்.

5. சிறுபான்மையினர் நல விடுதி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் பல்வகை செலவினத் தொகை

இரு மடங்காக ரூ.9.75 இலட்சம் செலவில் உயர்த்தி வழங்கப்படும்.

சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு தற்போதைய சூழலுக்கேற்ப பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50லிருந்து ரூ.100 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.75லிருந்து ரூ.150 ஆகவும், ரூ.9.75 இலட்சம் செலவில் உயர்த்தி வழங்கப்படும்.

6. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு ரூ.2,000லிருந்து ரூ.3,000 ஆகவும், பெண்களுக்கு ரூ.2000லிருந்து ரூ.5,000 ஆகவும் உயர்த்தப்படும்.

அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு திருமண உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டதை போன்று உலமா மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு ரூ.2,000லிருந்து ரூ.3,000 ஆகவும், பெண்களுக்கு ரூ.2,000லிருந்து ரூ.5,000 ஆகவும் உயர்த்தப்படும்.

7. சிறுபான்மையினருக்கு 1,000 இலவச மின் மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.45 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக 1,000 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.45 இலட்சம் செலவில் இலவசமாக வழங்கப்படும்.

8. தேனி மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் ரூ.3.48 கோடி செலவில் கட்டப்படும்.

சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி தேனி மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் மாணவியர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் ரூ.3.48 கோடி செலவில் கட்டப்படும்.

9. ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கு அருட்சகோதரிகள்/ கன்னியாஸ்திரீகளுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.37,000லிருந்து ரூ.60,000 ஆக என மொத்தம் ரூ.11.50 இலட்சம் செலவில் உயர்த்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு ரூ.37,000 மானியம் வழங்கப்படுகிறது. இப்புனித பயணத்திற்கு அருட்சகோதரிகள் – 7 கன்னியாஸ்திரீகளுக்கு வழங்கப்படும்

மானியம் ரூ.37,000லிருந்து ரூ.60,000 ஆக, என மொத்தம் ரூ.11.50 இலட்சம் செலவில் உயர்த்தப்படும்.

10. சிறுபான்மையினர் விடுதி மாணவ / மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு (புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரீத், ரம்ஜான், கிறிஸ்துமஸ்) சிறப்பு உணவு வழங்கப்படும்.

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. சிறுபான்மையினர் விடுதி மாணவ, மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு (புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரீத், ரம்ஜான், கிறிஸ்துமஸ் சிறப்பு உணவு வழங்கப்படும்.

11. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள 10,583 நபர்களுக்கு மிதிவண்டிகள் ரூ.4.76 கோடி செலவில் வழங்கப்படும்.

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் உறுப்பினர்கள் பயனடையும் பொருட்டு, அவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு 10,583 மிதிவண்டிகள் ரூ.4.76 கோடி செலவில் வழங்கப்படும்.

12. அனைத்து மாவட்டங்களில் கூடுதலாக முஸ்லிம் / கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் துவக்கப்படும்.

முஸ்லிம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம்

விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மற்றும் கிறித்துவ மகளிர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு மாவட்டத்திற்கு ஒரு முஸ்லிம் மற்றும் ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாகத் தேவையின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களில் கூடுதலாக முஸ்லிம், கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் துவங்கப்படும்.

13. வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகாயத் தொகை விகிதத்திற்கு ஏற்ப வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும். ஆண்டுதோறும் நிருவாக மானியம் உயர்த்தப்படும்.

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நிருவாக செலவுகளுக்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நிருவாக மானியம் வழங்கி வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஆண்டுதோறும் நிருவாக மானியமாக ரூ.2.50 கோடி வழங்கப்பட்டு வருகிறது. வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகாயத் தொகை விகிதத்திற்கு ஏற்ப இந்நிருவாக மானியம் உயர்த்தி வழங்கப்படும்.

14. வக்ஃப் வாரிய தலைமை அலுவலகத்திற்கு வக்ஃப் வாரியத்தில் புதியதாக கட்டடம்.

தமிழ்நாடு வக்ஃப் வாரியம் தனது பணிகளைத் திறம்பட மேற்கொள்ளும் வகையில் சென்னையிலுள்ள தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைமை அலுவலகத்திற்கு வக்ஃப் வாரிய நிலத்தில் புதியதாகக் கட்டடம் கட்டப்படும்.

15. வக்ஃப் சரக அலுவலகங்களுக்குச் சொந்த கட்டடம் கட்ட ரூ.1.28 கோடி மானியம் வழங்கப்படும்.

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃபுகளை பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் மற்றும் கண்காணிக்கவும், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்குட்பட்ட சொந்த அலுவலகக் கட்டடம் இல்லாத 8 சரக அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட ரூ.1.28 கோடி மானியம் வழங்கப்படும்.

16. சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் ரூ.1.75 கோடி செலவில் தோற்றுவிக்கப்படும்.

சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தும் பொருட்டு சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் 5 மாவட்டங்களில் புதிய பணியிடங்களுடன் கூடிய மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் ரூ.1.75 கோடி செலவில் தோற்றுவிக்கப்படும்.

17. கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்.

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வருவதைப் போன்று கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்.

❖ ❖ ❖

பள்ளிக் கல்வித்துறை

மானியக் கோரிக்கை எண். 43

1. திசைதோறும் திராவிடம்

திராவிட மொழிகளிலேயே தொன்மைமிக்க மொழியான தமிழின் வரலாறு, பண்பாட்டு மரபு மற்றும் தமிழ்ச் சமூகத்தின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் சிறந்த தமிழ் நூல்கள் (மாபெரும் தமிழ்க் கனவு ஆங்கிலத்திலும், பொன்னியின் செல்வன், வைக்கம் போராட்டம் ஆகிய நூல்கள் மலையாளத்திலும், திருக்குறளுக்கான கலைஞர் உரை தெலுங்கிலும், தி.ஜானகிராமனின் சிறுகதைகள் கன்னடத்திலும்) மொழிபெயர்க்கப்பட்டு ஆங்கிலம் மற்றும் சம்மந்தப்பட்ட மாநில மொழிப் பதிப்பகங்களோடு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டுவரப்படும். இதேபோல், பிற திராவிட மொழிகளிலிருந்து சிறந்த நூல்கள் தமிழுக்கு மொழிபெயர்க்கப்படும்.

2. முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

உயர்கல்விப் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய இலக்கியம், இயற்பியல், மருத்துவம், பொருளாதாரம், பொறியியல், வேதியியல், வேளாண்மை போன்றத் துறைகளில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள தலைசிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துச் சம்மந்தப்பட்ட பதிப்பகங்களோடு

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் கூட்டு வெளியீடாக ரூ.2 கோடி செலவில் வெளியிடப்படும். இது, முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் எனும் மாபெரும் திட்டத்தின் தொடக்கமாக அமையும்.

3. இளந்தளிர் இலக்கியத் திட்டம்

குழந்தைகளின் படைப்பாற்றலை மேம்படுத்தவும் (பேச்சாற்றல், எழுத்தாற்றல், ஓவியம் தீட்டும் ஆற்றல்) நன்னெறிக் கல்வியைக் கற்பிக்கவும் மற்றும் அறம் சார் சமூக விழுமியங்களை வளர்த்தெடுக்கவும் இளந்தளிர் இலக்கியத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 100 குழந்தை இலக்கிய நூல்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வெளியிடப்படும்.

4. குழந்தை எழுத்தாளர்களுக்கு "கவிமணி விருது"

குழந்தைகளின் எழுத்தார்வத்தை ஊக்குவிக்கும் வண்ணம், 18 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர்களில் ஆண்டுதோறும் மூன்று சிறந்த எழுத்தாளர்களைத் தேர்வு செய்து ரூ.25,000 ரொக்கம், கேடயம் மற்றும் சான்றிதழுடன் "கவிமணி விருது" வழங்கப்படும்.

5. செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்

தமிழ் மொழிக்கு அளப்பரியப் பங்காற்றிய எழுத்தாளர்கள் மற்றும் தமிழறிஞர்களைப் போற்றும் வகையிலும், அத்தகைய அறிஞர் பெருமக்களை இளம் தலைமுறையினர்

முன்மாதிரியாகக்கொள்ளும் வகையிலும், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" அமைக்கப்படும்.

இந்த அரங்கத்தில் சாகித்ய அகாடமி விருது, ஞானபீட விருது போன்ற உயரிய விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்களின் புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் படைப்புகள் காட்சிப்படுத்தப்படும்.

இளம் தலைமுறையினரின் எழுத்தார்வத்தைத் தூண்டும் வகையில் மேற்கூறிய படைப்பாளிகளின் படைப்புகள் சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும்.

6. உயர்கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டும் ஆலோசனை மையம்

அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் வழிகாட்டும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும். இதற்கென, தனியே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாகக் கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர் வகுப்புகள் நடத்தப்படும்.

முன்னாள் மாணவர்களைக் கொண்டு அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத் தொடர் நெறிப்படுத்தும் (Continuous Mentoring) முறையும் அறிமுகப்படுத்தப்படும்.

7. பள்ளிகளில் பாரம்பரியக் கலைகள்

கரகாட்டம், கும்மி, சிலம்பாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், பண்ணிசை, நாட்டுப்புறப் பாட்டு போன்ற தமிழரின் பாரம்பரியக் கலைவடிவங்களை அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடம் எடுத்துச் செல்வதை இலக்காகக் கொண்டு கிராமப்புறங்களில் உள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் உதவியுடன் பயிற்சியளிக்கப்படும். இதுபோலவே சிலம்பம், மல்யுத்தம் முதலான தமிழரின் பாரம்பரிய தற்காப்புக் கலைகளையும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முறையாகக் கொண்டு சேர்க்க உரியப் பயிற்சி அளிக்கப்படும்.

8. விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்

மாணவர்களின் உடல்நலம் மற்றும் மனநலத்தைப் பேணும் வகையில் அனைத்துப் பள்ளிகளுக்கும் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்படும். பள்ளி ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் 24,266 அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும், ரூ.10,000 வீதம் 6,948 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கும், ரூ.25,000 வீதம் 6,177 அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் ரூ.35 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

9. பொது நூலகங்களுக்குப் புத்தகங்கள் கொள்முதல்

பொது நூலகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தேவையானப் புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்குத் தேவையான மிகச் சிறந்த

புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், தற்போதுள்ள புத்தகங்களுக்கான கொள்முதல் கொள்கையில் தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். புத்தகக் கொள்முதலின் ஒவ்வொரு படிநிலையிலும் ஒளிவு மறைவின்றி வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்படும்.

10. அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள் வாங்குதல்

அண்ணா நூற்றாண்டு நூலகம் 5 இலட்சம் நூல்களுடன் 2010ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நூலகத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதிப்பிக்கப்பட்ட சிறந்த நூல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலகத்தைத் தினந்தோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அனைத்துத் துறைகளிலும் வெளிவந்துள்ள தலைசிறந்த புத்தகங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும். மின்–புத்தகங்கள், மின்–பருவ இதழ்கள், மின்–ஆராய்ச்சி இதழ்களை வாசகர்கள் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் இணையவழி குறிப்புதவிப் பிரிவும் ரூ.6.5 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

11. முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் நினைவு நூலகம்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் உருவாக முக்கியப் பங்காற்றிய இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படும் பத்மஸ்ரீ முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களை நினைவு

கூடும் வகையில் அவர் பிறந்த ஊரான மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள சீர்காழியில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் மாதிரி நூலகம் அமைக்கப்படும்.

இந்நூலகத்தில் முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களின் படைப்புகளுடன், அரிய புத்தகங்கள், ஆராய்ச்சி வசதி, குழந்தைகள் பிரிவு, இணைய வசதியுடன் கூடிய மின் நூலகம் ஆகியவை ஏற்படுத்தப்படும்.

12. செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் பெயரில் புதிய நூலகக் கட்டடம் கட்டுதல்

செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் அவர்கள், அறிவு நூல் திரட்டு, கண்ணகி தேவி, காப்பியக் கதைகள், மூவர் உலா ஆராய்ச்சி, தமிழ்மொழியின் மறுமலர்ச்சி, நல்லிசைப் புலவர்கள் போன்ற பல நூல்கள் இயற்றியுள்ளார்.

தமிழுக்கு அவர் ஆற்றிய சேவையினைப் போற்றும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம், அபிராமத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் கிளை நூலகத்திற்கு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நூலகம் கட்டப்படும்.

13. கிராமப்புற நூலகங்களில் மின் நூலக சேவை

தமிழ்நாடு அரசு பொது நூலக இயக்ககத்தின்கீழ், 1,926 கிளை நூலகங்கள் மற்றும் 1,915 ஊர்ப்புற நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சர்வதேச நாளிதழ்கள், பருவ இதழ்கள் கிராமப்புறங்களில் உள்ள வாசகர்களுக்கும் கிடைக்கும் வண்ணம் அனைத்து நூலகங்களிலும்

மின் நூலகம் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.2.40 கோடியில் ஏற்படுத்தப்படும்.

14. கன்னிமாரா பொது நூலகத்தை நவீனமயமாக்கல்

1896ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கன்னிமாரா பொது நூலகம் இந்தியாவில் உள்ள பழமையான நூலகங்களுள் ஒன்றாகும். இந்தியாவின் தேசிய வைப்பு நூலகமாகச் செயல்படும். இந்நூலகம் நாடு முழுவதும் வெளியாகும். அனைத்து நாளிதழ், பருவ இதழ்களில் ஒரு பிரதியை இலவசமாகப் பெற்று வருகிறது. இந்நூலகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அதன் பாரம்பரிய நிலை மாறாத வகையில் ரூ.3.20 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

15. ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கொள்கை

அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் நலனுக்காக, ஆண்டுதோறும் பொது மாறுதல் நடத்தப்பட்டு வருகிறது. இப்பொது மாறுதலை ஒளிவுமறைவின்றி 2021–2022ஆம் கல்வியாண்டு முதல் நடத்திட பொது மாறுதல் கலந்தாய்வுக் கொள்கை வகுக்கப்பட்டு வெளிப்படையாக நடைமுறைப்படுத்தப்படும்.

16. பள்ளிப் பதிவேடுகள் கணினிமயமாக்கல்

தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நிருவாகப் பணிப்பளுவைக் குறைக்கும் வண்ணம் பள்ளிகளில் பராமரிக்கப்படும் தேவையற்றப் பதிவேடுகள் நீக்கப்படும். அவசியமானப் பதிவேடுகள் அனைத்தும்

கணினிமயமாக்கப்பட்டு, கல்வித் தகவல் மேலாண்மை முறைமை (EMIS) வாயிலாகப் பெறத்தக்க வகையில் மாற்றியமைக்கப்படும்.

17. பள்ளிகளுக்கான அங்கீகாரம் இணைய வழியில் வழங்குதல்

அனைத்து அரசு நிதியுதவி / பகுதி நிதியுதவி / சுயநிதிப் பள்ளிகளில் தொடக்க / ஆரம்ப / தொடர் அங்கீகாரம், பிற வாரியப் பள்ளிகள் (சி.பி.எஸ்.இ, சி.ஐ.எஸ்.சி.இ, சி.ஏ.ஐ.இ, ஐ.பி மற்றும் பிற) சார்பான தடையின்மைச் சான்று, அங்கீகாரம் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வகையான சேவைகளை எளிமையாக்கி, இணைய வழியே ஒளிவு மறைவின்றிப் பெறத்தக்க வகையில் மென்பொருள் உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும்.

18. மின்னணு சேவைகள் (e-Services)

பள்ளிக் கல்வித் துறையில் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றுகளான நன்னடத்தைச் சான்று, ஆளறிசான்று, தமிழ் வழியில் படித்ததற்கானச் சான்று உள்ளிட்ட அனைத்துச் சான்றுகளும் அவர்தம் இல்லத்திற்கு அருகிலுள்ள அரசு பொதுச் சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பித்து காலவிரயமின்றிப் பெற்றுக்கொள்ளும் திட்டம் செயல்படுத்தப்படும்.

19. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்விப் பாடத் திட்டத்தைச் சீரமைத்தல்

தொழிற்கல்வி பயிலும் மாணவர்களின்

வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்கல்விப் பாடங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உறுதுணையோடு மேம்படுத்தப்படும். இதனால், மாணவர்கள் தொழிற்சாலைகளின் தேவைகளுக்கேற்ப திறனைப்பெற்று உடனடி வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

20. கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டி உறைவிடப் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் வசித்து வரும் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த 10 முதல் 14 வயதிற்குட்பட்ட மாணவியருக்குத் தரமான கல்வி வழங்கும் பொருட்டு 61 கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தவும், இடைநிற்றலைத் தடுக்கவும், கல்வியைத் தொடரவும், 5 உண்டி உறைவிடப்பள்ளிகள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

21. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வீட்டிலேயே கல்வி மற்றும் இயன்முறை மருத்துவம்

பிறப்பு முதல் 18 வயதிற்குட்பட்ட 7,786 மாற்றுத்திறனாளி மாணவர்கள் பள்ளி வயதை அடைந்த பிறகும், உயர் ஆதரவு தேவைப்படும் (பலதரப்பட்ட குறைபாடுகள், அறிவுசார் குறைபாடு, பெருமூளை முடக்கு வாதம், மன இறுக்கம் மற்றும் பல) காரணத்தால் பள்ளிக்கு வர இயலாத நிலையில் உள்ளனர்.

அம்மாணவர்களுக்குக் கல்வி, இயன்முறை மருத்துவம் உள்ளிட்ட சிகிச்சைகளை வீடுகளுக்கேச் சென்று வழங்கி அவர்தம் கற்றல் சூழலை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு ஒரு கல்வித்திட்டம் தொடங்கப்படும்.

ஒரு மாணவருக்கு ரூ.10,000 வீதம் 7,786 மாணவ/மாணவியருக்கு ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

22. மாநில வளமையம் ஏற்படுத்துதல்

மாநில அளவிலான பயிற்சிகளின்போது கற்றல்–கற்பித்தல் செயல்பாடுகளில் ஆசிரியர்களுக்கு ஆய்வக வழி அனுபவக் கற்றலை (hands on and experiential learning) வழங்குவது மிகவும் அவசியமாகிறது. இதற்கென ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் “மாநில வளமையம்” உருவாக்கப்படும். இம்மையத்தை ஆண்டு முழுவதும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிடவும் வழிவகை செய்யப்படும்.

23. கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் பயிலும் மாணவர்களுக்கு மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் பயிற்சிகள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், யுனிசெஃப் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு

வரை பயிலும் மாணவர்களின் மனநலன் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படும். இதற்கென, ரூ.1 கோடி மதிப்பீட்டில் கலை மற்றும் விளையாட்டு அடிப்படையிலான ஆசிரியர் கட்டகம் மற்றும் மாணவர் கையேடு உருவாக்கப்படும்.

24. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மதிப்பீட்டுப் புலத்தை உருவாக்குதல்

ஒவ்வொரு மாணவரின் கற்றல் அடைவுகளை, தகுந்த கால இடைவெளியில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech Labs) வாயிலாக அளவிடவும், தரவுகளின் அடிப்படையில் பதிவு செய்யவும், கற்றல் கற்பித்தல் தரத்தை உறுதி செய்யவும், அதனடிப்படையில் உகந்த குறைதீர் உத்திகளை உருவாக்கி கற்றல் கற்பித்தலின் தரத்தை மேம்படுத்தவும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மதிப்பீட்டுப் புலம் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

25. உயர் தொழில்நுட்பப் படப்பதிவுக் கூடங்கள்

பள்ளிக்கல்வித் துறையில் மாணவர்களின் நலனுக்காக கல்விசார் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்ய கல்வித் தொலைக்காட்சி அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் தற்காலிகமாகச் செயல்பட்டு வருகிறது. தரமான காணொலிகளை ஒளிபரப்புவதற்கென மெய்நிகர் ஒளிப்பதிவுக் கூடம் உள்ளிட்ட ஐந்து ஒளிப்பதிவுக் கூடங்கள் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் உருவாக்கப்படும்.

இப்புதிய படப்பதிவுக் கூடங்களின் வாயிலாக, சிறந்த வல்லுநர்களைக்கொண்டு மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி வழங்கப்படுவதையும் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்படுவதையும் உறுதி செய்ய இயலும். மேலும், இந்தக் கல்வியாண்டில் கூடுதலாக இரண்டு கல்வித் தொலைக்காட்சி அலைவரிசைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

26. சிறந்த கற்போர் மையங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்குதல்

கற்போம் எழுதுவோம். இயக்கத்தின்கீழ், திட்டச் செயல்பாடுகளைச் சிறப்பாகவும், புதுமையாகவும் செயல்படுத்தும் கற்போர் மையங்களை ஊக்கப்படுத்தும் விதமாக, ஒரு மாவட்டத்திற்கு தலா 3 மையங்கள் வீதம் 38 மாவட்டங்களில் 114 மையங்களைத் தெரிவு செய்து, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் ரூ.5.70 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

27. வயது வந்தோர் கல்விக்காக மாநில எழுத்தறிவு மையம் உருவாக்குதல்

வயது வந்தோருக்கான கல்வித் திட்டங்களில் புதுமைச் செயல்பாடுகளைக் கொண்டுவரும் வகையில், கலைத் திட்ட உருவாக்கப் பிரிவு, செயலாராய்ச்சிப் பிரிவு, பயிற்சிப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிய மாநில எழுத்தறிவு மையம், பள்ளி சாரா மற்றும்

வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் கீழ் ரூ.26.96 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

28. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு விருது

கிராமப்புறங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான ஏழை, எளிய மாணவர்களுக்கு அரசுப் பள்ளிகள் சிறந்த கல்விச் சேவையை ஆற்றி வருகின்றன. இப்பள்ளிகளின் உட்கட்டமைப்பு, கல்வித்தரம், பெற்றோருக்கான விழிப்புணர்வு என ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கென சிறந்த முறையில் அர்ப்பணிப்போடு பணியாற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு விருது ஆண்டுதோறும் வழங்கப்படும்.

❖ ❖ ❖

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

மானியக் கோரிக்கை எண். 15

1. சுற்றுச்சூழல் துறைக்கு ஒரு பசுமைக் கட்டடம்

தமிழக அரசின் குறிக்கோளான சுற்றுச்சூழல் குறித்த பிரச்சினைகளை வடிவமைக்கவும், அதனைச் சிறப்பாகச் செயல்படுத்தவும் 1995ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் துறை உருவாக்கப்பட்டது.

இத்துறை, தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம், சுற்றுச்சூழல் தகவல் மையம், புவியியல் தகவல் அமைப்பு மையம் மற்றும் தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி, அவற்றை நிருவகிக்கும் துறையாகச் செயல்படுகிறது.

மேலும் 2021–2022ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளபடி ‘தமிழ்நாடு காலநிலை மாற்ற அமைப்பு’ தமிழ்நாட்டில் உருவாக்கப்படவுள்ளது. இதுபோன்றதொரு அமைப்பு இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில் தான் உருவாக்கப்படவுள்ளது. இவ்வமைப்பின் பணிகளும் தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மூலமாகச் செயல்படுத்தப்படும்.

மேற்கண்ட விரிவான பணிகளைக் கொண்ட சுற்றுச்சூழல் துறையானது. தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, சுற்றுச்சூழல் துறை சிறந்த வகையில் செயல்படும் விதமாக உரியத் தொழில்நுட்பங்களுடன் கூடிய பசுமைக் கட்டடம் ரூ.20 கோடி செலவில் கட்டப்படும்.

2. மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை புத்தாய்வுத் திட்டம் (Green Fellowship Programme)

சுற்றுச்சூழல் தொடர்பான செயல்பாடுகளில் களைய தலைமுறை மற்றும் மாணவர்களை ஈர்க்கும் வண்ணம் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்கும், இயற்கையைப் பாதுகாக்கும் விதமாகக் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் நோக்கத்துடன் புதிய பசுமைத் திட்டங்களைக் கண்டறிவதற்கும், எளிய தொழில்நுட்ப வழிமுறைகளை உருவாக்கவும், 'மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை புத்தாய்வுத் திட்டம் (Green Fellowship Programme)' தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்படி சுற்றுச்சூழல் நலனில் அக்கறை கொண்ட தகுதியுடைய நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மாவட்ட ஆட்சியர்களுடன் ஒன்றிணைந்து, அம்மாவட்டத்தின் பசுமைக் கனவுகளை நிறைவேற்ற உதவிகரமாக இருப்பார்கள்.

3. சிறந்த சுற்றுச்சூழல் மிக்க அழகிய கடற்கரைக்கான நீலக்கொடி சான்றிதழ் பெறுவதற்கான நடவடிக்கை

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஒரு அமைப்பாக விளங்கும் ஒருங்கிணைந்த

கடற்கரை மேலாண்மை நிறுவனம் (SICOM), நீலக்கொடி திட்டத்தின்கீழ், செங்கல்பட்டு மாவட்டம் கோவளம் கடற்கரையைத் தேர்வு செய்து பரிசோதனைத் திட்ட அளவில், அழகியல் மற்றும் தூய்மைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இதேபோல் 2021–2022ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் ஒரு கடற்கரைக்கு ரூ.10 கோடி வீதம், இரு கடற்கரைகளுக்கு ரூ.20 கோடி செலவில் தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மூலம் கடற்கரைக்கான நீலக்கொடி சான்றிதழ் திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், 5 வருடங்களில் (2021–2026) ரூ.100 கோடி செலவில் பல கடற்கரைகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

4. தொழிற்சாலைகளை இயக்குவதற்கான இசைவாணை ஒவ்வொரு ஆண்டும் வழங்குவதற்கு பதிலாக தகுதியான தொழிற்சாலைகளுக்கு கால அளவினை நீட்டித்துத் தொகுப்பாக வழங்குவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளை மாசுக் குறியீட்டு அளவின் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு. பச்சை மற்றும் வெள்ளையாக வகைப்படுத்தி, அவைகள் நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 மற்றும் காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981, ஆகியவற்றின் கீழ் இயக்குவதற்கான இசைவாணையை வாரியத்திடமிருந்து பெற வேண்டியது கட்டாயமாகும். இந்த இசைவாணை சிவப்பு வகை தொழிற்சாலைகளுக்கு ஒரு ஆண்டுக் கால

அளவும், ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு இரண்டு ஆண்டுகள் கால அளவும் கொண்டதாக வழங்கப்பட்டு வந்தது. தற்போது சிவப்பு, ஆரஞ்சு. பச்சை வகை தொழிற்சாலைகளை இயக்குவதற்கான இசைவாணை பெறுவதற்கான கால அளவு முறையே 5/10/14 ஆண்டுகள் என்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நீட்டித்துள்ளது. இருப்பினும் நடைமுறையில் பெரும்பாலான தொழிற்சாலைகள் ஓராண்டிற்கான இசைவாணையையே பெற்று வருகின்றனர். எனவே, தற்போது எளிதாக தொழில் செய்தல் எனும் அரசின் கொள்கையின் அடிப்படையில், இந்நிதியாண்டு முதல் மேற்கண்ட கால நீட்டிப்பு குறித்த விழிப்புணர்வைத் தொழிற்சாலைகளுக்கு ஏற்படுத்தி அவர்கள் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை வகை தொழிற்சாலைகளை இயக்குவதற்கு முறையே 5/10/14 ஆண்டுகளுக்கான இசைவாணைகளை தகுதியான தொழிற்சாலைகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முனைப்புடனும் மற்றும் முன்மாதிரியாகவும் செயல்படும் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு “பசுமை முதன்மையாளர் விருது” (Green Champion Award) ரூ. 1 கோடி மதிப்பில் வழங்கப்படும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வை மேற்கொள்வதில் சிறப்பாகச் செயல்படும் மாவட்ட ஆட்சியர்கள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பசுமை

விருது வழங்கி கௌரவிக்கிறது. அவ்விருதுகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது. இதே வரிசையில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முனைப்புடன் செயல்படும் தனிநபர் மற்றும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு "முதன்மையாளர் விருதுகள்" என்ற பெயரில் 100 விருதுகள் i) நீர் நிலைகள் பாதுகாப்பு மற்றும் நீர் பாதுகாப்பு ii) சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்று மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான புதுமையான வழிமுறைகள் iii) கடலோர பகுதிப் பாதுகாப்பு iv) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி v) சுற்றுச்சூழலுக்கு உகந்த மேலாண்மை, இயற்கை மேலாண்மை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் 100 ஆர்வலர்களுக்கு ரூ.1 கோடி மதிப்பில் பரிசுத் தொகை வழங்கப்படும்.

6. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தை ரூ.32 கோடி செலவில் நவீனமயமாக்கல்

தற்போது கழிவுகள் மேலாண்மை விதிகள் அதிக எண்ணிக்கையில் நடைமுறையில் உள்ளதால் அண்மைக் காலங்களில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் பணிகள் அதிகரித்துள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான வழக்குகளில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமும், தேசிய பசுமைத் தீர்ப்பாயமும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய பணியாளர்கள் மற்றும் உள்கட்டமைப்புகளை அதிகரிக்கவும், கண்காணிப்பு நடைமுறைகளை திறம்படுத்தவும் வாரியத்திற்கு ஆணைகளை வழங்கியுள்ளன. மேலும், காலநிலை மாற்றம்

குறித்த அரசாங்கங்களுக்கிடையிலான குழுவின் (IPCC) அறிக்கையில் குறிப்பிட்டுள்ள, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் புதிய சவால்களை வாரியம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, சட்டப் பணிகளை திறம்பட செயலாற்றவும், சுற்றுச்சூழல் சட்டங்களை சிறப்பாக அமல்படுத்தவும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கீழ்க்கண்டவாறு நவீனமயமாக்கப்படவுள்ளது:–

(1) திருநெல்வேலியில் இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

(2) திருச்சியிலுள்ள வாரியத்தின் மண்டல அலுவலகத்தை பிரித்து கடலூரில் இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் தேவையான பணியாளர்களுடன் கூடிய மண்டல அலுவலகம் உருவாக்கப்படுவதுடன், கடலோர பாதுகாப்பிற்குத் தனி கவனம் செலுத்தப்படும்.

(3) முக்கியத் தொழில் பகுதிகளான மணலி, மேட்டூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் தேவையான பணியாளர்களுடன் கூடிய அலுவலகம் ஏற்படுத்தப்படும்.

(4) நீர்நிலைகளைப் பாதுகாக்க சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் சென்னை பெருநகர் மற்றும் சேலம் நகரில் இரண்டு பறக்கும்படை அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும்.

(5) மாவட்ட அலுவலர்களுக்கு ஆய்வுப் பணியினை விரைந்து மேற்கொள்ள ஏதுவாக 50 புதிய வாகனங்கள் அளிக்கப்படும்.

(6) வாரியத்தின் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பணிகளை மேலாண்மை செய்யத் தேவையான பணியாளர்களுடன் ஒரு தனி தகவல் தொழில்நுட்பப் பிரிவு வாரிய தலைமை அலுவலகத்தில் ஏற்படுத்தப்படும்.

7. தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு எதிராக பொதுமக்களைக் கொண்டு பிரச்சாரம்

பிளாஸ்டிக் மாசுபாடு மிகவும் சவாலான மற்றும் ஆபத்தான சுற்றுச்சூழல் பிரச்சினையாக மாறியுள்ளது. பெருங்கடல்கள், ஆறுகள், குளங்கள், ஏரிகள் மற்றும் அனைத்து நீர் நிலைகளும் பிளாஸ்டிக் குப்பைகளால் மாசு அடைந்து நீர் வழித் தடத்தை அடைக்கின்றன. பிளாஸ்டிக் குப்பைகள் மற்றும் மைக்ரோ பிளாஸ்டிக்குகள் கடல்வாழ் உயிர்களின் பன்முகத்தன்மைக்கு ஆபத்து ஏற்படும் வகையில் உள்ளது.

தமிழ்நாடு அரசு 01.01.2019 முதல் 14 வகையான ஒருமுறைப் பயன்படுத்தித் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, சேமிப்பு, போக்குவரத்து, விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றிற்குத் தடையைக் கொண்டு வந்த போதிலும், இன்னும் தடை திறம்படச் செயல்படுத்தப்படவில்லை.

எனவே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதற்கென்று தனியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் வர்த்தகச் சங்கங்கள்,

சமூக மன்றங்கள் (Social Clubs), வணிகர் சங்கங்கள், சமூக மன்றங்கள், வணிகர் சங்கங்கள், குடிமக்கள் அமைப்புகளின் (citizen bodies) பங்குதாரர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகள் மூலமாக ‘மக்கள் இயக்கம்’ ஒன்றைத் தொடங்க உள்ளது. இதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர்களின் ஆதரவு மற்றும் வழிகாட்டுதலுடன் ‘பிளாஸ்டிக் தடை’ தீவிரமாக அமலாக்கம் செய்யப்படும்.

8. சென்னை – ஆயிரம் விளக்குப் பகுதியில் பசுமைப் பூங்கா அமைத்தல்

சென்னை மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததோடு, மக்கள் நெருக்கம் மற்றும் நெருக்கமாக அமைந்துள்ள வியாபார நிறுவனங்களையும் கொண்டதாகும். எனவே, இப்பகுதியின் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் விதமாகத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆயிரம் விளக்குப் பகுதியில் ஒரு பசுமைப் பூங்காவை அமைக்க உத்தேசித்துள்ளது.

மேலும், புவி வெப்பம் அடைவதைத் தடுக்கும் நடவடிக்கைகளைத் தொழிற்சாலைகள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்போடு மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே, வாரிய நிதியிலிருந்து, ரூ.2 கோடி செலவில் ஆயிரம் விளக்குப் பகுதியில் பசுமைப் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

❖ ❖ ❖

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

மானியக் கோரிக்கை எண். 49

1. ஒலிம்பிக் அகாடமிகள் மாநிலத்தின் நான்கு மண்டலங்களில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இங்கு உயர்திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் பதக்க மேடையை அடைவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட உள்ளன. தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையை (Techno - Economic Feasibility Report) தயாரிக்க ஆலோசகர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தமிழர்களால் உருவாக்கப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய இந்திய தற்காப்புக் கலைகளில் ஒன்றான சிலம்பம் விளையாட்டினை அரசு வேலைவாய்ப்புகளில் 3 விழுக்காடு விளையாட்டு இட ஒதுக்கீட்டின் கீழ் உள்ள விளையாட்டுகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கில் சிறப்பு பழுதுபார்த்தல் பணிகள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

4. கரூர் மாவட்ட விளையாட்டரங்கில் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் கையுந்துபந்து, கூடைப்பந்து

ஆடுகளங்களுக்குக் கம்பி வேலி அமைக்கும் பணிகள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

5. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் திட்டங்கள் மற்றும் விளையாட்டு தொடர்புடைய செயல்பாடுகள் குறித்த விவரங்களை விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ள வசதியாகத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைமை அலுவலகத்தில் அழைப்பு சேவை மையம் தொடங்கப்படும்.

6. 2021–2022ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சுழல்நிதி ரூ.1 கோடியின் மூலம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களில் பயோ–மெட்ரிக் மற்றும் சிசிடிவி கருவிகள் பொருத்துதல், ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் உள்ள ஆணையத்தின் புதிய அலுவலகத்திற்கான அடிப்படை வசதிகள் நிறுவுதல் மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளின் அத்தியாவசியமான பராமரிப்புப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

7. கிராமப்புற மக்களின் உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமானது அதன் உறுப்பு கல்லூரிகளின்

மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களின் மூலம் அருகாமையிலுள்ள கிராமங்களில் சிறப்புக் கவனம் செலுத்தி கிராமப்புற பயிற்சி திட்டத்தின்கீழ் உடற்தகுதி பயிற்சியை மேற்கொள்ளும்.

8. யோகா மற்றும் தியானம் போன்ற பழங்கால பயிற்சி முறைகள் ஆரோக்கியமான உடல் மற்றும் மனதிற்கு வழிகோலும். மக்களின் நன்மைக்காக ஆசனங்கள் மற்றும் தியானம் போன்றவற்றை உள்ளடக்கிய "முழுமையான ஆரோக்கியத்திற்கு யோகா" என்னும் செயலியைத் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் மூலம் உருவாக்கப்படும்.

9. மனிதகுல வாழ்வாதாரத்திற்கு நீர் பாதுகாப்பு மிக முக்கியமானது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் மழைநீர் சேமிப்பை வலுப்படுத்தும் விதத்தில் ரூ.10 இலட்சம் செலவில் மழை நீர் சேகரிப்புத் திட்டம் அமைக்கப்படும்.

10. வேலைவாய்ப்பு பிரிவின் மூலம் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக மாணாக்கர்கள் வேலைவாய்ப்பினை பெற்று வருகின்றனர். வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கில், மென்திறன், தகவல் பரிமாற்றத் திறன், ஆளுமைத் திறன், நேர்காணலை எதிர்கொள்ளுதல் மற்றும் நிபுணர்களின் ஊக்கச் சொற்பொழிவின் மூலம் மாணாக்கர்களுக்குப்

பயிற்சியளித்து வேலைவாய்ப்புப் பிரிவு வலுப்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் மாணாக்கர்கள் நம்பிக்கையுடன் நேர்முகத் தேர்வினை எதிர் கொண்டு வெற்றி பெற்று சிறந்த வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

11. விழுப்புரம் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் உள்ள கட்டமைப்பு வசதிகளை “கேலோ இந்தியா” திட்டத்தின்கீழ் தரம் உயர்த்திட / புதியதாக உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ ❖ ❖

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

மானியக் கோரிக்கை எண். 32

1. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற, சொந்தமாக வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்கள் சொந்தமாக வீட்டு மனை வைத்திருந்தால் அவர்களாகவே வீடு கட்டிக்கொள்ள நிதி உதவி வழங்குவது அல்லது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற நிதி உதவி அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

2. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களையும், மாறிவரும் தொழிற்சாலைகளின் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு மாற்றிட, முன்னணி தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

ஐ.டி.ஐ. முடித்துச் செல்லும் பயிற்சியாளர்கள், தொழில் நிறுவனங்களில் உடனடி வேலைவாய்ப்பு பெறும் வகையில், பயிற்சியின் தரம் உயர்த்திட, அனைத்து ஐ.டி.ஐகளும் புனரமைக்கப்பட்டு, நவீனத் தொழில்நுட்ப இயந்திரங்கள் நிறுவப்பட்டு, எதிர்காலத் தேவையினை பூர்த்தி செய்திட

புதிய தொழிற்பிரிவுகள் துவங்கப்படும். பயிற்றுநர்களுக்கு முன்னணி நிறுவனங்களில் பயிற்சி வழங்கிடத் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களையும் உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்த்தி, ஐ.டி.ஐ. பயிற்சியாளர்களின் வேலைவாய்ப்புகள் பன்மடங்கு உயர்த்தப்படும்.

3. போட்டித் தேர்வு வகுப்புகளுக்குக் கல்வித் தொலைக்காட்சியில் தனி அலைவரிசை

ஒன்றிய பணியாளர் தேர்வாணையம் நடத்தும் இந்தியக் குடிமைப்பணி தேர்வுகள், இந்தியப் பொறியியல் பணித் தேர்வுகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு தேர்வுகள், Staff Selection Commission நடத்தும் தேர்வுகள், வங்கித் தேர்வுகள், இரயில்வே தேர்வு வாரியம் நடத்தும் தேர்வுகள் என பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் போட்டித் தேர்வு ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில், கல்வித் தொலைக்காட்சியில் போட்டித் தேர்வுக்கென்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் தனி அலைவரிசையை ஏற்படுத்தி போட்டித் தேர்வுகளுக்கான பாடங்கள் ஒளிபரப்படும். இதற்காக ரூ.50 இலட்சம் செலவிடப்படும்.

4. தொழில் நிறுவனங்களின் தேவை சார்ந்து வளர்ந்து வரும் தொழிற்பிரிவுகளில் திறன் பயிற்சி அளித்தல்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொழில்

நிறுவனங்களின் தேவை சார்ந்து வளர்ந்து வரும் தொழில் பிரிவுகளான ரோபோடிக்ஸ், விர்ச்சுவல் ரியாலிட்டி / ஆகுமென்டட் ரியாலிட்டி, கைப்பேசி செயலி உருவாக்கம், சைபர் பாதுகாப்பு, எத்திக்கல் ஹேக்கிங், கிளவ்டு கம்யூட்டிங், 3D- அச்சுமுறை, செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் திறன் பயிற்சிகளை வழங்கும்.

5. 2014, 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில், வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை மற்றும் 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் பதிவினை புதுப்பிக்க ஏற்கெனவே வழங்கப்பட்ட கால அவகாசத்தை நீட்டித்து வழங்குதல்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, தங்கள் பதிவினை 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறிய சுமார் 48 இலட்சம் பதிவுதாரர்கள் பயன்பெறும் வகையில், சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கப்படும்.

2017, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில், தங்களது வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு, ஏற்கெனவே இவ்வரசு பொறுப்பேற்றதற்குப் பின், 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. இக்கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏற்று, புதுப்பித்தல் சலுகை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டித்து வழங்கப்படும்.

6. செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் புதியதாக தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் ரூ.36.32 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

அமைப்புசாரா தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் புதியதாக தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் மற்றும் அதற்கான பணியிடங்கள் ரூ.36.32 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

7. தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் என்பதைத் தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்படும்.

உணவகம், தேநீர் கடைகள், பேக்கரி மற்றும் அது சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் என்பதைத் தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம் எனப் பெயர் மாற்றம் செய்யப்படும். இப்பெயர் மாற்றத்தின் மூலம் உணவகத் தொழில்களில் ஈடுபட்டுள்ள சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

8. கல்வி நலத்திட்ட உதவித்தொகையாக 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை படிக்கும் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1,000 வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெறுவதை ஊக்குவிக்கும் பொருட்டு 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்குக் கல்வி நலத்திட்ட உதவித்தொகையாக ஆண்டுக்கு ரூ.1,000 வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதனால், சுமார் 10,000 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

9. கட்டுமானத் தொழிலாளர்களின் 1 0 ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை ரூ.1,000லிருந்து ஆண்டிற்கு ரூ.2,400 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு கட்டுமானத் தொழிலாளர்களின் 10ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை ரூ.1,000லிருந்து ஆண்டிற்கு ரூ.2,400 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால், சுமார்

25,000 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

10. கட்டுமானத் தொழிலாளர்களின் 11ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை ரூ.1,000 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை ரூ.1,500 ஆகியவை ஆண்டிற்கு ரூ.3,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, கட்டுமானத் தொழிலாளர்களின் 11ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை ரூ.1,000 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை ரூ.1,500 ஆகியவை ஆண்டிற்கு ரூ.3,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால், சுமார் 40,000 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

11. கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகையான, முறையான பட்டப்படிப்பு

படிப்பதற்கு ரூ.1,500 மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கி படிப்பதற்கு ரூ.1,750 ஆகியவை ஆண்டிற்கு ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகையான, முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு ரூ.1,500 மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கிப் படித்தால் ரூ.1,750 ஆகியவை ஆண்டிற்கு ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால், சுமார் 30,000 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

12. **தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடைந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித்தொகை ரூ.20,000லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடைந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித்தொகை ரூ.20,000லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

13. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் என்பதைத் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.

தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்த்தல் தொடர்பான தொழில் மற்றும் வணிக வாகனங்களில் பணிபுரியும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலான அமைப்புசாரா தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, “தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியம்” என பெயர் மாற்றம் செய்யப்படும்.

14. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகையாக ஆண்டுக்கு ரூ.1,000 வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதனால், சுமார் 10,000 அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

15. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரிய தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு ரூ.1,500 மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கிப் படிப்பதற்கு ரூ.1,750 ஆகியவை ஆண்டிற்கு ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற அமைப்புசாரா ஓட்டுநர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு ரூ.1,500 மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கிப் படிப்பதற்கு ரூ.1,750 ஆகியவை ஆண்டிற்கு ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால், சுமார் 7,000 பதிவு பெற்ற அமைப்புசாரா ஓட்டுநர் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

16. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரிய ஓட்டுநர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித் தொகை, ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற ஆட்டோ, கார், வேன், டெம்போ, லாரி, பேருந்துகள் மற்றும் இதர வாகனங்களின் ஓட்டுநர்கள் விபத்து மரணம்

அடையும் நேர்வில், குடும்ப தலைமையை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு, அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித்தொகை, ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

17. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரிய ஓட்டுநர்களுக்கு, தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகை, ரூ.20,000லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற ஆட்டோ, கார், வேன், டெம்போ, லாரி, பேருந்துகள் மற்றும் இதர வாகனங்களின் ஓட்டுநர்கள், இயற்கையாக மரணம் அடையும் நேர்வில், சூடும்ப தலைமையை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு, அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகை ரூ.20,000லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

18. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 85,000 ஓட்டுநர்களுக்குப் பாதுகாப்பு பெட்டகம் வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 85,000 ஆட்டோ, கார், வேன், டெம்போ, லாரி, பேருந்துகள் மற்றும் இதர வாகன ஓட்டுநர்களின்

நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், முதலுதவிப்பெட்டி, சீருடை மற்றும் ஷூ (Shoes) அடங்கிய தலா ரூ.1,500 மதிப்பிலான பாதுகாப்பு பெட்டகம் ரூ.12.75 கோடி செலவில் வழங்கப்படும்.

19. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகையாக ரூ.1,000 வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களின் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகையாக, ஆண்டுக்கு ரூ.1,000 வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதனால், சுமார் 10,000 தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நல வாரியம் மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

20. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களின் தொழிலாளர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில்,

அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்படும் விபத்து மரண உதவித்தொகை, ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.1.25 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள், விபத்து மரணம் அடையும் நேர்வில், குடும்ப தலைமையை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு, அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்படும் விபத்து மரண உதவித்தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.1.25 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

21. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களின் தொழிலாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித்தொகை, ரூ.20,000லிருந்து ரூ.30,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடையும் நேர்வில், குடும்ப தலைமையை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு, அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித்தொகை ரூ.20,000லிருந்து ரூ.30,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

22. விழுப்புரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகம் கட்டப்படும்.

விழுப்புரம் மாவட்டத்தில், தொழிலாளர் துறை மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் தனியார் வாடகை கட்டடத்தில் இயங்கி வருவதால் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகம் ரூ.3.72 கோடி செலவில் கட்டப்படும்.

23. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்திற்கு புதியதாக 7 பணியிடங்கள் உருவாக்கப்படும்.

அம்பத்தூரில் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய நிருவாகக் கட்டடம், விடுதி மற்றும் வளாகத்தைப் பராமரிக்கவும் மற்றும் பாதுகாத்திடவும் புதியதாக 7 பணியிடங்கள் (ஆண் மற்றும் பெண் வார்டன், காவலர்கள், எலக்ட்ரீசியன், பிளம்பர் மற்றும் தோட்டக்காரர்) ரூ.18.70 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

24. மாநிலத்தில் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தும் சிறந்த மாவட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட திறன் பயிற்சி அலுவலருக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கப்படும்.

மாவட்டங்களின் தொழில் துறை திறன் தேவைக்கேற்ப மாவட்ட திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை சிறப்பாக வடிவமைத்துச் செயல்படுத்தும் மாவட்டங்களை

ஊக்குவிக்கும் விதமாக ஆண்டுதோறும் மூன்று சிறந்த மாவட்டங்களைத் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்களை கௌரவிக்கும் வகையில் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ஆண்டுதோறும் ரூ.3.75 இலட்சம் செலவு ஏற்படும்.

25. அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்தவர்களில் ஒரு இலட்சம் நபர்களுக்குப் பணித் திறன் மற்றும் அனுபவத்தை அங்கீகரித்து திறன் மதிப்பீடு செய்து உரியச் சான்றிதழ் வழங்கப்படும்.

அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து, போதிய பணித்திறன் மற்றும் அனுபவம் இருந்தும் உரியச் சான்றிதழ் இல்லாமல் குறைவான ஊதியம் பெறும் நிலையில் இருக்கும், ஒரு இலட்சம் நபர்களைக் கண்டறிந்து அவர்களின் திறனை மதிப்பீடு செய்து உரியத் திறன் சான்றிதழ்கள் (RPL– அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல்) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்படும். இதனால் அரசுக்கு சுமார் ரூ.10 கோடி செலவு ஏற்படும்.

26. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பல்வேறு துறைகளில் திறன் பயிற்சி பெற்றவர்களின் விவரங்களை ஒருங்கிணைக்க, ஒருங்கிணைந்த ஒற்றை திறன் பதிவு தொகுதி உருவாக்கப்படும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் பல்வேறு

தொழில் பிரிவுகளில் நடத்தப்படும் திறன் பயிற்சி மற்றும் தமிழ்நாடு அரசின் பிற துறைகளில் நடத்தப்படும் திறன் பயிற்சிகளில், பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்ற அனைவரின் சுய விவரங்கள் அடங்கிய திறன் பதிவு தொகுதியாக (Skill Registry) இத்தளம் செயல்படும். ஒருங்கிணைந்த ஒற்றை திறன் பதிவு தொகுதி (Unified Single Skill Registry) உருவாக்கப்படும். தொழில் துறையினரின், திறன் பெற்றவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இத்திறன் தொகுப்பு மையம் செயல்படும்.

27. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக இணையவழி செயல்பாடுகளில் மாற்றங்கள் மற்றும் மேம்பாடுகளை ஏற்படுத்துதல்.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் தற்போதைய வலைத்தளம் எதிர்காலத் தேவைகளுக்கேற்றவாறு மாற்றியமைக்கப்பட்டு, புதிய இணைய வழி சேவைகள் அறிமுகப்படுத்தப்படும். இணைய வழி சேவைகளை வழங்குவதற்காக புதியதாக ஒரு கைப்பேசி செயலி உருவாக்கப்படும். இவ்வசதிகள் ரூ.1.73 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

28. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களுக்கு இரசாயனங்களைப் பாதுகாப்பாக கையாள்வது குறித்து பயிற்சி வழங்குதல்.

பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் முதலீட்டினால்,

புதிய தொழில்நுட்பங்களும், செயல்முறைகளும் நமது நாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. அபாயகரமான இரசாயனங்களைப் பயன்படுத்தி பல நவீன உற்பத்தி செயல்முறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இச்செயல்முறைகளினால், பாதுகாப்பு, உடல் நலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்படைய வாய்ப்புள்ளது. சமீபத்திய தொழில்நுட்ப மேம்பாடுகளையும், உலகத் தர பாதுகாப்பு உத்திக்கான பாதுகாப்பு வல்லுநர்களைக் கொண்டு, இயக்கக அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்து ஆய்வின் தரத்தை மேம்படுத்துவதுடன் தொழிற்சாலை பாதுகாப்பு உறுதி செய்யப்படும். இப்பயிற்சி ரூ.25 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

29. அக வளாக – புற வளாக அவசரக் கால ஆயத்தநிலை மாதிரி ஒத்திகை குறித்த குறும்படம் தயாரித்தல்.

தொழிற்சாலையில் ஏற்படும் விபத்துகள், தொழிலாளர் மற்றும் நிருவாகத்தைப் பாதிப்பதுடன் சமூகத்திற்கும் பெரும் கேடு விளைவிக்கிறது. தொழிற்சாலை மற்றும் தொழிலாளர்களிடையே உள் மற்றும் வெளி ஆயத்த ஒத்திகை, தீ தடுப்பு மற்றும் சுய பாதுகாப்பு சாதனங்கள் குறித்த பாதுகாப்பு சூறும்படங்கள் மிகப்பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

தமிழ்நாடு அரசின் சார்பாக இக்குறும்படங்களைச் சிறப்பான முறையில் தயாரித்து, வெளியிட்டு, பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம், பாதுகாப்பான சூழலை

உருவாக்கலாம். இக்குறும்படம் ரூ.30 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

30. திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையம் மற்றும் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டுதல்.

திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையம் மற்றும் திருநெல்வேலி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் இயங்கிவரும், திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கு, திருநெல்வேலியில் ஒருங்கிணைந்த சொந்த அலுவலக வளாக கட்டடம் கட்டப்படும்.

31. செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, இராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகிய 5 மாவட்டங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அமைத்தல்.

புதியதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, இராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், வேலைநாடுநர்களின் தேவைகளைப்

பூர்த்தி செய்யும் வகையில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் புதியதாக அமைக்கப்படும்.

32. மாவட்ட அளவில் திறன் பயிற்சித் திட்டங்களை செயல்படுத்திட திறன் பயிற்சி அலுவலகங்கள் இல்லாத 8 மாவட்டங்களில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் துவங்கப்படும்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை விதிமுறைகளின்படி செயல்படுத்திடவும், திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் பயிற்சிகளைக் கண்காணிக்கவும், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் இல்லாத அரியலூர், திருவாரூர், கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை ஆகிய 8 மாவட்டங்களில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் புதியதாக துவங்கப்படும்.

33. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவில் கணினி மயமாக்கல் மூலம் திட்டங்களைக் கண்காணித்திடவும், மின் ஆளுமை மூலம் நிருவாகப் பணிகளைச் செயல்படுத்திடவும், தகவல் தொழில்நுட்ப கண்காணிப்புப் பிரிவு அமைப்பு ஏற்படுத்தப்படும்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவு, தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு

இளைஞர்களைத் திறன் பெற்றவர்களாக மாற்றியமைக்க பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் அனைத்தையும் திறம்படச் செயல்படுத்துவதை கண்காணிக்கவும், நிருவகிக்கவும் தலைமை அலுவலகத்திலும், மண்டல அளவிலும் தகவல் தொழில்நுட்ப கண்காணிப்புப் பிரிவு அமைப்பு ஏற்படுத்தப்படும்.

34. தேசிய திறன் தகுதி கட்டமைப்பிற்கு ஏற்றவாறு பயிற்சியளித்திடவும், தொழிற்பயிற்சி நிலையங்களை நிருவகித்திடவும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவில் உள்ள சில பணியிடங்களை மறு சீரமைத்தல்.

தொழிற்பயிற்சி நிலையங்கள், தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி குழும (National Council for Vocational Education and Training) நெறிமுறைகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது, தேசிய திறன் தகுதி கட்டமைப்பின் கீழ் மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்றவாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவில் உள்ள தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியிடங்களை மாற்றியமைப்பதன் மூலம், இளைஞர்களுக்குத் திறம்படப் பயிற்சி அளித்திடவும், நிருவாகப் பணிகளைத் திறம்பட நிருவகிக்கவும் வழிவகை செய்யப்படும்.

❖ ❖ ❖

தகவல் தொழில்நுட்பவியல் துறை

மானியக் கோரிக்கை எண். 31

1. டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம் (Digital TN Program - DiTN)

விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய மற்றும் பதிலளிக்கும் வகையிலமைந்த, வெளிப்படையான நிருவாகத்தைக் குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மின்னாளுகையைப் படிப்படியாக அரசின் அனைத்து மட்டங்களிலும் புகுத்தி, அதன்மூலம் முழுமையானதொரு அரசாங்கத்தை எய்திடும் வகையில் **“டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம்”** செயல்படுத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட மற்றும் அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசுத் துறைகளின் செயல்பாடுகள் படிப்படியாக மின்மயமாக்கப்படும்.

2. தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு (TN Decision Support System - DeTN)

தரவுப் பகுப்பாய்வு மற்றும் இயந்திரக் கற்றல் மூலம் கொள்கை வகுத்தல் மற்றும் அதனைத் திறம்படச் செயல்படுத்துவதற்கான முடிவுகளை எடுப்பதற்கு உதவிடும் வகையிலமைந்த **“தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு”** ஒன்று செயல்படுத்தப்படும். தரவுகளின் அடிப்படையில் அமைந்த ஆளுகையை “முதலமைச்சரின் தகவல் பலகை” வழியாக வழங்குவதற்கும், பல்வேறு

தரவுத்தளப் பயனாளிகளின் தகவல்களை ஒருங்கிணைந்த வகையில் காண்பதற்கும் இந்த அமைப்பு உதவும்.

நடப்பு நிதியாண்டில் ரூ.10 கோடியும், அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு ரூ.5 கோடியும் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்படும்.

3. தமிழக அரசுத் துறைகளின் அலுவலகச் செயல்பாடுகளை மின்மயமாக்கும் திட்டம் (Departmental Office Process Digitization Program - DoTN)

அலுவல்கள் சார்ந்த அனைத்துச் செயல்முறைகளையும் மின்மயமாக்கிடும் வகையில் “தமிழக அரசுத் துறைகளின் அலுவலகச் செயல்பாடுகளை மின்மயமாக்கும் திட்டம்” ஒன்று அரசால் செயல்படுத்தப்படும். இது விரைந்து முடிவெடுப்பதற்கான செயல்திறனை மேம்படுத்த உதவும். குடிமக்களுக்கான அரசின் சேவைகளை, அவர்கள் நேரில் சென்று பெறவேண்டிய அவசியமில்லாமலேயே அச்சேவைகளை அவர்களுக்குப் படிப்படியாக வழங்கிடச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட இது உதவும். மேலும், காகிதப் பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம் மரங்கள் காக்கப்படவும், அதன் மூலம் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைத்திடவும் இது உதவும்.

இத்திட்டம் முதற்கட்டமாகத் தலைமைச் செயலகத்தில் இந்த ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும், இரண்டாவது கட்டமாகப் பிற அரசுத் துறை அலுவலகங்களில் செயல்படுத்தப்படும்.

4. தரவு மையக் கொள்கை (Data Centre Policy)

தரவு உள்ளூர் மயமாக்கல் தேவைகள், மின் வாணிபத்தின் வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்திடும் வகையில், தரவு மையங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன.

2019–2025ஆம் ஆண்டுக் காலத்திற்குள், தரவு மையத்திற்கான ஆண்டு வளர்ச்சி விகிதம் 4 சதவிகிதத்திற்கும் மேல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிறந்த அமைவிடம், சிறந்த இணைப்பு வசதி மற்றும் உபரி மின் சக்தி ஆகியவற்றின் காரணமாகச் சென்னை நகரம் தரவு மைய முனையமாக வளர்ந்து வருகிறது. இத்துறையில் வளர்ச்சி, முதலீடு மற்றும் உயர்தர வேலைவாய்ப்பினை ஊக்குவித்திடும் வகையில், "**தரவு மையக் கொள்கை**" ஒன்று வெளியிடப்படும்.

5. உலகளாவிய திறன் மையக் கொள்கை (Global Capability Centre Policy)

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆற்றல்மிக்க உலகளாவிய திறன் மையங்களை ஈர்க்கும் முக்கிய மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது. உலக அளவில் திறன் மையங்களை அதிகமாகக் கொண்டிருக்கும் முன்னணி நாடாக இந்தியா உள்ளது. இத்திறன் வளங்களைப் பெற்றுள்ள தமிழகம், இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, செயல் வல்லமையை மேம்படுத்துவதோடு, உயர்தர வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி, அதன் மூலம் தனது

மதிப்பினை உயர்த்திட இயலும். உலகளாவிய திறன் மையங்களை ஈர்ப்பதன் மூலம், மாநிலத்தை உலகளாவிய திறன் மையங்களுக்கான முக்கிய முனையமாக மாற்றிடும் வகையிலமைந்த **"உலகளாவிய திறன் மையக் கொள்கை"** ஒன்று வெளியிடப்படும்.

6. மெய்நிகர் அருங்காட்சியகம் (Virtual Reality Museum)

தமிழ் இணையக் கல்விக்கழகம், தொல்பழங்காலம், பாரம்பரியம் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள், கலைப்பொருள் குறித்த ஆவணங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் கோயில்களின் விவரங்களைப் பராமரித்து வருகிறது. இவற்றின் தனிப்பயனாக்கம், உயர்தரப் பொருண்மை ஆகியவற்றைப் பூர்த்தி செய்ய, மேம்படுத்த மற்றும் அதிகரிக்க **"மெய்நிகர் அருங்காட்சியகம்"** ஒன்றைத் தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் அமைத்திடவும், அதனை இணையத்தில் வெளியிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இம்மெய்நிகர் அருங்காட்சியகம் மூன்று ஆண்டு காலத்திற்குள் ரூ.7.5 கோடி செலவினத்தில் உருவாக்கப்படும்.

7. உள்ளடக்கத் தமிழ் மின்நூலகம் (Inclusive Tamil Digital Library)

தமிழ் இணையக் கல்விக்கழகம், 25,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள், பருவ இதழ்கள், ஓலைச் சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட மின்நூலகத் தளத்தைப் பராமரித்து வருகிறது. இத்தளத்தின் உள்ளடக்கத்தைப் பார்வைக் குறைபாடு, இயக்கக்

குறைபாடு, கற்றல் குறைபாடு, வாசிப்புக் குறைபாடு கொண்டவர்கள் மற்றும் முதியவர்கள் ஆகியோர் எளிமையாகப் பயன்படுத்தும் வகையில், அதனை ரூ.1 கோடி செலவினத்தில் **"உள்ளடக்கத் தமிழ் மின்நூலகம்"** ஆக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. அரிய ஒலி – ஒளி, ஒளிப்படம், புகைப்படங்கள் மற்றும் பிற வரலாற்றுப் படங்களை மின்னுருவாக்கம் செய்தல் (Digitization of Rare Audio, Video, Photographs and other Historical Images)

தமிழ் இணையக் கல்விக்கழகம், 53 இலட்சத்திற்கும் அதிகமான உள்ளடக்கப் பக்கங்களான அச்சிடப்பட்ட புத்தகங்கள், பருவ இதழ்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள மின்நூலகத்தினைப் பராமரித்து வருகிறது. இவை சிதைவுறுவதற்கான ஆபத்துகள் இருப்பதால், அரிய ஒலி – ஒளி ஆவணங்கள், ஒளிப்படங்கள், புகைப்படங்கள் மற்றும் பிற வரலாற்றுப் படங்களை முதற்கட்டமாக ரூ.1 கோடி செலவினத்தில் மின்னுருவாக்கம் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. யூமாஜின் – (UMAGINE) எனும் வருடாந்திர தொழில்நுட்பத் தலைமை உச்சி மாநாடு (Annual Technology Leadership Summit)

தமிழகம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான செயற்கை நுண்ணறிவு, இயந்திரக்

கற்றல், பொருட்களின் இணையம், ஆளில்லா விமானம், ஆழ்நிலைத் தொழில்நுட்பம் ஆகியவற்றில் முன்னிலை வகிக்கத்தக்க ஆற்றலைப் பெற்றுள்ளது.

தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் அவை தொடர்புடைய வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் கருத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிக்கான உகந்த இடமாகத் தமிழகத்தை முன்னிறுத்திட ஒருங்கிணைந்த முயற்சி அவசியமாகிறது. இத்துறைகளில் தமிழகம் பெற்றுள்ள வல்லமையைக் கொண்டாடவும், மேம்படுத்திடவும், இதில் சிறந்து விளங்கும். உலகளாவிய நிறுவனங்களுடன் இணைந்து, **"யூமாஜின்"** (UMAGINE) எனும் வருடாந்திர தொழில்நுட்பத் தலைமை உச்சி மாநாடு தமிழகத்தின் பல்வேறு சுற்றுலா நகரங்களில் நடத்தப்படவுள்ளது. முதலாவது மாநாடு சென்னையில் நடத்தப்படும்.

10. இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் (IT Parks in Tier II/III Cities)

தமிழகத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியை ஊக்குவித்திடவும் மற்றும் பொருளாதார செழுமையை மென்மேலும் உயர்த்திடவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் படிப்படியாக அமைக்கப்படும்.

11. பயனாளிகளுக்கான ஒருங்கிணைந்த பார்வைத் தளம் (Comprehensive view of Beneficiaries)

தகவல் தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பயன்படுத்தி, அரசுத் திட்டப் பயனாளிகளின் உண்மைத் தன்மையை மாநிலக் குடும்பத் தகவல் தொகுப்பு வாயிலாக அறிய உதவும் ஒற்றை ஆதாரத் தளமாக **"பயனாளிகளுக்கான ஒருங்கிணைந்த பார்வைத் தளம்"** திகழும். இது அரசுத் திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதுடன், புதிய நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகரிக்கவும் உதவும்.

❖ ❖ ❖

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை

சுற்றுலா

மானியக் கோரிக்கை எண். 29

1. கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டப்படும்.

கன்னியாகுமரியில் அமைந்துள்ள 133 அடி அய்யன் திருவள்ளுவர் சிலையை மேலும் அழகூட்டும் வகையில் சுற்றுலாப் பயணிகள் இரவிலும் கண்டு மகிழ லேசர் தொழில்நுட்ப உதவியுடன் முப்பரிமாண ஒளியூட்டம் அமைக்கப்படும்.

2. தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகார் புனரமைக்கப்படும்.

தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தின் சரித்திரம் பேசும் துறைமுக நகரமான பூம்புகார் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் புனரமைக்கப்படும். இதன்மூலம் நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம், சிலப்பதிகாரக் கலைக் கூடம் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

3. தமிழ்நாட்டில் உள்ள 300 சுற்றுலாத் தலங்களில் சர்வதேசத் தரத்திற்கு இணையான வசதிகளை ஏற்படுத்தச் சுற்றுலா பெருந்திட்டம் (Master Plan) தயாரிக்கப்படும்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் தனித்துவத்தை நிலைப்படுத்துதல், சுற்றுலாத் தலங்களில் பல்வேறு வசதிகளை ஏற்படுத்துதல், கூடுதல் தங்கும் இடங்கள் உருவாக்குதல், சுற்றுலாப் பயணிகளின் தங்கும் காலத்தினை அதிகரித்தல், அந்நிய செலாவணியை அதிகம் ஈட்டுதல், தனியார் மற்றும் அந்நிய முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் பல்வேறு வகையான சுற்றுலாக்களை மேம்படுத்துதல் ஆகிய காரணிகளை உள்ளடக்கிய சுற்றுலா பெருந்திட்டம் (Master Plan for Tourism) தயாரிக்கப்படும்.

4. தமிழ்நாட்டில் உள்ள அணைக்கட்டுகள் மற்றும் நீர்த் தேக்கங்கள் சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள இயற்கை அழகுடன் கூடிய அணைக்கட்டுப் பகுதிகள் மற்றும் நீர்த்தேக்கங்களுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளுடன் படகு சவாரி, திறந்தவெளி முகாம்கள், நீர் விளையாட்டுகள், வாகன நிறுத்துமிடம், உணவகம் மற்றும் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படும்.

5. மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக்காக, தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை (Tamil Nadu Tourism Policy) உருவாக்கப்படும்.

சுற்றுலாவிற்குத் தொழில் நிலை அந்தஸ்து வழங்குதல், சுற்றுலாத் தலங்கள் மற்றும் அதிகம் பிரபலம் அடையாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல், பங்குதாரர்களின் பங்களிப்பை ஊக்குவித்தல், சுற்றுலாத் தலங்களில் உள்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் தனியார் முதலீட்டை அதிகரித்தல், தொழில் முனைவோர்களை ஊக்குவித்தல், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் அவர்கள் தங்கும் கால அளவினை நீட்டித்தல் போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்ட தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை (Tamil Nadu Tourism Policy) உருவாக்கப்படும்.

6. கொல்லிமலை பல்வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள கொல்லிமலை அதிக கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட ஒரு மலை வாசஸ்தலமாகும். இங்குள்ள இயற்கை எழில் காட்சிகளைக் காண்பதற்கும், நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்கும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தருகின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க கொல்லிமலையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவுபெற்று பொன்விழா கொண்டாடும் வகையில் சுற்றுச்சூழலுடன் கூடிய தங்கும் இடங்கள் (Eco Resorts)

மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய சாகச விளையாட்டுகள் ஏற்படுத்தப்படும்.

7. தமிழ்நாட்டின் சுற்றுலா இடங்களை மேம்படுத்த, “சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டம்” (Tourism Destination Development Scheme) உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டின் சுற்றுலா இடங்களை மேம்படுத்தும் வகையில், நினைவுச் சின்னங்களை ஒளியூட்டுதல், நிலச்சீரமைப்பு, ஒலி–ஒளி காட்சி அமைத்தல், பாரம்பரியச் சின்னங்கள் புனரமைத்தல், நீர்வீழ்ச்சியின் அழகினை கண்டு ரசிக்கப் பார்வையாளர் மாடம் மற்றும் கூடுதல் வசதிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்தும் விதமாக, சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டம் (Tourism Destination Development Scheme) உருவாக்கப்படும்.

8. தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைக்கும் விதமாக மதுரை, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் ஹெலிகாப்டர் சுற்றுலா தொடங்க ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஹெலிகாப்டர் இறங்குதளம் (Helipad) அமைக்கப்படும்.

மதுரை, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரத்தில் ஏராளமான கோயில்களும், சுற்றுலாத் தலங்களும் உள்ளன. இவ்விடங்களுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கும். அவர்களின் பயண நேரத்தைக் குறைப்பதற்கும் இராமேஸ்வரம், மதுரை, கொடைக்கானல் இடையே

ஹெலிகாப்டர் சுற்றுலா தொடங்க ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஹெலிகாப்டர் இறங்குதளம் (Helipad) அமைக்கப்படும்.

9. தமிழ்நாட்டில் மலைவாழிடங்கள், வனப்பகுதிகள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் சாகச சுற்றுலா இடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் திறந்தவெளி முகாம்கள் (Adventure and Eco Camping Sites) ஏற்படுத்தப்படும்.

இளைஞர்களிடையே சாகச சுற்றுலாக்கள் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன. மேலும், இவர்கள் திறந்தவெளி முகாம்களில் தங்கிச்செல்லவும் ஆர்வம் காட்டுகின்றனர். இதனை ஊக்குவிக்கும் பொருட்டு அதிகம் சாத்தியக்கூறுகள் உள்ள 10 இடங்கள் தேர்வு செய்து, சாகச சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் திறந்தவெளி முகாம்கள் (Adventure and Eco Camping Sites) ஏற்படுத்தப்படும்.

10. முட்டுக்காடு படகு இல்லத்தில் மிதவை படகுடன் கூடிய உணவகம் (Floating Restaurant) அமைக்கப்படும்.

முட்டுக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு இல்லம் அமைந்துள்ளது. இப்படகு குழாமில் பல்வேறு வகையான படகுகள், வாட்டர் ஸ்கூட்டர்கள் மற்றும் விரைவுப் படகுகள் சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்வதற்காக உள்ளன.

இங்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில் படகில் பயணித்து இயற்கை அழகினை ரசிப்பதற்காகத் தமிழ்நாட்டில் முதன்முறையாக மிதவை படகுடன் கூடிய உணவகம் (Floating Restaurant) அமைக்கப்படும்.

11. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதிகளை இணையதள பயண நிறுவனங்களின் (Online Travel Aggregators) இணையதளத்தில் இடம்பெறச் செய்து பிரபலப்படுத்தி, வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகளின் முன்பதிவுகள் முன்னணி இணையதள பயண நிறுவனங்களான MAKE MY TRIP, YATRA, GOIBIBO போன்ற நிறுவனங்களின் இணையதளத்தில் (Online Travel Aggregators) இடம்பெறச் செய்து அதிக வருவாய் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் சுற்றுலாத் தலம் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் நீர்வீழ்ச்சியின் அழகைக் கண்டு ரசிக்க பார்வையாளர் மாடம், நடைபாதை, பரிசல் வசதிக்காக நிறுத்துமிடம், எண்ணெய் குளியலுக்கான இடங்கள், சமையலறைக் கூடம், உடைமாற்றும் அறை போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்.

13. ஜவ்வாது மலைப்பகுதியை பல்வேறு வசதிகளுடன் கூடிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படும்.

இயற்கை எழில் கொஞ்சும் நீரோடைகள், அருவிகள் உள்ள ஜவ்வாது மலையில் சுற்றுச்சூழலுடன் கூடிய தங்கும் இடங்கள் (Eco Camping sites), பூங்காக்கள், பல்வேறு சாகச

விளையாட்டுகளை ஏற்படுத்துதல், பீமா நீர்வீழ்ச்சி பகுதியை மேம்படுத்துதல், ஜமுனாமரத்தூர் ஏரியில் புதிய படகுக் குழாம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

14. இராமேஸ்வரம் கூடுதல் வசதிகளுடன் சிறந்த சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படும்.

இராமேஸ்வரம் ஒரு புனித நகரமாகும். இந்நகரத்திற்கு வருகைத் தரும் யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வழிகாட்டி பலகைகள், படித்துறை விரிவாக்கம், நடைபாதை அமைத்தல், ஒருங்கிணைந்த வாகனம் நிறுத்துமிடம், பாரம்பரிய சின்னங்களை ஒளியூட்டுதல், பார்வையாளர் மாடம் அமைத்தல், பறவைகள் சரணாலயப் பகுதி, கோதண்டராமர் கோயில், இராமர் பாதம் போன்ற இடங்களை மேம்படுத்துதல் மற்றும் ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

15. ஏலகிரியில் சாகச சுற்றுலா பல்வேறு பிரிவுகளுடன் மேம்படுத்தப்படும்.

சாகச சுற்றுலா பிரிவுகளை அமைப்பதற்கு உகந்த தலமாக ஏலகிரி மலையின் உயரமும், அமைப்பும் அமைந்துள்ளது. எனவே, இளம் வயது சுற்றுலாப் பயணிகளை கவரும் விதத்தில் சாகச சுற்றுலாவின் பிரிவான பாராகிளைடிங் (Paragliding), Zip lining, Bungee slingshot, மலையேற்றம் (Rock climbing) மற்றும் இயற்கை வழி நடைப்பயணம் (Nature walks), திறந்தவெளி முகாம்கள் (Camping sites) போன்ற சுற்றுலா வசதிகள் ஏலகிரி மலையில் ஏற்படுத்தப்படும்.

16. சொகுசுக் கப்பல் சேவை மற்றும் படகு சேவையை சுற்றுலா நகரங்களுக்கிடையே அறிமுகப்படுத்தச் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

சுற்றுலாப் பயணிகள் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் கடற்பகுதியில் குறைந்த கால அளவில் பயணம் மேற்கொள்வது. சொகுசு படகு பயணச் சுற்றுலா ஆகும். இத்தகைய சுற்றுலாக்கள் வெளிநாடுகளில் மிகவும் வரவேற்பைப் பெற்றுள்ளவை. இவ்வகையில் உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகைதரும் நகரங்களான இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரிக்கிடையே சொகுசுக் கப்பல் சேவை மற்றும் படகு சேவை தொடங்குவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

17. பிச்சாவரம் சுற்றுலாத் தலம் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

பிச்சாவரத்தில் அமைந்துள்ள அலையாத்திக் காடுகளை (Mangrove Forest) காண்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர். மேலும், இச்சுற்றுலாப் பயணிகளுக்குக் கூடுதல் வசதிகள் செய்துதரும் வகையில் பூங்கா, திறந்தவெளி முகாம், காட்சி கோபுரம், படகு குழாம், தங்கும் அறைகள் மற்றும் உணவகம் போன்றவை பிச்சாவரம் படகு குழாம் பகுதியில் மேம்படுத்தப்படும்.

18. முதலியார் குப்பம் படகு குழாம் மற்றும் அருகில் உள்ள தீவுப் பகுதியைக் கூடுதல் வசதிகளுடன் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

ஓடியூர் ஏரியில் அமைந்துள்ள தீவுப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் படகில் சென்றுவர அனுமதிக்கப்படுகின்றனர். இத்தீவுப்பகுதி சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதால், இங்கு நீர் விளையாட்டுகள் (Water Sports), கடற்கரை விளையாட்டுகள் (Beach play Activities), தேநீர் விடுதி போன்ற வசதிகளுடன் தங்கும் வசதி கொண்ட படகு இல்லம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

19. கோயம்புத்தூர் மாவட்டம் உக்கடம் மற்றும் வாலாங்குளம் ஏரியில் புதிய படகு குழாம்கள் ஏற்படுத்தப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்தும் விதமாக, உக்கடம் மற்றும் வாலாங்குளம் ஏரியில் படகு சவாரி மற்றும் இதர சுற்றுலா வசதிகளுடன் கூடிய புதிய படகு குழாம்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஏற்படுத்தப்படும்.

20. தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான மலைவாசஸ்தலங்கள், ஆன்மீகத் தலங்களில் கேபிள் கார் வசதியை ஏற்படுத்தச் சாத்தியக்கூறு ஆய்வு (Feasibility Study) மேற்கொள்ளப்படும்.

இயற்கை அழகினை கண்டு ரசிக்கவும், புதிய பயண அனுபவங்களைச் சுற்றுலாப் பயணிகள் பெறவும், சுற்றுச் சூழலுக்கு உகந்த கேபிள் கார் வசதி தமிழ்நாட்டில் உள்ள முக்கிய மலைவாசஸ்தலங்கள் மற்றும் ஆன்மீகத் தலங்களை இணைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு (Feasibility Study) மேற்கொள்ளப்படும்.

21. சுற்றுலா விருந்தோம்பல் திறன் மேம்பாடு மற்றும் சான்றிதழ் திட்டம் தொடர்பான படிப்பு (Tourism Hospitality Skill Development and Certification Programme) அறிமுகப்படுத்தப்படும்.

சுற்றுலாத் தொழில் சார்ந்த துறையில் ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளன. இச்சிறந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி. உணவு தயாரிப்பு, தங்குமிட பராமரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், வரவேற்பாளர் பகுதியில் திறன் மேம்படுத்துதல், உணவு தரக் கட்டுப்பாடு குறித்த பயிற்சிகள் வழங்குதல், சமையலர்களுக்கு பல்வேறு வகையான உணவு தயாரிப்பு முறைகளைப் பயிற்றுவித்தல் போன்றவைகளை உள்ளடக்கிய சுற்றுலா விருந்தோம்பல் திறன் மேம்பாடு மற்றும் சான்றிதழ் திட்டம் (Tourism Hospitality Skill Development and Certification Programme) தொடர்பான படிப்பு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் அறிமுகப்படுத்தப்படும்.

22. சுற்றுலாத்துறை சார்ந்த தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலா விருது (Tourism Award) வழங்கப்படும்.

சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கும் பயண மேலாண்மை நிறுவனங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான நிறுவனங்கள், தங்கும் விடுதி உரிமையாளர்கள் (Hoteliers), பயண ஏற்பாட்டாளர்கள் (Inbound and Outbound Tour Operators), பணப் பரிமாற்ற நிறுவனங்கள் (Forex Companies), பயண முகவர்கள் உணவக உரிமையாளர்கள் போன்றோர்களை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலா விருது வழங்கப்படும்.

23. சுற்றுலா மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கான குழு அமைக்கப்படும்.

சுற்றுலாத் தலங்களின் வளர்ச்சி, பல்வேறு சுற்றுலாப் பிரிவுகளை ஊக்குவித்தல், துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல், தனியார் பங்களிப்பினை ஊக்குவித்தல், சுற்றுலா தொடர்பான விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காகச் சுற்றுலா மேம்பாடு மற்றும் வளர்ச்சிக் குழு அமைக்கப்படும்.

24. கடற்கரைகளுக்கு Blue flag அங்கீகாரத்தினை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உலகின் பாதுகாப்பான, தூய்மையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு இணக்கமான கடற்கரைகளுக்கு ஐக்கிய

நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பால் வழங்கப்படும் Blue flag அங்கீகாரத்தினை பெறுவதற்கு, தமிழ்நாட்டின் முக்கிய கடற்கரைகளான மெரினா, கோவளம், மாமல்லபுரம், முதலியார் குப்பம், மனோரா, அரியமான், முட்டம் மற்றும் பல்வேறு கடற்கரைகள் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

25. கிராமிய மற்றும் மலை தோட்டப்பயிர் சுற்றுலா (Rural and Plantation Tourism) மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

காபி, தேயிலை, இரப்பர், நறுமணப் பொருட்கள் அதிக அளவில் விளையும் இடங்களான உதகமண்டலம், கொடைக்கானல், மேகமலை, கன்னியாகுமரியில் கிராமிய மற்றும் தோட்டப்பயிர் சுற்றுலா சுற்றுக்களை ஏற்படுத்துவதன் மூலம், இவ்விடங்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் பண்ணைத் தோட்டங்களில் உள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடுவதற்கும் பல்வேறு சுற்றுலா அனுபவங்களைப் பெறுவதற்கும் வாய்ப்பாகிறது. கிராமிய மற்றும் மலைத் தோட்டப்பயிர் சுற்றுலா (Rural and Plantation Tourism) உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடையே மிகுந்த வரவேற்பை பெற்று வருவதனால், இதற்கான வளமான இடங்களைக் கண்டறிந்து மேம்படுத்த வழிவகை செய்யப்படும்.

26. தமிழ்நாட்டில் மருத்துவச் சுற்றுலா (Medical Tourism) பல்வேறு சுற்றுலா தொழில் பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மேம்படுத்தப்படும்.

ஆயுர்வேதம், யோகா, யுனானி, சித்தா, இயற்கை மருத்துவம் மற்றும் அலோபதி மருத்துவச் சிகிச்சை முறைகளில் உலகத்தரத்திலான. மருத்துவச் சேவைகள் குறைந்த செலவில் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகள் வழங்குகின்றன. ஆயுஷ் (AYUSH) மருத்துவம் பிரபலமடைந்துள்ளதால் வெளிநாட்டினர் ‘இம்மருத்துவச் சேவைகளைப் பெறுவதற்கு அதிக அளவில் வருகை புரிகின்றனர். இவர்களிடையே பல்வேறு சுற்றுலா தொழில் பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மருத்துவ சுற்றுலா மேம்படுத்தப்படும்.

27. நீர் விளையாட்டுகள், சாகச விளையாட்டுகள், தங்கும் வசதியுடன் கூடிய வாகன இயக்குபவர்கள் (Caravan Operators) மற்றும் திறந்தவெளி முகாம்கள் (Camping sites) நடத்துபவர்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்படும்.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள மலை வாழிடங்கள், ஏரிகள், கடற்கரைகள், பல்வேறு நீர், சாகச விளையாட்டுகள் மற்றும் திறந்தவெளி முகாம்கள் (Camping sites) நடத்துவதற்கும், தங்கும் வசதியுடன் கூடிய வாகன சுற்றுலாவிற்கும் (Caravan Tourism) இளைஞர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதனால், இதனை நடத்துபவர்களுக்குரிய தகுதிகள், பாதுகாப்பு, உரிமம் மற்றும்

பதிவு செய்தல் ஆகிய காரணிகளை உள்ளடக்கிய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்படும்.

28. சென்னை மெரினாக் கடற்கரையில் இராயல் மெட்ராஸ் யாட் கிளப் உடன் இணைந்து பொழுதுபோக்கு படகு சவாரி தொடங்கப்படும்.

உலகின் இரண்டாவது நீளமான மெரினாக் கடற்கரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் இராயல் மெட்ராஸ் யாட் கிளப் (Royal Madras Yacht Club) இணைந்து wind sailing, மோட்டார் படகுகள், அதிவிரைவுப் படகுகள் மற்றும் பொழுதுபோக்கு படகு சவாரி தொடங்கப்படும்.

29. 75–ஆவது சுதந்திரத் தின கொண்டாட்டங்களை முன்னிட்டு தமிழ்நாட்டில் உள்ள 75 சுற்றுலாத் தலங்கள் விளம்பரப்படுத்தப்படும்.

நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் சிறந்த சாதனைகளை நினைவுக் கூறும் வகையில், அதனை தற்போதைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் விதமாக நாட்டின் 75–ஆவது சுதந்திரத் தினம் “சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா” (Azadi ka Amrit Mahotsav) என்ற பெயரில் 75 வாரக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. இதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் உள்ள 75 சுற்றுலாத் தலங்களின் காணொளி (Video) தயாரிக்கப்பட்டு, சமூக மற்றும் மின்னணு ஊடகங்கள் (Social and Digital Media) மூலமாக விளம்பரப்படுத்தப்படும்.

30. பொன்விழா கொண்டாடும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினை மறுசீரமைக்கத் திட்ட ஆலோசகரின் அறிக்கை பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொன்விழா ஆண்டில் ஒட்டல்கள், சுற்றுலா மற்றும் போக்குவரத்துப் பிரிவு, தொலைநோக்கி இல்லங்கள், படகு குழாம்கள் மற்றும் பிற செயல்பாடுகளின் தரத்தை மேம்படுத்தி அதிக இலாபம் ஈட்டும் வகையில் மறுசீரமைக்கத் திட்ட ஆலோசகரின் அறிக்கைப் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

❖ ❖ ❖

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை

கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியகங்கள், தொல்லியல்

மானியக் கோரிக்கை எண். 29

1. 75ஆவது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை கொண்டாடும் நோக்கிலும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவிடும் வகையிலும், தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகளை 75 ஒளிப்படங்களாக (Video) தயாரித்து இணைய வழியில் வெளியிடுதல்.

சுதந்திர இந்தியாவின் 75ஆவது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை சீரிய வகையில் கொண்டாடும் நோக்கிலும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவிடும் வகையிலும், தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகளை உலகம் முழுவதும் கொண்டு செல்லும் பொருட்டும், தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகளை 75 ஒளிப்படங்களாக (Video) தயாரித்து இணைய வழியில் வெளியிடப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக, கலை பண்பாட்டுத்துறையின் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீட்டிலிருந்து ரூ.164 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. தமிழக பாரம்பரியக் கலைகள் இடம்பெறும் வகையில் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையினையொட்டி ஆண்டுதோறும் சென்னையில் பிரம்மாண்ட கலை விழா (இணைய வழி மூலமும்) நடத்துதுல்.

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையினையொட்டி, தமிழகத்தினைச் சார்ந்த பாரம்பரியக் கலைகளின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில், திரளான கலைஞர்கள் பங்கு பெறும் பிரம்மாண்ட கலைவிழா, பெருநகர சென்னை மாநகராட்சி, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தகவல் தொழில் நுட்பத்துறை போன்ற பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புடன், ஆண்டுதோறும் சென்னையில் 6 இடங்களில் இணைய வழி மூலமும்) மூன்று நாட்கள் நடத்தப்படும். இதற்கென, தொடரும் செலவினமாக, கலை பண்பாட்டுத்துறையின் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீட்டிலிருந்து ரூ.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. இளங்கலைஞர்களின் கலைத் திறமைகளை வெளிக்கொணர ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட / மாநிலக் கலைப்போட்டிகள் நடத்துதல் மற்றும் இளையோருக்கான மாநிலக் கலை விழா (இணைய வழி மூலமும்) நடத்துதல்.

இளங்கலைஞர்களிடையே மறைந்து கிடக்கும் கலைத் திறமைகளை வெளிக்கொணரவும், அவர்களை ஊக்கப்படுத்தவும் மாநிலக் கலை விழா (இணைய வழி மூலமும்) நடத்தப்படும். குரலிசை, ஓவியம், பரதநாட்டியம், கிராமிய நடனம், கருவியிசை ஆகிய ஐவகைக் கலைகளில்,

16 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு, மாவட்ட அளவிலும் / மாநில அளவிலும் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு, மாநிலக் கலை விழாவில் பரிசுகள் வழங்கப்படும். இதற்கென, தொடரும் செலவினமாக, ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ரூ.10,000 மதிப்பீட்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக ஆண்டுதோறும் இசைக்கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்.

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற கலைஞர்கள் பயன்பெறும் வகையில், நபர் ஒருவருக்கு ரூ.10,000 மதிப்பீட்டில், இசைக்கருவிகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் வாங்க 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் நிதியுதவி வழங்கிட, தொடரும் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. கலைமாமணி விருது பெற்ற வறிய நிலையில் வாழும் கலைஞர்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் ஒருமுறை வழங்கப்படும் பொற்கிழித் தொகை ரூ.50,000லிருந்து ரூ.1,00,000ஆக உயர்த்துதல்.

கலைமாமணி விருது பெற்றவர்களில், வயோதிக நிலையில், பொருளாதாரத்தில் நலிந்து இன்னலில் வாழ்கின்ற கலைஞர்கள் பயன்பெறும் வகையில், ஆண்டுதோறும்,

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, தற்போது வழங்கப்படும் பொற்கிழித் தொகை ரூ.50,000லிருந்து ரூ.1,00,000ஆக உயர்த்தி10 கலைஞர்களுக்கு வழங்கப்படும். இதற்கென தொடரும் செலவினமாக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தால் நடத்தப்படும் முத்தமிழ் முகாம் பயிற்சிக்கான தொகையை உயர்த்துதல்.

முத்தமிழான இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று பிரிவுகளில் தலை சிறந்த படைப்பாளிகளைக் கொண்டு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மற்றும் இளைய தலைமுறையினருக்குப் பயிற்சிகள் அளிக்கும் நோக்கில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் முத்தமிழ் முகாம் திட்டத்தின்கீழ், ஒரு கலைப் பிரிவிற்கான ஒதுக்கீட்டுத் தொகை ரூ.75,000 லிருந்து ரூ.2,00,000ஆக உயர்த்தப்படும். இதற்கென, கூடுதலாக ரூ.3.75 இலட்சம் தொடரும் செலவினமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. கலை பண்பாட்டுத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் சார்நிலை அலுவலகங்கள், கல்லூரிகள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு கணினிகள், அச்சு இயந்திரங்கள், ஒளியச்சு இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்.

கலை பண்பாட்டுத்துறையின் தலைமை அலுவலகம், ஏழு

மண்டல கலை பண்பாட்டு மைய அலுவலகங்கள், நான்கு அரசு இசைக்கல்லூரிகள், இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள், அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் ஆகியவற்றின் அலுவலகப் பயன்பாட்டிற்கு, 45 எண்ணிக்கையிலான கணினிகள், அச்சு இயந்திரங்கள் (Multi function printer) பல வண்ண ஒளியச்சு இயந்திரங்கள் (Multi colour photocopier machines) மற்றும் தொடர்புடைய பிற உபகரணங்கள் ஆகியவற்றினை வாங்கிடத் தொடராச் செலவினமாக ரூ.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

8. வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் கரூர் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுதல்.

கலை பண்பாட்டுத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ், 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் கரூர் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு, கரூர் மாவட்டம் தாந்தோணி கிராமம் புல எண். 582–Cஇல், 0.30.00 ஏர்ஸ் நிலப்பரப்பில், சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தொடராச் செலவினமாக ரூ.160 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அருங்காட்சியகங்கள் துறை

1. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தொல் பொருளியல் தொகுப்புக் காட்சிக் கூடங்களை விரிவுபடுத்தும் விதமாக புதிய கட்டடம் கட்டி அரும்பொருட்களைப் பன்னாட்டு தரத்தில் காட்சியமைத்தல்.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உலகப் புகழ்பெற்ற சோழர்கால ஐம்பொன் சிலைகள், அமராவதி சுண்ணாம்பு சிற்பங்கள், வரலாற்றுக்கு முந்தைய கால சேகரிப்புகள், ஆதிச்சநல்லூர் நாகரீக அரும்பொருட்களின் சேகரிப்புகள், பல்வேறு மன்னராட்சி கால நாணயங்கள் முதலியன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது தொல் பொருளியல் தொகுப்புக் காட்சிக் கூடங்களை விரிவுபடுத்தும் விதமாக ஒரு புதிய கட்டடம் கட்டி சேமிப்பில் உள்ள அரும்பொருட்களைப் பன்னாட்டு தரத்தில் காட்சியமைக்க தொடராச் செலவினமாக ரூ.22.81 கோடி ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

2. சென்னை அரசு அருங்காட்சியக சிறுவர் அருங்காட்சியகத்தை விரிவுபடுத்தி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை விளக்கும் விதமாக அறிவியல் மையம் (Science Centre) அமைத்தல்.

சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் அண்மைக்கால தொழில்நுட்பங்களை விளக்கிக்கூறும் வகையில் அறிவியல் மையம் (Science Centre)

அமைக்கும் பணி கொல்கத்தாவில் இயங்கிவரும் அறிவியல் அருங்காட்சியகங்களின் தேசியக் கூட்டமைப்பு (National Council of Science Museum) மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கான புதிய கட்டடம் மற்றும் காட்சியமைப்பு பணிகள் ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்கீட்டுத் திட்டத்தின்கீழ் (50:50 என்ற விகிதத்தில்) ரூ.22.40 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

3. அரசு அருங்காட்சியகங்களில் உள்ள அனைத்து அரும்பொருள்களையும் அறிவியல் முறையில் பாதுகாத்து, எண்ணிலக்கம் செய்து, (Digitization) ஆவணப்படுத்தி, அனைத்தையும் மெய்நிகர் காட்சிக்கூடங்களாக (Virtual Museum) வடிவமைத்து வலைதளத்தில் பதிவேற்றுதல்.

சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 23 மாவட்ட அருங்காட்சியகங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க அரும்பொருட்களை காட்சிப்படுத்தி பொதுமக்களுக்குக் கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், கலாச்சாரம் மற்றும் பண்பாடு குறித்த தகவல்களை வழங்கி வருகின்றன. இவற்றை அறிவியல் முறையில் பாதுகாத்து எண்ணிலக்கம் செய்து (Digitization) ஆவணப்படுத்தி மெய்நிகர் காட்சிக்கூடங்களாக (Virtual Museum) வடிவமைத்து, வலைத்தளத்தில் பதிவேற்றும் பணி ரூ.5 கோடி மதிப்பீட்டில் தொடராச் செலவினமாக ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

4. அருங்காட்சியகங்கள் துறையின் காப்பாட்சியர்கள் மற்றும் உயர் அலுவலர்களுக்கு இந்திய மற்றும் உலகளவில் சிறப்பு பெற்ற அயல்நாட்டு அருங்காட்சியகங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்.

அருங்காட்சியகத் துறையின் உலகளாவிய வளர்ச்சியை கருத்தில் கொண்டு அருங்காட்சியகத் துறையில் பணிபுரியும் காப்பாட்சியர்கள் மற்றும் உயர் அலுவலர்களுக்கு உலகத் தரம் பெற்ற பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அருங்காட்சியகங்களைப் பார்வையிடவும், திறன் மேம்பாட்டு பயிற்சி பெறவும் 2021, 2022 மற்றும் 2023 ஆகிய மூன்றாண்டு காலத்திற்கு தொடர்ந்து பல நிலைகளில் வாய்ப்புகள் உருவாக்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.2 கோடி ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

5. அரியலூர் புதையுயிரி படிவ அருங்காட்சியக வளாகத்தில் கருப்பொருள் பூங்கா (Theme Park) அமைத்தல்.

அரியலூர் புதையுயிரி அருங்காட்சியகம் 48.84.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. சுமார் 165 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதி கடல் சூழ்ந்து இருந்தது. பின்னர் புதையுயிரி படிவங்கள் உருவாகியுள்ளன. இவற்றை அனைவரும் கண்டுணரத் தக்க வகையிலும் இதன் முக்கியத்துவத்தை உலகளவில் ஆய்வு செய்யத்தக்க வகையிலும், தானியங்கி டைனோசர் மாதிரிகளைக் கொண்டு திறந்தவெளியில் கருப்பொருள் பூங்கா (Theme Park)

ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.9.85 கோடியும், தொடரும் செலவினமாக ரூ.0.15 கோடியும் அரசு மற்றும் தனியார் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.

6. தேசிய கலைக் கூட கட்டடத்தின் மேல் லேசர் 3D ஒலி ஒளி காட்சியமைத்தல்.

சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் 1909 ஆம் ஆண்டு இந்தோ சார்சானிக் கட்டடக் கலை வடிவத்தில் கட்டப்பட்டுள்ள பாரம்பரிய வேலைப்பாடுகள் மிகுந்த தேசிய கலைக் கூடம் அமைந்துள்ளது. இக்கட்டடத்தின் கலை வடிவங்களின் மேல் லேசர் தொழில்நுட்ப ஒலி ஒளி காட்சியமைத்து தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் பண்பாடு குறித்த தகவல் அடங்கிய கண்கவர் நிகழ்ச்சிகள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.7.85 கோடியும் தொடரும் செலவினமாக ரூ.0.15 கோடியும் அரசு மற்றும் தனியார் நிதி பங்களிப்புடன் நடத்தப்படும்.

7. சோழப் பேரரசின் மரபு மற்றும் தொன்மையை விளக்கும் ‘அன்பில்’ செப்பேடுகளைக் கண்டுணர்ந்து சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்துதல்.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உலகப் புகழ்பெற்ற சோழர்கால ஐம்பொன் சிலைகள் மற்றும் செப்பேடுகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய தொல்லியல் துறையின் அதிகாரப்பூர்வ வெளியீடுகளில் ஒன்றான ‘எபிக்ராபியா

இண்டிகா', சோழ மன்னர் சுந்தர சோழர் வெளியிட்ட அன்பில் செப்பேடுகளைப் பற்றி குறிப்பிடுகிறது. இச்செப்பேடு சோழ அரசர்களின் பரம்பரை குறித்த தகவல்களை கி.மு. 300 முதல் கி.பி. 1279 வரை வரிசைப்படுத்தியுள்ளது. இச்செப்பேடுகளைப் இந்திய தொல்பொருள் துறை மூலமாகக் கண்டுணர்ந்து பாதுகாத்து சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்படும்.

8. தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் பாரம்பரியத்தை உலகறியச் செய்யும் வகையில் 'லெய்டன்' செப்பேடுகளை நெதர்லாந்து நாட்டிலிருந்து தமிழகத்திற்கு மீண்டும் திரும்பக் கொண்டு வருதல்.

நெதர்லாந்து நாட்டில் உள்ள லெய்டன் பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்படும் "லெய்டன் செப்பேடுகள்" 11ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட சோழப் பேரரசர் இராஜராஜ சோழனின் வரலாற்றையும் நாகப்பட்டினத்தில் இருந்த புத்த விகார பராமரிப்பிற்கான ஆதாரங்களையும் தருகிறது. இது பெரிய ஆனைமங்கல செப்பேடு ஆகும். பின்னர், குலோத்துங்க சோழர் மூலமாகப் புத்த விகார பராமரிப்பிற்கான சிறிய ஆனைமங்கல செப்பேடு வெளியிடப்பட்டது. இத்தகையச் சிறப்புப் பெற்ற செப்பேடுகள் நெதர்லாந்து நாட்டில் உள்ளதை மீண்டும் தமிழகத்திற்குத் திரும்பக் கொண்டு வர சீரிய முயற்சிகள் எடுக்கப்படும்.

தொல்லியல் துறை

1. உலகத்தரம் வாய்ந்த கீழடி அகழ்வைப்பகத்திற்குத் தேவையான 34 நிரந்தரப் பணியிடங்களைத் தோற்றுவித்தல் மற்றும் பராமரிப்புகளுக்காக ரூ.1.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்தல்.

சிவகங்கை மாவட்டம், கீழடியில் உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ்வைப்பக கட்டுமானப் பணிகள் ரூ.12.21 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இவ்வகழ்வைப்பகம் 31,000 சதுர அடியில், ஆறு அரங்குகளுடன் கீழடியின் தொன்மை மற்றும் தமிழர்களின் பண்பாட்டினை உலகிற்கு உணர்த்தும் வண்ணம் உருவாக்கப்பட்டு வருகின்றது. இவ்வகழ்வைப்பகத்திற்கு 34 நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். அகழ்வைப்பக பராமரிப்பு பயன்பாட்டிற்குத் தொடரும் செலவினமாக ரூ.1.38 கோடியும், தொடராச் செலவினமாக ரூ.0.20 கோடியும் ஆகமொத்தம் ரூ.1.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. மறுசீரமைக்கப்பட்ட தொல்லியல் நிறுவனத்தில் புதியதாக கல்வெட்டியலில் ஈராண்டு முதுநிலை பட்டய வகுப்பு துவங்குதல்

தொல்லியல் துறையில் மறுசீரமைக்கப்பட்டு இயங்கி வரும் தொல்லியல் நிறுவனத்தில் புதியதாக கல்வெட்டியலில் ஈராண்டு முதுநிலைப் பட்டய வகுப்பு துவங்கப்படும். இப்புதிய முதுநிலைப் பட்டய வகுப்பில் கல்வெட்டியல் தொடர்பான அனைத்துப் பாடங்களும் செய்முறைப் பயிற்சிகளும்

கல்வெட்டு வல்லுநர்களைக் கொண்டு அளிக்கப்படும். மேலும், ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றிற்கு பயிலுதவித் தொகையாக ரூ.5,000 வழங்கப்படும். இவ்வகுப்பு, 2021–2022ஆம் நிதியாண்டு முதல் துவங்கிட ரூ.40 இலட்சமும், 2022–2023ஆம் ஆண்டில் புதிய 10 மாணவர்கள் சேர்க்கைக்கு ரூ.40 இலட்சமும் என்ற வகையில் தொடரும் செலவினமாக மொத்தம் ரூ.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. கல்வெட்டுகளைப் படியெடுத்தல் மற்றும் தொல்லியல் அகழாய்வுகளில் வெளிக் கொணரப்படும் தொல் பொருட்களை நவீன முப்பரிமாண நுண்ணொளி வரைவி (3D Scanner) கொண்டு ஆவணப்படுத்துதல்.

பண்டைய நாகரிகங்களின் தொன்மை, வரலாறு, பண்பாடு முதலியவற்றை முழுமையாக வடிவமைத்து அறிந்து கொள்ள உதவும் முக்கியமான சான்றாகக் கல்வெட்டுகள் திகழ்கின்றன. வரலாற்றினை மறுகட்டமைப்பு செய்யத் துணையாக உள்ள கல்வெட்டுகளைப் படியெடுக்கவும் தொல் பொருட்களை நேரடியாக முப்பரிமாண வடிவில் ஆவணப்படுத்தவும். நவீனத் தொழில்நுட்ப 3D ஸ்கேனர்கள், உயர்தர கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கிடத் தொடராச் செலவினமாக ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. தமிழ்நாட்டிலுள்ள 90–க்கும் மேற்பட்ட பாறை ஓவியங்களை ஆவணப்படுத்துதல்.

தமிழ்நாட்டில் பரவலாகக் கண்டுபிடிக்கப்படும் பாறை ஓவியங்கள் தமிழ்நாட்டின் தொன்மைக்குச் சான்று

பகர்கின்றன. தமிழ்நாட்டில் கீழ்வாளை, செத்தவரை, ஆலம்பாடி, திருமலை, சிறுமலை, கரிக்கியூர், மயிலாடும்பாறை ஆகிய இடங்களில் உள்ள பாறை ஓவியங்கள் பண்டைய மக்களின் கலை ஈடுபாடு, சமூக வாழ்க்கை போன்றவற்றை அறிந்துகொள்ளும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன. இப்பாறை ஓவியங்களை நவீன முறையில் ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் நோக்கில், தமிழ்நாட்டிலுள்ள 90–க்கும் மேற்பட்ட பாறை ஓவியங்கள் ஆவணப்படுத்தப்படும். இதற்கென, 2021–2022ஆம் ஆண்டு ரூ.20 இலட்சமும் 2022–2023ஆம் ஆண்டு ரூ.40 இலட்சமும் என இரண்டு ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. தமிழ்நாட்டில் புதியதாக மூன்று இடங்கள் உட்பட ஏழு இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் இரண்டு கள ஆய்வுகள் 2021–2022ஆம் ஆண்டில் மேற்கொள்ளுதல்.

தமிழ்நாட்டின் பண்பாட்டு வளமையை வெளிக் கொணர்வதற்கு தற்போது நடைபெற்று வரும் கீழடி, சிவகளை, மயிலாடும்பாறை, கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய அகழாய்வுகளுடன் புதியதாக விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் – துலுக்கர்பட்டி, தருமபுரி மாவட்டம் – பெரும்பாலை ஆகிய ஏழு இடங்களில் அறிவியல் அடிப்படையில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும். இவை தவிர புதிய கற்கால இடங்களைக் கண்டறிதல், தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள தொல்லியல் இடங்களை

இனங்காணுதல் என்னும் இரண்டு அறிவியல் முறையிலான கள ஆய்வுகள் 2021–2022ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

6. தமிழ்நாட்டில் புதியதாக ஐந்து பண்டைய தமிழ்க் கல்வெட்டுகள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும்.

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களை பழமை மாறாமல், பாதுகாத்து வருங்கால தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வது தலையாயக் கடமையாகும். இந்த உயரிய நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் மதுரை மாவட்டம் முதலைக்குளம் தமிழிக் கல்வெட்டுகள், மதுரை மாவட்டம் அரிட்டாப்பட்டி தமிழிக் கல்வெட்டுகள், சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சி தமிழிக் கல்வெட்டுகள், விழுப்புரம் மாவட்டம் தொண்டூர் தமிழிக் கல்வெட்டு, விழுப்புரம் மாவட்டம் நெகனூர்பட்டி தமிழிக் கல்வெட்டு ஆகிய ஐந்து கல்வெட்டுகளும் தமிழ்நாடு அரசின் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும்.

7. தொல்லியல் துறையின் கீழ் இயங்கும் தொல்லியல் நிறுவனத்தினை தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு மறுசீரமைத்தல்.

தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையில் மறுசீரமைக்கப்பட்டு இயங்கி வரும் தொல்லியல் நிறுவனத்தினை தமிழ்நாடு தொல்லியல் மற்றும்

அருங்காட்சியகவியல் நிறுவனம் (Tamil Nadu Institute of Archaelogy and Museology) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு சீரமைக்கப்படும். இந்நிறுவனத்தின் மூலம் ஈராண்டு கால தொல்லியல் முதுநிலைப் பட்டய வகுப்பு துவங்கப்பட உள்ளது. மேலும், அருங்காட்சியகவியலில் பட்டய வகுப்பு நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

❖ ❖ ❖

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 4

1. ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 150 பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் கட்டப்படும்.

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 1,138 பள்ளிகளில் பயிலும் 83,259 மாணாக்கரின் கல்வி நலனை உறுதி செய்யும் பொருட்டும், மாணாக்கரின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்கும் வகையிலும், 150 பள்ளிகளில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் கட்டப்படும்.

2. 39 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 100 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கூடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் ரூ.21.13 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 318 உண்டி உறைவிடப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதில் தருமபுரி, ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள 14 ஆரம்பப் பள்ளிகள், 11 நடுநிலைப்

பள்ளிகள், 15 உயர்நிலைப் பள்ளிகள், 9 மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 39 உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.15 கோடி செலவில் கூடுதல் வகுப்பறைகளும், 45 உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.6.13 கோடி செலவில் சுற்றுச்சுவர்களும் ரூ.21.13 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஆதிதிராவிட மக்கள் தங்கள் வீட்டுச் சுப நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தும் வகையில், 20 இடங்களில், மணமகன்–மணமகள் அறைகள், மணமேடை, பார்வையாளர் அரங்கம், விருந்தினர் அறைகள், கழிவறைக்கூடம், மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி, அவசியமான அறைகலன்கள், பாத்திரங்கள், உணவுமேசை, நாற்காலிகள் அடங்கிய உணவருந்தும் அறை என அனைத்து வசதிகளுடன் கூடிய 20 சமுதாயக் கூடங்கள் தலா ரூ.1.25 கோடி வீதம் ரூ.25 கோடி மதிப்பில் கட்டப்படும்.

4. 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குத் துரித மின் இணைப்புத் திட்டத்தின் (Tatkal Scheme) கீழ் ரூ.23.28 கோடி செலவில் 90 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் கிராமப்புறங்களில் பெரும்பாலும் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, விவசாயத்திற்கான இலவச மின் இணைப்புக்காகத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின்

மூலம் வழங்கப்படும் துரித மின் இணைப்புத் திட்டத்தில் (Tatkal Scheme) செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குதிரைத் திறனுக்கேற்ப ரூ. 2.50 இலட்சம் முதல் ரூ.4 இலட்சம் வரை நிருணயம் செய்யப்பட்டுள்ளது. 1,000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் இலவச மின் இணைப்பை விரைவில் பெற்றிடத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் நிருணயிக்கப்பட்ட வைப்புத் தொகையில் 90 சதவிகிதம் (ரூ.2.25 இலட்சம் முதல் ரூ.3.60 இலட்சம் வரை) மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ஏற்படும் செலவு ரூ.23.28 கோடி.

5. காஞ்சிபுரம் மாவட்டத்தில் வீடற்ற இருளர் இன பழங்குடியினருக்கு ரூ.13.29 கோடி மதிப்பீட்டில் 443 புதிய வீடுகள் கட்டப்படும்.

பெரும்பாலான பழங்குடியின மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கி வாழ்ந்து வருகின்றனர். வீடற்ற பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு காஞ்சிபுரம் மாவட்டத்தில் பட்டா வழங்கப்பட்ட 443 இருளர் இன பழங்குடியினர் குடும்பங்களுக்கு தலா ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.13.29 கோடி மதிப்பீட்டில் 443 புதிய வீடுகள் கட்டப்படும்.

6. வேலூர், ஆதிதிராவிடர் முதுகலைக் கல்லூரி மாணவியர் விடுதி விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர்

கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஆதிதிராவிட மாணாக்கரின் உயர்கல்விக்கான வாய்ப்புகளைப் பெருக்கிடும் வகையிலும், அவர்கள் பாதுகாப்பாகத் தங்கி கல்வி பயிலும் வகையிலும், வேலூர் ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

7. **13 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.**

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மாணாக்கரின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு திருச்சிராப்பள்ளி, தேனி, திண்டுக்கல், அரியலூர், மதுரை, நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் திருப்பூர் ஆகிய 11 மாவட்டங்களில் உள்ள 13 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

8. **31 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் கழிப்பறைகள் (Toilets) கட்டப்படும்.**

பழங்குடியினர் நலத்துறையின்கீழ் கோயம்புத்தூர்,

கள்ளக்குறிச்சி, தென்காசி, தருமபுரி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய 7 மாவட்டங்களில் இயங்கும் 31 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கழிப்பறைகள் தலா ரூ.7 இலட்சம் வீதம் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்படும்.

9. 92 அரசு பழங்குடியினர், உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் 48 விடுதிகளுக்கு ரூ.3.46 கோடி மதிப்பீட்டில் தளவாடப் பொருட்கள் (Furnitures) வழங்கப்படும்.

பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கிவரும் பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர் படிப்பதற்கு ஏதுவாக 92 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 2,385 நீள் இருக்கைகள் மற்றும் சாய்வு மேசைகள் (Bench and Desk) தலா ரூ.9,500 வீதம் ரூ.2.27 கோடி செலவிலும், விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணாக்கரின் தேவையைக் கருத்தில் கொண்டு 48 பழங்குடியினர் மாணாக்கர் விடுதிகளுக்கு 1,200 இரண்டு அடுக்கு கட்டில்கள் (Bunker Beds) ரூ.1.2 கோடி செலவிலும், ஆக மொத்தம் ரூ.3.46 கோடி செலவில் வழங்கப்படும்.

10. மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படி ஒன்றிய அரசு வழங்குவதற்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்.

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற இயலாத மாணாக்கருக்கு, மாநில அரசின் சிறப்பு

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ், பராமரிப்புப்படி மற்றும் கட்டாயமான திருப்பி அளிக்கப்படாத கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு, 2011–2012ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படி உயர்த்தப்பட்டது.

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் 2020–2021ஆம் ஆண்டு முதல் பராமரிப்புப்படி உயர்த்தி வழங்கப்பட்டு வரும் விகிதத்திற்கு இணையாக மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படியும் உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூ.4.63 கோடி ஆகும். இத்திட்டத்தின்கீழ் 26,024 மாணாக்கர்கள் பயனடைவர்.

11. கடலூர் மாவட்டம் – விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி மாவட்டம் – கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மூன்று புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள் ரூ.2 கோடி செலவில் தொடங்கப்படும்.

ஆதிதிராவிடர் இன மாணவியர் உயர்கல்வி பயில தொலை தூரம் செல்வதைத் தவிர்க்கவும், அவர்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்கவும், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களில், ஒரு விடுதியில் 50 மாணவியர் தங்கும் வகையில் புதிய விடுதிகள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

12. ஆதிதிராவிடர் விடுதி மாணாக்கருக்கு விழா நாட்களில் வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்குப் பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திரத் தினம் மற்றும் தீபாவளி ஆகிய 5 விழா நாட்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் 19.04.2012–க்கு பிறகு உயர்த்தி வழங்கப்படாத நிலையில், தற்போது விலைவாசி உயர்வுக்கேற்றவாறு பள்ளி விடுதி மாணாக்கருக்கு ரூ.20லிருந்து ரூ.40ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கருக்கு ரூ.40லிருந்து ரூ.80ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் சுமார் 1,25,295 மாணாக்கர் பயன்பெறுவர். இதற்காக அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.1.42 கோடி.

13. தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாவட்டங்களிலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு ரூ.92 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், கண்ணந்தங்குடி, மேலையூர் அரசு ஆதிதிராவிடர் நலத் தொடக்கப்பள்ளியில் இரண்டு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவரும், வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி மற்றும் பென்னாத்தூர் அரசு ஆதிதிராவிடர்

நலத் தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளில் சுற்றுச்சுவர்களும் ரூ.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

14. 512 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் மின் அரைப்பான்கள் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 1,326 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் சமையலுக்கு உதவியாகவும் மாணாக்கருக்கு உணவினை உரிய நேரத்தில் வழங்கிட ஏதுவாகவும், தலா ரூ.9,000 வீதம், 512 மின் அரைப்பான்கள் மொத்தம் ரூ.46 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

15. 51 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வகங்களுக்கு ரூ.87 இலட்சம் மதிப்பீட்டில் இன்வர்ட்டர் (Inverter) வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் நலத்துறையின்கீழ் இயங்கி வரும் 98 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் பாடப்பிரிவு பயிலும் மாணாக்கருக்காக 51 கணினி ஆய்வகங்களுக்கு 6 மின்கலன்களுடன் கூடிய இன்வர்ட்டர்கள் (Inverters) ரூ.87 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

16. 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.3 கோடி செலவில் நீர்ப் பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்காக தலா ரூ.15,000 மானியமாக வழங்கப்படும்.

1,300 ஆதிதிராவிட மற்றும் 700 பழங்குடியின

விவசாயிகள் தங்கள் வேளாண் நிலத்தில் நீர்ப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்கு தலா ரூ.15,000 மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசிற்கு ஏற்படும் செலவினம் ரூ.3 கோடி.

17. 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.2 கோடி செலவில் புதிய மின் மோட்டார் வாங்க தலா ரூ.10,000 மானியமாக வழங்கப்படும்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தாட்கோ) மூலம் 1,800 ஆதிதிராவிட மற்றும் 200 பழங்குடியின விவசாயிகள் தங்கள் நில மேம்பாட்டிற்காக புதிய மின் மோட்டார் அல்லது பழைய மின் மோட்டாருக்கு பதில் புதிய மின் மோட்டார் வாங்கிட தலா ரூ.10,000 மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசு ரூ.2 கோடி செலவு மேற்கொள்ளும்.

18. 5,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குத் தோட்டக்கலை வேளாண் காடுகள் (Agro forestry) நர்சரி செடிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் போன்ற பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் வழங்கப்படும்.

5,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக் கலை, காய்கறி மற்றும் பழ வகைகள் சாகுபடி, வேளாண் காடுகள், நர்சரி செடிகள் உருவாக்கி விற்பனை செய்தல், மண்புழு உரம் தயாரித்தல்,

விவசாய மேலாண்மைப் பயிற்சிகள் மற்றும் அறுவடை தொழில்நுட்ப இயந்திரங்கள், முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள், வேளாண் தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் இயந்திரங்கள் ஆகிய இயந்திரங்கள் தொடர்பான பராமரித்தல் மற்றும் பழுது நீக்கம் செய்தல் போன்ற பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் மூலம் வழங்கப்படும்.

19. 5,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்த தொழில் முனைவோருக்குத் தொழில் மேலாண்மை பயிற்சிகள் ரூ.2 கோடி செலவில் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் முனைவு ஏற்படுத்தித் தரும் வகையில் கடன் பெற 5,000 தொழில் முனைவோர் தேர்தெடுக்கப்பட்டு அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களுக்கு மாவட்ட அளவில் 7 நாள் தொழில் மேலாண்மைப் பயிற்சிகள் தகுதியான நிறுவனங்கள் மூலம் ரூ.2 கோடி செலவில் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்படும்.

20. 25 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த தொழில் முனைவோருக்கு அடைகாப்பகச் சேவை (Incubation Support) வழங்கும் புதிய திட்டம் ரூ.2 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின்

புதுமைத் தொழில் முனைவை உறுதிப்படுத்திடும் வகையில், சென்னை Indian Institute of Technology (IIT) மற்றும் Tamil Nadu Start Up Seed Grant Fund (TANSEED) உதவியுடன் புதிய தொழில் நிறுவனங்கள் (start up ventures) அமைக்க 25 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு புதுமைத் தொழில் முனைவு அடைகாப்பகச் சேவை (Incubation Support) ரூ.2 கோடி செலவில் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

21. பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்ற பழங்குடியின பாரம்பரிய சமூக சுகாதார திறனாளர்களுக்கு (Traditional Tribal Healers) சுயமாகத் தொழில் துவங்க ரூ.50,000 வீதம் 100 நபர்களுக்கு மானியம் வழங்கப்படும்.

பாரம்பரிய, சமூக, சுகாதார திறன் பெற்ற 100 பழங்குடியின நபர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 2 மாத களப்பயிற்சியோடு 6 மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும். சான்றிதழ் பெறுபவர்கள் சுயமாகத் தொழில் துவங்க ஏதுவாக உரியக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட உதவும் வகையில் 100 பழங்குடியின பயனாளிகளுக்கு தலா ரூ.50,000 வீதம், மொத்தம் ரூ.50 இலட்சம் செலவில் மானியமாக வழங்கப்படும்.

22. தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் ஏனைய நல வாரியங்களில் வழங்கப்படும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின்

கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை. திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக ரூ.1.53 கோடி செலவில் உயர்த்தி வழங்கப்படும்.

23. தாட்கோ கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மொத்த அளவியல் கருவிகள் வழங்கப்படும்.

தாட்கோ செயல்படுத்தும் கட்டுமானப் பணிகளுக்கு உதவிடும் வகையில் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு 10 மொத்த அளவியல் கருவிகள் (Total Station Instruments) ரூ.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

❖ ❖ ❖

"இது எனது அரசு அல்ல, நமது அரசு,
உங்களுடைய விருப்பங்களோடு பல்வேறுத் திட்டங்களை
நிறைவேற்ற இருக்கக்கூடிய அரசு."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்